விநாயகப்பா

கவிநாயகர் வி. கந்தவனம்

அன்புடன்,

12.12.2010

உ

விநாயகப்பா

கவிநாயகர் வி. கந்தவனம்

காந்தளகம்

68, அண்ணா சாலை, சென்னை 600 002.
தொலைப்பேசி: 044 – 28513096
மின்னஞ்சல் : tamilnool@tamilnool.com
மின்னம்பலம்: www.tamilnool.com, www.thevaaram.org

நூல்: விநாயகப்பா
ஆசிரியர்: கவிநாயகர் வி. கந்தவனம்
பதிப்புரிமை ஆசிரியருக்கு
முதலாம் பதிப்பு: ஆவணி, 2040 (30.8.2009)
Title: Vinayagappaa
Author: Kavinaayakar V. Kandavanam
First Edition: August, 2009
விலை: இந்திய ரூ.100
அதபுஎ: **ISBN**: 978-81-89708-25-2
அச்சிடல் தயாரிப்பு: *காந்தளகம்,*
68, அண்ணா சாலை, சென்னை 600 002.
தொலைப்பேசி: 044 – 28513096
மின்னஞ்சல்: tamilnool@tamilnool.com
மின்னம்பலம்: www.tamilnool.com, www.thevaaram.org

பதிப்புரை

கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் விநாயப் பெருமான்மீது பாடிய ஏழு நூல்களைத் தொகுத்து விநாயகப்பா என்ற பெயரில் வெளியிடுகின்றோம்.

1. **விநாயகப்பா** என்ற நூல் காந்தளக வெளியீடாக 1993இல் வெளிவந்தது. இதிலுள்ள பாடல்கள் அவரது பிறந்த பதியாகிய நுணாவிற் கொல்லாபுரி வீரகத்தி விநாயகர்மீது பாடப் பெற்றவை. இந்த முதல் நூலின் பெயரே இத்தொகுதிப் பெயருமாயிற்று.
2. **விநாயக வெண்பா,**
3. **விநாயக விருத்தம்** ஆகிய இரண்டும் 2004ஆம் ஆண்டு கனடாவில் இந்து சமயப் பேரவையினால் வெளியிடப் பெற்றவை.
4. **தில்லையம்பலப் பிள்ளையார் சிந்து** 1995இல் பாடப்பெற்ற போதும் நூலாக வெளிவரவில்லை. இத்தொகுதியிலேயே முதன் முதலாகச் சேர்ந்துள்ளது.
5. **பதிகங்கள்**: கவிநாயகர் அவ்வப்போது விநாயப் பெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்கள்மீது பாடிய பதிகங்கள் பல. அவற்றுட் பெரும்பான்மையானவை கனடாவில் வெளிவரும் இதழ்களில் வெளிவந்துள்ளன. வெளிவந்தவற்றுடன் வெளி வராதவற்றையும் சேர்த்துப் **பதிகங்கள்** என்ற பெயரின்கீழ்ப் பட்டியலாக்கியுள்ளோம்.
6. **எங்குமுள்ள பிள்ளையார்** என்ற தலைப்பிலே ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ள பிரபலியமான பிள்ளையார் தலங்கள் மீது ஒவ்வொரு பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. அவற்றைக் கனடாவில் வெளிவரும் *ஆத்மஜோதி இதழ்* இன்னமும் தாங்கி வந்துகொண்டிருக்கின்றது. இந்த நூலில் அவை உள.
7. கவிநாயகர் அவ்வப்போது பாடிய **கீர்த்தனைகள்** இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

மேலேயுள்ள ஒவ்வொரு நூலையும் படித்துச் சுவைத்து அறிஞர் பெருமக்கள் எழுதியுதவிய அணிந்துரைகளையும் அப்படியே இத் தொகுதியிலே தந்திருக்கின்றோம்.

பிள்ளையாரைப் பற்றிப் பாடாதவர்கள் இல்லையெனலாம். நக்கீரர், நம்பியாண்டார் நம்பி, அவ்வையார், கபிலதேவநாயனார், அதிராவடிகள், காசிப முனிவர், ஈழத்து வரதபண்டிதர், பாரதியார்

என்று பிள்ளையார் பத்தர்களின் பட்டியல் நீண்டு செல்லவல்லது. இவர்கள் வரிசையில், நாம் வாழும் காலத்தில், கவிநாயகர் கந்தவனமும் சேர்ந்துகொள்கிறார்.

கந்தவனம் அவர்களின் தந்தையார் பெயரே விநாயகர் என்பதுதான். தந்தையாரின் பெயருக்கு முன்னால் தனது பெயர் தொடங்கும் *கானா*வை வைத்து கவிநாயகர் என்ற புனைபெயரு டனேயே இவரது முதற் படைப்பான *1½ ரூபாய்* என்ற நெடுங்கதை வெளிவந்தது என்பதனையும் இவ்விடத்திற் குறிப்பிடல் வேண்டும்.

இவரது குலதெய்வம் விநாயகர் என்பதும் விநாயகரின் அருள் திறத்தை மிகச் சிறுவயதிலேயே இவர் உணர்ந்துகொண்டார் என்பதும் விநாயகரே இவரது வாழ்க்கையைக் குறைவுபடாது நடத்திச் செல்பவர் என்பதும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள பத்திச் சுவை மிகுந்த பாடல்களால் அறியக் கிடக்கின்றன. பத்திச் சுவையன்றிச் சொற்சுவை பொருட்சுவை செறிந்த படைப்புகளாகவும் இத்தொகுதி யில் இடம்பெற்றுள்ள நூல்கள் விளங்குகின்றன. அவ்வகையில் சமயத்துக்கு மட்டுமன்றித் தமிழுக்கும் இத்தொகுதி அணியாகின்றது எனலாம்.

தாயகத்திலே விநாயகர் சார்ந்த பத்தி இலக்கியத்தைக் கவிநாய கர் அளவுக்கு வேறு எவரும் வளர்க்கவில்லை என்பதும் இத்தொகுதி யால் தெரியவருகின்றது.

கவிநாயகரைப் பாடவைக்கும் தெய்வம், இத்தொகுதியையும் வாழவைக்கும்.

மறவன்புலவு க. சச்சிதானந்தன்
காந்தளகம், யாழ்ப்பாணம்-சென்னை

நூல்கள்

பக்க எண்

1. விநாயகப்பா 7

2. விநாயக வெண்பா 47

3. விநாயக விருத்தம் 71

4. தில்லையம்பலப் பிள்ளையார் சிந்து 103

5. விநாயகர் பதிகங்கள் 123

6. எங்குமுள்ள பிள்ளையார் 237

7. விநாயக கீர்த்தனைகள் 313

1

விநாயகப்பா

1. விநாயகப்பா - உள்ளடக்கம்

		பக்க எண்
	அணிந்துரை	9
1.	வளர்ப்புப் பதிகம்	13
2.	விளக்கப் பதிகம்	16
3.	அருள் நினைந்துருகல்	19
4.	திருவழைப்பு	22
5.	இடித்துரைப் பதிகம்	24
6.	மலர்த்தாட் பணிவு	27
7.	திருவணக்கம்	29
8.	திருத்தாளடைவு	31
9.	பூங்கழலணிவு	33
10.	பூசனைப் பதிகம்	35
11.	திருவுலா வெழுச்சி	38
12.	குருஞானப் புலம்பல்	43

அணிந்துரை

இலக்கிய வித்தகர் கலாநிதி க.செ. நடராசா

யாழ்ப்பாணத்துத் தென்மராட்சியின் ஊர்களுள் ஒன்றாய நுணாவிலிலே எழுந்தருளியிருக்கும் திருக்கோலங்கரை வீரகத்திப் பிள்ளையார் மீது கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் விநாயகப்பா எனப் பன்னிரு பதிகங்கள் பாடியுள்ளார்.

புலமைமிக்க இந்நூலாசிரியர் வாசகர்களுக்குப் புதியவரல்லர். வானொலி மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், கவியரங்குகள் மூலமாகவும் பற்பல கவிதைகளை அவ்வப்போது வெளியிட்டு மக்க ளின் ஆதரவைப் பெற்றவர்.

இவர் ஆசிரியத் துறையில் முற்றிக் கல்லூரி அதிபராகக் கடமை யாற்றி வாழ்க்கை அநுபவங்களை நிறையப் பெற்றதனாற் பரந்த ஞானம் படைத்தவர். அதனால், இவர் கவிதைகள் இலௌகீகப் பொருள்களுடன் நின்றுவிடாது பரஞானப் பொருள் கொண்டனவாக வும் மிளிர்கின்றன.

கவிஞர் கந்தவனம் விநாயகப்பா என்ற இப்பதிகம் எழுதுவ தற்கு முன், *முறிகண்டிப்பத்து, வீரகத்தி விநாயகர் ஊஞ்சல், குரும்பசிட்டி விநாயகர் பத்து, நல்லூர் நாற்பது, புன்னையம் பதிகம்* ஆகிய பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார்.

நுணாவிலிலே பிறந்து வளர்ந்தமையாற் கந்தவனக் கவிஞர் இளமையிலே வந்தனை செய்து வந்த அவ்வூர்க் கோலங்கரைப் பிள்ளையார் மீது, நாளடைவில் அவருக்கு நிறைந்த பக்தி உறைந்தது. அதனால் அவர் பாடியுள்ள இவ்விநாயகப் பாவின் பதிகங்களைப் படிக்கும்போது, பாராயணஞ் செய்யத் தக்க பக்திப் பாடல்களாகவே மனத்திற் பதிகின்றன. இந்நூலின் முதற் செய்யுட் பகுதியாய,

ஒருமுகமும் இருசெவியும் மூன்று கண்ணும்
நான்குதோ ளுடனைந்து கரமு முள்ளார்
திரிதரநல் நிழல்சொரியும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே

என்ற அடிகளைப் படிக்குந்தோறும் திருநாவுக்கரசு நாயனார் திருத்தாண்டகத்தின் சாயல் மனக்கண்முன் படர்ந்து வருகிறது. அது போலவே அருள் நினைந்துருகல் என்ற பதிகப் பாடல்கள், இயற்கை

எழில் நிறைந்த திருஞானசம்பந்தர் பதிகங்களை நினைவுக்குக் கொண்டுவருகின்றன.

உதாரணமாக,

கன்னித் தமிழின் கவினார் உயர்வைக்
காணும் படிசெய்தாய்
கன்னற் கவிதைக் கலையை அருளிக்
கவிஞர் அரங்கேற்றிப்
பின்னுக் கிருந்தே முன்னுக் குயரத்
தள்ளிப் பெயர்தந்தாய்
வன்னக் கிளிகள் குலவுங் கோலங்
கரைவாழ் பெருமானே

என்ற இப்புலவரின் பாடலைப் படித்ததும், திருஞானசம்பந்த நாயனார் பாடியுள்ள,

மஞ்சைப் போழ்ந்த மதியஞ் சூடும்
வானோர் பெருமானார்
நஞ்சைக் கண்டத் தடக்கு மதுவு
நன்மைப் பொருள்போலும்
வெஞ்சொற் பேசும் வேடர் மடவார்
இதணா மதுவேறி
அஞ்சொற் கிளிகள் ஆஓ என்னும்
அண்ணா மலையாரே. -தி.1 ப.69 பா.2

என்ற பாடல் மனத்திரையில் ஆடி வருகிறது.

மேலும் சொல்வதானால், இதன் இறுதிப் பதிகமாய குருஞானப் புலம்பல், மாணிக்கவாசகரின் சிவபுராணத்தை ஞாபகப்படுத்திவிடு கிறது.

எனவே, விநாயகப்பா என்ற இப்பத்தி நூற்செய்யுள்களைப் பத்தி மார்க்க காலப் பான்மையிலே அமைத்துத் தந்திருக்கிறார் கவிஞர் கந்தவனம் என்று கூறலாம். அதனால் இப்பதிகங்கள் பாராயணத்துக் குரியனவாகவுங் கொள்ளலாம்.

புலவர் சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்து உறவி னரால் வளர்க்கப்பட்டவராகையால், உற்றார் உறவினர் நண்பர்கள் அன்பர்கள் ஆசிரியர்கள் சமயக்குரு ஆகியோர் தனக்களித்த அநுசர ணைகள் ஆசிகள் அனைத்தும் அந்த விநாயகனால் அவர்கள் மூலம்

வழங்கப்பட்டனவே என்று உருவகித்துப் பாடப்பட்டிருக்கும் அடிகள், இப்புலவனின் நன்றியுணர்வையும் ஞான வளத்தையும் காட்டுவன வோடமையாது, இறைவனே எல்லா உயிர்களோடும் உடனுறைந்து உலகை இயக்கி வருகின்றான் என்ற உண்மையையும் உணர்த்தி நிற்கின்றன.

விநாயகப்பாவிலே தான் பிறந்த ஊராகிய நுணாவிலின் பல்வேறு வளங்களையும், '*திறமான வயல் செறிந்த நுணாவில்*' என்றும், '*தெள்ளமுதக் கனிமலிந்த நுணாவில்*' என்றும், '*தேடரிய சிவக்குருமார் நுணாவில்*' என்றும், '*திங்களெழ ஆம்பவெழும் நுணாவில்*' என்றும், '*சேயிழைவாய் கிளி நோக்கும் நுணாவில்*' என்றும், '*தென்னை பனை நிறைந்த வள நுணாவில்*' என்றும் இலக்கிய நயம்பட இயம்பிய புலவர், விநாயகர் சம்பந்தமான புராணக் குறிப்புக்களையும் விநாயக தத்துவப் பொருளையும் விளக்கத் தவற வில்லை.

விநாயகர் அவதாரம் முதல், வள்ளி திருமணத்தில் முருகனுக்குதவிய கதை, காகமாய் அகத்தியர் கமண்டலங் கவிழ்த்த கதை, கயமுகன் வதம், ஔவையைக் காவிக் கயிலை சேர்த்தமை, திருமாலுற்ற உருமாற அருள் செய்தமை, தாய் தந்தையரே உலகமென உணர்த்தி மாங்கனி பெற்றமை, சிவன் முப்புரமெரிக்கச் சென்ற தேரை யிருத்தி வைத்தமை போன்ற பல கதைகளையும் தொட்டுக்காட்டி யாத்துள்ள பதிகங்களிலே,

மன்னியெழும் ஊழிவர வயிற்றில் எல்லா
வகைப்பொருளும் வைத்திடும்ஓம் வடிவ மானார்

என்றும்,

உயர்வினை அளிப்பான் உன்னைவிட் டகலான்
உத்தமன் ஓம்முக ஐயன்

என்றும்,

உலகெலாம் உண்டவனே ஓம்பொருளாய் நின்றவனே

என்றும் கூறி,

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர்தலைக் கணிவாம்

என்ற பழம் பாடற்கமைய ஓம் என்ற பிரணவப் பொருளின் வடிவமே விநாயக உருவம் என்ற உண்மையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இத்தகைய கவினுறு கவிதைகளைப் பன்னிரு பதிகமாகப் பாடி

விநாயகப்பா தந்த கவிஞர் வி. கந்தவனம் தமிழுக்கு மட்டுமன்றிச் சைவத்துக்கும் பெருந்தொண்டாற்றியிருக்கிறார். தலபுராணம் பாடுவோர், இன்றருகிப் போக, தலப் பதிகம் பாட முற்பட்ட இப் புலவரின் பனுவல்கள் படிப்போருக்குச் சான்ற ஆன்ம ஞான உணர்வையும், ஆன்ற தமிழ் அழகையும், ஊன்றிய நாட்டுப்பற்றை யும் உணர்த்த வல்லனவாம். இவற்றைப் பலரும் படித்துப் பக்தி இலக்கியச் சுவையைப் பருகலாம்.

விநாயகப்பா

1. வளர்ப்புப் பதிகம்

1. அரியவொரு பேரொளியாய் அமைந்த ருள்வார்
அன்னையுமாய்த் தந்தையுமாய் அன்பு செய்வார்
உரியதுணை உடன்பிறப்பாய் உருகி நிற்பார்
உடனிருந்து தேவையறிந் துதவி செய்வார்
ஒருமுகமும் இருசெவியும் மூன்று கண்ணும்
நான்குதோ ளுடனைந்து கரமு முள்ளார்
திரிதர நல் நிழல்சொரியும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 1

2. அறியாத பருவமதில் அழைத்துச் சென்றார்
அருகிருத்தி அமுதருத்தி அருள்பொ ழிந்தார்
வறிதான மனவயலை உழுது நன்கு
வளப்படுத்தி விதைத்துமிக வளரச் செய்தார்
வெறிவாதக் கயமுகனை வீழ்த்தும் வண்ணம்
மிக்குயர்தன் கொம்பொடித்த விறல்ப டைத்தார்
திறமான வயல்செறிந்த நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 2

3. வீட்டைவிட்டு நண்பருடன் வெளியிற் சுற்றி
விளையாடித் திரிந்தவெனில் விருப்பு வைத்தார்
காட்டுமிடுக் கிளங்கன்றைப் பிடித்துக் கட்டிக்
கதிகுறைத்து மதியளித்துக் காவல் காத்தார்
நாட்டரிய திறன்படைத்த நான்மு கன்றன்
நலனிழந்து நலிகையிலே நன்மை செய்தார்
தேட்டமுறு மந்தைமிகு நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 3

4. பள்ளியெனப் புறப்பட்டே ஈச்சம் பற்றை
பதுங்கிமுள் குற்றுபழம் பறிக்கப் பார்த்தார்
எள்ளிநகை புரிந்திரங்கி இடையில் ஓர்நாள்
இணையற்ற கனிகாட்டி ஈர்த்துக் கொண்டார்
உள்ளிநிதம் பூசித்த திருமால் உற்ற
வுருமாற வருள்செய்த உலக நாதர்
தெள்ளமுதக் கனிமலிந்த நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 4

5. பாடங்களை முறையாகப் படித்தி டாது
பலகோணக் குறுக்குவழி பதுங்கி னேனைக்
கூடிவழி வந்தொருநாள் கூட்டிக் கோயில்
கொண்டுசென்று படிப்பித்த குருவு மானார்
ஈடிணையில் தந்தைபுரம் எரிப்ப தற்கென்
றெழுந்தபெருந் தேரதனை யிருத்தி வைத்தார்
தேடரிய சிவக்குருமார் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 5

6. அங்கொருகால் இங்கொருகால் வைத்த லைந்தேன்
ஆனவழி தெரியாது மிகம லைந்தேன்
செங்கதிரோன் போன்றதிரு மேனி காட்டிச்
செயலிழக்கச் செய்துமனை கூட்டிச் சென்றார்
எங்குமுள பெற்றவர்தாம் உலக மென்றே
ஏத்திவலம் வந்துகனி இனிது பெற்றார்
திங்களெழ வாம்பலெழும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 6

7. திருக்குளத்தில் தாமரைத்தண் டிடையில் சிக்கித்
திகைத்தவெனை முதலைதெரிந் திழுக்க முன்னர்
பொருக்கெனவே புகுந்துதவி புரிந்து காத்தார்
புறம்புறமே திரிந்தறிவு புகட்டி யீர்த்தார்

உருக்குமெழில் வள்ளியுளம் உணர்ந்து வந்தே
உற்றபெருந் தம்பியுடன் ஒன்று சேர்த்தார்
செருக்கிலருஞ் செம்மனத்தார் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 7

8. கோயிலிலே குளிக்கவைத்தார் பூசை காட்டிக்
குளிரவைத்துக் கும்பிடவும் பழக்கி விட்டார்
கோயிலிலே போதனைகள் கொடுத்து நின்றார்
குணநலமும் பொறுப்புணர்வும் கூட வைத்தார்
ஆயபெரும் அகத்தியருக் கன்பு காட்ட
அரியவொரு காகமென வணுகி வந்தார்
சேயிழைவாய் கிளிநோக்கும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 8

9. பாதகர்கள் பக்கமணு காமல் பார்த்தார்
பண்புகெட நடவாது பரிந்து காத்தார்
ஏதமிலாக் கல்விபெற வழியெ டுத்தார்
இல்லறத்தை இன்புடனே இயற்ற வைத்தார்
காதலுடன் ஔவையினைக் கரத்தாற் காவிக்
கயிலைமலை சேர்த்தபெருங் கருணை யாளர்
தீதகன்ற திருவுடைய நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 9

10. சென்னியிலே கரங்குவித்துச் சிந்தை செய்து
சிலிர்த்துருகி நீர்பெருகத் திகைப்ப தல்லால்
என்னவிதம் இவர்கருணை எடுத்துச் சொல்வேன்
ஏற்றவரும் பெருந்துணையாய் எனக்கு வாய்த்தார்
மன்னியெழும் ஊழிவர வயிற்றில் எல்லா
வகைப்பொருளும் வைத்திடுமோம் வடிவ மானார்
தென்னைபனை நிறைந்தவள நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே. 10

2. விளக்கப் பதிகம்

11. கயமுகனின் கடுமைமிக வமரர் வேறு
கதியின்றி யரனிடத்திற் கலங்கி வேண்டத்
தயவுமிகு தலைவருமை தன்னை நோக்கத்
தந்தையியல் பத்தனையும் தாங்கி வந்து
கயமுகமும் கண்ணுதலுங் கரங்கள் நான்குங்
கவினுருவம் பெற்றுதித்த கணநா தர்தாம்
வியன்பொழில்சூழ் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். 1

12. செருப்பறையோ டெத்திசையுஞ் செறியச் சேர்ந்த
திடப்படைகொள் திறமைமிகு சேனை சூழச்
சிரிப்புடனே படைதரியாச் சிறியோ னென்று
செருக்குடனே யெதிர்நின்ற தீயோன் மாள
மருப்பெறிந்து வானவர்க்கு வாழ்க்கை யீந்த
வல்லபெரு விக்னேசு வரர்தாம் மிக்க
விருப்புடனே திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். 2

13. தன்னிகரிற் சூரியருஞ் சாரும் கோளுஞ்
சந்திரரு மண்டசரா சரங்கள் யாவும்
மன்னுயிரும் வகையுடலும் வாழ்க்கைக் கேற்ற
வளநலனும் மனத்தினிலே நினைத்த வாறு
நன்னயமாய்ப் படைத்தினிது நாட்ட வல்ல
நான்முகனை நாணவைத்த நாய கர்தாம்
மென்னெழிலார் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். 3

14. கரியநிறக் கவினழகர் கவர்ச்சி யாளர்
கலைச்சங்குஞ் சக்கரமுங் கரங்கொள் சீலர்
அரியதிரு மகளமரு மன்ப கத்தார்
அவதார மெடுத்தடியா ரல்லல் தீர்ப்பார்
மருகர்திரு முருகனெனும் பெருமை மிக்கார்
மாலவருக் கருள்புரிந்த வார ணர்தாம்
விரியுவெளித் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். 4

15. ஆதியிலார் அந்தமிலார் அறிவே யானார்
அருள்வடிவும் பொருள்முடிபும் அவரே யானார்
ஏதமிலார் பாதியுரு மாது வானார்
இடுகாட்டி லெழிற்பாத மெடுத்து நிற்பார்
தீதுபுரி யசுரர்களைத் தீய்க்கச் சென்ற
தேரொடித்த பேர்படைத்த செயற்பிள் ளைதாம்
வேதமொலி திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். 5

16. வேலவனார் வெற்றிமயி லிவர்ந்து மிக்க
வேகமுடன் வியனுலகை விரைந்து சுற்ற
ஞாலமெலா மம்மையப்ப ரென்று நாட்ட
நண்ணிவலம் வந்துகனி பெற்று ஞானக்
கோலமுறு தம்பியையோ ராண்டிக் கோலங்
கொள்ளவைத்துக் குறும்பிழைத்த கொற்ற வர்தாம்
மேலவர்வாழ் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். 6

17. கேடுபுரி மூடருடல் கீறு மன்பன்
கெஞ்சியுரை தந்தைசிவன் கேட்கு மைந்தன்
ஆடுமயி லோடுவிளை யாடு மையன்
ஆறுபடை வீடுடைய வாண்டி யப்பன்

கோடியெழில் வள்ளியுடன் கூடி வாழக்
கொடுத்தருளு வந்தகுணக் கூர்ஞா னர்தாம்
வீடுதரு திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். 7

18. நந்தமிழைப் பைந்தமிழாய் நயங்கள் மிக்க
நவமொழியா யுயர்மொழியா யுலகம் நாடுஞ்
செந்தமிழாய்ச் சிறப்புறவே வளர்த்த தேவர்
தென்பொதிய மலையிருந்த தெய்வ ஞானி
அந்தமிலா வரமுடையோ ரமர ரேத்து
மகத்தியருக் கருள்புரிந்த அண்ண லார்தாம்
விந்தைநலத் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். 8

19. திரிந்துமனம் போனவழி செல்லா வண்ணம்
திருத்தமுறு வாழ்க்கைதனை மாந்தர் செய்ய
மருந்துபல சொரிந்துநல வாக்கு நூல்கள்
வகுத்தினிது படைத்திடவும் சேர மான்முன்
அருந்தவத்துக் கயிலையடைந் திடவும் ஔவைக்
கருள்புரிந்த வைங்கரத்துப் பிள்ளை யார்தாம்
விருந்துமகிழ் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன். 9

20. ஊழியுற வுள்ளவெளி யண்ட மூரும்
ஒருகணக்கி லொண்கதிர்கள் கோள்க ளுற்ற
சூழுலக மத்தனையுந் தோன்று மாபோல்
தொடர்ந்துவர மிகவெளிதில் தனது தூய
பேழைவயி றடக்கிவரும் பிறப்பை நோக்கிப்
பேணுபொரு ளாளனெனும் பிள்ளை யார்தாம்
மேழிவளத் திருக்கோலங் கரையில் மேவும்
வீரகத்திப் பிள்ளையென விளங்கக் கண்டேன்.10

3. அருள் நினைந்துருகல்

21. அரனார் மகனே ஆனை முகனே
ஞானப் பெருஞ்செல்வா
திருவார் உருவே திகழும் நிலவே
தேனின் னமுதோனே
அரிதோ எளிதோ எதுவோ அனைத்துச்
செயற்கும் முதல்வோனே
பெருவாழ் வடியார் புடைசூழ் கோலங்
கரைகொள் பெருமானே. 1

22. கருணைக் கதிரே கடலே முகிலே
கதியும் விதியும்நீ
மரணம் வரினும் மனமீ தகலா
மருப்புச் செவிமுக்கண்
அருநற் கரங்கள் ஐந்தோ டிருக்க
அஞ்சேன் அஞ்சேனே
அருணன் விழிக்கும் கோலங் கரைமீ
தமரும் பெருமானே. 2

23. பெற்றார் போகப் பிதற்றித் திரிந்த
பேதைப் பருவத்தில்
பொற்றாள் உருவம் காட்டிக் கோயில்
கூட்டிப் போந்தென்னை
நற்றா மரையில் அமுதீந் தாண்ட
நாளை மறவேனே
வற்றா வளநீர் கோலங் கரைவாழ்
மக்கள் பெருமானே. 3

24. மார்க்கண் டையர்[1] நின்றாள் மனம்வைத்
தியற்றும் மாபூசை
பார்க்கும் படிநீ பலநாட் பணித்தும்
பாரா திருந்தேனை
சீர்க்குங் கரத்தால் பிடித்தே யிழுத்துச்
சேர்த்தா யணைத்தையா
ஆர்க்கும் வண்டார் கோலங் கரைகொண்
டாளும் பெருமானே. 4

25. நீரா டியபின் நிகரிற் பூசை
கண்டா டிடவைத்தாய்
ஆரா வமுதம் அன்போ டளித்தே
ஆற்றல் பெறவைத்தாய்
தேரோ டியபின் திருவீ தியிலே
போரா டவும்வைத்தாய்
காரோ டுகதிர் வயல்சூழ் கோலங்
கரைகொள் பெருமானே. 5

26. உணவும் உடையும் உணர்வும் நடையும்
ஒருமித் தளித்தென்னில்
கணமும் விலகாக் கவனக் கருணைக்
கண்வைத் துயர்கல்வி
அணியும் நல்கி அடியே னையுமோர்
ஆளாக் கியவன்நீ
பிணிதீர் கோலங் கரைகொள் வீர
கத்திப் பெருமானே. 6

27. கன்னித் தமிழின் கவினார் உயர்வைக்
காணும் படிசெய்தாய்
கன்னற் கவிதைக் கலையை அருளிக்
கவிஞர் அரங்கேற்றிப்

பின்னுக் கிருந்தே முன்னுக் குயரத்
தள்ளிப் பெயர்தந்தாய்
வன்னக் கிளிகள் குலவும் கோலங்
கரைவாழ் பெருமானே. 7

28. எழவைப் பவனும் இறுமாப் புறவே
இசைசெய் பவனும்நீ
அழவைப் பவனும் அலமந் ததனால்
அருள்செய் பவனும்நீ
தொழவைப் பவனும் விழவைப் பவனும்
சுகஞ்செய் பவனும்நீ
எழிற்பூ வையர்வாழ் கோலங் கரைகொள்
எங்கள் பெருமானே. 8

29. உனக்கும் எனக்கும் இடையில் தடையாய்
உளதாம் பொருளுண்டோ
எனக்கென் றெதுவும் இலையிங் கிருப்பின்
எல்லாம் உனதன்றோ
மனக்கண் மதிக்கண் வினைக்கண் முதலாய்
மலரும் பொருள்நீயே
பனிக்குஞ் சோலைக் கோலங் கரையிற்
பயிலும் பெருமானே. 9

30. அல்லும் பகலும் அடியேன் நெஞ்சில்
ஐயா நின்னாமம்
சொல்லிற் செயலில் துயரில் சுகத்தில்
துலங்கும் நின்னாமம்
எல்லாப் பொழுதும் துணைநீ இறைவா
என்னே தவஞ்செய்தேன்
கொல்லா புரியாம் கோலங் கரைகொள்
கொற்றப் பெருமானே. 10

---

[1] ஆலய அந்தணர்

4. திருவழைப்பு

31. வான ளாவவ ளர்த்துப்ப னைகள்
மோன நீழலில் மூழ்கியி ருக்கும்
ஞான வள்ளலின் நற்றிறம் காணத்
தேனில் நல்லநு ணாவிலிற் சேரீர்! 1

32. நாட்டின் செல்வம்நன் றாகவே யோங்க
வீட்டு முற்றத்தில் செந்நெல்வி ளைத்துக்
காட்டு வான்கமக் காரனைக் காணத்
தேட்டம் மிக்கநு ணாவிலிற் சேரீர்! 2

33. வாணி செல்விவ ணங்கிட வாழும்
மாணெ ழிற்பொய்கை இல்முன்வ குத்துப்
பேணு வீரகத் திப்பிள்ளை யாரைக்
காண வாயிரங் கண்ணுடன் வாரீர்! 3

34. கால்ந டைகளைக் காத்துவ ளர்த்துப்
பால்கு டங்குட மாகப்ப டைக்குஞ்
சால்பு டைப்பண்ணை யாளரைச் சாரின்
மால்கெ டும்மனம் வாழ்வுறும் வாரீர்! 4

35. மாங்க னீபலா மாதுளை தோடை
ஆங்கு நல்விளா அன்னாசி வாழை
தீங்க னிச்சோலைக் காரரின் செந்தாள்
தாங்கி யோங்கநு ணாவிலைச் சாரீர்! 5

36. எள்ளு ருண்டை இலுப்பையின் பாகு
நள்க ருப்பணி பாணிப்ப னாட்டு
வள்ள லுள்ளவன் வார்கழ லின்ப
வெள்ள மின்னும் இனிக்கும் விரைவீர்! 6

37. தென்னை தாகத்தைத் தீர்த்திடப் பக்கல்
புன்னை நீழலும் புத்தெழிற் காற்றும்
மன்னு மற்புத மாமுகன் நல்கும்
இன்ன ருட்கிணை யீடில்லை வாரீர்! 7

38. ஏல வேவர வேற்பதற் கும்மைச்
சாலை யெங்கணுஞ் சோலைக ளாக்கி
மாலை யேந்துபொற் கொன்றைகள் வைத்தார்
கால தாமத மேன்வந்து காணீர்! 8

39. சேவல் வெண்சங்கு சீர்மணி மந்தை
பாவு பூசைகிள் ளைகுயில் பாட்டு
யாவும் விந்தைநு ணாவிலை யண்ணிக்
காவல் வீரவி நாயகர் காணீர்! 9

40. இயற்கை யப்பனை எங்கள் பிரானை
வியக்கு மற்புத மீகரத் தானை
மயக்கு மாவிருள் மாய்க்கவல் லானை
நயக்க வின்பநு ணாவிலை நாடீர்! 10

---

[1] மாங்கனி -மாங்கனீ என ஓசை குறித்து நீண்டது.

5. இடித்துரைப் பதிகம்

41. சிவபெரு மானின் திருவளர் செல்வன்
தேவர்கள் வணங்கிடும் தெய்வம்
புவியினர் போற்றிப் புன்மைகள் போக்கப்
போந்தவர் கணபதிப் பிள்ளை
குவிகரத் தோடு கூத்துடன் பாடிக்
கும்பிடும் அடியவர் கூடும்
தவநலம் மிக்க நுணாவிலம் பதியில்
தங்கினன் தலைப்படு மனமே. 1

42. ஆற்றல்கள் படைத்தோன் அசுரரை அழித்தோன்
அமரரின் அந்தரம் தீர்த்தோன்
நேற்றின்று நாளை என்பதொன் றில்லான்
நித்தியன் நீள்கர வள்ளல்
போற்றியெந் நாளும் புதுமலர் கொண்டு
பூசிக்கும் அடியவர் புடைசூழ்
ஊற்றெழிற் சோலை நுணாவிலம் பதியில்
உள்ளனன் உடன்படு மனமே. 2

43. பயிர்களைக் காப்பான் பசுக்களை மேய்ப்பான்
பக்குவம் படிப்படி சேர்ப்பான்
துயர்களைப் போக்கிச் சுகம்பல செய்வான்
சுயதொழி லிவைநுதல் கண்ணன்
செயல்மிகச் சிறக்கத் திருமனத் தோடு
சேவிக்கும் அடியவர் சேரும்
வயல்வெளி மருங்கில் நுணாவிலம் பதியில்
வாழ்பவன் மகிழ்ந்தெழு மனமே. 3

44. கனலில்மண் விண்ணில் காற்றினில் நீரில்
கலந்தவை கடந்தவன் கதியன்
தனித்துவம் வாய்ந்த தண்ணியல் பாளன்
தடக்கரம் ஐந்துடைத் தலைவன்
பனிமலர்க் கண்கள் பருகிடப் பண்கள்
பாடிமெய் யடியவர் பரவும்
புனல்வளப் புதிதார் நுணாவிலம் பதியில்
பொலிபவன் புறப்படு மனமே. 4

45. நயவினை நாதன் நால்வகை வேதன்
நல்லறி வாளன்மெய்ஞ் ஞானி
உயர்வினை அளிப்பான் உன்னைவிட் டகலான்
உத்தமன் ஓம்முக வையன்
துயர்கெட மலரும் தூபமுங் கொண்டு
சுந்தர வடியவர் துதிக்கும்
இயலிசை நடமார் நுணாவிலம் பதியில்
இருப்பவன் இசைந்தெழு மனமே. 5

46. ஆவியி னினியான் அருமருந் தனையான்
அவமதிப் பியற்றினும் முனியான்
ஏவலும் புரிவான் எங்கணும் வருவான்
இணையற்ற விநாயக மூர்த்தி
நாவினிக் கநிதம் நாதனைப் பாடி
நைந்துரு கடியவர் நயக்கும்
மேவுநற் புகழார் நுணவிலம் பதியில்
விளங்கினன் விரும்புவை மனமே. 6

47. எத்தனை முறையான் எம்பெருமானின்
இன்னியல் பெடுத்திடித் துரைத்தேன்
புத்தியொன் றிலையோ புன்னெறி வலையோ
பொய்ம்மைகள் போக்குங்க ணேசன்

பத்திசெய் துள்ள பழவினை போக்கிப்
பதம்பெறும் அடியவர் பயிலும்
வித்தைகள் விளங்கும் நுணாவிலம் பதியில்
வீற்றுளன் விரைந்தெழு மனமே. 7

48. நித்திரை மயக்கம் போலொரு நிலையோ
நேர்பய னிலையெனும் நினைவோ
வித்தைகள் தருவான் சித்திகள் புரிவான்
விரிசெவி கலைமுடி வேந்தன்
எத்தனை இன்பம் என்னபே ரின்பம்
எனப்புகழ்ந் தடியவர் இறைஞ்சும்
இத்தரை போற்றும் நுணாவிலம் பதியில்
இலங்கினன் இணங்கிடு மனமே. 8

49. நன்குனை அறிவான் ஆயினும் நயந்து
நாளுந்தன் னருகணைத் தருள்வான்
வன்கொள்கை யெறிவாய் வாழ்வினைப் பெறுவாய்
வாரணன் மாபெரும் வள்ளல்
இன்கணீர் பெருக இறைஞ்சியி றும்பூ
தெய்துநல் லடியவர் இலங்கும்
உன்கவி னூராம் நுணாவிலம் பதியில்
உறைபவன் ஒருப்படு மனமே. 9

50. ஊரிலுள் ளவனை ஒருமுறை பாரா
துலகினை வலம்வரல் முறையோ
பேர்மதி யாளன் பெற்றவர் தம்மைப்
பெரிதென மதித்தவோர் பிள்ளை
நேரினில் அறிந்தோர் நெஞ்சம்நெக் குருகி
நீர்விழி சொரிந்தனு பவிக்கும்
சீரிய நெறியான் நுணாவிலம் பதியில்
சேர்ந்தனன் சேர்ந்திடு மனமே. 10

6. மலர்த்தாட் பணிவு

51. ஆன்றசிவம் சக்தியிணைந் தாளவருந் தேனமுதம்
மூன்றுவிழி நான்குபுயம் ஐந்துகர மூர்த்தியவர்
ஊன்றிவளர் நுணாவிலதன் கோலங்கரை உவந்திருப்பார்
தோன்றுதுணை ஆனைமுகத் தோன்றல்மலர்த் தாள்பணிவாம். 1

52. வானவரும் மண்ணவரும் வாழ்வுபெற வந்துதித்தார்
ஈனமுறு கயமுகனை இலங்குகொம்பால் எறிந்துகொன்றார்
மானமிகு நுணாவிலதன் கோலங்கரை மதித்துறைவார்
வானமுத ஆனைமுக வள்ளல்மலர்த் தாள்பணிவாம். 2

53. கல்விகலை கருணையெல்லாக் கருமத்தும் முதற்கடவுள்
வல்லயனார் படைப்பதற்கு வழிவகுத்தின் னருள்புரிந்தார்
நல்வினைசெய் நுணாவிலதன் கோலங்கரை நயந்திருப்பார்
அல்லல்கெட ஆனைமுக வையன்மலர்த் தாள்பணிவாம். 3

54. முற்றுணரும் முனிவரிவர் மூவுலக மூர்த்தியிவர்
நற்றிருமால் பெற்றகுறை நலிவுறவின் னருள்புரிந்தார்
குற்றமிலா நுணாவிலதன் கோலங்கரை குடியிருப்பார்
கொற்றமிகும் ஆனைமுகக் கோனின்மலர்த் தாள்பணிவாம். 4

55. நீதிபுரி வித்தகனார் நிகரிலரும் புத்தியினார்
தாதைசிவன் தேரிறுத்தித் தவறுணர்த்தும் குறும்பிழைத்தார்
பேதமிலா நுணாவிலதன் கோலங்கரை பிரிந்தறியார்
வேதமுதல் ஆனைமுக வேந்தர்மலர்த் தாள்பணிவாம். 5

56. உற்றபெரும் போட்டிகளில் வெற்றிபெற உதவிநிற்பார்
பெற்றவரை வந்துவலம் பெறற்கரிய பரிசுபெற்றார்
சொற்றிறம்பா நுணாவிலதன் கோலங்கரை தொடர்ந்திருப்பார்
நெற்றியிற்கண் ணானைமுக நேயர்மலர்த் தாள்பணிவாம். 6

57. காதலரைச் சேர்த்துவைக்கும் கருணைமிகு கணபதியார்
ஏதமிலாக் குறமகளை இளவலுடன் இணைத்துவைத்தார்
வேதமொலி நுணாவிலதன் கோலங்கரை மீதுறைவார்
சோதிமலை ஆனைமுகத் தூயர்மலர்த் தாள்பணிவாம். 7

58. கவின்மனையார் கல்லடியார் கடும்வெளியார் காடுடையார்
தவமுனிவர் அகத்தியர்தம் தலையிற்குட்டி வணங்கவைத்தார்
புவிபுகழும் நுணாவிலதன் கோலங்கரை பொலிந்திருப்பார்
செவிநனிகூர் ஆனைமுகத் தேவர்மலர்த் தாள்பணிவாம். 8

59. செவ்விளநீர் மோதகம்பால் தேன்கரும்பு விரும்பிடுவார்
ஒளவையிடம் நான்குபெற்றே அருந்தமிழ்மூன் றளித்துவந்தார்
ஒளவியமில் நுணாவிலதன் கோலங்கரை அமர்ந்தருள்வார்
இவ்வியல்பார் ஆனைமுக இறைவன்மலர்த் தாள்பணிவாம். 9

60. அந்தமிலார் ஆதியிலார் அண்டவெளி யெங்குமுள்ளார்
அந்தமதில் தம்வயிற்றுள் அனைத்துலகும் அடக்கிவைப்பார்
கந்தவன நுணாவிலதன் கோலங்கரை கனிந்திருப்பார்
மந்திரமாம் ஆனைமுக மன்னர்மலர்த் தாள்பணிவாம். 10

7. திருவணக்கம்

61. உன்னியழ முன்னருணர்ந் தோடியுடன் வந்துதவும்
அன்னையினும் மிகவிரும்பி அன்புசெய்வார் அரவணைப்பார்
மன்னுமெழில் நுணாவிலதன் கோலங்கரை மகிழ்ந்துறைவார்
தன்னிகரில் விநாயகரைச் சார்ந்துநிதம் வணங்கிடுவாம். 1

62. தந்தையினுஞ் சாலவெல்லாந் தந்துதவி யாதரிப்பார்
அந்தமிலா வரந்தருவார் அறிவுநலச் சுகந்தருவார்
செந்தமிழ்வாழ் நுணாவிலதன் கோலங்கரை சிறந்திருப்பார்
விந்தைமிகு விநாயகரை விரும்பியென்றும் வணங்கிடுவாம். 2

63. உற்றவுடன் பிறப்பினும்மேல் உறுதுணையா யுடனிருப்பார்
பற்றிலரா மாயினுந்தன் பத்தர்களிற் பற்றுமிக்கார்
கற்றவர்வாழ் நுணாவிலதன் கோலங்கரை களித்திருப்பார்
வெற்றிமிகு விநாயகரை வீழ்ந்துருகி வணங்கிடுவாம். 3

64. ஒப்பிலரும் குருவுரைக்கும் உயருரைசெய் குருமணியார்
எப்பொருளும் அவர்முடிபாம் இன்னறிவே யவர்வடிவாம்
வெப்பிலித நுணாவிலதன் கோலங்கரை வீற்றிருப்பார்
மெய்ப்பொருளாம் விநாயகரை மேவிநின்று வணங்கிடுவாம். 4

65. உயிர்தருவான் நண்பரினும் உயர்ந்தபெரும் நண்பரிவர்
துயரெதுவும் தோன்றவிடார் தொல்வினையும் ஊன்றவிடார்
வயல்மலிந்த நுணாவிலதன் கோலங்கரை வளர்ந்தொளிர்வார்
செயல்முதல்வர் விநாயகரைச் சேர்ந்துருகி வணங்கிடுவாம். 5

66. செறிந்தவின சனத்தவரிற் சிறந்தவரா மிவரடியார்
துறந்தமனத் துலங்குகுணந் தூயவினைத் தொண்டர்களாம்
சிறந்தபதி நுணாவிலதன் கோலங்கரை திகழ்ந்திருப்பார்
நிறைந்தகதி விநாயகரை நெஞ்சிருத்தி வணங்கிடுவாம். 6

67. அன்புமிகு மனைவியினும் அதிநெருங்கிப் பணிபுரிவார்
பின்புவரும் பெரியவின்பப் பெரும்பயனை உடனளிப்பார்
இன்பனையூர் நுணாவிலதன் கோலங்கரை எழுந்தருள்வார்
மன்பொருளாம் விநாயகரை வாழ்த்தியென்றும் வணங்கிடுவாம். 7

68. கண்கண்ட கணவனினும் கதியளிக்கும் தலைவரிவர்
விண்கண்ட யாவருக்கும் விநாயகராய் விளங்குபவர்
தண்கொண்ட நுணாவிலதன் கோலங்கரை சஞ்சரிப்பார்
திண்ணண்ட விநாயகரைத் தினம்நினைந்து வணங்கிடுவாம். 8

69. அறிவறிந்த மக்களிலும் அருஞ்செல்வம் இவர்கழல்கள்
முறையறிந்த சிவபெருமான் முத்தமிடும் முதற்பிள்ளை
நெறியறிந்த நுணாவிலதன் கோலங்கரை நிலைத்திருப்பார்
விறல்மிகுந்த விநாயகரை மிகப்பணிந்து வணங்கிடுவாம். 9

70. என்னிலும்நல் லினியவராய் இருந்தெனக்குள் இயக்குகின்றார்
சொன்னபடி செய்திடுவார் சுகமளித்துக் காத்தருள்வார்
தென்னைவள நுணாவிலதன் கோலங்கரை திளைத்திருப்பார்
மன்னெழிலார் விநாயகரை மண்டியிட்டு வணங்கிடுவாம். 10

8. திருத்தாளடைவு

71. மனம்விரும்பிக் கேட்பதெல்லாம் மறுகணமே வழங்கிடுவார்
அநுபவிக்க விட்டுவைப்பார் ஆசைகெடச் செய்துநிற்பார்
புனிதவுள்ள நுணாவிலதன் கோலங்கரை புகழ்ந்துறைவார்
தனிமுதல்வர் தலைப்பிள்ளை தமிழமுதத் தாளடைவாம். 1

72. ஆடிமனம் அடக்கமுறும் ஐம்புலனும் அறிவுபெறும்
நாடியுறு பயன்விழையும் நாகரிக வாழ்வளிப்பார்
கோடியெழில் நுணாவிலதன் கோலங்கரை கோயிலுற்றார்
கூடகற்றுங் குணப்பிள்ளை குளிர்ந்தசுகத் தாளடைவாம். 2

73. படிப்படியா யுள்ளமதைப் பக்குவஞ்செய் தொளியிடுவார்
உடனடியா யிருளகலும் உள்ளதெல்லாந் தெரியவரும்
அடிமுடியூர் நுணாவிலதன் கோலங்கரை அகமுடையார்
அடியவர்கா முறுபிள்ளை அமைதிதருந் தாளடைவாம். 3

74. என்னபெற்ற உடலுலகம் என்னகண்ட வாழ்க்கையென
உன்னியெழுங் கேள்விகளால் உறுபொருளை யுணரவைப்பார்
தன்னிகரில் நுணாவிலதன் கோலங்கரைத் தலமுடையார்
மன்னுயர்வு தரும்பிள்ளை வசந்தவின்பத் தாளடைவாம். 4

75. சுந்தரமா வீடுபல சூழுலகில் இருந்துமென்ன
சொந்தநல வீட்டுணர்வே தொடர்ந்துநெஞ்சில் வளர்த்துநிற்பார்
சிந்தைநல நுணாவிலதன் கோலங்கரைத் திருவிடத்தார்
பந்தமறுத் தருள்பிள்ளை பரமசுகத் தாளடைவாம். 5

76. உள்ளதெல்லா மொன்றுமில்லை உறவுமில்லைப் பகையுமில்லை
உள்ளமுயிர் உலகமெல்லாம் ஓம்பொருளே யொளிமயமாம்
கள்ளமிலா நுணாவிலதன் கோலங்கரைக் கவின்மனையார்
உள்ளமுவந் திவர்பிள்ளை ஓங்குசுகத் தாளடைவாம். 6

77. தன்னைமுதல் வெளிப்படுத்தித் தத்துவமும் விளங்கவைப்பார்
அன்னையைப்பின் காட்டி யப்பால் அத்தனையும் அறியவைப்பார்
என்னரிய நுணாவிலதன் கோலங்கரை இருப்புடையார்
துன்னருமா துணைப்பிள்ளை தூங்குகளித் தாளடைவாம். 7

78. தவமிலருந் தாமுணர்ந்து தலைப்படமுன் தாங்கியவர்
பவமறுத்துப் பரிசளித்துப் பதமளிக்கும் பரமரிவர்
சிவமயவூர் நுணாவிலதன் கோலங்கரைச் செழும்பதியார்
கவினமுதக் கலைப்பிள்ளை கதியளிக்குந் தாளடைவாம். 8

79. இவரடியார்க் குயிரெடுக்கும் இயமனென்னும் இராசனில்லை
அவரருகில் இருக்கையிலே எவர்வருவார் துன்புறவே
குவியடியார் நுணாவிலதன் கோலங்கரை கொலுவிருப்பார்
சிவனடிசேர்த் தருள்பிள்ளை தேமதுரத் தாளடைவாம். 9

80. முடிவுவரை துணையிருந்து முத்தியின்ப வீட்டினுள்ளே
குடியிருக்கக் கொண்டுசெல்வார் குனிந்தமரர் வரவேற்பார்
விடிவுதரும் நுணாவிலதன் கோலங்கரை வீடுடையார்
அடியவரின் உயிர்ப்பிள்ளை அறியவொணாத் தாளடைவாம்.10

9. பூங்கழலணிவு

81. உவகையுடன் விருப்புணர்ந்தின்
னுணவுவகை ஊட்டிமிகக்
கவனமுடன் வளர்த்திடுவார்
காதலுடன் அணைத்தருள்வார்
சிவநெறிகொள் நுணாவிலதன்
கோலங்கரை செறிந்திருப்பார்
தவவிளைவாம் கணபதியார்
தாமரைப்பூங் கழலணிவாம். 1

82. நல்லகுணம் பண்புயர்ந்த
நடத்தையுந்தந் தகமகிழ்வார்
கல்விகலை அறிவுபெறக்
கருத்துடனே வழிசமைப்பார்
பல்கலையூர் நுணாவிலதன்
கோலங்கரைப் பதிவுடையார்
வல்லபெருங் கணபதியார்
வடிவுறுபூங் கழலணிவாம். 2

83. புத்திசித்தி புத்துணர்வு
புகழ்வரிசை புரிந்துபெரும்
வித்தகரின் மத்தியிலே
வீற்றிருக்க விரைந்தருள்வார்
சுத்தமன நுணாவிலதன்
கோலங்கரை சூழ்ந்திருப்பார்
நித்தியராம் கணபதியார்
நெறிதருபூங் கழலணிவாம். 3

84. விரும்புதொழில் பார்க்கவைப்பார்
வேண்டுபொருள் சேர்க்கவைப்பார்
இரும்பனைய வதிபர்களும்
சிரம்பணியும் திறனளிப்பார்
கரும்புவளர் நுணாவிலதன்
கோலங்கரை காத்துறைவார்
அரும்பொருளாம் கணபதியார்
அழகியபூங் கழலணிவாம். 4

85. உடன்பிறந்தார் ஆதரவால்
உயர்குருமார் அறிவுரையால்
படியுநண்பர் உதவிகளால்
பயன்மிகுந்த சுகந்தருவார்
குடியுயரும் நுணாவிலதன்
கோலங்கரை குடியிருப்பார்
இடர்களையும் கணபதியார்
இன்னரும்பூங் கழலணிவாம். 5

86. மனநலமார் மனைவியுடன்
மகிழ்ந்திருக்க வருள்புரிவார்
இனநலமும் சேர்த்திடுவார்
இல்லறமும் பெருகவைப்பார்
மனைவளமார் நுணாவிலதன்
கோலங்கரை வதிந்தொளிர்வார்
வினைமுதல்வர் கணபதியார்
வெற்றிகொள்பூங் கழலணிவாம். 6

87. அரியநிதி எனத்தமிழர்
அன்றுமுதற் போற்றிவரும்
உரியமதி மக்களையும்
உவந்தருளும் உத்தமனார்

பெருமைமிகு நுணாவிலதன்
கோலங்கரைப் பெருங்குடியார்
திருவிளையும் கணபதியார்
தேடரும்பூங் கழலணிவாம். 7

88. குறிப்புணரும் இளையவரைக்
குறைவிளங்கா முதியவரைப்
பொறுப்புணரும் அலுவலரைப்
பொருத்திவைத்துப் புகழ்புரிவார்
சிறப்பறியும் நுணாவிலதன்
கோலங்கரை தினமுறைவார்
பிறப்பிறப்பில் கணபதியார்
பீடுறுபூங் கழலணிவாம். 8

89. பாங்குடனே பழகியபின்
பரிசழிக்க[1] நினைப்பவர்கள்
தீங்கிழைக்கக் கருதுபவர்
செருக்கனைத்தும் அடக்கிவைப்பார்
மாங்கனியூர் நுணாவிலதன்
கோலங்கரை மலர்ந்திருப்பார்
ஓங்குபுகழ் கணபதியார்
உறுதுணைப்பூங் கழலணிவாம். 9

90. நன்றெனது பிறப்புடலம்
நன்றுலகு நல்லதெல்லாம்
என்றினிது வாழவைக்கும்
இவ்வுலகக் கடவுளிவர்
ஒன்றிவளர் நுணாவிலதன்
கோலங்கரை ஊன்றியுளார்
என்றுமுள கணபதியார்
இன்றமிழ்ப்பூங் கழலணிவாம். 10

[1] பரிசழிக்க - மதிப்பைக் குறைக்க.

10. பூசனைப் பதிகம்

91. சந்தன விருக்கை மீது
சால்புற வமர்ந்தி ருக்கும்
விந்தைவி நாய காநின்
மேன்மைகொள் மலர்ப்ப தங்கள்
சிந்தையி லிருத்தி யன்பால்
தினந்தினம் பூசிக் கின்றேன்
முந்திய தவத்தால் வந்த
முழுப்பய னுணர்ந்தேன் வாழி. 1

92. உன்கருத் துடன்வி ழித்தோம்
ஓம்கண பதியென் றோதி
மன்கதி ருதிக்க முன்னர்
மகிழ்வுட னெழுந்து பூதப்
புன்கடன் முடித்து மூழ்கிப்
புதுமலர் பறித்து வந்தேன்
இன்கர முதலே பூசை
இயற்றுதற் கருள்வாய் வாழி. 2

93. பாலறு குச்சி வைத்துப்
பலகுடப் பன்னீர் கொண்டு
சாலவும் முழுக வார்த்துச்
சரிவரப் போக்கி யீரம்
சீலநற் பட்டு டுத்தித்
திருநலச் சால்வை யிட்டேன்
ஞாலமு மிவ்வா றாக
நாயகா வருள்வாய் வாழி. 3

94. ஐயனே நினக்கென் றன்பா
யாக்கிய வண்ணச் சுண்ணம்
மெய்யெலா மினிது பூசி
விளங்கெழில் நீற ணிந்து
செய்யவான் திலக மிட்டுச்
செஞ்சடை யழகு செய்தேன்
வையமும் இவ்வா றாக
வள்ளலே யருள்வாய் வாழி. 4

95. சவியுறத் தங்க வைரச்
சங்கிலி தகுமுத் தாரம்
கவினொளி குழைக ழல்பொற்
காப்பணி வகைய ணிந்து
நவமணி முடித ரித்து
நறுமலர் மாலை யிட்டேன்
அவனியும் இவ்வா றாக
அண்ணலே யருள்வாய் வாழி. 5

96. படிவுறு தூபம் போட்டுப்
பலவகைத் தீபங் காட்டிக்
கொடிகுடை யால வட்டம்
கொலுவுறப் பிடித்துத் தென்றல்
தடவுறு வகையில் மெல்லச்
சாமரை வீசி நின்றேன்
படியிலும் இவ்வா றாகப்
பண்ணவா வருள்வாய் வாழி. 6

97. கண்ணுதல் மதியே போற்றி
கணங்களின் பதியே போற்றி
விண்ணவர் முதலே போற்றி
விநாயகா போற்றி யென்றென்
றண்ணலே மலர்கொண் டன்பால்
அர்ச்சனை புரிந்து நின்றேன்
மண்ணிலும் இவ்வா றாக
மாமுகா வருள்வாய் வாழி. 7

98. பலவகைப் பண்ணி யங்கள்
பாகவல் தேன்க ரும்போ
டலகில்நற் பால்ப ழங்கள்
அரியசெவ் விளநீ ரெல்லாம்
பொலிவுறப் படைத்து நற்றாம்
பூலமுந் தரிக்க வைத்தேன்
உலகமும் இவ்வா றாக
வோம்முகா வருள்வாய் வாழி. 8

99. கண்ணினில் நின்னை வைத்துக்
கருத்துடன் கரங்கு வித்துப்
பண்ணுடன் பாடிக் குட்டிப்
பரவிப்பின் சுற்றி வந்து
கண்முன்னர் கலங்கி வீழ்ந்த
பிள்ளையைக் கண்டு கொண்டு
பண்ணிய பூசை ஏற்க
வேண்டினன் பணிந்து வாழி. 9

100. முன்பெனை யாண்டு பூசை
முழுவதுங் காண வைத்த
அன்பனே யதனை யேநின்
னருளினால் அகத்திற் செய்தேன்
இன்புறத் தினமும் நீமுன்
னிருந்திதை இயற்ற வைப்பாய்
மன்பதை வாழும் பூசை
மனத்தினிற் புரியின் வாழி. 10

101. மாசற மனங்கள் ஆனை
முகமதிப் பெருமா னுக்குப்
பூசனை செய்வோர் வாழி
புரிந்துசெய் விப்போர் வாழி
ஆசையோ டருகில் நின்றப்
பூசைகாண் அடியார் வாழி
பேசரும் நுணாவில் வீரப்
பிள்ளையார் வாழி வாழி. 11

11. திருவுலா வெழுச்சி

102. ஐயனே பிள்ளையா ரப்பனே எழுக
ஆனைமுகத் தேனமுத வண்ணலே எழுக
செய்யனே கணபதிச் செம்மலே எழுக
திருநுதற் கண்ணுடைய தேவனே எழுக
மெய்யனே விண்ணவர் வேந்தனே எழுக
விக்னேசு வரநாம மேலவா எழுக
துய்யவான் திருக்கோலங் கரைமீது சுடரும்
தோன்றலே சிவசக்திச் சோதியே எழுக! 1

103. கயமுகன் கொடுமைகள் கடிந்தனை எழுக
கண்கண்ட கருணைமா கடவுளே எழுக
அயனவர் படைத்திட வருளினை எழுக
அண்டினார்க் காதர வைங்கரா வெழுக
வியன்மிகு தேர்க்காலை விழுத்தினை எழுக
வெற்றிபெற வழிசெய்யும் நற்றவா எழுக
பயன்மிகு திருக்கோலங் கரைமீது பதிகொள்
பாமரர் பத்தனே முத்தனே எழுக! 2

104. பெற்றவர் உலகென்று கனிபெற்றோய் எழுக
பேர்மதி யாளரின் பிள்ளையே எழுக
உற்றவே லவன்வள்ளிக் குதவினை எழுக
ஒருமனத் திருமணக் குருமணி எழுக
முற்றுணர் அகத்தியர் நற்றுணை எழுக
மோனமார் ஞானவான் முனிவரே எழுக
கற்றுணர் திருக்கோலங் கரைமீது களிக்கும்
கற்பகக் கனியுருக் கலைமணி எழுக! 3

105. தேடரும் திருநீறு குறிமுறை திகழ
செஞ்சாந்து குங்குமம் நுதலிலே யொளிர
ஆடைகள் அடியவர்க் கலங்கார மாக
ஆபரணம் யாவுமிக அழகுறப் பொலிய
சூடுமா முடிமணி தூநில வெறிப்பத்
தோள்புரி நூல்மலர் மாலைகள் துலங்க
கூடிநற் றிருக்கோலங் கரைமீதிற் குலவும்
கூர்மதிப் பிள்ளையே வீதிகொள வெழுக! 4

106. ஆணவம் அடக்குமங் குசமொரு கரத்தில்
ஆண்டதைப் பிணைக்குவான் கயிறொரு கரத்தில்
வீணரை வீழ்த்துவிறல் கொம்பொரு கரத்தில்
வேலனை வென்றகனி வேறொரு கரத்தில்
பேணுமடி யார்கள்வினை பேதிக்குங் கலசம்
பெருங்கரம் எனஇவை உள்ளபடி பிறங்க
ஆணிலத் திருக்கோலங் கரையமர்ந் தாளும்
ஆனைமுக வையனே போற்றியெழுந் தருள்க! 5

107. தொண்டரின் தோள்களில் துலங்கியெழுந் தருள்க
சுந்தரத் திருக்கோலம் விளங்கவெழுந் தருள்க
கண்டவர் கண்ணெலாம் நிறையவெழுந் தருள்க
கருத்திலே திருத்தமா யுறையவெழுந் தருள்க
அண்டினார் நாவெலாம் ஒலிக்கவெழுந் தருள்க
அடியவர் அன்பிலே குளிக்கவெழுந் தருள்க
தண்டலைத் திருக்கோலங் கரைமீது தரிக்கும்
தடக்கரம் ஐந்துடைய தலைவனே எழுக! 6

108. எங்கணும் கோபுர மணியெதி ரொலிக்க
எல்லோரும் வாயார வரகரா வென்ன
சங்குகள் இடையிடை தனித்தனி ஊத
சார்ந்துசே மக்கலம் தண்ணென விசைப்ப

மங்கலத் தவிற்கூட்டம் மாறியே பேச
மன்னுதே னிசைநாத சுரம்கூட்டி வழங்க
பொங்கெழில் திருக்கோலங் கரைமீது பொலியும்
போற்றுமா களிற்றுமுகப் புண்ணியா வெழுக! 7

109. அடியவர் பெருவண்ணக் குடைபிடித் தார்ப்ப
அணியினில்கொடியால வட்டமிவை தாங்க
படிவுறு சாமரைகள் பக்கலில் வீச
பந்தர்கள் பலதாங்கிப் பத்தர்முன் செல்ல
கடிகமழ் தூபங்கள் கலந்தெங்கும் பரவக்
கற்பூர வொளிமன்னு கதிரோனை வெல்ல
படர்புகழ் திருக்கோலங் கரைமீது பயிலும்
பார்வதி பகர்ந்தநம் பரமனே எழுக! 8

110. பையவே பத்தர்பன் னீர்த்தூறல் காண்க
பாமாலை பாடியே பரவுவார் காண்க
துய்யபூ விதழ்மாரி சொரிபவர் காண்க
தொடர்ந்தடி யழிப்பவர் தொகையினைக் காண்க
மெய்யன்பர் புடைசூழ்ந்து வெதும்புதல் காண்க
மேன்மைகொள் காட்சிபெற விரைபவர் காண்க
செய்தவத் திருக்கோலங் கரைமீது திகழும்
சிவகலைத் தேறலே சிறக்கயா மெழுக! 9

111. கைதலை சேரடி யார்கடல் காண்க
களித்துநீர் மல்கியே கசிபவர் காண்க
மெய்சிலிர்த் தெழவெலாம் விட்டவர் காண்க
விளக்கவொண் ணாவகை வியப்பவர் காண்க
ஐயனே ஆடுவார் பாடுவார் காண்க
ஆவேச நிலையெய்தி அரற்றுவார் காண்க
வையமார் திருக்கோலங் கரைமீது வதியும்
வாரண முகத்தவா வாழ்த்தநா மெழுக! 10

112. கன்றாக வுள்ளவர் கருணையமு தருந்த
கலங்கியே யழுந்துவார் காரணத்தை யறிய
ஒன்றாகி யுள்ளவர் தமிலுன்னைக் காண
உரிமைகொண் டாடுவோர் உறவுமுறை பேண
மன்றாடி வேண்டுவார் மனநிறைவு கொள்ள
மற்றவரும் உற்றவினை தீர்ந்துவள மெய்த
வென்றாளும் திருக்கோலங் கரைமீதி லங்கும்
வீரகத்திப் பிள்ளையரே வீதிவர வெழுக! 11

113. ஊழிவென் றுள்ளதமிழ் ஓங்கிவர வெழுக
ஒன்றாகச் செந்தமிழர் உழைத்துயர வெழுக
ஈழம்வாழ் மாந்தர்நல் வாழ்க்கைபெற வெழுக
எங்குமடி யார்மொழிகள் ஆட்சிசெய வெழுக
ஆழிசூ ழுலகன்பு நெறிதழுவ வெழுக
ஆய்க்கினைகள் தீர்ந்துயிர்கள் அமைதிபெற வெழுக
ஏழிசைத் திருக்கோலங் கரைமீதி லிலங்கும்
எங்கள்குலத் தெய்வமே எழுகவெழுந் தருள்க! 12

12. குருஞானப் புலம்பல்

114. உலகமெலா முண்டவனே யோம்பொருளாய் நின்றவனே
அலகிலருஞ் சோதியனே யறியவொணா வாதியனே
தவமுனிவர் தேவருயர் தகையடியார் புண்ணியத்தால்
சிவனுமைக்கு மைந்தனென வந்துதித்த திருவுருவே
ஆனைமுக மானவனே அன்புமலர் மேனியனே
ஞானநுதற் கண்மகனே ஐந்துகரப் பண்ணவனே
ஆணவத்தைப் போக்கவல்ல அங்குசமும் நாணையமும்
பேணுமடி யார்பொருட்டுப் பின்கரத்திற் பெற்றவனே
மோதகந்தேன் விளாகரும்பு முக்கனிபா லவலிளநீர்
ஆதியன விரும்பிமிக வமுதுசெய்யு மினியவனே
விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகனே கணபதியே
பக்குவமார் பரமசுக வீடுடைய பரம்பொருளே! 12

கலையுணர்வோ கணியறிவோ காணமுடி யாதவனே
சிலைவடிவோ திருவிழவோ பேணமுடி யாதவனே
சொந்தமென்றோ பந்தமென்றோ சூழவொண்ணாத் தூமணியே
அந்தமிலா நான்மறையும் ஆளவொண்ணா வதிபதியே
வடிவழகே வளர்கலையே வளவூற்றே யிளங்காற்றே
முடிமணியே மணிமுத்தே முத்தமிழே தமிழரசே
இணையிலுயர் புத்தகமே இன்பசுகத் தத்துவமே
மணமகனே மன்னவனே மழைமுகிலே மலைவளமே
கற்பகமே கண்மணியே கவின்கலையே காவியமே
அற்புதமே அணிகலனே யாரமுதே யெனத்தொடரும்
சொற்பதங்க ளால்விளக்கிச் சொல்லமுடி யாதபெரும்
விற்பனனே வீசுகலை விழுப்பொருளே விநாயகனே! 24

ஆற்றவொணா வல்லலறுத் தாதரிக்குங் காவலனே
சீற்றமிகு கயமுகனின் செருக்கொழித்த சேவகனே
படைக்குமுறை நான்முகர்க்குப் பரிவுடனே சொன்னவனே
இடைக்குறைமால் நீங்கியெழ விரங்கியமா நன்மையனே
அந்தமிலா வரமளித்தே யகமகிழ்ந்த தன்னிகரில்
தந்தையிவர் தேரிறுத்த தாமரைக்கைச் சின்னவனே

முந்திவலம் வந்துலகைப் பந்தையத்தில் உயர்ந்தவனே
செந்திருப்பூ வள்ளிசெவ்வேள் சேரவழி செய்தவனே
காகமென வந்துகுறு முனிவருடன் களித்தவனே
ஆகுதிருக் கயிலைதனை ஒளவையன்புக் களித்தவனே
ஊழியுற வுலகையெலாம் உவப்புடனே கருதரிய
பேழைவயிற் றாலடக்கிப் பேணவல்ல பெரியவனே! 36

கல்வியினால் நன்னடையாற் கருணையினால் நீதியினால்
நல்வினையாற் பத்தியினால் நாடுபுகழ் ஆன்றவர்கள்
வாழ்வதனால் வையகத்தில் வானுலகம் போல்விளங்கி
யாழ்மகளின் பண்பமைதிக் கணிபுரியும் நுணாவினிலே
தென்னைபனை புன்னைபலா தேக்கிலுப்பை மாமருது
பொன்னிழலால் நுணாவைபுளி பூவரசு கொன்றைகொய்யா
வென்னுமிவை தாம்வளர்ந்தே யியற்கையெழிற் சோலைதரும்
மன்னுபுகழ் கோலங்கரை மலிவளமா வான்பதியில்
பூவையர்வாழ்[1] புனிதநலப் பூக்குளத்தோ டிலங்கியெங்கும்
மேவிவளர் மருதநில மேன்மைமிகு மருங்கினிலே
வீரகத்தி வளவினிலே மிகவிரும்பி வீற்றிருக்கும்
பேரகத்துப் பெருமகனே பீடுமிகு பிள்ளையரே! 48

முற்பிறப்பிற் செய்ததவ முழுப்பயனா லிப்பிறப்பிற்
கற்பதித்துப் பூசைசெய்து களித்துவந்த கவின்மனத்து
விளையாட்டுச் சிறுவருக்கு விளங்குவண்ணம் வியனுருவம்
வெளிக்காட்டி யாவரையும் வியக்கவைத்த மேலவனே
கோயிலுக்குள் நள்ளிரவில் நுழைந்தவனைக் கொண்டுசென்ற
வாயினிக்கும் கதலியிடை வழிவழியே விழவருளிக்
காலையிலே யவன்நடந்த பாததனைக் காட்டியுடன்
சோலியின்றிப் பிடிக்கவைத்துத் துயர்துடைத்த சுந்தரனே
கட்டுக்குக் கார்த்திகேயர் கடிவாய்க்குக் காசிப்பிள்ளை
மட்டற்ற கண்ணோய்க்கு மதிவாணர் கணபதியார்
எனவீழ மேத்திவரும் இவர்மூலம் நின்னடியார்
கனநோய்கள் கருணைகொண்டு கடிதினிலே மாற்றியவா? 60

பருவமழை பெய்திடவும் பயிர்வகைநன் குய்ந்திடவும்
அருள்பொழிந்து நுணாவிலதன் அகங்குளிரக் களிப்பவனே
மறந்துவிடும் அடியவரின் மாடுகன்றை மறைத்தவரைப்
பறந்துவரப் பணித்தரிய புதுமைகளைப் படைப்பவனே
பொன்மண்பெண் பூசலின்றிப் பொறுப்புடனின் புகழ்பரவும்
அன்பர்நல வாழ்க்கையதன் அடிமுடியா யமைபவனே
இதமுடனே சரிசமமாய் எல்லவரும் ஏத்தநின்றன்
கதவுகளைத் திறந்தபெருங் கருணைமிகு கரிசனனே
ஆண்டுபல விழாக்களின்றி அடக்கமுடன் மோனநிலை
பூண்டிருந்து பத்தரிடம் புத்துணர்வைத் தூண்டியவா
மூண்டபெருங் காதலினால் முன்விழுந்து கண்சொரிந்து
வேண்டுமன்பர் வல்வினைகள் வீழ்த்துமெங்கள் விநாயகரே! 72

அன்படக்கம் அறிவுநலம் ஆற்றல்வளம் ஏற்றவுயர்
பண்பியல்பு பரந்தமனம் பக்குவத்தார் நடையமைதி
தென்புடனே சிக்கல்களைத் தீர்க்கவல்ல சிறப்புறுதி
என்பினையு மீயவல்ல இரக்ககுணக் கொடைப்பரிசு
புல்லரையும் பணியவைத்துப் புதுக்கவல்ல புன்முறுவல்
அல்லலெல்லா மறுத்தினிதே யாதரிக்கு மன்புமொழி
நீங்கலில்லா நீறுகொண்ட நெற்றியிலே நிறைமதிபோல்
ஓங்கியொளிர் சந்தனத்தால் உள்ளமெலாங் கொள்ளைகொண்டே
ஊரவருக் குழைத்துவந்தார், ஒப்பரிய குலக்கடவுள்
வீரபத்தி ரர்க்கடிமை பூண்டபெரும் வீறுடையார்
உடன்பிறந்தார் உயிர்கலந்தார் உயர்ந்ததுணை மார்க்கண்டர்
வடிவில்வந்து வையகத்தில் வாழ்வளித்த வல்லவனே! 84

போர்வையினா லுனைமறைத்துப் போந்தென்முன் னவனுருவில்
பார்வையினா லுளங்கவர்ந்து பலவுதவி நனிபுரிந்து
சின்னவெனை மிகப்பரிந்து வளர்த்தெடுத்துத் திறன்சொரிந்து
கன்னற்கவி பாடவைத்துக் களிப்புறுமா கவியரசே
கொண்டதிருப் பெருங்கோலக் குருவடிவைக் குலக்கொழுந்தைக்
கண்டுகண்டு யான்களித்த கண்ணிறைந்த கவினுருவைக்

கொண்டுசென்ற தென்னவென்ன குலுங்கியழ வைத்ததென்ன
அண்டமெலாம் இருண்டதென்ன ஆழ்துயரந் திரண்டதென்ன
நெய்முடிய முன்னரிய நேர்விளக்கு நூர்ந்ததென்ன
கைகொடுத்த கொழுகொம்பு கடுகதியிற் சாய்ந்ததென்ன
செய்தபிழை யேதறியேன் திருவருளின் புதிர்புரியேன்
பொய்களையும் கோலங்கரைப் பிள்ளையரே பொறுத்தருள்வீர்! 96

கல்விகலை தந்ததென்ன பல்புகழால் வந்ததென்ன
செல்வநிலை பூத்ததென்ன திகழ்பதவி சேர்த்ததென்ன
ஒன்றுமில்லை யொன்றுமில்லை யுள்ளகடைக் கணக்கதிலே
ஒன்றுமிச்சம் உணர்ந்துகொண்டேன் ஓம்பொருளே சரணடைந்தேன்
அண்டவெளிச் சூரியரும் அண்டியுள்ள சந்திரரும்
கொண்டதெலாம் நின்பொருளே கோருவதும் நின்னருளே
மாநிலமும் வானுலகும் வாழ்த்துவது நின்பதமே
தேனமுதும் திரவியமும் செந்தமிழும் நின்பதமே
ஆக்கவினை நாயகனே அதிமதுரத் தேனவனே
காக்கவெனைக் கோலங்கரைக் கவின்பதிவாழ் கணபதியே
ஊருமில்லைப் பேருமில்லை யாருமில்லை யினியெனக்குன்
ஓர்திருவான் குருவடிவே உள்ளமெல்லாம் உலகமெல்லாம்! 108

---

[1] பூவையர் - செந்தாரைப் பூவிலே வீற்றிருக்கும் திருமகளும் வெண்டாமரைப் பூவிலே வீற்றிருக்கும் கலைமகளும்.

2

விநாயக வெண்பா

விநாயக வெண்பா - உள்ளடக்கம்

		பக்க எண்
	அணிந்துரை	49
	காப்பு	55
	அவையடக்கம்	55
1.	நூல்	55
2.	நூற்பயன்	70

அணிந்துரை

கலாநிதி நா. சுப்பிரமணியன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
இலங்கை

இறைவழிபாட்டு மரபு வகைகளுள் ஒருவகையாக அமைவது நாமார்ச்சனை முறைமை. இறைவனின் திருப்பெயர்களை எடுத்து ரைத்து, நெஞ்சம் நிறைவுபெறும் நோக்குடையது இது. இதன் தொடர்ச்சியாக உருவாகி வளர்ந்ததே இறைபுகழ் பாடும் மரபு.

இறைவனின் புகழ்சார்ந்த அம்சங்களை விரித்துப் பேசுவத னூடாக ஒருவர் தன்னையும் தான் சார்ந்துள்ள சமூகத்தையும் புனிதப் படுத்திக்கொள்ளும் ஆர்வ முனைப்பின் வெளிப்பாடு இது. இவ்வா றான இறைபுகழ்பாடும் மரபுக்குத் தமிழ்மொழியில் நீண்ட தொரு வரலாறு உளது.

குறிப்பாக, சைவத்தமிழ் மரபிலே *திருமுருகாற்றுப்படை*, *பரிபாடல்* என்பன தொடக்கமாக இம்மரபு தொடர்கிறது. *திருமுருகாற் றுப்படை*, முருகப்பெருமானை நோக்கி அடியவரை வழிப்படுத்தியது. *பரிபாடலில்* ஒருபகுதி முருகப் பெருமானைச் செவ்வேள் ஆகத் தரிசித்துப் புகழ்ந்தேத்தியது. பின்னர் வந்த காரைக்காலம்மையார் சிவபிரானை முன்னிலைப்படுத்தி *அற்புதத் திருவந்தாதி* முதலிய பிரபந்தங்களைப் பாடித் தமிழ்ப் பத்தி இலக்கிய - பத்தி இயக்க - வரலாற்றுக்குத் தோற்றுவாய் செய்தார்.

இவ்வாறான வரலாற்றின் தொடர்நிலையாக, நமது சமகால சமய, பண்பாட்டுத் தளத்தில் - குறிப்பாகக் கனடியத் தமிழ்ச் சூழலை மையப்படுத்தி - உருவான பத்திப் பாமாலைகளில் அண்மைக்கால வரவுகளில் ஒன்றாக அமைவதே கவிநாயகர் கலாநிதி வி. கந்தவனம் அவர்களின் இந்த *விநாயக வெண்பா*. சைவ உலகின் முழுமுதற் கடவுள் என்ற போற்றுதலுக்குரியவரான விநாயகப் பெருமானின் தெய்வீகத்தை, நூறு - காப்பும் அவையடக்கமும் திருக்கடைக்காப்பும் சேர 103 - வெண்பாக்களால் துதிக்கும் பாங்கில் உருப்பெற்ற நூலாக்கம் இது.

சைவ உலகிலும் தமிழ் உலகிலும் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களுக்கு அறிமுகம் அவசியமில்லை. ஏறத்தாழ அரைநூற் றாண்டுக் காலமாக இயல், நாடகம் ஆகிய இருபெருந் தமிழ்த் துறைகளிலும் கருத்தூன்றிச் செயற்பட்டு வந்துள்ள கல்வியாளரும் கலைஞருமாகிய கந்தவனம் அவர்கள் பண்பாட்டு நிலையில் சைவ வாழ்வைப் பேணி நிற்பவர்; சைவத்தின் இறை புகழைப் பேசி நிற்பவர்; அனைத்துலக மட்டத்தில் சைவ ஆய்வரங்குகளிற் பங்கு கொண்டவர்; பல நூல்களின் ஆசிரியர். படைப்பிலக்கியமும் சமயச் சொற்பொழிவும் இவரது வெளிப்பாட்டின் இரு முக்கிய முகங்கள். சமயசார்பான சிந்தனைகளைக் காலத்துக்கு ஏற்றவகையில் நெகிழ்த் தியும் விரித்தும் எடுத்துரைப்பதிலும் எழுதுவதிலும் ஆழ்ந்த ஈடுபாடு காட்டிவருபவர் அவர் என்பதும் மனங்கொள்ள வேண்டியதொன் றாகும்.

ஒரு கவிஞர் என்ற வகையிலே, தமிழ்ப் பத்தி இலக்கிய மரபைப் பேணிநின்று பிரபந்தங்கள் படைப்பதில் இவர் தனி ஆர்வம் காட்டி வந்துள்ளார். *முறிகண்டிப் பத்து, குரும்பசிட்டி விநாயகர் பத்து, புன்னையம்பதிகம், விநாயகப்பா* என்பவை இவரது முன்னைய படைப்புகள். இன்றும் பத்திப் பனுவல்கள் பாடுவதில் தனி ஆர்வத்தைக் காட்டி வருகின்றார்.

கனடியச் சூழலில் அவர் இயற்றிய *கனடாக் கந்தன் திருவகவல்* (மேற்படி கோயில் மலரில் இடம்பெற்றது) போன்ற பிரபந்தங்களும், *எங்குமுள்ள பிள்ளையார்* என்ற தலைப்பில் *ஆத்மஜோதி* இதழில் வெளிவந்த பாடல் தொடரும், *நம்நாடு* இதழில் வெளிவந்து கொண்டி ருப்பதும் விரைவில் அச்சேறவுள்ளதுமாகிய *விநாயக விருத்தம்* என்னும் நூலும் அவரது இவ்வாறான தனி ஆர்வத்தின் சான்றாதாரங் களாகத் திகழ்வன.

குறிப்பாகக் கனடியச் சூழலிலும் புலம்பெயர் தமிழ்ச் சூழல்களிலும் சைவபத்தி மரபை வளர்த்தெடுப்பதில், கவிநாயகர் கந்தவனம் அவர்கள், தனி முனைப்போடு செயற்பட்டுவரும் ஒருவர் என்பதை அவரது ஆக்கங்கள் உறுதி செய்து நிற்கின்றன. அவ்வகை யில் மேலும் ஒரு சான்றாக இப்பொழுது வெளிவருவதே *விநாயக வெண்பா* என்ற இப்பாமாலை.

பத்தி இலக்கியங்களின் அடிநாதப் பண்பாக அமைவது, இறைவனுடைய அல்லது இறைவியினுடைய அருளாற்றலில் முழு மையான நம்பிக்கை வைத்து, அதனை அடைவதற்கான அருளாற் றலுக்குள் ஆட்கொள்ளப்படுவதற்கான - உணர்வுநிலையை முன்னெடுத்தலாகும்.

இவ்வாறான உணர்வுநிலை முன்னெடுப்புக்கு மரபுசார்ந்த பத்தி இலக்கியப் பயிற்சி மற்றும் புராண மரபுசார் கதைகளில் உள்ள பரிச்சியம் என்பன பெரிதும் துணை நிற்பனவாகும். அவற்றுடன் சமய - தத்துவ அறிவு, வழிபாட்டு முறைமைகள் பற்றிய தெளிவு, வழிபடும் அடியவர்களுடன் கொண்டுள்ள உறவு, இவை எல்லாவற்றுக்கும் மேலாக இறையநுபவத்தில் திளைக்கும் மனப்பக்குவம் என்பனவும் மிக அவசியமானவையாகும்.

கவிநாயகர் கந்தவனம் அவர்களுக்கு மேற்குறித்த பண்புகளிற் பல இயல்பாகவே வாய்த்தவையாகும். ஈழத்தின் வடபுலமான யாழ்ப்பாண மண்ணின் *'கந்தபுராண* கலாச்சார'த்தின் வழிவந்தவர் அவர் என்பதால், அவருக்கு மேற்படி பண்புகள் 'கவித்துவ முதுசொம்' என நாம் கருத இடமுண்டாகிறது. அவருடைய முன்னைய பக்தி இலக்கிய ஆக்கங்களிலும் இந்த *விநாயக வெண்பா*விலும் இப்பண்பு நலன்களை நாம் நோக்க முடியும்.

இவ்வெண்பா நூலிலே அதன் நாயகத் தெய்வமான விநாயகப் பெருமான் பற்றிய பல செய்திகள் புராண மரபை ஒட்டி எடுத்துப் பேசப்படுகின்றன. அவரை வணங்கி வழிபடுவோர் எய்தும் மேன்மைகள் சுட்டப்படுகின்றன. வணங்குவதன்மூலம் எய்தக்கூடிய 'அநுபவ ஆனந்த'மும் சில வெண்பாக்களிற் பதிவாகியுள்ளன. வணங்குவதற்குத் தகுதி பெறவில்லையே என நைந்துருகும் அன்பர்களின் மனக்கிடக்கைகளையும் சில வெண்பாக்கள் புலப்படுத்தி நிற்கின்றன. விநாயகப் பெருமானின் புராண மரபுச் செய்திகளைக் கூறுமிடத்து அச் செய்திகளுடன் தத்துவ அம்சங்களை இணைத்து விளக்கம் தரும் அணுகுமுறையையும் கவிநாயகர் அவர்கள் கையாண்டுள்ளார்கள். இவ்வாறான பல்வேறு அம்சங்கள், அணுகுமுறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்த நூலாக்கம் அமைவதால் தமிழின் பத்தி இலக்கிய மரபின் தொடர்ச்சியாக இந்நூல் திகழ்வதை உய்த்துணர முடிகிறது.

வள்ளியினை வேலவனார் வாரி யணைத்தாளத்
துள்ளிவந்தே பக்கத் துணைநின்ற - பிள்ளையரே
விண்ணவரின் கோவேநம் மண்ணவரின் வாழ்வேதாள்
நண்ணுபவர் தேவே நம. 43

இந்திரனின் பூசைக் கிதமாக நந்தவனம்
சந்ததமும் பூக்கத் தமிழ்முனிவர் - விந்தைக்
கலசம் கவிழ்த்தோடும் காவிரியைத் தந்த
வலவன் தாள்போற்று வாம். 96

இவ்வாறு அமையும் வெண்பாக்களில் புராண மரபுசார் செய்திகள் - முருகன்-வள்ளி திருமணத்திற்கும் காவிரி ஆறு பெருக்கெடுப்பதற்கும் துணைநின்ற விநாயகப் பெருமானின் அருட்செய்திகள் - பேசப்படக் காணலாம். இவை *கந்தபுராண* மரபினூடாகப் பெறப்பட்ட கருத்து நிலைகளாகும்.

தேங்காயுள் தேங்கும் இளநீர்த் திறம்போல
ஓங்காரப் பூட்டை உடைத்திட்டால் - ஆங்காரம்
போக்குமருள் பொங்கும் புகுந்தாடின் பூத்துவரும்
சூக்குமத்தின் மூலச் சுழி. 86

விநாயகப் பெருமான், 'ஓம்' எனப்படும் பிரணவ மந்திர வடிவானவர் என்பது புராண மரபு தரும் செய்தியாகும். இதற்குத் தத்துவநிலை விளக்கம் தரும்வகையில் 'தேங்காய் - இளநீர்' உவமையை எடுத்தாண்டு சிந்தனை விருந்து தர முயல்கிறார் கவிநாயகர். இவை மரபுசார் கவித்துவ வெளிப்பாடுகள் எனலாம்.

இவ்வாறாக விநாயகப் பெருமானின் புராண மரபுசார் பெருமைகள், தத்துவநிலைசார் அம்சங்கள் என்பவற்றை ஆங்காங்கே சுட்டிச் சொல்லும் கவிநாயகர் அவர்கள், வணங்கும் அடியவர்களின் மனப் பக்குவங்களையும் மெய்ப்பாடுகளையுங்கூட அநுபவ நிலைகளோடு பொருந்துமாறு பதிவுசெய்துள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இத்தொடர்பில் இரண்டு பாடல்கள் இங்கு சுட்டத் தக்கவை. அவை:

பட்டங்கள் விட்டேன் பரிசெல்லாம் விட்டுவிட்டேன்
திட்டங்கள் விட்டேன் செயல்விட்டேன் - மட்டில்
அருள்காட்டி யானை முகனாண்ட பின்னர்
இருள்கெட்டுப் பெற்றேன் இதம். 34

நின்னை வலம்வந்து நின்று தொழுகையிலே
மன்னும் கலைஞான வார்கரத்தீர் - என்னை
அறியாமற் கண்கலங்கி ஆறாவ தேனோ
குறைநீக்கி ஆண்டு கொளும். 51

இறையநுபவம் கிட்டும் நிலை வரவேண்டுமானால் எவையெல் லாவற்றையும் நாம் விட்டுவிட வேண்டும் என்பதனையும் அவ்வாறு அவற்றை விட்டால் எது கிடைக்கப் பெறும் என்பதையும் உணர்த்தி நிற்கும் முக்கிய பாடல் முதலாவது. அதில் வரும், 'இருள்கெட்டுப் பெற்றேன் இதம்' என்னுந் தொடர் அப்பாடலின் ஈற்றடி என்பதற்கு

மேலாக இந்த வெண்பா நூலின் முழுமைக்குமான சாரமாக - பயன் உரைப்பதாகத் திகழ்வதை வாசகர்கள் உய்த்துணர முடியும்.

மேற்சுட்டிய இரண்டாவது பாடல் இறையநுபவ மெய்ப்பாடு களுள் ஒன்றான கண்ணீர் விடும் நிலையை உணர்த்தி நிற்பது. வழி பாட்டு நிலைபற்றிப் பேசுகின்ற சந்தர்ப்பமொன்றிலே கவிநாயகர் அவர்கள் புறநிலையான செயற்பாடுகளைவிட அகநிலையான அன்பு மனமே அவசியம் என்பதனை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத் துள்ளார்.

அழவேண்டாம் ஆடி விழவேண்டாம் பூசை
விழவேதும் வேண்டாம் விரும்பி - தொழுது
நினைத்தாலே போதும் நிகரற்ற தேவன்
எனைத்தானும் ஈவான் இரங்கி. 5

நூலின் சாரமாக அமையும் பத்திக்கு, எடுத்துக்காட்டாகச் சுட்டத் தக்க முக்கிய பாடல்களில், இந்த வெண்பாவும் ஒன்றாகும்.

இவ்வாறாகப் பத்தி இலக்கிய மரபை ஒட்டி விநாயகப் பெருமான்மீதான தன் கவித்துவக் கற்பனைகளை விரித்துள்ள கவி நாயகர் அவர்கள் தமது சமகால வாழ்வியல் தொடர்பான தேவை களை - குறிப்பாகத் தமிழரின் சமகால வரலாற்றுத் தேவைகளையும் நூலில் ஆங்காங்கே பதிவு செய்வதன்மூலம் இந்த ஆக்கத்துக்கு ஒரு சமகால அடையாளத்தையும் தர முயன்றுள்ளார்.

குறிப்பாகத் தமிழர்களுக்கு ஒரு தனித் தாயகம் தேவை என்பதைச் சுட்டி, அதனை எய்துவதற்கு விநாயகப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றார். தமிழினம் வீழ்ந்து நாடிழந்து எய்திய துன்பங்கள் நீங்குதற்கு ஆனைமுகத் தையன் அருள்பாலிக்க வேண்டும் என்பது அவருடைய வேண்டு கோள்களில் ஒன்றாக அமைவதை இந்நூலில் நோக்க முடிகிறது. இவ்வகையில்,

சொல்லுதமிழ் ஈழம் சுதந்திரங்கள் தந்தேநீ
அல்லல்களைத் தீர்த்தருள்வாய் ஆனைமுகா - எல்லவர்க்கும்
எல்லையிலா நின்னரிய இன்னருளை எந்நாளும்
சொல்லியே போற்றித் தொழ. 18

ஒன்றல்லப் பத்தல்ல ஓயாத துன்பங்கள்
நன்றென்ற வீடில்லை நாடில்லை - வென்று
பதிமகனே எங்கள் பதியாள உந்தன்
கதிவேண்டி நிற்கின்றோம் காண். 93

என அமையும் வெண்பாக்கள் சுட்டத் தக்கவை.

இவ்வாறாகப் பத்தி இலக்கியத்துக்குரிய மரபுசார் பண்புகளையும், அதேவேளை சமகால அடையாளங்களையும் தன்னுள் கொண்டதாக இந்த வெண்பா நூல் அமைந்துள்ளது.

பொதுவாக யாப்பு வகைகளிலே, வெண்பாவைக் கையாள்வது கடினமான தொன்றென்பது தமிழ் மரபறி புலவர்களது கருத்தாகும். கவிநாயகர் கந்தவனம் அவர்களுக்கு அஃது அவ்வளவு கடினமான தொன்றாகத் தெரியவில்லை என்பதை இந்நூலின் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன. குறிப்பாக, வெண்பாவின் ஈற்றடியை ஓசைச் செறிவுடன் அமைப்பதில் அவர் மிக்க ஈடுபாடு காட்டியுள்ளமை இங்கு சுட்டப்பட வேண்டிய தொன்றாகும். சில ஈற்றடிகள் வருமாறு:

'சொல்லாது செய்வான் சுகம்'	6
'அருளா அருளென் அருள்'	20
'ஞான மதத்தேனே நம'	40
'நம்பியவர் நாதா நம'	41
'ஓயாமல் உச்சரிப்பார் ஓம்'	73

மேற்சுட்டிய 'நம' என்ற ஈற்றமைப்பு 40 - 49 வரையான வெண்பாக்களில் தொடர்ந்து இடம்பெற்றுள்ளமை இந்நூலின் சிறப்பான அம்சங்களில் ஒன்று எனலாம். நூலின் நடுப்பகுதியாக அமையும் மேற்படி 40 - 49 வரையான 10 பாடல்களையும் 'போற்றிப் பத்து' எனச் சிறப்பித்துச் சுட்ட முடியும்.

இந்த *விநாயக வெண்பா* நூலில் அடியவர்கள் - வாசகர்கள் - கண்பதிப்பதற்கான ஒரு சிறு ஆற்றுப்படுத்தல் என்ற வகையிலே எனது இந்த 'அணிந்துரை' அமைகின்றது.

கவிநாயகர் அவர்களின் முன்னைய நூலாக்கங்களில் ஒன்றான *அது வேறுவிதமான காதல்* (சிறுகதைத் தொகுப்பு) என்ற ஆக்கத்திற்கும் அணிந்துரை வழங்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று. அதன் தொடர்ச்சியாக இந்நூலுக்கும் எனது இவ்வணிந்துரை அமைகின்றது. கவிநாயகர் அவர்களின் வரலாற்றையும் வளர்ச்சியையும் பல ஆண்டுகளின் முன்பிருந்தே கவனித்தும் கணித்தும் வருபவன் என்றவகையிலே அவர் எனக்கு இருமுறை 'அணிந்துரை' வாய்ப்பைத் தந்துள்ளார்.

அந்த அன்புள்ளத்துக்கு நன்றி கூறி இவ்வுரையை நிறைவு செய்கின்றேன்.

உ

விநாயக வெண்பா

காப்பு

115. அன்புடனே போற்றி அனுதினமும் ஆனைமுகா
மன்பதையோர் நின்னை வணங்கிடவே - மன்புகழை
வெண்பா தனிற்பாட விக்கினங்கள் நீக்கியே
தண்பார்வை செய்வாய் தரித்து.

அவையடக்கம்

116. அகத்தவரை ஆனை முகத்தவரைத் தேனை
நிகர்த்தவரை நித்தம் நிலத்தோர் - மிகத்தொழவே
பாடாநின் றேன்வெண்பா பாவாணர் பத்தியினால்
நாடார்நூற் குற்றமென நம்பி.

நூல்

117. விநாயகனே வீரம் மிகுசெல்வங் கல்வி
விநாயகனே தந்தருள்வான் வெற்றி - விநாயகனே
முத்திக்கும் மூலதனம் என்பதனால் முன்னுள்ளி
எத்திக்கும் ஏத்தும் இறைஞ்சி. 1

118. ஆனைமுகச் சூரன்தன் ஆணவத்தை வென்றவிறல்
ஆனைமுகத் தேவன் அருள்பெற்றால் - தேனமுதச்
செந்தமிழும் ஏனைச் செழுங்கலையும் எல்லாமே
வந்தமையும் தாமாய் வளர்ந்து. 2

119. தடுமாறி நாளும் தலைதெறிக்க வோடிப்
பிடிவாதஞ் செய்யுமனப் பேயை - பிடித்தே
பதமாக்கி நன்றாகப் பாரிக்கும் பிள்ளை
பதம்போற்று வோமே பணிந்து. 3

120. அன்பே வடிவான ஆதிசிவன் பெற்றெடுத்த
அன்பான பிள்ளையார் அன்பதனை - என்புருகும்
அன்பாலே பெற்றுவிட்டால் அல்லலில்லை என்றென்றும்
இன்பான வாழ்க்கை எளிது. 4

121. அழவேண்டாம் ஆடி விழவேண்டாம் பூசை
விழவேதும் வேண்டாம் விரும்பி - தொழுது
நினைத்தாலே போதும் நிகரற்ற தேவன்
எனைத்தானும் ஈவான் இரங்கி. 5

122. ஓங்காரச் செல்வன் உமைபங்கன் மூத்தமகன்
ஆங்காரம் போக்கி அருள்செய்வான் - தீங்கேதும்
இல்லாத வாழ்வை எவருக்கும் ஈந்தினிதே
சொல்லாது செய்வான் சுகம். 6

123. ஏதுமெதிர் பாரானாம் என்றும் விரும்பியுண்ணும்
மோதகமும் வேண்டானாம் முக்கண்ணன் - காதல்மிகக்
கொண்டாடி நாள்தோறும் கும்பிட்டாற் போதுமே
துண்டாடி நிற்பான் துயர். 7

124. பால்போல் பயனாவான் பைந்தமிழ்போல் சுவையாவான்
ஆல்போல் நிழலாவான் ஆன்றோரின் - நூல்போல
நல்லறிவு நல்கிநிதம் நந்திமகன் செய்தருள்வான்
சொல்லரிய தோன்றாத் துணை. 8

125. சிவபெருமான் பெற்ற திருமகனைப் பற்றும்
தவமுடையார்க் கில்லையாந் தாழ்வு - புவிபுகழும்
புத்திகுணம் வித்தை பொருள்நோயில் வாழ்க்கையுடன்
சித்திகளுஞ் சேரும் சிறந்து. 9

126. நல்லார்க்கு நல்லாராம் ஆனாலும் நன்மைகளை
எல்லோர்க்கும் ஈவாராம் எப்போதும் - வல்லாளப்
பிள்ளையார் தாளிணைகள் பேணா திருக்கின்ற
உள்ளமோர் உள்ளமா மோ. 10

127. அழுவேனும் இல்லைத் தொழுதான்ற தாள்கள்
விழுவேனும் இல்லை வெறிதாய் - பழம்பால்பூ
ஏந்தியான் இங்கே எதுகண்டேன் என்முதல்வா
சாந்திதா உள்ளந் தனக்கு. 11

128. உன்னைப்போல் உற்ற வொருதெய்வம் இல்லையேல்
என்னைப்போல் ஏழைகளிங் கெவ்வாறு - நன்றாய்
வரலாகும் ஆதி வரசித்தி ஐயா
தருவாயே ஞானத் தமிழ். 12

129. மனத்தாலும் தீயவைகள் மற்றவருக் கென்றும்
நினைத்தேனில் ஆனைமுக நேதா - தினைத்தேனும்
சூதுவா தேனைத் துயர்க்குணங்கள் இல்லாதேன்
ஆதலால் தாநின் னருள். 13

130. அண்டங்கள் யாவையுமே ஆள்கின்ற ஞானவருட்
கண்கொண்ட ஆதிக் கணபதியே - பண்டம்
எதுவுமில் லாத எளியனேன் உள்ள
இதயமே தந்தேன் இரு. 14

131. முந்தியே யுள்ள முதல்வனே நீயெனக்குச்
சொந்தமென் றோதித் துணிவோடு - முந்தி
அழுக்காடா நின்றன் அடியார்கள் முன்னே
வழக்காட வந்துற்றேன் வா. 15

132. ஆற்றல் அளித்தருளும் ஐங்கரரே நின்னடியார்
ஏற்றம் சிறிதும் எனக்கில்லை - போற்றிவரும்
அவ்வையார் எங்கே அகத்தியருந் தானெங்கே
எவ்வகை உய்வேன் இவண். 16

133. வியப்பேநின் தோற்றம் வியப்பேநின் னாற்றல்
வியப்பேவி நாயகநின் வேதம் - வியப்பேதான்
சும்மா திரிந்தேனைத் தூக்கித் தொழவிட்டுச்
செம்மை நலஞ்செய்த தே. 17

134. சொல்லுதமிழ் ஈழம் சுதந்திரங்கள் தந்தேநீ
அல்லல்களைத் தீர்த்தருள்வாய் ஆனைமுகா - எல்லவரும்
எல்லையிலா நின்னரிய இன்னருளை எந்நாளும்
சொல்லியே போற்றித் தொழ. 18

135. புல்லும்வா ளாகும் புனுகும் புலியாகும்
வெல்லும் தமிழீழம் மேதினியில் - தொல்லையெலாம்
தூசிப் பொடியாகும் தும்பிக் கரத்தையன்
ஊசிக் கடைக்கண்ணால் ஓம். 19

136. தலையினிலே குட்டியான் தாழ்கின்றேன் அன்புத்
தலைமகனே வேற்றுமையாற் சாதி - உலகில்
ஒருசாரார் தாழ்வுற் றுருக்குலைதல் கண்டும்
அருளா அருளென் னருள். 20

137. மத்த மதம்கரையப் பித்தம் மறைந்தொழியச்
சித்தம் தெளிந்துலகம் சீர்பெறவே - சித்தி
விநாயகரே சூரனைமுன் வென்றவரே வேத
அநாதியரே செய்யும் அருள். 21

138. ஐவர் மயல்நீங்க ஆறி மனமிருக்க
வையம் அமைதிபெற வார்கரத்தீர் - தெய்வக்
கலையாவும் ஓங்கவுந்தன் கண்ணோட்டம் வேண்டும்
இலையாகில் வாழ்வே இருள். 22

139. பொய்யகல வேண்டும் புனிதமனம் வேண்டுமுடன்
மெய்யறிவு வேண்டும் விநாயகரே - செய்யும்
செயலென்ன சொல்லின் திறமென்ன ஒன்றும்
இயலாது நீயின்றி யே. 23

140. வல்லமைகள் வேண்டும் மதிநுட்பம் வேண்டுமுயர்
நல்லியல்பு வேண்டும் நலக்கரத்தீர் - சொல்லும்
சமமான வாழ்வு சரியான நீதி
அமைவாக வேண்டும் அருள். 24

141. கொல்லாமை பூண்டு கொடுங்கோன்மை யாளர்தம்
பொல்லாமை மாண்டு புவிமீதில் - எல்லோரும்
தெய்வீக வாழ்வில் திளைத்தோங்க ஐங்கைதிகழ்
ஐயாவே நல்கும் அருள். 25

142. அன்பாள வேண்டும் அறமோங்க வேண்டும்நற்
பண்பாள வேண்டும் பரதேவா - இன்பந்தான்
எங்கெங்கும் ஓங்கியே எல்லோர்க்கு மாகவே
தங்கிற்றால் வாழ்வு தகும். 26

143. நல்லதையே எண்ணிமிக நல்லதையே பேசிநிதம்
நல்லதையே செய்கின்ற நல்லவர்கள் - சொல்லியுனை
இவ்வுலகை ஆளுவரேல் எங்குமுள்ள ஆனைமுகா
எவ்வகையும் இல்லை இடர். 27

144. உன்னை வணங்கிவரும் ஒப்பில் தமிழன்னை
இன்னும் தனிநாடொன் றில்லாதே - இன்னல்
மிகவாட்ட நைவாள் விநாயகரே பாரா
முகங்காட்டல் என்ன முறை. 28

145. உரிமை பெறவேண்டும் ஊருலகம் எல்லாம்
பெருமை பெறவேண்டும் பிள்ளாய் - அருமைத்
தமிழ்வாழ வேண்டும் தமிழீழம் வேண்டும்
சுமைநீக்கிச் செய்வாய் சுகம். 29

146. பண்ணவனே எங்கள் பசுபதியார் பெற்றமுதற்
கண்மணியே செல்வக் கணபதியே - எண்ணின்
இணையற்ற பிள்ளை எவருக்கும் நீயே
பிணியற்ற வாழ்வின் பிதா. 30

147. தந்தை முதற்போகத் தாயார் தொடர்ந்தேக
விந்தைக் கரம்வீர கத்தியரே - தந்தேநின்
பிள்ளைபோற் காத்துப் பெயரா திருக்கின்றீர்
வள்ளிதே எந்தன் வரம். 31

148. தராதரங்க ளாவீர் சராசரிக ளாவீர்
சராசங்கள் தத்துவங்க ளாவீர் - விராவியசீர்
வித்துவங்க ளாவீர் விநாயகரே வீழ்ந்தேநான்
பத்திசெய்தேன் தாரும் பதம். 32

149. சூரியரே யானைமுகச் சூரனைமுன் வென்றதனி
வீரியரே சித்தி விநாயகரே - பேரருளில்
சும்மா விருக்கும் சுகமதிலும் வானத்துச்
சிம்மா சனஞ்சிறிய தே. 33

150. பட்டங்கள் விட்டேன் பரிசெல்லாம் விட்டுவிட்டேன்
திட்டங்கள் விட்டேன் செயல்விட்டேன் - மட்டில்
அருள்காட்டி யானை முகனாண்ட பின்னர்
இருள்கெட்டுப் பெற்றேன் இதம். 34

151. கல்வி கலைஞானம் செல்வம் தவந்தானம்
செல்லும் சிவலோகச் சீரெல்லாம் - சொல்லரிய
ஓமென்ப தற்குள் உளவாதல் கண்டேனே
ஓமோம் விநாயகனே ஓம். 35

152. முதலுடைமை என்பார் பொதுவுடைமை என்பார்
அதிபதியே ஆனைமுகத் தையா - எதுவெனினும்
உன்னுடைமை என்பார் உணர்ந்தறிவார் ஆயினும்நீ
என்னுடைமை கண்டார் எவர். 36

153. சாதிமொழிச் சண்டை பதவிகளி னாற்சண்டை
மாதரினால் மண்ணால் மதவெறியால் - மேதினியில்
ஆனைமுகா எல்லாமே ஆகா மியச்சண்டை
ஆனவினை நீக்கி யருள். 37

154. நீதி தளர்வெய்த நேர்மை பிறழ்வாக
ஆதி முறைமாற ஆனைமுகா - சூதோங்கி
பாதகங்கள் ஆட்சிசெயப் பார்த்திருத்தல் தானழகோ
ஆதரவு வேண்டும் அருள். 38

155. தேனே திரவியமே சீர்கருணைப் பேராறே
ஆனை முகமான வாரமுதே - வானோர்க்கு
வாழும் வகைசெய்தாய் வண்டமிழர் தாமும்நா
டாளும் வகைசெய் தருள். 39

156. மந்திரத்தில் வந்துதித்துச் சிந்தைசெயும் அன்பர்களின்
அந்தரங்கள் தீர்க்கும் அருமருந்தே - விந்தைமிகு
யானைமுகக் கோனே அறுகி லமர்வோனே
ஞானமதத் தேனே நம. 40

157. கொம்பொடித்துச் சூரர்தம் கோமகனைக் கொன்றொழித்து
வம்பலரும் வாழ்வதனை வானவர்க்கு - முன்பளித்த
தும்பிமுக வேதா துலங்கு மலர்ப்பாதா
நம்பியவர் நாதா நம. 41

158. வெற்றிமயில் ஏறியே வேலன் உலகூரப்
பெற்றவரைச் சுற்றிவந்து முற்றுகனி - பெற்றவரே
கற்றவரின் வித்தே கனிந்த வரின்சொத்தே
நற்றவத்தார் முத்தே நம. 42

159. வள்ளியினை வேலவனார் வாரி யணைத்தாளத்
துள்ளிவந்தே பக்கத் துணைநின்ற - பிள்ளையரே
விண்ணவரின் கோவேநம் மண்ணவரின் வாழ்வேதாள்
நண்ணுபவர் தேவே நம. 43

160. தாதை யிவர்தேரைத் தாழ்த்தி விளையாடிப்
பேத மறநின்ற பிள்ளையரே - நாத
ஒலியோசைப் பண்ணே ஒளிவீசும் விண்ணே
நலிவாரின் கண்ணே நம. 44

161. சந்திரர்க்கு ஞானம் வரத்தக்க தாகவொரு
தந்திரத்தைத் தான்புரிந்த சற்குருவே - சிந்தை
வயல்வளரும் நாற்றே மறுவினையின் கூற்றே
நயநதியின் ஊற்றே நம. 45

162. மாயவருக் குற்ற மறுவதனைப் போக்கியே
ஆயநலஞ் செய்திட்ட ஆனைமுகத் - தூயவரே
ஆர்வலரின் போக்கே அறிபவரின் நோக்கேசெந்
நாவலரின் வாக்கே நம. 46

163. காகவுருக் கொண்டு குறுமுனிவர் காவிரியை
வேகமுடன் பாய விதித்தவரே - தாகமிகு
சொற்பதத்தார் சோதி தொடக்க மிலாவாதி
நற்பதத்தார் நாதி நம. 47

164. அன்னையவ்வை பூசைதனை அன்புடனே ஏற்றவர்க்கு
மன்னுபதம் தந்தபெரு மன்னவரே - உன்னி
நினைவாரின் இன்பே நெகிழ்வாரின் அன்பில்
நனிதோயும் நண்பே நம. 48

165. பாலைப் பருகியுள்ள பார்முழுதும் நின்னருளைச்
சாலத் தெரிவித்த தக்கவரே - கோலம்
குலையாத குன்றே குணயானைக் கன்றே
நலமான வொன்றே நம. 49

166. கண்டேன் கரிமுகத்தைக் கண்டேன் திரவியத்தைக்
கண்டேன்ஐம் பூதக் கலைவடிவை - கண்டுநிதம்
தொண்டுபுரிந் தாடித் தொழுதுருகிப் பாடியே
மண்டியிடப் பெற்றேன் வரம். 50

167. நின்னை வலம்வந்து நின்று தொழுகையிலே
மன்னுங் கலைஞான வார்கரத்தீர் - என்னை
அறியாமற் கண்கலங்கி ஆறாவ தேனோ
குறைநீக்கி யாண்டு கொளும். 51

168. தொல்மூல மந்திரத்தின் சூக்குமத்துள் நின்றெழுந்து
நல்யானை யாகவந்த நாயகரே - செல்வாய
செல்வமே நின்னைத் தினமும் தொழுதேத்தித்
தொல்வினை போக்குஞ் சுகம். 52

169. கண்ணில் நடக்கின்றீர் சொல்லிற் கலக்கின்றீர்
என்னுள் இருக்கின்றீர் என்னையா - பின்னிங்(கு)
எனக்கென்ன வேண்டும் இணையாக யானும்
உனைவிட்டு நீங்கேன் உணர். 53

170. வித்துவத்தின் வித்தகரே வேதாந்தப் போதகரே
சித்திபுத்தி யாள்பவரே சித்தத்துள் - தித்திக்கும்
தத்துவத்தின் புத்தமுதே சத்திசிவப் புத்திரரே
சத்தியமே நீயே சரண். 54

171. மாணிழந்த வானவர்தம் வாழ்வுபெறச் சூரர்குல
ஆணவத்தைப் போக்கி அருள்செய்த - மாணார்
பெருமானைப் பேணின் பெருவாழ்வுண் டாகும்
ஒருதீங்கும் இல்லை யுணர். 55

172. பந்தம்போம் பாரம்போம் பாழ்வினைகள் பாறிப்போம்
சொந்தம்போம் போகங்கன் தூரப்போம் - விந்தை
விநாயகரின் மெய்யடிகள் வீழ்வார்க்கு மேலும்
விநாயகசெல் வங்கள் மிகும். 56

173. தக்கவற்றைச் செய்வதற்கும் சார்வினைகள் கொய்வதற்கும்
பக்குவத்தைப் பெற்றுப் பசுபதியை - சிக்கெனவே
பற்றுதற்கும் மூத்தவரைப் பற்றுதலே ஞானத்தில்
முற்றியவர் கண்ட முறை. 57

174. உள்ளம் குழைந்துருக ஊனம் விதிர்ப்பெய்த
வெள்ளம் விழிகள் மிகக்கொட்ட - கள்ளம்
கழரவே வந்து கணபதியும் நெஞ்சில்
ஒளிரவே காணலாம் ஓம். 58

175. எந்த மருந்தினையும் ஏமாற்றி வாட்டிவரும்
இந்த வுடல்நோயை இப்பொழுதே - ஐந்து
கரத்தவரே நீக்கிக் கதிபெறவே தாரும்
வருத்தமிலா வாழ்க்கை வளம். 59

176. காயம்பொய் என்றார் கடன்காற்றுப் பையென்றார்
மாயம்வாழ் வென்றார் மதிவாணர் - நாயேனும்
வெற்றறிவால் ஞான விநாயகரே விட்டுழன்றேன்
பெற்றவுடல் பேணாப் பிழை. 60

177. மன்னும் உயிர்மனித வாழ்வுற்ற தெல்லாமே
உன்னை வணங்கி உயர்வுறவே - என்னும்மெய்ஞ்
ஞானத்தைப் பெற்றதன்பின் யானைமுகா யானுமிந்த
ஊனத்தை ஓம்புகின்றேன் ஓம். 61

178. ஆதி முதலை அமரர் சீலத்தை
கோதில் மனிதமா கோலத்தை - பூத
வடிவத்தை யானை முகத்தேவை மண்ணில்
உடம்பின்றிக் காணலா மோ. 62

179. கண்டுமனம் ஆர்த்துக் கசிந்துடலம் பூத்துரிமை
கொண்டுபுகழ் பாடிக் குதித்தாடி - உண்டமுதம்
கைதொழுது நாளும் கணபதியைக் காதலிக்கும்
மெய்யிதுவே மெய்வாழ்க வே. 63

180. தாமார்க்கும் மேலான சங்கரனார் பெற்றெடுத்த
கோமானை ஆளும் குருமணியை - நாமேந்தி
உள்ளிருத்தி ஓம்ப ஒழித்தெம் முடனிருந்த
கள்ளமெலாம் நீங்கும் கவிழ்ந்து. 64

181. விட்டேன் அழுக்காறு விட்டேன் அவாவெகுளி
விட்டேன் விநாயகரே வேண்டாச்சொல் - விட்டுன்
அருளினால் ஆர்த்துப் பெருக்கினேன் அன்பை
வருகவந் தென்னோடு வாழ். 65

182. முன்னை வினையாலே மூண்ட துயரெல்லாம்
நின்னைத் தொழுதாலே நீங்குமெனும் - உண்மை
அறிந்ததும் அன்றிக் கரிமுகனே அன்பு
செறிந்தநெஞ் சுங்கண்டாய் சேர். 66

183. நாயனையேன் எந்நாளும் நைந்துருகிப் போற்றிவரும்
நீயுறையும் இந்த நிகரற்ற - கோயில்மிக
நோய்தங்கிச் சோர்ந்து நுடங்குமோ மூத்தவரே
போயெங்கு சேர்வீர் புறம். 67

184. நன்றென்னுள் நீயிருந்தால் நான்வாழ்வேன் வாழ்ந்திட்டால்
என்றென்றும் நின்றன்னை ஏத்துவனே - ஒன்றிமிக
வாட்டுநோய் போக்கி வலுவூட்டி வாரணரே
காட்டுவீர் பேரன்புக் கண். 68

185. மன்னாதி மன்னவராம் வாரணரின் வார்கழல்கள்
உன்னி உளமேத்தி ஓம்பிவரின் - இன்னல்கள்
இல்லாத வாழ்வை எளிதாக வேதருவார்
சொல்லேலா தின்ப சுகம். 69

186. எல்லூரும் நல்லூராம் எல்லோரும் நல்லோராம்
எல்லாமே நன்றாகும் எப்போதும் - நல்லாக
நாள்தோறும் யானை முகநாதன் நாகரிகத்
தாள்போற்றி வாழ்வார் தமக்கு. 70

187. பகையும் படியாது பாராது பாம்பும்
பகலும் இருளாது பத்தி - மிகையாகி
ஓங்கார நாதன் ஒளியையுள் வாங்கியே
பாங்காகத் தாங்கு பவர்க்கு. 71

188. தூற்றுவார் தோற்பார் சுயபிழைகள் பின்னுணர்ந்தே
ஆற்றுவார் நன்மை அதனாலே - போற்றியருள்
ஆனை முகவையன் தாள்பணியும் அன்பாளர்க்(கு)
ஈனம் இலையென்று மே. 72

189. தாயான தத்துவனார் தந்தமுதற் பிள்ளையரை
வாயார எந்நாளும் வாழ்த்திவரும் - தூயோரைத்
தீயாருங் காணின் திருந்திக் கசிந்துள்ளம்
ஓயாமல் உச்சரிப்பார் ஓம். 73

190. நன்றிமறந் தோரும் நடைகெட்டுத் தாழ்ந்தோரும்
மன்றுரைத்த வாக்கை மறுத்தோரும் - ஒன்றி
கணபதிதாள் போற்றிக் கனிந்தவரைக் காணின்
குணபதிகள் ஆவார் குளிர்ந்து. 74

191. பேதங்கள் இல்லைப் பெருந்துன்பம் ஏதுமில்லைச்
சேதங்கள் இல்லைமனத் தேரேற்றி - வேதங்கள்
போற்றும் விநாயகரைப் போற்றுபவர் மீதுகொடுங்
கூற்றுவனும் வீசான் குறி. 75

192. கல்லாதார் கற்றிடுவார் காணாதார் கண்டறிவார்
வெல்லாதார் வென்றிடுவார் வேண்டுவன - இல்லாரும்
எய்துவார் ஈர்த்தருளும் யானை முகத்தையன்
பொய்யிலார் கூட்டம் புகின். 76

193. நீரினிலே நீந்தல் நெருப்பினிலே நின்றெழுதல்
பாரதனை வெல்லற் பரிசெல்லாம் - வீரக்
கணபதியின் செல்வக் கழலணிவார் சங்கம்
இணைபவருக் கென்றும் எளிது. 77

194. அன்றைத் தமிழான்ற அன்புத் தமிழ்மற்றும்
இன்றைத் தமிழும் எளிதாகும் - ஒன்றாகித்
தேர்ந்தமா யானைமுகப் பிள்ளைத் திருக்கூட்டம்
சார்ந்தபே ரன்பர் தமக்கு. 78

195. நீள்வரியில் நீறணிவான் நெஞ்சிருத்தும் நல்லடியார்
சூழ்வினைகள் கூட்டியே சுட்டறுத்து - வாழ்வதனின்
தூலகன்மம் யாவையுமே தூய்மையுறச் செய்திடுவான்
மூலமகன் யானை முகன். 79

196. பாசக் கயிற்றாலே பாவவினை தான்கட்டி
நேசக் கரத்தால் நிதங்காத்து - மாசில்தன்
பாதம் பணிவார்க்கு முத்திப் பதமீவான்
ஆதி முகயானை யான். 80

197. மந்திமனம் ஐந்துகட்சி மந்திரிமார் ஆட்சியினை
ஐந்துகரத் தானைமுகன் அங்குசத்தால் - தந்திரமாய்
சீர்செய்தே தன்னடியார் தெய்வீக வாழ்வுபெற
ஆர்வுடனே செய்வான் அருள். 81

198. உலகழியும் ஊழியிலும் தப்பவல்ல ஓரினமாம்
எலியதனை வாகனமா யேற்றபெருந் - தலைவரது
தென்றலிதத் தாள்பணிவார் செய்தரிய சாதனைகள்
வென்றெழுவார் நற்பேர் மிக. 82

199. ஆதிவித்தை அந்தவித்தை வேதவித்தை ஆயகலைப்
போதவித்தை யாவும் பொதிந்துள்ள - மோதகத்தை
நாடிவரும் நாயகரைக் கூடிவரும் நல்லவரைத்
தேடிவரும் ஞானம் தெளிந்து. 83

200. எங்கெனினும் எப்பொழுதும் எல்லா வுயிர்பொருட்டும்
பொங்கிவரும் தன்னருளைப் பூவுலகம் - நன்கறிய
கண்டிகையைக் கொண்டான் கழல்சேர்வார் கண்ணுற்ற
பண்டுவினை பாறிப் படும். 84

201. ஆற்றல் படைத்தாலும் ஆனை முகப்பிள்ளை
மாற்றுக் குறையா மதிப்போடு - போற்றியே
பூசைபெற் றோர்க்குப் புரியும் கலசத்தைப்
பாசமாய்க் கைக்கொண்டான் பார். 85

202. தேங்காயுள் தேங்கும் இளநீர்த் திறம்போல
ஓங்காரப் பூட்டை உடைத்திட்டால் - ஆங்காரம்
போக்குமருள் பொங்கும் புகுந்தாடின் பூத்துவரும்
சூக்குமத்தின் மூலச் சுழி. 86

203. அன்பே சிவமாய அண்டத் திருமேனி
ஐம்பூத மேனி அருள்மேனி - இன்பஞ்செய்
ஞான மயமேனி நாக ரிகமேனி
யானை முகமேனி யாம். 87

204. யானை முகமழகு ஞான விழியழகு
மோன முறுவலிப்பு முற்றழகு - வானவெளி
ஆதி வயிறழகு சோதி வடிவழகு
பாத மலரழகு பார். 88

205. முதுவடிவம் என்பார் முதற்பிள்ளை என்பார்
புதுவடிவம் என்பார் புலவோர் - எதுவெனினும்
சீர்கருணை யாலே தெரிவித்தா லன்றிமற்
றாரறிவார் ஆதி யனை. 89

206. சிவசத்தி பெற்ற திருமகனே போற்றி
புவியாவும் போற்றுகின்ற புண்ணியனே - தவமேதான்
எந்தப் பொழுதுமுனைச் சிந்தித் தெழுகின்ற
இந்தப் பிறப்புரிமை யே. 90

207. ஆனைமுகத் தையா அணைத்தருளுங் கையாசெந்
தேனமுத மெய்யா திசையாளும் - கோனவரே
வாழ்வாங்கு வாழ வலம்வந்து நெக்குருகிச்
சூழ்கின்றோம் நீயே துணை. 91

208. விண்ணுலகை வாழவைக்க வீரயுத்தஞ் செய்யவந்த
பண்ணவனே ஞானவொளிக் கண்ணுதலே - மண்ணதிலே
இன்மைக் கொடும்பேயால் இன்னற் படுவாருக்
இன்னும் அருளாத தேன். 92

209. ஒன்றல்லப் பத்தல்ல ஓயாத துன்பங்கள்
நன்றென்ற வீடில்லை நாடில்லை - வென்று
பதிமகனே எங்கள் பதியாள உந்தன்
கதிவேண்டி நிற்கின்றோம் காண். 93

210. சோதனைகள் செய்துபல சாதனைகள் காட்டிநிதம்
மேதினியில் ஓங்கிவளர் விஞ்ஞானம் - ஆதிமுகா
ஆன்மீகம் ஆக்கும் அமைதிக் குதவாது
மேன்மேலும் தானே மிகும். 94

211. உறவோங்கி யாள உலகோங்கி வாழ
திறநீதி செங்கோல் செலுத்த - சிறைநீங்கி
அன்பு நடமாடச் செய்க வருள்செய்க
தும்பி முகத்தோன்ற லே. 95

212. இந்திரனின் பூசைக் கிதமாக நந்தவனம்
சந்ததமும் பூக்கத் தமிழ்முனிவர் - விந்தைக்
கலசம் கவிழ்த்தோடும் காவிரியைத் தந்த
வலவன் பதம்போற்று வாம். 96

213. முத்து விநாயகரை மூத்தவரைக் கற்பகரைச்
சத்தி விநாயகரைத் தத்துவரை - சித்தியரைப்
புத்தியரைச் சோதியரைப் போற்றிவரின் பத்தியுடன்
வித்துவங்கள் யாவும் மிகும். 97

214. வாசமலர் தண்ணறுகு வன்னிவில்வம் கொண்டுபெரும்
பூசைசெய்து கன்னல் பொரிபொங்கல் - ஆசிலவல்
தேனிளநீர் மோதகம்பால் தீங்கனிகள் வைத்துமென்ன
ஆனைமுகர்க்(கு) அன்பில்லை யால். 98

215. போற்றி கயமுகனின் போர்முடித்த பொற்கொம்பு
போற்றிவா னோரைப் புரந்தகரம் - போற்றியோ
மன்னுலகம் பெற்றவரே என்று வலம்வந்த
தன்னிகரிற் பாத தனம். 99

216. ஆனைமுகம் வாழ்கவருள் ஞானகுரு வாழ்கபெரும்
மோனமுதல் வாழ்கநிதம் முன்னின்று - தேனார்
அலகில் மலர்தூவி அன்புடனே ஏத்தும்
உலகும் மிகவாழ்க ஓங்கி. 100

நூற் பயன்

217. அத்திமுகன் ஆக்குவித்த அற்புதவெண் பாநூறும்
பத்தியுடன் கேட்போர் படிப்போர்கள் - சித்திதரும்
பேர்பெற்ற பிள்ளை அருளாலே பேசரிய
சீர்பெற்று வாழ்வார் சிறந்து. 101

3

விநாயக விருத்தம்

விநாயக விருத்தம் - உள்ளடக்கம்

		பக்க எண்
	உபோற்காதம்	73
	காப்பு	79
	நூல்	79
1.	அறுசீர் விருத்தம்	79
2.	எழுசீர் விருத்தம்	85
3.	எண்சீர் விருத்தம்	90
4.	கலி விருத்தம்	96
5.	வஞ்சி விருத்தம்	99

உ

சர்வம் விஷ்ணு மயயம்

உபோற்காதம்

முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

இலங்கை

ஏழை மக்கட் கெளியவன்
வாழச் செய்தல் வழியவன்
தோழ ருக்குத் துணையவன்
வேழ முக்கண் வேந்தனே.

தமிழ் எங்கள் சொந்த மொழி; பந்த பாசம் உள்ள மொழி; முனிந்தால் அவற்றை அறுக்கும் மொழி; மொழிக்கு மொழி தித்திக்கும் மொழி; உலகம் போற்றும் உயர் தனிச் செம்மொழி. இதிலே இலக்கியங்கள் நிறைந்து வழிகின்றன. இவ் விலக்கியங்கள் பல்துறை சார்ந்தன. அவற்றில் ஒன்று பக்திப் பனுவல்கள். வைசம், வைணவம் என்பவற்றையும் தாண்டி, புத்தம், சமணம், கிறித்தவம், இசுலாம் ஆகியவற்றிலும் சில செய்யுள் வடிவங்கள் தோன்றியுள்ளன. இவற்றிற் சைவம் சார்ந்த பன்னிரு திருமுறைகளுடன் தத்துவ நூல்களும் எம் கையேடுகளாம்.

காலவோட்டத்திற் பல இலக்கியங்கள சமயத்தை வளர்த்து நிலைபேறடையச் செய்தன. சிவனோடு சம்பந்தமானது சைவம். இதற்கு மேற் சமயமும் இல்லை, சிவனிற் சிறந்த தெய்வமும் இல்லை என்பது பல சான்றோர்களின் முடிபு.

சைவத்துள் விநாயகர் வணக்கம் பிற்காலத்தில் வந்து கலந்தது. திருமுறை பதினொன்றில், மூன்று பனுவல்கள் மட்டும் கணபதிமேற் பாடப்பட்டவை. இத்தோற்றம் வளர்ந்து புராணங்களாக, பாராயணப் பனுவல்களாகக் கிளைகள் விட்டன. அவ்வையிலிருந்து பாரதிவரை பல புலவர்கள் விநாயகரைப் பாடியுள்ளனர். அவர்கள் வரிசையில் எங்கள் கவிஞர் கந்தவனம்.

விநாயக விருத்தம் என்னும் இந்நூல் நாம் புலம்பெயர்ந்து வாழும் கண்டமாய வட அமெரிக்காவில் வெளிவருகின்றது. இன்றைய பா வடிவங்களுக்கு மரபுக் கவிதை, புதுக்கவிதை என்ற நாமங்கள் சூட்டப்பட்டுள்ளன. இலக்கண வேலிக்குள் அமெரிக்கையாய் வாழ்ந்து கொண்டிருப்பது மரபுக் கவிதை. சுதந்திரமாய்ப் பாடுவது புதுக்கவிதை. இவ்விரு துறைகளிலும் பல படைப்புக்கள் இந் நூலாசிரியர் கை வண்ணத்தில் உருவாகியிருக்கின்றன. எல்லாமே

உருப்படியானவைதாம். ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் கவிசெய்யும் ஆளுமை மிக்கப் புலவர் இவர்.

வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, விருத்தப்பா போன்ற பல்லினச் செய்யுள் வடிவங்கள் பற்றிய இலக்கண நூல்கள் (அலங்காரம் உட்பட) நிறையத் தமிழில் உண்டு. அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்கள், கழி நெடில் ஆசிரியவிருத்தம் என்பன பாவினத்தில் ஒருவகை. 'விருத்த மெனும் ஒண்பாவில் உயர் கம்பன்' என்ற தொடர் விருத்தப் பாவின் உயர்வை மெச்சுகிறது. அப்பர் திருவிருத்தம் பாடினார். ஆழ்வார்களும் பாடியுள்ளனர். விநாயகர் விருத்தம் என்ற இச் சிற்றலக்கியத்தில் அறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், கலி விருத்தம், வஞ்சி விருத்தம் என்பன இடம் பெற்றுள்ளன. யாப்பமைவுக்கு ஏற்ப ஒவ்வொரு இயலுக்கும் இருபதிருபதாக மொத்தம் 100 செய்யுள்களால் இயன்றது இந்நூல்.

விநாயகப் பெருமானை வழிபடு தெய்வமாகக் கொண்ட கவிஞர் திரு. வி. கந்தவனம் அவர்கள் ஏற்கனவே குலமுதல்வனைப் பாடி இருப்பினும் பாடாமல் இருக்க முடியாமல் இப்பிரபந்தத்தைப் பாடியுள்ளார் என்பது என் கருத்து.

உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை

என்ற கவிமணியின் வாக்குக்கு இலக்கியமாய் அமைந்தது இந்நூல். பன்னூற் பயிற்சியும், இலக்கிய வடிவமும், பத்திப் பனுவல்களின் தோய்வும், அவற்றின் ஆழங்காற்பட்ட நுண்ணறிவும், தமிழாற்றலும், பத்தி இரசனையும், கவிதா சாமர்த்தியமும் இந்நூலிற் பளிச்சிடுகின்றன. ஒவ்வொன்றும் தங்கரேக்காய் மிளிர்கின்றன.. ஆசிரியரின் அநுபவ முதிர்வுதான் இந்நூலின் வடிவம். இது பலர் நெருடாப்பா; சாயந் தோயா நூல்; அழுக்கேறா இயற்கலை; இருமொழி விற்பன்னரான கவிஞரின் வெளிப்பாடு; பழமையும் புதுமையும் செறிந்தது; சிந்தனை வளம் மிக்கது.

கவிஞன் பிறக்கின்றான். அவன் பாட்டுக் கட்டுபவன் அல்லன் - பாடுபவன், பாடிக்கொண்டே வாழ்பவன். அவன் படைப்புக்கள் காலம் கடந்தும் வாழ்வன. கவிதைகள் காலத்தைப் படைப்பனவுமன்றி காலத்தால் படைக்கப்படுவனமுமாகும். தன்னை ஆட்கொண்டு வழிநடத்தும் வழித்துணை விநாயகனைப் பாடும் கவிஞர் அவர்களின் விநாயக விருத்தப் பூங்காவில் சிறிது தூரம் உலாவுவோம்.

விநாயகர் வரலாற்றில் இருகதைகள் புழக்கத்தில் உள்ளன. கயிலையில் அமைந்த இரு யானை ஓவியங்களைப் பரமேஸ்வரனும் பார்வதியும் பார்த்தபோது அவற்றின் உறவாடலில் பிரணவரூபன் உருவானான் என்பது ஒரு கதை. மற்றது மலையரசி பார்ப்பான் மகளாய்ப் பிறந்து கயிலைவாசனைத் திருமணஞ் செய்து வருகையில் பிடியும் களிறும் சேர்வதைக் கண்டு தாமும் அவ்வுருத் தாங்கி இணங்கியபோது உற்பவித்தவர் பிள்ளையார் என்பது. இவ்வரலாறு கவிஞரின் கைவண்ணத்தில் இப்படி வடிக்கப்பட்டிருக்கிறது:

ஒருத்திக்கும் ஒருவ ருக்கும்
ஓமினில் உதித்த பிள்ளை
திருத்தக்கை மருப்புக் காது
சீருற விளங்கும் பிள்ளை
கருத்துக்கும் செயற்கு மெல்லாம்
காரண மான பிள்ளை
விருத்தத்தில் மேன்மை பாட
விருப்புடன் அருளு வாரே.

- காப்புச் செய்யுள்

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரனை வழுத்தினால் எல்லா நலமும் பெறலாமென்ற அநுபவப் பிழிவை முதலிரு பாடல்கள் விளக்குகின்றன.

விநாயகர் பெயரைச் சொல்லின்
வேதனை விரைவில் தீரும்
விநாயகர் உருவை எண்ணின்
வெற்றிகள் வந்து நண்ணும்
விநாயகர் பெருமை பாடின்
வெவ்வினை வீழும் வீழ்ந்து
விநாயகர் தாள்கள் பற்றின்
வீடுபே றுறுதி யாமே. 1

கருதமுன் கருணை செய்யும்
கணபதி கழல்கள் போற்றின்
உருவுடல் உறுதி யாகும்
உள்ளமும் தூய்மை யாகும்

அரியன எளிய வாகும்
ஆழ்ந்தகன் றறிவு மேவும்
பொருள்வளம் பெருகும் வையப்
புகழும்வந் தெய்து மாமே. 2

பழகு மொழியிலே கருது கோலங்களைக் கவிதைகளாய்த் தீட்டும் பெற்றி நிறைந்தவர் கவிஞர். எளிமை, தெளிவு, இறுக்கம், பொருட் செறிவு என்பன இக் கவிதைகளின் வண்ண வடிவங்கள் எனலாம். புதுமைக்கும் பழமைக்கும் ஒரு சேது பந்தனம். சைவம் பேசும் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய நிலைகளை அடைய மாதங்கனை வணங்குங்கள் என்கின்றன பத்தொன்பதாம் இருபதாம் பாக்கள்.

தன் சுகானுபவங்களைப் படிப்போர் இதயம் குளிரத்தக்கதாக வும் பல விருத்தப் பாக்களில் வடித்துள்ளார் நூலாசிரியர்.

முத்தமிழ்க் கனியே புத்தகத் துணையே
மூவாத மூத்தமா மணியே
தத்துவ முனியே பித்தனைத் தனியே
தகர்த்துநீ தாமரை யிலையில்
புத்தமு தளித்துப் புதுக்கியாண் டருளைப்
பொழிந்துருக் காட்டிய புதுமை
செத்தபின் னருமென் சித்தத்தில் இருந்து
தித்திக்கும் சித்திக்கும் சிவமே. 23

இப் பாடலிலே ஆக்கியவர் பெற்ற அநுபவங்கள் பத்தி பூர்வ மாய் வெளிப்படுகின்றன. அவரின் குலதெய்வமான கொல்லங் கிராய்ப் பிள்ளையார் முன்றிலில் அமைந்த தாமரைத் தடாகம், அதில் பறித்த இலை(பாசடை)யில் மார்க்கண்டையர் வழங்கிய தளிகை, அதன் தேவாமிருதமான சுவையுடன் கூடிய அநுபவம் மெய் விதிர்க் கவே செய்கின்றது.

இப்பாடலிலே மணிமொழியார்க்கு இறைவன் திருப்பெருந் துறையில் குருந்தமர நிழலிலே காட்சி அளித்தது போலவே, கவிஞருக்கும் கஜானனன் காட்சி தந்துள்ளான் என்பதை, 'புத்தமு தளித்துப் புதுக்கியாண் டருளைப் பொழிந்து உருக்காட்டிய புதுமை' என்ற தொடரால் வெளிப்படுத்தப்படுவதைப் படிப்போர் காண்பர்.

திருவாசகத்திலே அமைந்துள்ள அற்புத, அதிசயப் பத்தின் படிமங்கள் இப் பாடலிலே கவிதையாகச் சுரக்கின்றன. ஆண்டாள்கூட

'மாயவன் வந்துருக் காட்டுகிறான்' என்றோர் பாவம் கொழிக்கும் பாசுரம் செய்துள்ளார்.

தந்தையும் தாயுமுற் றாரும் நிற்கத்
தனிவழி போயினாள் என்னுஞ் சொல்லு
வந்தபின் னைப்பழி காப்பதரிது
மாயவன் வந்துருக் காட்டு கின்றான்
கொந்தள மாக்கிப் பரக்க ழித்துக்
குறும்புசெய் வானோர் மகனைப் பெற்ற
நந்தகோ பாலன் கடைத்த லைக்கே
நள்ளிருட் கண்ணெனை யுய்த்தி டும்மின்.

- நாச்சியார் திருமொழி 12 - 3

அப்பரடிகள் தந்த 'துறக்கப்படாத உடலைத் துறந்து' (4-113.8) எனத் துவங்கும் பாடலிலே, உன்னை மறக்கக் கூடாதெனச் சிவனைக் கேட்கிறார். அப் பாணியிலே கவிஞரும் ஒரு புதுமை செய்துள்ளார்.

'செத்த பின்னரும் என் சித்தத்திலிருந்து தித்திக்கும் சித்திக்கும் சிவமே' எனப் பாடியுள்ளார். சிவனின் வேறாகாதவர் மூத்த நயினார் என்ற உண்மை துலாம்பரப்படுத்தப்பட்டுள்ளது. 'செத்த பின்னரும் என் சித்தத்திலிருந்து தித்திக்கும் சிவமே' என்ற பிரயோகம் மறவா நினையா நிலை. அஃது எப்போதும் இறைவனோடு உடன் இருத்தல் எனப் பொருள்தரும். உடலை விட்டு ஆவி பிரிதல் செத்த நிலை. ஆனால் இறைவனுடன் ஒன்றாய் இருக்க வேண்டின், 'நான், எனது' என்பன சாகவேண்டும். இது சாகாக் கல்வியாலேதான் அமையும். இத் தொடரிலே 'கதியளித்தாண்ட கருதரும் புதுமை, காலத்தை வென்ற வோர் கதையே' என்ற பிரயோகம் மிக மாற்றுயர்ந்ததாகும் (பாடல் 25). போற்றித் திருவிருத்தப் பாங்கிலே ஒரு பாடல் வருகிறது:

அல்லலை நீக்கி ஆனந்த மாக்கும்
ஐங்கரத் தண்ணலே போற்றி
கல்வியால் அறிவும் கலைகளால் மனமும்
கவின்பெறச் செய்பவா போற்றி
செல்வநல் வாழ்வைத் தேவருக் களிக்கச்
செருக்குற்ற அசுரனைச் செகுத்த
வல்லவா யார்க்கும் நல்லவா போற்றி
வாரணா போற்றியோ போற்றி. 30

மணிவாசகர் தன்னை ஊத்தையேன் எனப் பேசுவது போல

(பிடித்த பத்து 7) கவிஞரும் தன்னை ஊத்தையேன் எனக் குறிப்பிடுகிறார் (பாடல் 33). தற்புகழ்ச்சியின்றி தற்சிறுமைதான் ஆன்மிகனின் உயர்ந்த நிலையாகும். இப் பாவனையில் ஒரு பாடல் பாடியுள்ளார் - தன்னை உரைத்துப் பார்த்து.

தேடித் தேடுதற் கரிய நின்றிருப்
பாதத் தண்மலர் சூடுஞ் சிந்தனைப்
பாடி லாதவன் பண்பி லாதவன்
பதரை யொத்தவன் பத்தி யற்றவன்
வாடி வீழ்ந்திடா வண்ணம் விண்ணவர்
வாழ நல்வழி வகுத்த வாரணா
நாடி வந்ததும் நன்மை செய்ததும்
நயன வீழ்ச்சிகள் ஆகும் நாளுமே. 46

நாயின் பெருந்தன்மையையும் இழிதகைமையையும் உன்னிப் பார்த்த வாதவூர்ப் பெருந்தகை சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தன்னை நாயோடு ஒப்பிட் டுள்ளார். அதேபோல் அமைந்த பாடல் ஒன்றை இந் நூலிலே காணக்கூடியதாக இருக்கின்றது.

கோயில் கும்பிட லன்றியே கூத்துக்கள்
தேயக் கால்கள்தெ ருத்தெரு வாடிய
நாய னேன்றனை நன்னெறிக் கிட்டவன்
ஆய பேரருள் ஆனைமு கத்தனே. 74

உயர்ந்த கவிதைக் களஞ்சியமாகத் திகழும் இந்நூல் கயமுகனின் தூண்டுதலாலேயே எழுந்ததாகத் தொனிக்கிறது. பட்டும் படாமல், தொட்டும் தொடாமல் இதயத்தைப் புட்டுப் புட்டுக் காட்டும் புனித இலக்கியமே இப்பத்திப் பாமலர். படித்துப் பயன் பெறுங்கள்.

பிள்ளையாரைப் பிடித்துத் தந்திருக்கிறேன் என நூலாசிரியர் தன்னைத் தலைவனோடு தொட்டுக் காட்டிய நுட்பம் போற்றத் தக்கது. இதே போன்ற பல நுணுக்கமான பனுவல்கள் இவர் சிந்தனையல் இருந்து இன்னும் வளர எம் வல்லிபுரத்தானை வேண்டும்.

முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

தாரண, ஆடிப் பிறப்பு

'சித்ரா பதி'
ஊரெழு வடக்கு, சுன்னாகம், இலங்கை.

விநாயக விருத்தம்

காப்பு

அறுசீர் விருத்தம்

218. ஒருத்திக்கும் ஒருவ ருக்கும்
ஓமினில் உதித்த பிள்ளை
திருத்தக்கை மருப்புக் காது
சீரூற விளங்கும் பிள்ளை
கருத்துக்கும் செயற்கு மெல்லாம்
காரண மான பிள்ளை
விருத்தத்தில் மேன்மை பாட
விருப்புடன் அருளு வாரே.

நூல்

219. விநாயகர் பெயரைச் சொல்லின்
வேதனை விரைவில் தீரும்
விநாயகர் உருவை எண்ணின்
வெற்றிகள் வந்து நண்ணும்
விநாயகர் பெருமை பாடின்
வெவ்வினை வீழும் வீழ்ந்து
விநாயகர் தாள்கள் பற்றின்
வீடுபே றுறுதி யாமே. 1

220. கருதமுன் கருணை செய்யும்
கணபதி கழல்கள் போற்றின்
உருவுடல் உறுதி யாகும்
உள்ளமும் தூய்மை யாகும்
அரியன எளிய வாகும்
ஆழ்ந்தகன் றறிவு மேவும்
பொருள்வளம் பெருகும் வையப்
புகழும்வந் தெய்து மாமே. 2

221. கயமுகன் செருக்கை வென்றார்
கலங்கிய அமரர்க் கெல்லாம்
நயமுறு வாழ்க்கை தந்தார்
நறுமலர்ப் பதங்கள் போற்றின்
செயன்முறைத் திறன்கள் ஓங்கும்
சித்திகள் தொடரும் மற்றும்
துயர்தினைத் துணையும் இல்லாச்
சுகங்களுந் துய்க்க லாமே. 3

222. காலனை மதியார் வேறு
கடவுளை நினையார் நூறு
கோலமும் தரியார் மாறிக்
கொள்கைகள் விரியார் நீறு
சாலவும் அணியார் கூட்டம்
சார்ந்திடத் துணியார் ஆதி
மூலம தானார் பெற்ற
முதல்வரை வணங்கு வாரே. 4

223. உம்பர்க்கும் புவிக்கும் ஏனை
உயிர்கட்கும் உறுதி யானார்
தம்பிக்கும் உதவி யானார்
தாதைக்கும் தலைவ ரானார்
நம்பிக்கை வைத்தார் உள்ளம்
நாடியே கோயில் கொள்ளும்
தும்பிக்கைத் தேவர் நல்கும்
துணைக்கிணை யில்லை யாமே. 5

224. கூவமுன் னோடி வந்து
குறைகளைத் தீர்ப்ப தற்குத்
தேவர்கள் உலகை விட்டுத்
தெருத்தெரு வாக இந்தப்

பூவுல கத்தில் வாழும்
பொதுமக்கள் பிள்ளை யாரைச்
சேவிக்கும் அன்பர் வாழ்விற்
சீர்சிறப் பெய்து வாரே. 6

225. முதலரிச் சுவடு தாங்க
முதன்முதற் பள்ளி செல்ல
முதன்முறை தொழில்தொ டங்க
முக்கிய பயணஞ் செய்யப்
புதுமனை புகுந்து வாழப்
பொதுப்பணி தொடர வெல்லாம்
முதல்நினைந் தழைக்கின் ஆனை
முகன்விரைந் தருளு வானே. 7

226. அத்தனின் பிள்ளை ஆனை
முகத்தனை அணுகி நாளும்
பத்தியிற் பரவின் புத்தி
சித்தியும் பரந்த கல்வி
வித்தையும் எய்தி முன்னை
வினைகளும் தீரப் பெற்று
முத்தியை யொத்த வாழ்வில்
இத்தரை மூழ்க லாமே. 8

227. இந்திரன் பிரமன் மாலோன்
இராவணன் பரசு ராமன்
சந்திரன் ஆதி சேடன்
சண்முகன் தக்கன் அங்கி
அந்தரக் காமன் வீமன்
அகத்தியர் அவ்வை யானோர்
சிந்தனை பிள்ளை யாரைச்
செய்துயர் வெய்தி னாரே. 9

228. பிரணவ முகத்துத் தெய்வம்
பெருவலுக் கரத்துத் தெய்வம்
திருவருள் மேனித் தெய்வம்
செறிகலை ஞானத் தெய்வம்
பொருள்வளம் ஆக்குந் தெய்வம்
பொழுதெலாங் காக்குந் தெய்வம்
இருள்மலம் நீக்குந் தெய்வம்
இணையடி யேத்து வாமே. 10

வேறு

229. மின்னே போன்ற மேனியனை
மெய்ம்மை வடிவ ஞானியனை
தன்னே ரில்லாத் தந்தையினை
தாயிற் சிறந்த சிந்தையனை
பொன்னை மணியைப் பூம்புனலைப்
பொலியும் யானை முகத்தவனை
முன்னே முந்தித் தொழுதேத்தின்
முன்னேற் றங்கள் பெறலாமே. 11

230. கன்னல் அமுதை நிகர்த்தவனைக்
கருணைக் கடலைக் கணபதியை
உன்னிப் பன்னிக் கசிந்துருகி
உள்ளம் வைத்துப் பூசித்தால்
இன்னல் இல்லா இல்வாழ்க்கை
இணையில் மக்கள் மற்றிடையில்
என்ன தேவை ஏற்படினும்
எல்லாம் எய்தப் பெறலாமே. 12

231. அனாதிக் காதி யானமகன்
அழகிய வற்புத யானைமுகன்
வினாவின் விடையாய் விளங்குபவன்
வினைகளின் விளைவை வழங்குபவன்

தனாதொன் றில்லாப் பூரணவன்
சனாதன தருமக் காரணவன்
விநாய கப்பெரு மான்கழல்கள்
வீழ்ந்திடின் எழுச்சி பெறலாமே. 13

232. விண்ணில் மண்ணிற் செறிபவனை
வேதப் பொருளில் உறைபவனை
எண்ணில் எழுத்தில் இருப்பவனை
இன்பக் கலைகள் விரிப்பவனைக்
கண்ணிற் கருத்தில் நிற்பவனை
காலங் கடந்த விற்பனனை
அண்ணல் ஆனை முகத்தவனை
அருச்சித் தெல்லாம் பெறலாமே. 14

233. பஞ்ச பூத வடிவுடையான்
பாசாங் குசத்துப் படையுடையான்
அஞ்சு கரத்துக் கொடையுடையான்
அருள்செய் தாளுங் குடையுடையான்
கஞ்சச் செம்பொற் கழலிணையைக்
கசிந்துள் ளுருகிப் பூசித்துச்
செஞ்சொல் நாவும் திருசான்ற
செம்மை நெறியும் பெறலாமே. 15

234. வழியைக் காட்டும் எல்லவனை
மனத்தைத் தீட்டும் வல்லவனை
மொழியைப் புகட்டுங் குருமணியை
முத்தமி ழுக்கும் முதல்மணியை
அழகுக் கழகு செய்பவனை
ஆனை முகத்துப் பிள்ளையினை
எழுவா யாகக் கொண்டெழுவார்க்
கெல்லாம் இன்பப் பயனிலையே. 16

235. ஓசை ஒலியாய் நிறைபவனை
ஓங்கா ரத்தில் உறைபவனை
பாச வினைகள் உரிப்பவனை
பால்வெண் ணீறு தரிப்பவனை
மாசிற் கோயிற் பணிசெய்து
பரவிப் பாடிப் பொழுதெல்லாம்
தாச நெறிநின் றொழுகிவரின்
சாலோ கத்தைப் பெறலாமே. 17

236. தந்த முகத்தைப் பெற்றவனைச்
சாதி பேதம் அற்றவனை
எந்த முகமும் ஏற்பவனை
ஏற்றத் தாழ்வில் லாதவனை
விந்தைச் செயல்கள் புரிபவனை
விநாயகப் பெருமான் திருவுருவைத்
தந்தை போலப் பூசித்தால்
சாமீ பத்தைப் பெறலாமே. 18

237. பொருளுஞ் சுவையும் ஆனவனைப்
புதுமை பழமை ஆனவனை
அருவும் உருவும் ஆனவனை
ஆனை முகத்துத் தேனமுதை
உரிய யோக முறைகளினால்
உள்ளத் திருத்தி உவகையுடன்
சரிநேர் நட்புப் பூண்டொழுகின்
சாரூ பத்தைப் பெறலாமே. 19

238. புரிந்து கொள்ளற் கரிதாய
புதிராம் போத முகத்தவர்தாம்
பரந்த அருளால் இழுக்கையிலே
பரவி உள்ளம் பழுக்கையிலே

விரிந்து ஞானம் வெளிக்கையிலே
விட்டு வினைகள் கெட்டொழிய
அருந்தி அமுதம் நிட்டையிலே
அவரா யிருக்கப் பெறலாமே. 20

எழுசீர் விருத்தம்

239. ஆதியே பால்வெண் சோதியே சுடரே
அன்பனே ஆனைமா முகனே
தோதிலா எனையும் சோதியா துனது
தொகையடி யாருடன் சேர்த்தும்
காதலில் லாதே காலத்தைக் கழித்தேன்
கனிந்துநின் கார்முகிற் கருணை
ஊதியோர் உதவா மூங்கிலுக் குயிரை
உதவுமா றுயர்வளித் தனையே. 21

240. சாரமில் லாதேன் சாத்திரம் அறியேன்
தந்தமா முகத்தலை மகனே
மாரியில் நனைந்தும் கோடையில் உலர்ந்தும்
மனவயல் வெளிகளில் அலைந்தும்
தூரவே திரிந்த சிறுவனைத் தூக்கி
துலக்கிநல் நெறிதனை விளக்கி
ஆரமும் அணிந்து யாவருங் காண
ஆதரித் தாண்டுகொண் டனையே. 22

241. முத்தமிழ்க் கனியே புத்தகத் துணையே
மூவாத மூத்தமா மணியே
தத்துவ முனியே பித்தனைத் தனியே
தகர்த்துநீ தாமரை யிலையில்
புத்தமு தளித்துப் புதுக்கியாண் டருளைப்
பொழிந்துருக் காட்டிய புதுமை
செத்தபின் னருமென் சித்தத்தில் இருந்து
தித்திக்கும் சித்திக்கும் சிவமே. 23

242. பரம்பொரு ளாய சிவபெரு மானின்
பண்புகள் ஊறிய பழமே
விரும்புத லின்றி வேண்டுத லின்றி
விளையாடித் திரிந்தவித் துரும்பைக்
கரும்பென மாற்றிக் கற்பனை யேற்றிக்
கவியரங் காண்டிட வைத்த
அரும்பெருங் கருணை ஆழ்ந்தகந் தேங்கி
அமுதமாய் ஊறுகின் றதுவே. 24

243. முதுபொருள் முடிவே முடிவதன் வடிவே
முதலுக்கு முதலாய முதலே
முதலைவாய்ப் பட்டு முக்கிமூழ் காதே
முன்வந்து காத்தருள் செய்தும்
மதியிலேன் நன்றி மறந்தவ னானேன்
மன்னித்து நீமற வாதே
கதியளித் தாண்ட கருதரும் புதுமை
காலத்தை வென்றவோர் கதையே. 25

244. அந்தமு மற்றாய் ஆதியு மற்றாய்
ஆனைமா முகத்தினைப் பெற்றாய்
பந்தமு மில்லாய் பாசமு மில்லாய்
பத்தர்கள் பலகோடி யுள்ளாய்
தந்தைமுன் போனார் தாயும்பின் போனார்
சரித்திரம் அறியாத வயதில்
எந்தனை யுந்தன் சொந்தமா யேற்றாய்
என்னமுன் யான்செய்த தவமே. 26

245. வேருக்கு வேரே மேலுக்கு மேலே
விநாயகா வித்தகர் வினைஞ்ரா
நீருக்கும் ஏனைப் பூதங்க ளுக்கும்
யாருக்கும் ஆதார நிமலா

நேருக்கு நேரே வந்தெனக் கருளி
நெஞ்சத்தில் நிலைகொண்ட நினைவால்
ஊருக்கு மல்லப் பேருக்கு மல்ல
உனக்காக வாழ்கின்றேன் உயிரே. 27

246. மெய்ப்பொரு ளாய செல்வத்தின் சொத்தே
வேதாந்த சித்தாந்த வித்தே
எப்பொருள் தனையும் எறியாது பேணி
இதஞ்செய்யும் தும்பிக்கை முத்தே
குப்பையைக் கூட்டிக் கொட்டிடும் வழக்குக்
கொவ்வாது பெருங்குணங் கொண்டு
செப்பனிட் டென்னைக் கோயிலுக் கழைத்துத்
திருவுருக் காட்டிய செயலே. 28

247. இன்னருள் மழையே இயற்கையின் எழிலே
என்னுடை இணையிலா முதலே
மன்னுயர் வாழ்வை வழங்கிடும் மலையே
மனத்தினைப் பதமிடுங் கலையே
என்னைநீ யாண்டு சின்னவோர் குறையும்
இல்லாது காத்தருள் செய்யும்
தன்னிக ரில்லா ஆட்சியில் தழைக்கும்
சாந்தியில் நீந்துவன் தகவே. 29

248. அல்லலை நீக்கி ஆனந்த மாக்கும்
ஐங்கரத் தண்ணலே போற்றி
கல்வியால் அறிவும் கலைகளால் மனமும்
கவின்பெறச் செய்பவா போற்றி
செல்வநல் வாழ்வைத் தேவருக் களிக்கச்
செருக்குற்ற அசுரனைச் செகுத்த
வல்லவா யார்க்கும் நல்லவா போற்றி
வாரணா போற்றியோ போற்றி. 30

வேறு

249. அத்த னுக்கு மூத்த பிள்ளை
யாக வந்த ஐயனே
எத்தி றத்தும் அன்பி லாத
பித்த னுக்கி ரங்கிநீ
பத்தி யூட்டிப் பாதை காட்டிப்
பாலித் தாண்ட நின்பெரும்
வித்தை யெண்ணிப் பாத போதில்
விம்மி விம்மி வீழ்வனே. 31

250. பெற்ற மிக்கப் பித்த னுக்குப்
பிள்ளை யாக வந்தவா
கற்றுங் கேட்டுங் காத லித்துன்
காலில் வீழுங் காட்சியர்
சற்றும் அன்பி லாத என்னைப்
பற்றி யாண்ட சால்பினைக்
குற்ற மாகக் கொள்வ ரோகை
கொட்டு வாரோ கொள்வையே. 32

251. அண்ட மெங்கும் ஆனைக் கோலம்
ஆள வந்த ஆதியே
தொண்டு செய்து போற்றி உன்னைச்
சொந்த மாக்கும் அன்பர்கள்
உண்டு வாழும் ஊத்தை யேனை
ஓம்பி யாண்டு கொண்டதைக்
கண்டு யாதுஞ் சொல்ல முன்னர்
காதைப் பொத்திக் கொள்விரே. 33

252. அங்கும் இங்கும் எங்கும் உள்ள
ஐங்க ரத்துப் பிள்ளையே
திங்கள் சூடி மங்கை யோடு
சிந்தை செய்ய வந்தது

எங்கு முள்ள என்னை யொத்த
ஏது மற்ற ஏழைகள்
மங்கும் வாழ்வில் இன்பம் பொங்க
வைக்க வோநீ வாழ்கவே. 34

253. பண்டும் இன்றும் பாரில் நின்னைப்
பற்றிக் கற்ற வித்தரும்
கொண்ட ஞானக் கண்க ளாலே
கண்டு கொண்ட சித்தரும்
கண்ட கண்ட வாறு நின்னைக்
காட்டிச் சென்ற போதிலும்
அண்டி நின்று தொண்டர் காட்டும்
அன்பில் மாற்றம் இல்லையே. 35

254. வல்ல சூரன் மாயம் மாய்த்த
வார ணாவோ வாரணா
மல்கும் அன்பு கொண்டு நின்னை
வாழ்த்தி டாத போதிலும்
நெல்லுக் கான நீரும் சற்றுப்
புல்லுக் காதல் போலவே
நல்ல அன்பர் கூட்டம் சேர்த்து
நன்மை நீயும் செய்தியே. 36

255. மந்தி ரத்தில் வந்து தித்த
வார்க ரத்துப் பிள்ளையே
இந்தி ரற்குப் பூசை செய்ய
நந்த னத்தை நல்கினை
எந்த னுக்குப் பூசை செய்ய
உந்த னையே தந்தனை
இந்த வாய்ப்பை இப்பி றப்பை
எண்ணி நெஞ்சம் விம்முதே. 37

256. முகத்தி னால்த னித்து வத்தை
முத்தி ரைசெய் பிள்ளையே
அகத்தி யர்கு டத்து நீரில்
ஆறு செய்த போலவென்
னகத்தி லும்நின் அன்பை இன்ப
ஆறு போலப் பாய்ச்சியே
சுகத்தை நல்கிச் சுத்தி செய்து
சொந்த மாக்கிக் கொண்டிரே. 38

257. நன்று மில்லைத் தீது மில்லை
நாளுங் கோளு மில்லையே
துன்றுஞ் சொந்த பந்தம் மற்றும்
துன்பம் இன்பம் என்பதும்
தொன்று தொட்டுப் பட்டுக் கெட்டுத்
தொங்கி நிற்கும் கன்மமும்
ஒன்றென் றுன்னில் ஒன்று வார்க்கிங்(கு)
இல்லை ஒன்றும் இல்லையே. 39

258. அல்லல் போக்கி ஆள வந்த
அத்தி மாமு கத்தவா
நல்ல நல்ல செய்கை யோங்க
நன்மை செய்ய வல்லவா
செல்லச் செல்லக் கால நேரம்
செய்த நன்றி கொன்றிடும்
புல்லன் அல்லன் யானும் நின்னைப்
போற்றி என்றும் வாழ்வனே. 40

எண்சீர் விருத்தம்

259. அண்ண லேயெனக் கமுத மானவோர்
ஆதி யேயருட் சோதி யேமனக்
கண்ண னேமுனர் கயமு காசுரன்
கயமை போக்கிய கருணை வள்ளலே

விண்ண வர்தொழ வீற்றி ருத்தலை
விட்டு மண்ணவர் வாழ்வு மேம்பட
நண்ணி வந்ததால் நாயி னேற்கும்நீ
நாத னாகினை நல்ல பேறிதே. 41

260. பொருவில் வானவர் பூத மானவர்
பொருளை ஆள்பவர் புலமை சான்றவர்
சரியை யாதிய நான்கு பாதையர்
தாமும் அறியொணாத் தந்த யானையீர்
ஒருச தத்துக்கும் ஒப்பி லாவெனக்(கு)
உருவ மற்றபேர் உருவம் காட்டியே
அருகில் நின்றதும் ஆண்டு கொண்டதும்
யார்க்குச் சொல்வன்ஓ யாதைச் சொல்வனே. 42

261. தந்தை யாகினை தாயு மாகினை
தந்து தந்துனைத் தந்த மாமுகா
சொந்த மாக்கியே சுகங்கள் தேக்கினை
சுற்றிச் சுற்றிவந் துள்ளம் தொட்டனை
பந்த பாசங்கள் போக்கும் நின்னருள்
பந்த பாசமுண் டாக்கல் என்னருள்
விந்தை நின்செயல் விளங்கி டாதெனை
விளக்கி ஈர்த்தனை வியக்கும் பேறிதே. 43

262. எட்ட நிற்கவும் கிட்ட வந்தெனக்(கு)
ஏட்டுக் கல்வியும் நாட்டுக் கேள்வியும்
புட்டுப் புட்டடா புகட்டி நின்றனை
புகழும் மிக்கவே தெவிட்டத் தந்தனை
அட்ட திக்கையும் ஆட்சி செய்திடும்
ஆனை மாமுகத் தாண்ட வாவொரு
பட்ட மூங்கிலைச் சுட்டுப் பாங்குறப்
பாட வைத்தமைக் கீடொன் றில்லையே. 44

263. ஓசை யாகியும் ஒலியு மாகியும்
ஓங்கி நிற்பவா ஒப்பிற் பொற்பத
ஆசை காட்டியும் ஆற்றல் ஊட்டியும்
ஆட வைத்தனை பாட வைத்தனை
தேச மெங்கணும் பேச வைத்தனை
தேனை அள்ளியே வீசு தென்றல்போல்
ஆசிலா வெனைத் தழுவி ஐங்கரா
ஆத ரித்தனை ஆன்ற பேறிதே. 45

264. தேடித் தேடுதற் கரிய நின்றிருப்
பாதத் தண்மலர் சூடுஞ் சிந்தனைப்
பாடி லாதவன் பண்பி லாதவன்
பதரை யொத்தவன் பத்தி யற்றவன்
வாடி வீழ்ந்திடா வண்ணம் விண்ணவர்
வாழ நல்வழி வகுத்த வாரணா
நாடி வந்ததும் நன்மை செய்ததும்
நயன வீழ்ச்சிகள் ஆகும் நாளுமே. 46

265. ஆதி மூலமே ஞானக் கோலமே
அம்மை பாதியா யான சோதியன்
வேதப் பிள்ளையே வேண்ட விண்ணவர்
மேன்மை வாழ்வினை விளைத்த வள்ளலே
நாத நாதனே நம்பி நாடிலேன்
நைந்து நின்றிருப் பாதஞ் சூடிலேன்
ஏதுஞ் செய்திலா எளிய பேதையை
ஏற்றுக் கொண்டநின் கருணை தானெனே. 47

266. மதியி லாதஇம் மடமை நாயினை
மதித்து வந்துநீ மாசில் கல்வியால்
முதிய சான்றவர் முன்னி றுத்திவான்
முதன்மை தந்ததை மூத்த பிள்ளையே

இதயம் வைத்திலேன் ஏவல் கேட்டிடாக்
குதிரை யாயினேன் ஏழை ஆயினும்
கதிய ளித்துக்கண் காணித் தாண்டமா
கருணைக் கென்னகைம் மாறு செய்வனே. 48

267. மெய்ம்மை வண்ணனே வேதக் கண்ணனே
விண்ணும் மண்ணும்மிக் கேத்தும் ஐங்கரத்
தைய னேயணு வேனும் நின்னடி
யாரின் சங்கமம் சேருஞ் சார்பிலாப்
பொய்ய னேன்றனை உய்ய வைத்தது
போன பெற்றவர் போற்றி நின்னைமுன்
செய்த மாதவம் என்று தேறினேன்
தேறி உன்னுளே ஊறு கின்றனே. 49

268. மன்னர் மன்னவா யானை மாமுகா
மாசு நீங்கிநான் மாய மானதால்
உன்னுள் மட்டுமே இருந்த என்னுளே
நீயுஞ் சோதியாய் ஒளிரும் ஒப்பிலாக்
கன்னற் காலமொன் றின்று பூத்ததுன்
கரையி லாப்பெருங் கருணைப் பார்வையால்
என்னுள் நீயுமாய் உன்னுள் யானுமாய்
இருக்குந் தோழமை இணையிற் பேறதே. 50

வேறு

269. மதிசூடி நதியாடி மாது கூடி
வானுலகும் மண்ணுலகும் மகிழ்ந்து வாழ
முதல்மூலப் பிரணவத்தை முகந்து தந்த
மூத்தவரே மூவாத பிள்ளை யாரே
அதுவேண்டும் இதுவேண்டும் என்று கேட்டே
அழமாட்டேன் ஐயாநின் னருள்தான் உண்டே
அதுபோதும் ஆடியதில் அன்பால் ஏத்தி
அனுதினமும் நின்மலர்த்தாள் அர்ச்சிப் பேனே. 51

270. மறையாது வெளிக்காட்டும் வடிவம் உண்டு
மருள்போக்கும் மறைஞானக் கண்கள் உண்டு
செறிவாக முறைகேட்கும் செவிகள் உண்டு
திறமான துணையாகும் விறற்கை யுண்டு
குறிமாறின் பாசாங்கு சங்கள் உண்டு
குற்றங்கள் பொறுத்தருளும் குணமும் உண்டு
குறையேதுங் கூடியுனை வணங்கு வார்க்கு
வருமாமோ கூர்ஞானப் பிள்ளை யாரே. 52

271. அலைமோதும் கடல்பொங்கி அமிழ்த்தி னாலும்
அதிவேகச் சுழல்காற்றில் அவலித் தாலும்
மலைதீயை மிகக்கக்கி வதக்கி னாலும்
வானத்து வறட்சியினால் வருந்தி னாலும்
நிலைமாறிப் புவியீர்ப்பு நீங்கி னாலும்
நிலமாடிப் பிளவெய்த நேரிட் டாலும்
தலையான தத்துவத்துப் பிள்ளை யாரே
தடுமாறி நின்னடியார் சாயா ராமே. 53

272. கேளாத கீழ்மகனைக் கேட்க வைத்தாய்
கிறுங்காத ஆணவத்தைக் கிறுங்க வைத்தாய்
தூளாகி மனமுருகிச் சொரிய வைத்தாய்
துலங்காத உண்மையினைத் துலங்க வைத்தாய்
ஆளாகி அள்ளூறிப் பாட வைத்தாய்
ஆனந்த ஞானநடம் ஆட வைத்தாய்
மீளாது பிறப்பெனவே விளங்கிக் கொண்டேன்
விநாயகரே வித்தகரே வேறும் என்னே. 54

273. அங்கம்நீ வேதம்நீ அறிவும் நீயே
அருஞ்சைவ சாத்திரங்கள் நெறியும் நீயே
சங்கம்நீ அரங்கம்நீ கலைகள் நீயே
தலையாய ஆனைமுகத் தலைவன் நீயே

கங்குல்நீ திங்கள்நீ பகலும் நீயே
கார்முகிலும் கங்கையும் கடலும் நீயே
அங்கும்நீ இங்கும்நீ எங்கும் நீயே
ஐயாவென் இதயத்தின் துடிப்பும் நீயே. 55

274. அதிகாரச் சதிகாரச் சூழ்ச்சி என்ன
ஆளாத காவாத ஆட்சி என்ன
விதியென்ன வீழ்வென்ன தாழ்வும் என்ன
விளைவித்துக் கொண்டமுன் வினைகள் என்ன
பொதுவான கோளென்ன நாளும் என்ன
புதுஞானப் பழஞானப் பிள்ளை யாரே
எதனாலும் எவராலும் தீமை யில்லை
இதயத்தில் நித்தம்நீ இருக்கும் போதே. 56

275. பூணுமறைக் கெட்டாத பூத நாதா
பூட்டியுனை இதயத்தில் பேணு கின்றேன்
பேணுமிட மல்லாது பிள்ளை யாரே
காணுமிடம் எங்கும்நின் காட்சி யாமே
காணுமிட மல்லாது கணங்கள் தேவே
காரியங்கள் அனைத்திலுமுன் ஆட்சி யாமே
மாணரிய விருந்தாகி மருந்து மாகி
வாழ்விக்கும் எனதன்புக் குருவே வாழி. 57

276. உன்னத உலகத்தில் உலவ வைத்தீர்
ஓங்காரக் குரலெங்கும் ஒலிக்க வைத்தீர்
உன்னியும் பெருமையினை உணர வைத்தீர்
உருகியே கண்ணீரும் பெருக வைத்தீர்
தன்னலக் கயமுகனைச் சமரில் வென்ற
தயாபரா தற்பரா தலைமை நாதா
இன்னுமேன் இப்புவியில் என்னை வைத்தீர்
ஏழையிவன் மனக்கோயில் இனிய தாமோ. 58

277. பேசாத கல்லென்றார் பிதற்றல் என்றார்
பெரிதான பிழைப்பென்றார் பிற்போக் கென்றார்
கூசாது குதர்க்கங்கள் குவித்த குற்றக்
குறைமதியார் கூர்மையுறக் குறித்து நீயும்
ஆசாரம் பாராதே அடியார் தந்த
அன்புப்பால் பருகியமா வதிச யத்தைத்
தேசாதி தேசத்தார் திகைத்துக் கண்டுன்
திருவருளில் விநாயகரே திளைத்தா ராமே. 59

278. சிவசக்தி சேர்ந்தவொரு திருவே போற்றி
திதிமூலப் பிரணவத்தின் உருவே போற்றி
புவியாள்வார் போற்றுமரும் பொருளே போற்றி
புத்திசித்திக் கேற்றதிரு வருளே போற்றி
அவம்போக்கி ஆளாக்கும் மருந்தே போற்றி
அருளாளர் அகஞானக் கொழுந்தே போற்றி
பொதுமக்கள் புலம்நாடும் பதியே போற்றி
புத்தமுதே புதுவாழ்வே போற்றி போற்றி. 60

கலி விருத்தம்

279. அன்ப தேசிவ மாயப ரம்பொருள்
தன்ப ரப்புல கெல்லாந்த ழைத்திட
அன்பு டன்தந்த ஆனைமு கத்தனின்
இன்ப மார்கழல் ஏத்தியி றைஞ்சுவாம். 61

280. ஆனை யோம்வடி வுக்குத்த குந்ததால்
ஆனை யாற்றல் அடக்கம்மி குந்ததால்
ஆனை நட்புக்கு கந்ததும் ஆதலால்
ஆனை மாமுக வையனைப் பேணுவாம். 62

281. மந்தி ரத்துள்ம றைந்துநி றைந்தவன்
மந்தி ரத்தினில் வந்துபி றந்தவன்
மந்தி ரத்துரு வத்தினைப் பெற்றவன்
ஐந்து செங்கரத் தையனைப் பற்றுவாம். 63

282. மூல நாயகன் மூவர்க்கும் நாயகன்
தூல நாயகன் சூக்கும நாயகன்
சால வேதந்த தந்தவி நாயகன்
சீல வார்கழல் சிந்தையி ருத்துவாம். 64

283. ஆதி யானவன் அந்தமு மானவன்
சோதி யானவன் சூழொளி யானவன்
வேத மானவன் வித்தைக ளானவன்
நாத நாதனின் பிள்ளையை நாடுவாம். 65

284. தந்தை தாயின் தகைமைகள் தாங்கியே
முந்தி வந்தவன் தந்தமு கத்தவன்
சிந்தை செய்பவர் தீவினை தீர்ப்பவன்
விந்தை மெய்ப்பதம் வீழ்ந்துவ ணங்குவாம். 66

285. தோழ னாகத்து ணைநிற்குந் தோன்றலை
ஏழை தாசனை இல்லக வாசனை
ஊழி வெல்லுமொப் பற்ற முதல்வனை
வேழ மாமுக வேந்தனை வேண்டுவாம். 67

286. கல்வி கேள்விக லைகளில் உய்யவும்
செல்வம் ஈட்டித்தி ருப்பணி செய்யவும்
அல்லல் நீங்கிய மைதிவந் தெய்தவும்
வெல்வி நாயகர் மேன்மைகள் பாடுவாம். 68

287. மாண்ட கைநெஞ்சில் மண்டிக்கி டப்பவன்
தூண்டத் தூண்டத்து லங்கிப்பி டிப்பவன்
வேண்டு வாரன்றி வேண்டிலர் தம்மையும்
ஆண்ட ருள்பிள்ளை யாரைவ ணங்குவாம். 69

288. முன்னர் நின்றுமு யற்சிமு டிப்பவன்
பின்னர் தான்வரும் பீழைத டுப்பவன்
உன்ன முன்னருள் செய்திடும் ஓம்முக
மன்ன வன்தன்னை வாழ்த்திவ ணங்குவாம். 70

289. மன்னித் தேங்கிய மாசுகள் போக்கியே
என்னைத் தூய்மைசெய் தேற்றவன் வீற்றிருந்(து)
என்னுள் என்றும்நின் றின்புற ஆள்பவன்
என்னன் பேயான வானைமு கத்தனே. 71

290. பெற்ற தாய்தந்தை போற்குரு வானவன்
உற்ற மூத்தவர் ஊரணி யானவன்
மற்று நண்பர்கள் ஆனவன் வந்தெனைப்
பற்றிப் பாலிக்கும் பாசாங்கு சத்தனே. 72

291. தந்தை போயினும் தாயும்பின் போயினும்
பந்த மானவர் தாம்பகை யாயினும்
வந்து நன்மைகள் பெற்றவர் மாறினும்
சொந்த மானவன் தும்பிக்கைத் தோழனே. 73

292. கோயில் கும்பிட லன்றியே கூத்துக்கள்
தேயக் கால்கள்தெ ருத்தெரு வாடிய
நாய னேன்றனை நன்னெறிக் கிட்டவன்
ஆய பேரருள் ஆனைமு கத்தனே. 74

293. பத்தி யற்றவன் பக்குவ மற்றவன்
சுத்தப் பொய்யனைச் சுத்திக ரித்துநற்
புத்தி தந்தவன் புத்தகம் தந்தவன்
அத்தன் ஆனந்தன் அத்திமு கத்தனே. 75

294. காத லற்றவன் காரிய மற்றவன்
பேதை யேன்றனைப் பேதித்துப் பேர்சுவை
மோத கந்தந்து மோப்பக்கை வைத்தவன்
ஆதி மந்திர மாமுகத் தையனே. 76

295. நாந லத்தினால் நானிலம் வெல்லலாம்
ஆன தாலறி வற்றவிப் பூனையும்
நானி லம்பெற நல்லருள் நல்கினான்
ஆனை மாமுக வாரமு தையனே. 77

296. பாடி டாதவன் பாடறி யாதவன்
பாட வேண்டுமென் றேயருள் பாலித்து
மேடை பற்பல வேற்றிய மேன்மையன்
பீடு கொள்மதி சூடியின் பிள்ளையே. 78

297. நன்று செய்தவர் தீயவர் ஆகலாம்
ஒன்று செய்திட வின்னொன்றும் ஆகலாம்
என்றும் மாற்றமில் லாவகை என்னுள்ளே
ஒன்றி நிற்பவன் ஓங்கார நாதனே. 79

298. பின்னர் பின்னரென் றென்றுபின் தங்கினேன்
தன்னம் பிக்கையைத் தந்துமுன் தள்ளியே
சின்ன வன்தன்னை மன்னவன் ஆக்கினான்
முன்ன வன்நம்வி நாயக மூர்த்தியே. 80

வஞ்சி விருத்தம்

299. உண்மை இன்மை உருவினான்
அண்மை சேய்மை அருளினான்
நுண்மை விண்மை நூதனன்
வண்மை வார்க ரத்தனே. 81

300. மந்தி ரத்தில் வந்தவன்
வந்து வான கத்தவர்
அந்த ரத்தை யாற்றினான்
சுந்த ரக்கைத் தும்பியே. 82

301. கண்ணில் ஆடுங் காவலன்
பண்ணிற் பாடும் பாவலன்
எண்ணில் நாடும் ஏவலன்
அண்ணல் ஐங்க ரத்தனே. 83

302. வேத மூல வித்தகன்
போத ஞான புத்தகன்
நீதி பேணும் நித்தியன்
ஆதி ஐங்க ரத்தனே. 84

303. மோன வான்ற மிழ்முனி
கூனிச் சென்னி குட்டவே
கானில் வேடங் காட்டினான்
ஆனை மாமு கத்தனே. 85

304. ஆழ ஞான அவ்வையார்
சோழன் முன்னர் தூமலை
வாழ்வு காண வைத்தனன்
வேழக் கைவி ருத்தனே. 86

305. மந்தி ரர்க்கு மந்திரன்
தந்தி ரர்க்குத் தந்திரன்
இந்தி ரர்க்கும் இந்திரன்
தந்த யானைத் தந்தையே. 87

306. முதிய தற்கும் முதியவன்
புதிய தற்கும் புதியவன்
விதியெ தற்கும் விதியவன்
பதியின் மூத்த பாலனே. 88

307. பத்தி செய்யின் பக்குவம்
சித்தி யாக்கித் தேடரும்
முத்தி நல்கும் வித்தகன்
பித்தன் பெற்ற பிள்ளையே. 89

308. சற்றுத் தந்தை தாயரைச்
சுற்றி வந்து தொழுதுநின்(று)
உற்ற வுலகம் உணர்த்தினான்
முற்று ணர்ந்த மூர்த்தியே. 90

309. விண்ணை மேலும் விரிப்பவன்
மண்ணின் அன்பை மதிப்பவன்
உண்ணைக் குருகின் உதிப்பவன்
உண்மை யோம்மு கத்தனே. 91

310. ஏழை மக்கட் கெளியவன்
வாழச் செய்தல் வழியவன்
தோழ ருக்குத் துணையவன்
வேழ முக்கண் வேந்தனே. 92

311. ஊழி நேரின் உய்வுறச்
சூழும் உலகைச் சுந்தரப்
பேழை வயிற்றிற் பேணுவான்
கேழில் தும்பிக் கேள்வனே. 93

312. சித்தி புத்தி வித்தையும்
வித்தை காட்டும் சத்தியும்
பத்தர்க் கீயும் பான்மையன்
அத்தி மாமு கத்தனே. 94

313. வந்த வினையை வாட்டுவான்
சிந்தை தெளியத் தீட்டுவான்
சொந்த ஒளியைச் சூட்டுவான்
நந்தி பெற்ற நாதனே. 95

314. தத்து வத்தில் தக்கவன்
வித்து வத்தில் மிக்கவன்
பத்தர் போற்றும் பக்குவன்
அத்தன் பெற்ற ஆதியே. 96

315. தந்தை போல வந்தனன்
வந்து வாழ்வு தந்தனன்
தந்து நெஞ்சில் தங்கினன்
தந்தைக் கேற்ற தனயனே. 97

316. கல்வி நல்கும் கண்ணினான்
செல்வஞ் சேர்க்குந் திருவினான்
அல்லல் தீர்க்கும் அருளினான்
வல்ல சிவனின் மைந்தனே. 98

317. ஐந்து பூத மானவன்
சொந்த மான தூயவன்
சிந்தை செய்யின் சேவகன்
முந்தி வந்த முதல்வனே. 99

318. யாருங் காணற் கரியவன்
வாரப் பாடு வைத்திடின்
நேரில் நெஞ்சில் நிற்பவன்
பேரில் லாதான் பிள்ளையே. 100

4

தில்லையம்பலப் பிள்ளையார் சிந்து

தில்லையம்பலப் பிள்ளையார் சிந்து

உள்ளடக்கம்

		பக்க எண்
	அணிந்துரை	105
1.	தலைவன் நினைவு	109
2.	தல மகிமை	111
3.	அழைப்பு	113
4.	யாத்திரை	115
5.	அற்புதப் புகழ்	117
6.	வழிபாடும் வாழ்த்தும்	120

உ

சிவமயம்

அணிந்துரை

கலாபூஷணம், பண்டிதர் சி. அப்புத்துரை

தில்லையம்பலப் பிள்ளையார் சிந்து எனும் பெயரிய இந்நூல் இலங்கை, யாழ்ப்பாணக் குடாநாட்டின், தென்மராட்சி எல்லையில் உள்ளதொரு விநாயக வழிபாட்டுடன் தொடர்புடைய தலத்தை, இறை புகழைப் பேசுவதாக அமைந்தது. இலக்கிய அமைப்பில் சாதாரண மக்களையும் கவருவதொரு யாப்பமைதி கொண்டது இந்தச் சிந்து இலக்கியம்.

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் - அடி
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்
பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம் - எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்

என்னும் மஹாகவி பாரதியாரின் பாடல் காதில் ஒலிக்கிறது. காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து என்று வழங்குவனவும் நினைவுக்கு வருகின்றன. கூத்துக்களிடைகூட சிந்துநடைக் கூத்து ஒன்று இடம் பெற்று மக்களைக் கவர்ந்துள்ளது. அங்கு நடையுடன் தொடர்புபட்டுக் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து என்று அது தொடர்கிறது.

கவிநாயகர் கந்தவனம் அவர்கள் இறையருளை நாடும் பக்குவம் பொருந்திய நிலையில் இந்தச் சிந்தினை ஆக்கியுள்ளார்கள். சாதாரண மக்களும் அநுபவிக்க வேண்டும் எனவும் விரும்பியுள் ளார்கள். அந்த விருப்பின் வெளிப்பாடுதான் இந்தத் *தில்லையம்பலப் பிள்ளையார் சிந்து* எனலாம். புலமையாளர்களது முதிர்ச்சி பெற்ற கருத்துக்கள் இனிமேல் உள்ளேயிருக்க முடியாது என்ற நிலையில் நல்ல அமைப்பு வகையுடனாகி வெளிவரும் என்று அறிஞர் சொல்வர். அந்த வகையில் வெளிவந்தவைதாம் கவிநாயகரது பாடல்களும்.

கோயிலின் திக்குத் திரும்பி - கைகள்
கூப்பித் தலைமேல் வணங்கும் விரும்பி
வாயவர் புகழைப் படிக்கும் - கண்கள்
வடிவினைச் சென்றுடன் காணத் துடிக்கும்

என்னும் தொடர்கள் தமே இயங்கும் அவையவங்களது செயற்பாட்டினைக் குறிக்கின்றன. இவை கருத்து முதிர்வினைக் காட்டுவன.

கனத்துக் கசிந்துள்ளம் உருகும் - கண்கள்
கட்டுக் கடங்காது மிகமீறிப் பெருகும்
மனத்துக்குத் தானும் சொல்லாமல் - கால்கள்
மன்னர் தலம்நோக்கி நடக்கும் நில்லாமல்

என்ற பாடல், உடனாகிய மனத்துடன்கூடச் சொல்லாமல், கால்கள் விநாயகர் தலத்தை நோக்கி நடக்கத் தொடங்கிவிடும் என்கிறது. அவ்வளவுக்கு ஈடுபாடு; இறை பக்தி. தலைவன் நினைவு, தல மகிமை, அழைப்பு, யாத்திரை, அற்புதப் புகழ், வழிபாடும் வாழ்த்தும் என்று ஆறு உபதலைப்புக்களுள் அடக்கம்பெறும் இந்தச் சிந்துப் பாடல்கள் அற்புதமான ஈர்ப்புச் சத்தி கொண்டவை.

ஆனினந் தானுமன் பாலே - வந்தங்
கபிடேகஞ் செய்தவற் களிக்குந்தம் பாலை
காவலில் லாவிளங் காளை - கூட்டம்
கழுத்துச் செம் மணிகளைக் கிலுக்குமவ் வேளை

என்னும் பாடல், அஃறிணை உயிர்களிடம் உள்ள ஈடுபாட்டைக் காட்டுகின்றது. அவற்றிடமும் தெய்வ உணர்வு ஊறிப்போய் உள்ளமை தெரிகிறது. பசுக்களை வளர்க்கும் ஆயர் குலத்தவரது ஈடுபாட்டுடனானது இந்த ஆலயம் என்ற கருத்தும் உண்டு.

சூழ்ந்த வயல் வெளிகள் - இடை
சுந்தரத் தாமரைத் தண்குளங்கள்
சேர்ந்து நீர் குடிக்கும் - மந்தைச்
செல்வத்துக் குரியசெம் மனத்தடியார்

என்றும்

மருத மரத்தடி நீழல் - குளம்
வயல்கள் செறிந்த வளங்கொளி சூழல்
கருதருங் கற்பகக் கூடல் - அண்ணல்
களித்திடுந் தலங்கல்விக் கம்பனின் பாடல்

என்றும் காணப்படும் பகுதிகள் தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலின் இயற்கைச் சூழலை விளக்குஞ் செய்கின்றன.

மூசிகம் ஏறிடுவீர் - எங்கள்
முன்னைய வினைகளைக் கூறிடுவீர்
பேசருங் கனிபெற்று - எமைப்
பெற்றவரே பெரும் உலகென்றீர்

என்னும் பாடலில் பெற்றவர் தெய்வநிலை பேசப்படுகின்றது.

பக்தியை வளர்க்கும் இப்பாடல்கள் படிப்பவர்களுக்கு நல்ல அறிவுக் கருவூலங்களை அளிக்கின்றன. 'ஆசைகள் அறுத்திடுவீர்', 'அன்பர்க்கும் ஆவன செய்திடுவீர்' என்பனவாய கருத்துக்களை இப்பாடல்களிற் பெறுகின்றோம்.

பசு வளர்ப்பவர்களது உள்ளங்களைத் தில்லையம்பலத்தாரிடம் இட்டுச் செல்லும் இப்பாடல்கள் எல்லோர் உள்ளங்களிலும் செழிப்பனவாக வேண்டும்.

கவிநாயகரின் ஆன்மிகப் பாடல்கள் பல. அவற்றுள் விநாயகர் தொடர்பானவற்றை *விநாயகப்பா* என்ற பெயரிலே அவர் தொகுத்து வெளியிடவிருப்பதாக அறிகிறேன். அவர் பல்லாண்டுகள் சுகத்துடன் வாழ்ந்து அரிய பத்திப் பாடல்களை இன்னமும் தரவேண்டும். இறைவன் திருவருள் அவருடனாகுக!

வணக்கம்.

சி. அப்புத்துரை

மயிலங்கூடல்
இளவாலை, இலங்கை.

தில்லைச் சிந்து

(வரணியூர் தில்லையம்பலப் பிள்ளையார் மீது பாடியது)

1. தலைவன் நினைவு

319. தில்லையம் பலமென்று சொன்னால் - மனந்
திடுமென விழிக்குது களிக்குது தன்னால்
வல்லவி நாயகப் பெருமான் - திரு
வடிவமும் கோயிலுங் கூடவே வருமாம். 1

320. கோயிலின் திக்குத் திரும்பி - கைகள்
கூப்பித் தலைமேல் வணங்கும் விரும்பி
வாயவர் புகழைப் படிக்கும் - கண்கள்
வடிவினைச் சென்றுடன் காணத் துடிக்கும். 2

321. மோதகம் நினைவுக்கு வருமாம் - அந்த
மோனப் பிள்ளையதை விருப்புடன் பெறுமாம்
காதலு டன்பொருள் சேர்க்கும் - அவை
கணபதிக் காக்கிப் படைத்திட ஆர்க்கும். 3

322. கனத்துக் கசிந்துள்ளம் உருகும் - கண்கள்
கட்டுக் கடங்காது மிகமீறிப் பெருகும்
மனத்துக்குத் தானுஞ் சொல்லாமல் - கால்கள்
மன்னர் தலம் நோக்கி நடக்கும் நில்லாமல். 4

323. மெய்ம்மயிர் குத்திட்டு நிற்கும் - மேனி
மிக்கக்கு ளிர்ந்தே வியர்த்தம்ம சொட்டும்
செம்மைபெற் றேமனம் ஓங்கும் - ஐயன்
சீர்கழல் அடியிணை சேவித்துத் தாங்கும். 5

324. யாரும்மெய் யடியவ ராவார் - பெரும்
அந்தரப் பட்டுடன் காணவே போவார்
சேருமா பொழுதுவந் தெய்தின் - அவன்
சிந்தனை யன்றிவே றொன்றுமே யெய்தா. 6

325. முன்பொரு போதுமில் லாத - தனி
மோனமார் நிலைமுற்றி வரக்கண நாதர்
அன்பெழுந் தெங்கும் துலங்கும் - அவர்
அருமையும் பெருமையும் அதிகம் விளங்கும். 7

326. துன்பங்கள் பொடிபட்டு மாளும் - உள்ள
சொந்தமும் பந்தமும் கூட்டோடு வீழும்
அன்பவர்க்கே மிகுந் தூன்றும் - தில்லை
யம்பலம் ஒன்றுதான் எங்கணும் தோன்றும். 8

327. ஆடுது பாடுது யாவும் - தில்லை
யம்பலத் தைச்சென்று காணவ வாவி
ஈடிணை யற்றவெ ழுச்சி - தனி
எல்லயில் லாதபே ரின்பக் குளிர்ச்சி. 9

328. பித்து பிடித்திடும் நெஞ்சம் - தில்லைப்
பிள்ளையார் கருணையே கடைசியிற் தஞ்சம்
கத்திக் கனிந்து கரைந்து - சென்று
காணத் துடித்துப் பறக்கும் விரைந்தே. 10

2. தல மகிமை

329. தந்தையர்க் கொருதலம் அங்கே - வல்ல
தனயனுக் கொன்றாகும் தெற்கினில் இங்கே
அந்தநாள் முதல்நல்ல அன்பர் - தில்லை
அம்பலம் பூசித்த தித்தலம் என்பார். 11

330. பூசித்த வர்க்கருள் செய்தார் - தினம்
பூசையைக் கண்டவா னிடையரும் உய்தார்
பேசத் தகுந்தவ ரானார் - பிற
தேசத்துப் பத்தரும் பெருந்திர ளானார். 12

331. மருத மரத்தடி நீழல் - குளம்
வயல்கள் செறிந்தவ ளங்கொழி சூழல்
கருதருங் கற்பகக் கூடல் - அண்ணல்
களித்திடுந் தலங்கல்விக் கம்பனின் பாடல். 13

332. ஆவினந் தானுமன் பாலே - வந்தங்
கபிடேகஞ் செய்வதற் களிக்குந்தம் பாலை
காவலில் லாவிளங் காளை - கூட்டம்
கழுத்துச் செம் மணிகளைக் கிலுக்குமவ் வேளை. 14

333. மந்திரம் கிள்ளைகள் ஓதும் - கூடி
மாங்குயில் பாடுங் கசிந்துநற் கீதம்
விந்தைகொள் மருத மகள்தான் - பெற்ற
விளைவெலாம் நாளும் படைத்தே மகிழ்வாள். 15

334. நாயகர் மோதக வட்டில் - புகை
நாவி யெழுந்துயர் வானத்தை முட்ட
ஞாயிறில் ஞாயிறு தோன்றான்[1] - சென்று
நண்ணியிப் புதுமைகள் நயக்கவெஞ் ஞான்றும். 16

[1] ஞாயிறில் - ஞாயிற்றுக்கிழமைகளில். ஞாயிறு - கதிரவன். தில்லை யம்பலப் பிள்ளையாருக்குப் பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளி லேயே அடியார்கள் மோதகம் அவித்துப் படைப்பது வழக்கம். மோதகம் அவிக்கப்படும் மடங்களிலிருந்து எழும் புகைமண்டலம் சூரியனை மறைத்து நிற்கும் என்று பொருள்.

335. சின்னொரு கோயிலில் உள்ளான் - அவன்
திக்கேதுந் தெரியாத பெருவெளி யுள்ளான்
கன்னல் அமிழ்தத்தை யொத்தான் - அன்பர்
காணருங் காட்சியைத் தரமனம் வைத்தான். 17

336. மண்ணினைக் கண்ணினிற் கொள்வார் - கொஞ்சம்
மடியினிற் கட்டியும் கொண்டவர் செல்வார்
தண்ணீருக் கொன்றிணை யில்லை - பிள்ளை
தலமதன் பெருமைக்குச் சொல்லேது மில்லை. 18

337. பாதகப் பழவினை போக்கும் - உயர்
பக்குவப் பதவியில் மாண்புறச் சேர்க்கும்
மோதகத் தலமென்று சொல்வார் - அதன்
முழுமையும் இனிமையும் போல்நிலை கொள்வார். 19

338. ஞானந் தருந்தல மீதே - மனம்
நாடுஞ் சுகத்தையும் நல்குவ தீதே
ஆனந்தம் ஆனந்தம் ஊறும் - தில்லை
யம்பலத் தையொரு காற்சென்று பாரும். 20

3. அழைப்பு

339. வாருங்கள் வாருங்கள் செல்வோம் - பெரு
வள்ளலின் பேரின்ப வார்கழல் கொள்வோம்
சேருங்கள் சென்று விரைந்தே - உயர்
தில்லையம் பலத்தினில் ஒன்றி நிறைந்தே. 21

340. கூவுமோர் சேவலைக் கேளீர் - பிற
சேவல்கள் கேட்டதைத் தொடருதல் கேளீர்
தேவரின் அடியவர்க் கெல்லாம் - சென்று
தெரிவியும் யாத்திரை செல்வதை நல்லீர்! 22

341. திருமனத் தீர்இத் தினத்தில் - எங்கள்
தேவாதி தேவரைத் தில்லையம் பலத்தில்
தரிசிக்கத் திரண்டனம் வாரீர் - தக்க
தருணமா யாத்திரை வந்துடன் சேரீர்! 23

342. ஞாயிற்றுக் கிழமையோய் வன்றோ - எங்கள்
நாயகர்க் கிந்தநாள் சிறந்தநாள் அன்றோ
ஆயிரந் தேடலேன் வீணே - யாவும்
அருள்பவன் தனையுமோர் முறைவந்து காணீர்! 24

343. வயதெல்லை யாத்திரைக் கில்லைக் - கல்வி
மகிமைகள் பதவிகள் யாதொன்று மில்லை
கயமுகப் பெருமானுக் கன்பு - காட்டிக்
கசிபவர் யாவரும் நிற்கலாம் முன்பு. 25

344. சாதி மதங்களைப் பாரோம் - பொருள்
தாழ்ந்தவர் உயர்ந்தவர் என்பதும் பாரோம்
காதகர் பாதகர் யாரும் - ஐயன்
கணபதி காதல ராயிடின் வாரும்! 26

345. கடிதங்கள் எழுதுதல் நன்றாம் - நேரிற்
காணுதல் அவற்றினும் பயன்மிக்க தொன்றாம்
முடிவொன்று விரைவினில் வேண்டும் - எனின்
முயலாமல் அதுவந்து கூடாது யாண்டும்! 27

346. ஐவரை ஆண்டிடல் வேண்டும் - பிறப்
பாழியை[1] எளிதிலே தாண்டிடல் வேண்டும்
பொய்யுடல் வீழ்வதன் முன்னே - உறு
பொருளினைத் தேடினால் நிம்மதி பின்னே! 28

347. மண்ணவர் எங்கணும் உள்ளோர் - வந்து
வந்துவி நாயகர் வாழ்வடி கொள்வார்
விண்ணவரும் போற்றி வருவார் - அடி
வீழ்ந்து வணங்கி வரங்கள் பெறுவார்! 29

348. வள்ளல் தனித்திருக் கின்றான் - எங்கள்
வரவினை எதிர்பார்த்துக் காத்திருக் கின்றான்
அள்ளி அணைப்பான் உவந்தே - களை
யாற்றி அனைத்தும் அளிப்பான் மகிழ்ந்தே! 30

---

[1] பிறப் பாழி - பிறப்பு ஆழி, பிறவிக் கடல்

4. யாத்திரை

349. செல்கின்ற வழிமிக்கத் தூரம் -அதைச்
சிந்தையில் சிறிதாக்கும் ஈசனின் பாரம்
அல்லல்கள் வழியிடை யில்லை - ஐயன்
அன்பருக் கேதிந்த அவனியில் தொல்லை. 31

350. அன்புள்ளார் எதிலுமே குறையார் - பழ
வடியாரோ(டு) அடியராம் பெருமையும் பெறுவார்
அன்பர்கள் அடியொன்று தூக்க - அவன்
அவரையே பார்த்தவா றிருக்கின்றான் காக்க. 32

351. செங்கதிர் தண்ணருள் பெய்வான் - வாயு
தென்றல் வழங்கி இதம்பல செய்வான்
பங்கமில் யாத்திரை வாரீர் - அப்பன்
பசி, களை தாராது காத்தருள் வாரே. 33

352. மந்தைகள் மேய்வதைப் பாரீர் - அந்த
வகையிலே மனங்களை ஒருவழி சேரீர்
சிந்தையும் செய்கையும் ஒன்றாம் - சிவ
சிந்தனை வந்திடின் அந்தரம் இன்றாம். 34

353. பசுக்களின் அமைதியைப் பாரீர் - புல்லைப்
பாலாக மாற்றிடும் பரிசையும் தேரீர்
பசுக்குணம் பதிக்குண மாக - மாறிப்
பதிகையில் பக்குவப் பாலூற லாகும். 35

354. ஆடுகள் போலத் தடித்தே - மனம்
அதிலொன்றும் இதிலொன்று மாகக் கடித்தால்
வீடுசென் றடைவதும் என்றோ - பழ
வெவ்வினை விலகியே கெடுவதும் என்றோ? 36

355. நாய்க்கொரு வேலையு மில்லை - எனின்
நடப்பதற்கும் பாவம் நேரமும் இல்லை
ஆய்க்கினை ஏன்படு கின்றீர் - அவன்
அருளினை ஏன்பெறத் தாமதிக் கின்றீர்? 37

356. யாத்திரி கருக்கென்று பேணி - பாலை
அன்பர்மோர் ஆக்கியே தரநிற்றல் காணீர்
பாத்திரம் பலதாங்கும் பால்போல் - கோலம்
பலபூண்டு தொண்டாற்றும் அன்பவர் தன்மேல். 38

357. அழுக்கையுண் டமைகின்ற காக்கை - நீருக்
கலைந்தோடி மூழ்கியே கழுவிடும் யாக்கை
அழுக்காறு அவாகோபம் பொய்ம்மை - யாவும்
அகலிடம் தில்லையம் பலமுண்மை யுண்மை. 39

358. இவ்வுல கத்துக்கும் ஈவான் - வரும்
அவ்வுல கத்துக்கும் உறுதுணை யாவான்
எவ்வுல கத்துக்கும் ஈசன் - மிக
எளியவன் திருத்தில்லை யம்பல வாசன். 40

5. அற்புதப் புகழ்

359. பிள்ளையில் லாக்குறையால் - என்னைப்
பேடி மலடனென்னும் பலமொழியால்
எள்ளி மிக நகைத்தார் - செய்யும்
இன்பச் சடங்குகளிற் புறக்கணித்தார்
உள்ளி உருகி ஐயா - வந்த
உறுதுயர் போக்கெனத் தினம் அழுதேன்
பிள்ளை வரம் அளித்தே - உயர்
பெருமைதந் தார்தில்லைப் பிள்ளையரே! 41

360. ஐந்து முறையெழுதி - தேர்வில்
ஆனப யன்கிடை யாதுமனம்
வெந்து வேறு வழி - அற்ற
வெறுப்பினில் தில்லையம் பலத்தில் உள்ள
நந்தி மகனைத் தொழு - என்று
நாலுபேர் சொன்னதும் குழைந்துநின்றேன்
தந்தார் உயர்ந்த சித்தி - இவர்
தனிப்பெருங் கருணையை மறப்பதுவோ? 42

361. ஏதமில் அழகிருந்தும் - குண
வியல்புடன் பல்கலைப் படிப்பிருந்தும்
சாதகம் குற்றம் என்றார் - என்
தங்கைக்குத் திருமணம் இல்லை என்றார்
வேதனை தானறிந்து - அவள்
மேன்மைக்குத் தகுந்தநல் வரன் அளித்தார்
மோதகம் படைத்திடுவேன் - ஆனை
முகனுக்கு நேர்த்தியை முடித்திடுவேன்! 43

362. நோயால் என்குழந்தை - மிக
நுடங்கிக் கிடந்தது நாட்பலவாய்
ஆய வைத்தியர்கள் - இனி
ஆவதொன் றிலையெனக் கைவிரித்தார்
பேயாய்ப் பதறிவந்தே - தில்லைப்
பிள்ளைமுன் னருள்தரக் கதறிநின்றேன்
சேயும் பிழைத் தெழுந்தான் - எங்கள்
தெய்வத்தின் மகிமையைத் தெரிந்திடுவீர்! 44

363. கற்றும் வேலையின்றி - பல
காலமங் கிங்கென அலைக்கழிந்தேன்
வெற்றித் தலைவரிடம் - பெற்ற
விதப்புரை மதிப்பொன்றும் அளிக்கவில்லை
சற்றோர் நாள்மனத்தில் - தில்லைத்
தலைவரின் நினைவெழத் தொழுதழுதேன்
பெற்றேன் பெரும்பதவி - இவர்
பெருமையைக் கருணையைப் புரிந்திடுவீர்! 45

364. அடியேன் தனக்குமவர் - பெரும்
அற்புதம் நிகழ்த்திய ஆண்டவராம்
விடப்பாம் பின்கடியால் - உயிர்
விட்டனென் றேசுற்றம் வீழ்ந்தழுது
சுடலைக் கெடுக்கையிலே - அந்தச்
சோக சமுத்திர வேளையிலே
திடமாய் எழுந்து நின்றேன் - எங்கள்
தில்லையம் பலத்தவர் செயலறிவீர்! 46

365. காலை கன்றைவிட்டு - சென்ற
கண்ணிகர் கவின்பசு மேய்ந்துவிட்டு
மாலை திரும்பவில்லை - உள்ள
வயலெங்கும் தேடியும் காணவில்லை

மேலே செய்வதென்னே - தில்லை
விநாயகர் திருவடி வீழ்வதல்லால்
பாலும் மோதகமும் - வைத்துப்
பணிந்திரந் தெழுகையிற் பசுவைக் கண்டேன்! 47

366. இந்தநல் யாத்திரையில் - முழு
இதயமும் வைத்துள்ள இளையவனே
உந்தனின் பசுவொன்றோ - இந்த
ஊர் அயலூர்முதல் எங்குமுள்ள
மந்தைகள் முழுவதையும் - தில்லை
வயற்பதி யதிபதி வாரணராம்
நந்தியின் மகன் காத்து - வரும்
நற்செயல் யாவரும் அறிவமன்றோ! 48

367. மறந்தீ ரோவடியீர் - ஊர்
வயல்கள் எல்லாம்கடும் வறட்சியினால்
பறந்தே புழுதியெழ - கொடும்
பஞ்சத்தினால் பலர் மடிந்துவிழ
செறிந்தே அம்பலத்தில் - மக்கள்
செயலற்று முறையிட்டுப் புலம்பித்தொழ
நிறைந்த கருணைமழை - பெய்து
நெல்வளம் மனைதொறும் நிறைந்ததையே! 49

368. நெற்பயிர் போலிவனை - அன்பு
நீர்நெஞ்ச வயல்களில் வளர்த்திடுவோம்
அற்புதக் கடவுளப்பா - வரும்
ஆபத்தை அறிந்தருள் புரிவனப்பா
பற்பல நன்மையப்பா - எங்கள்
பாரத்தைச் சுமந்திடும் நாதனப்பா
சிற்பரச் செல்வனுறை - கோயில்
தெரியுது தெரியுது நடவுங்களே! 50

6. வழிபாடும் வாழ்த்தும்

369. ஐயா ஆனைமுகா - தில்லை
அம்பலம் மேவிய அருள்அழகா
வையந் தனில் உனையே - எங்கள்
வாழ்முத லாகக்கொண் டொழுகுதலால்
மெய்யன் பாலுனது - கழல்
மேன்மைகண் டின்புற விரும்பிவந்தோம்
ஐயா கண்டுகொண்டோம் - உன்
அற்புத வடிவினில் அனைத்துங்கண்டோம்! 51

370. மாசில் மணிமுடியை - இரு
மாவிரி செவிகளை நீள்கரத்தை
பூசும் திரு நீற்றை - அருள்
பொழிந்திடும் கண்களைத் தந்தங்களைப்
பாசாங் குசப்பரிசை - பெரும்
பக்குவக் கனியினை மோதகத்தை
வாச மலர்ப் பதத்தை - மனம்
மகிழ்வுறக் கண்டனம் வாழியவே! 52

371. சூழ்ந்த வயல்வெளிகள் - இடை
சுந்தரத் தாமரைத் தண்குளங்கள்
சேர்ந்து நீர்குடிக்கும் - மந்தைச்
செல்வத்துக் குரியசெம் மனத்தடியார்
தாழ்ந்து வணங்கிவர - அவர்
தறுவினை தீர்த்தருள் புரிவதற்கே
வாழ்ந்து வருந்தலைவ - உன்
மகிமைகள் கண்டனம் வாழியவே! 53

372. ஆதி சிவ சக்தி - பெற்ற
ஐங்கரப் பிள்ளையே வினைமுதலே
மோதித் தீதுபுரி - கய
முகன்தனை அடக்கிய மூத்தவரே
வேதப் பொருள் உள்ளே - நின்று
விளங்கிடும் மந்திரம் ஆனவரே
காதல் அடியவர்கள் - கூடிக்
கசிந்துகண் சொரிந் துன்னை வணங்கவந்தோம்! 54

373. மூசிகம் ஏறிடுவீர் - எங்கள்
முன்னைய வினைகளைக் கூறிடுவீர்
பேசருங் கனிபெற்று - எமைப்
பெற்றவ ரேபெரும் உலகென்றீர்
ஆசைகள் அறுத்திடுவீர் - வேண்டும்
அன்பர்க்கும் ஆவன செய்திடுவீர்
பூசனை புரிந்தன்பால் - உமைப்
போற்றுகின் றோமேற் றருள்செய்வீர்! 55

374. இந்திரன் சிவபூசை - செய்ய
இசைந்துதண் காவிரி பாயச் செய்தீர்
சந்திரன் அகங்காரம் - கெடத்
தண்டனை விதித்துயர் பதம் அளித்தீர்
கந்தனும் எழில்வள்ளி - தனைக்
காதல்கொண் டணைத்திடக் கருணைசெய்தீர்
பந்தியில் அவலமுது - தேன்
பால்பழம் படைத்தனம் ஏற்றருள்வீர்! 56

375. தாதை தேர் ஒடித்தீர் - பல
தந்திரச் சூரனின் வினை முடித்தீர்.
வேத வியாசர்கதை - சொல்ல
விரைந்ததை எழுதிய வித்தகரே

ஓதி உமதரிய - ஓம்
ஓமெனும் மந்திரம் ஓதியன்பால்
மோத கஞ்சுவையாய்ச் - செய்து
முறையுடன் படைத்தனம் ஏற்றருள்வீர்! 57

376. முன்னர் நம்பியாண்டார் - திரு
முறைகளை வகுத்திட அருள்செய்த
மன்னே புவிபுரக்கும் - ஆனை
மாமுக அண்ணலே நீண்டவழி
இந்நாள் நடந்துவந்து - காண
இன்னருள் புரிந்தனை நீவிரும்பும்
கன்னல் கரும்புவைத்து - உளம்
கசிந்துநெக் குருகினம் கண்டுகொள்ளே! 58

377. வானில் நீர்மண்ணில் - தீ
வளியினில் நீகலந்திருந்தாலும்
கானில் சேரிகளில் - தெருக்
கரைமர நிழல்களில் வயல்வெளியில்
மானம் பாராதே - மக்கள்
மனங்களைப் பார்த்தெழுந் தருள்வாயே
தேனார் மலர்சொரிந்தே - நின்
திருவடி வீழ்ந்தனம் கண்டுகொள்ளே! 59

378. போற்றி கல்விகலை - செல்வம்
புகழ்வினை யாவுக்கும் முதற்பொருளே
போற்றி இடர்தடைகள் - புன்மை
போக்கிடும் தில்லையம் பலத்தவரே
போற்றி அடியவரை - நாளும்
புரந்தருள் பாலிக்கும் கணபதியே
போற்றி முத்திதரும் - சிவப்
புண்ணியத் தண்ணருள் விநாயகரே! 60

5

விநாயகர் பதிகங்கள்

விநாயகர் பதிகங்கள் - உள்ளடக்கம்

		பக்க எண்
	அணிந்துரை	127
1.	முறிகண்டிப் பத்து	131
2.	குரும்பசிட்டி சித்தி விநாயகர்	134
3.	குரும்பசிட்டி விநாயகர் பத்து	137
4.	குரும்பசிட்டி ஏசறவு	140
5.	புன்னையம் பதிகம்	143
6.	நுணாவில் மணங்குணாய் விநாயகர்	146
7.	குப்பிளான் கற்பக விநாயகர்	149
8.	குப்பிளான் சோதி விநாயகர்	151
9.	அனலைதீவு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார்	153
10.	அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்	156
11.	மானிப்பாய் மருதடி விநாயகர்	158
12.	பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்	161
13.	திருச்சி மலைக்கோட்டை மாணிக்க விநாயகர் அகவல்	164
14.	திருச்சி மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார்	167
15.	கோவை இரத்தின விநாயகர்	169
16.	செங்காட்டங்குடி வாதாபி கணபதி	172
17.	மயிலாப்பூர் செல்வ விநாயகர்	174
18.	கனடா - ஒன்ராறியோ செல்வமலைப் பிள்ளையார் தரிசனப் பதிகம்	177
19.	கனடா - ஒன்ராறியோ செல்வமலைப் பிள்ளையார்	179
20.	கனடா - செல்வமலை சித்தி விநாயகர்	181

21. கனடா - துரந்தை வரசித்தி விநாயகர் 184
22. துரந்தை வரசித்தி விநாயகர் 187
23. துரந்தை வரசித்தி விநாயகர் 190
24. துரந்தை வரசித்தி விநாயகர் 192
25. துரந்தை வரசித்தி விநாயகர் 195
26. கனடா - பிராம்டன் கற்பக விநாயகர் 197
27. கனடா - மொன்றியல்
சோவையம்பதி கற்பக விநாயகர் 200
28. கனடா - எட்மன்டன் மகா கணபதி 202
29. நெதலாந்து - தென்கெல்டர்
திருவரதராச செல்வ விநாயகர் 205
30. இங்கிலாந்து - விம்பிள்டன் கணபதியார் 207
31. நியூ யோக்கு மகா வல்லப கணபதி 210
32. சீசெல்சு - விக்டோரியா நவசக்தி விநாயகர் 213
33. மலேசியா - மலாக்கா பொய்யாத விநாய மூர்த்தி 216
34. சிங்கப்பூர் செண்பக விநாயகர் 219
35. பொது: நற்கதிப் பதிகம் 221
36. பொது: இகபரப் பதிகம் 224
37. பொது: வேண்டற் பதிகம் 226
38. பொது: திருத்தாட் பதிகம் 229
39. பொது: நீறணி பதிகம் 232
40. பொது: ஓங்காரப் பதிகம் 234

அணிந்துரை

விநாயகர் சிவாகமவித்துவான்

டாக்டர் சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள்

(சர்வதேச இந்துக் குருபீட அவுஸ்திரேலியப் பொறுப்பாளர்)

கவிஞர் கந்தவனம் ஆசிரியஅதிபர் அவர்கள் உலகறிந்த பேரறிஞர். அவர் ஆங்காங்கு கோயில்கொண்டு அருள்புரியும் விநாயகர் எழுந்தருளியிருக்கும் திவ்விய திருத்தலங்களை விதந்து போற்றி, விநாயகனைப் புகழ்ந்து பாடிய அனைத்துப் பதிகங்களையும் அனைவரும் அறிந்திருப்பார்களெனக் கூறுவதற்கில்லை. அனைத்துத் திருத்தலங்களின் பதிகங்களையுந் தொகுத்து வெளியிடும் நற்பணி தற்போது அருள்மிகு ஸ்ரீ விநாயகனின் திருவருளால் கைகூடிவருவது பெருமகிழ்வைத் தருகிறது.

முறிகண்டி விநாயகர் மேல் நமது கவிநாயகர் பாடி, 1971இல் வெளியிடப்பெற்ற பாடல்களில், முக்கண்ணுடை மூர்த்தியான ஆனை முகவனின் கண்களைத் தங்கத்தமிழ், சிங்கத்தமிழ், சங்கத்தமிழ் என ஒவ்வொன்றும் தமிழ்மயமானவை எனக் குறிப்பிட்டு, அத்தகைய முறிகண்டியான், மங்காப் புகழ்கொண்ட பெரும்மானத் தமிழ்மக்கள் இங்கேபடும் இன்னலை இன்றே துண்டித்தருள் என, நம் தாயக மக்கள் படுந் துயரை அன்றே துள்ளுநடையிற் குறிப்பிட்டுள்ளமை தீர்க்க தரிசனமாகத் தோன்றுகிறது.

இப்பதிகங்களைப் பாராட்டித் தமிழறிஞர் பண்டிதமணி தனை மறந்து சந்தமுறப் பாடிக் களிகொண்ட பத்தும் படித்து நனி ஆடிக் களிகொள்க என சாத்துகவி தந்துள்ளமையே இவரது கவித்துவத் துக்குக் கிடைத்த ஒப்பற்றதொரு நற்சான்றாகும்.

குரும்பசிட்டி சித்தி விநாயகர்மீது இவர் பாடிய பாடல்களைப் பத்துப் பத்தாக மும்முறை கேட்டும் இவரது கவிதைகள் வரசித்தி விநாயகருக்குத் தெவிட்டவில்லைப்போலும். ஒருபாடலில், *கட்டுக் கடங்காத கயமுகன் கொடுமைகள் கட்டுப்படுத்தி நின்றீர், சட்டத்தை மீறியே அட்டகாசஞ் செய்யும் சண்டாளர் அநியாயத்தை (நீயன்றித்) தட்டியார் கேட்பது?* எனத் தனிப்பெருந்தலைவனைப் பார்த்து நமக்காக இவர் கேட்பது இவரது உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகிறது.

ஆயக்கடவை சித்திவிநாயகர் பதிகத்தில் அருமையான விநா யகனின் தனித்துவத்தை புலப்படுத்தும் வகையில், *அறிவினை விரிக்கும் பிள்ளை அன்பினைப் பெருக்கும் பிள்ளை நிறைவினை அளிக்கும் பிள்ளை* எனப்பாடியுள்ளமை 'அறிவு விரியும், அன்பு பெருகும், அங்ஙனம் அன்பைப் பெருக்கின் மனநிறைவு கிடைக்கும்' என்னும் தத்துவத்தை நமக்கு எடுத்துரைத்துக் கவிஞர் தத்துவ வித்தகரானமையை எண்ணி எண்ணி மகிழவைக்கிறது.

குப்பிளான் கற்கரை கற்பகவிநாயகன், தற்பெருமைகொண்ட கயமுகாசூரனை அழித்து வானோருக்கு நல்வாழ்வை ஈந்த வரலாற்றைக் கூறி, அது போலவே, தீயவரை அழிவுசெய்து நமக்கும் ஆளும் அரசுரிமை தரமாட்டாயா வெனக் குறையிரந்து நிற்பது போலவும், குப்பிளான் சோதிவிநாயகர் பதிகத்தில், ஈதலில் வல்ல குப்பிளான் எனவும் மாதவச் செந்திநாதையர் வாழ்ந்த மண்ணெனவும் குறிப்பிட்டுள்ளமை, ஈகை, தவம் ஆதியன நிறைந்த நமது தாயக மண்ணின் பெருமையைச் சொல்லாமற் சொல்லிக்காட்டுகின்றது.

மருதடி விநாயகன் பதிகத்தின் பாடலொன்றில் தனது கொம் பொடித்து அசுரனை வதம் செய்ததைப்போன்று, ஆண்ட தமிழர் மீண்டும் மேன்மை எய்தவே விடிவு வேண்டும் என விண்ணப்பித் ததைப் பார்க்கும்போது, வியாபாரத்திற்காக வந்து ஒண்டிய தமிழரைக் குடியிருக்க விட்டதனால் உரிமை கேட்கிறார்கள் எனப் பின்னொரு காலத்தில் வதந்தி கிளப்புவார்களென முன்னரே உணர்ந்து, தமிழரின் அரசாட்சிக் காலத்தை நினைவுறுத்திப் பாடிய அருள் வாக்காகக் கவிஞரின் வாக்குத் தோன்றுவதை உணரலாம்.

கவிஞர் இந்திரமாஞாலத்தில் ஏறி, இந்தியாவுக்குள் புகுந்து, பிள்ளையார்பட்டிக்கு வந்தபோதும், அவரிடத்தில் வேண்டி நிற்பது, அலைவுறும் அகதி அடியவருக்கும் ஆதரவளித்துத் தண்ணருள் தந்து அருள்புரியக் கோரிக்கை விடுப்பதைக் கவிஞரின் பிள்ளையார்பட்டிக் கவிதைகளில் பார்க்கமுடிகிறது.

திருச்சி மலைக்கோட்டைப் பிள்ளையார் சந்நிதியில் நின்று அவர் உலகத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் பார்க்க முடிந்தது எனத் தனது சுகானுபவத்தை அழகாக உச்சிப்பிள்ளையார் பதிகத்தில், உச்சியிலே நின்றால் (திருச்சி) உலகத்தின் பச்சையியல்பெல்லாம் படித்திடலாம் எனக் குறிப்பிடுவது, உலகத்தைக் குறைகாணும் நோக்குடன் பார்க்காதே, ஏற்கும் எதிலும் நன்மைதரும் தன்மையுண்டு அதனைப்பார், அதுவே கடவுளைக் காணும் வழி என்னும் அரிய தத்துவம் பளிச்சிடுகிறது.

அடிவாரத்து மாணிக்க விநாயகர்தான் உலகத்தின் பச்சை

வண்ணத்து அருட்சக்தியாக மிளிருகின்றார் என்பதனால் உலகில் அமைதிகாக்க, நீதிநேர்மையைக் காக்க, அறமுறை ஆட்சியைக் காக்க என அகவல் பாடி அருள்பெறுகிறார்.

சிவபூஜை செய்த திருத்தலத்தில், வாதாபி கணபதியைத் தொழுதால், அல்லல் ஆழ்ந்திடும், அமைதியும் சூழ்ந்திடும், செல்வமும் சீரும் சிறப்புகளும் சேர்ந்திடும் எனப் பாடி மயிலைச் செல்வத்தை ஆரா அன்பால் மயிலாக அம்மை அப்பர் அடிதொழுத பேரார் மயிலைப் பதியின் திருத்தலச்சிறப்புடன் சீரும் சிறப்பும் நல்கும் செல்வ விநாயகனின் அருட்சிறப்பையும் பாடுகின்றார்.

பின் அங்கிருந்து பறந்தபடியே நெதர்லாந்துக்கு விரைகின்றார். அங்கு அன்றொருநாள் அணைக்கட்டில் ஏற்பட்ட துவாரத்தின் வழியாக ஊரையழிக்கப் பெருகிவந்த வெள்ளத்தை இரவு முழுதும் தன் கையால் அடைத்தபடியே நின்று உயிர்நீத்து ஊரைக்காத்த ஒரு சிறுவனின் வரலாறு படைத்த தென்கெல்டர் எனும்பதியில் வீற்றிருக்கும் வரதராஜ விநாயகனைப் புரந்தரனுக்காகச் சிறுவனாக வந்து அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்து காவிரி தந்த கருணை வரலாறு கூறிப்பாடிப் பரவினார்.

இங்கிலாந்து சென்ற கந்தவனக் கவிஞர், பிரித்தானியச் சைவர் பேணும் செல்வம், பேணார்க்கும் பெருங்கருணை பெருக்கும் தன்மையை விம்பிள்டன் கணபதியிடம் கண்டு புகழ்ந்து பாடியுள்ளார்.

சீசெல்சு விக்டோரியாப் பதியில் வதியும் விநாயகனைப் பாடும் பதிகத்தில் இடர் கெடவே இராவணனார் வடபால் பெற்ற இலிங் கத்தை ஏற்றுத் திடமுறவே மண்ணிலதை ஊன்றி வைத்து, இராவணன் வலிமையைச் சிறுகச்செய்த வரலாற்றை விளக்கியுள்ளார்.

அகழ்வுறு செல்வ அமெரிக்க நாட்டின் அணியெனத் திகழும் நியூயோர்க்கு நகரில் மகிழ்ந்தருள்கின்றார் மன் மஹாகணபதியாரே என நாட்டுவளம், நகர் வளம், மூர்த்தி வளம் அனைத்தும் ஒரே பாடலில் பேசப்படுவதை அநுபவித்து மகிழலாம்.

புலம்பெயர்ந்து வந்தோர்க்குப் புகலிடந் தந்த நாட்டுத் தேசிய கீதத்தை இன்தமிழிலாக்கிய கவிஞர், செல்வமலை வாழும் சித்தி விநாயகனின் புகழ்பாட முனைகின்றபோது, கனடா நாட்டின் மனித நேயப் பண்பாட்டைக் குறிப்பிட்டு, நாமும் அவர் செல்லும் நல்ல வழிகள் பற்றி, செந்தமிழ் நீதி நெறி முறைகள் சொல்லிலன்றிச் செயலிலும் காட்ட நின்னருள் வேண்டினேன் என நாம் வாழ்வாங்கு வாழும் நன்நெறியை வலியுறுத்தியுள்ளமை பெரிதும் உவக்கிறது.

எட்மண்டன் கணபதியின் எழிலைப் பாடுபவர் வல்லாளர்

நல்லாளர் வரமளிக்கும் மணியாளர் எனப் பாடி, சொல்லரிய கைத் தொழில்கள் தொடரும் எட்மண்டன் எனப்பாடியமை தொழிலாளர் அருமையையும் பெருமையையும் கணபதியின் இறைமையுடன் எண்ண வைக்கின்றது.

துரந்தை நகரின் வரசித்தி விநாயகன், கவிஞரின் கருத்தாழ்ந்த தெய்வம். எனவே பாடல்கள் கருத்தாழம், சொல்லாழம் அனைத்தும் நிறைந்த பற்பல பதிகங்களாக உருவாகிப் பிரவாகமாக வெளிப் படுகிறது. ஒவ்வொன்றாய் நீங்கள் சுவைக்கவுள்ள பனுவல்களில் சிகரம்போல் சிலவரிகள், வையம் புகழும் '*துரந்தைநகர் வதியும் வரசித்திப் பெருமானை துய்யமனத்தால் தொழுதுருகும் தொண்டர்க்கில்லைத் துயரமே*' என வேண்டும் வரத்தை விரைந்தரு ளும் வரசித்தியான் புகழைப் பரப்பி நிற்கின்றது.

பொதுப் பதிகங்கள், வேண்டற் பதிகம், திருத்தாட் பதிகம், நீறணி பதிகம் எனப் பாடிக்குவித்த பாடல்களைப் பார்த்ததும் கவிநாய கரின் கவிதையில் விநாயகரின் களிநடனம் மனக்கண்ணில் தெரிந்தது.

கவிஞரும் இரசிகரும் பல்லாண்டு வாழ்கவென வாயார வாழ்த்துவோம்.

விநாயகர் பதிகங்கள்

1. முறிகண்டிப் பத்து

379. பிறைமே லுடைச் சடையான் பெரும்
பத்தர் களின் பித்தன்
கறைகொள் எழிற் கண்டன் சிவன்
கண்ட முதற் புதல்வன்
முறிகண் டியிற் பெருமான் அரும்
முயற்சி களின் முதல்வன்
உறுநோ யுளங் கொண்டே உடன்
தீர்ப்பான் உயிர் காப்பான். 1

380. பூவாள் தொழு தேத்துங் கலை
ஞானன் பொரு ளாளன்
ஆவா வென வேலன் மயி
லாலே விரி வாள
நோவா துல கத்தை வலம்
வந்தான் நொடிப் பொழுதில்
போவார் வரு வார்கள் தினம்
போற்றும் வழிப் பிள்ளை. 2

381. கிள்ளை மொழி வள்ளி குகன்
கிட்ட வழி செய்தான்
உள்ளே ஒளி கொள்ளா அடர்
ஊரிற் பெருங் காட்டில்
வெள்ளம் என மக்கள் வரம்
வேண்டித் தொழு தேத்தத்
தள்ளா தருள் செய்தே உளம்
தானே குடி கொள்வான். 3

382. தந்தை மனம் அறிவாற் கவர்ந்
தானே தளிர் வயதில்
மந்தை அசை வெட்டி மகிழ்
வெய்தும் மர நிழலில்
விந்தை வடி வாலே துயர்
வீழத் தொழு வாரின்
சிந்தை கவர் வானே முறி
கண்டி திகழ் வோனே. 4

383. தண்மை தரும் காடாம் அவன்
தங்கும் பெரும் வீடு
அண்மை மிக அண்மை என
ஆற வரு வோர்கள்
உண்மை ஒளி கண்டு மிக
உள்ளம் களி கொண்டு
தண்மை உறு வார்கள் நலத்
தன்மை பெறு வார்கள். 5

384. நாகம் அணி நாதன் உமை
நாமுய் திடப் பெற்றாள்
காகம் உருக் கொண்டே கலைக்
காவே ரியைத் தந்தான்
ஏகும் வழி தூரம் வரும்
எண்ணாப் பல இன்னல்
வீகும் படி செய்வான் முறி
கண்டி விநா யகனே. 6

385. வல்லான் பெரு நல்லான் தமிழ்
வாழும் வழி வைத்தான்
பொல்லாச் செயல் கண்டும் பொருட்
கல்லாய்ப் பொறுத் திட்டான்
பல்லாற் றலும் உடையான் முறி
கண்டிப் பழம் பதியான்
எல்லாம் அறி வானே குறை
நல்லாய் அறுப் பானே. 7

386. தங்கத் தமிழ் சிங்கத் தமிழ்
சங்கத் தமிழ்க் கண்ணான்
மங்காப் புகழ் கொண்ட பெரும்
மானத் தமிழ் மக்கள்
இங்கே படும் இன்னல் பல
இன்றே முறி கண்டித்
துங்கக் கரி முகனார் துயர்
துண்டித் தருள் வாரே. 8

387. ஏறி எலி மீதில் வரும்
போதில் எம துள்ளம்
மீறி உக உருகி விழி
நீரும் மிகப் பெருகி
கூறி உனை யல்லால் வழி
வேறொன் றிலை என்றே
தேறித் தொழும் இன்பம் பெறும்
பேறுட் பெரும் பேறே. 9

388. ஆனை முகன் அன்பு முகன்
ஆன்ற முகன் ஓமோம்
ஆன வழி ஆக்கி எம
தல்லல் அழி வாக்கித்
தேனை நிகர்த் தெய்வம் உளம்
தேங்கி அருள் செய்வான்
கானில் ஒளி காட்டும் முறி
கண்டிப் பெரு மானே. 10

இப்பதிகம் 1971இல் நுணாவிலூர்த் தமிழ் மன்றத்தினால், முறிகண்டியில் வெளியிடப் பெற்றது. அவ் வெளியீட்டுக்குப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் உவந்தளித்த சாற்றுகவி பின்வருமாறு.

கந்தவன மென்னும் கவிஞன் முறிகண்டித்
தந்திமுகன் மீது தனைமறந்து - சந்தமுறப்
பாடிக் களிகொண்ட பத்தும் படித்துநனி
ஆடிக் களிகொள்க ஆங்கு.

2. குரும்பசிட்டி சித்தி விநாயகர்

389. திங்களைக் கங்கையைச் சடையில் சேர்த்தார்
தேவர்கள் வாழ்க்கையின் இடர்கள் தீர
அங்கையற் கண்ணியும் தானு மாக
ஆதிமந் திரத்துளே அமர்ந்தி ருந்த
துங்கமா பொருளினைத் துலக்க வந்து
தும்பிக்கைப் பிள்ளையாய்த் தோன்றி நின்றார்
தெங்குபால் தேன்செல்வக் குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகராகத் திகழ்வா ராமே. 1

390. மூலமந் திரப்பிள்ளை மோனப் பிள்ளை
முயற்சிகளை முடிக்கின்ற மூத்த பிள்ளை
நாலுகை தும்பிமுகம் மூன்று கண்கள்
நவசரா சரவயிறு ஞாலம் என்று
சாலவே பெற்றவரை வலம்முன் வந்த
தளிர்மலர்ப் பாதங்கள் தரணி காணச்
சீலநற் சைவர்வாழ் குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகராகத் திகழ்வா ராமே. 2

391. அடங்காத கயமுகனை அடக்கி வைத்தார்
அண்டமெலாந் திருவயிற்றில் அடக்கி வைத்தார்
நுடங்காத சந்திரனை நுடங்க வைத்தார்
நுகர்கின்ற அன்பருக்குள் அடங்கி நிற்பார்
தொடங்காத தொழில்களையும் தொடங்கி நன்கு
தூங்காத ஊக்கத்தால் முடிக்க வல்ல
திடங்கொண்ட செல்வர்வாழ் குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகராகத் திகழ்வா ராமே. 3

392. தீராத கொடுமைகளைச் செய்து வந்த
தீயவரின் கோட்டைகளைச் சிதைக்கத் தாதை
பேரான தேரேறத் தேர்க்கால் தன்னைப்
பிழையாக்கி விளையாடிச் சிரித்த பிள்ளை
ஊரான ஊர்க்கெல்லாம் உயர்ந்த ஊராம்
ஒழுக்கத்தை உயிர்போல நாளும் ஓம்பும்
சீரான திருப்பதியாம் குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகராகத் திகழ்வா ராமே. 4

393. ஆவலுடன் தொழுதுருகும் அன்பர் துன்பம்
ஆதவன்கண் பட்டபனி ஆகச் செய்வார்
ஓவறுசித் திகளருளி உயர்த்த வல்லார்
ஓமென்னும் மந்திரத்தை ஓது வார்க்குக்
காவலராய் இருந்தருளும் கருணை மிக்கார்
கவின்சோலை செறிகாட்சி மாட்சி யாலே
தேவருல கானதிருக் குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகராகத் திகழ்வா ராமே. 5

394. இந்திரன் சிவபூசை இதமாய்ச் செய்ய
எந்நாளும் உதவிவந்த எழிலார் இன்ப
நந்தவனம் நீரின்றி நலிந்து போக
நாயகரே அருளுமென நயந்து வேண்டத்
தந்திரமாய்த் தவமுனிவர் கமண்ட லத்தைத்
தட்டியருங் காவிரியைத் தந்த அண்ணல்
செந்தமிழை வளர்த்துவரும் குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகராகத் திகழ்வா ராமே. 6

395. அன்னநடைக் கன்னியிள வள்ளி தன்னை
ஆறுமுகன் ஆண்டுகொள அருள்பா லித்தார்
முன்னைவினை முடித்தன்பர் முடிவில் லாத
முத்திபெற வருள்செய்யும் முதன்மை யாளர்
பன்னிப்பர மானந்தர் பரவிக் கல்விப்
பணிசெய்யத் துணைசெய்த பரம ஞானி
தென்னைபனை வளமார்ந்த குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகராகத் திகழ்வா ராமே. 7

396. அருவானார் நாம்காணும் உருவு மானார்
அனலோடு புனல்மண்விண் வளியு மானார்
அருமையினை அறிந்தன்போ டருளை வேண்டி
அநுதினமும் கசிந்துருகி அழுவார்க் கெல்லாம்
கருவானார் கருத்தானார் கண்ணு மானார்
கடைசியிலே கடைத்தேறும் விண்ணு மானார்
திருவாளர் பதியாய குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகராகத் திகழ்வா ராமே. 8

397. பீடுறுசெந் தமிழவ்வைப் பிராட்டி வீடு
பேறெய்த வருள்செய்த பேரார் பிள்ளை
ஏடுபுகழ் இராவணனார் இலிங்கம் ஏந்தி
எடுக்கமுடி யாதபடி நிலத்தில் இட்டார்
வீடுதொறும் நாடுபுகழ் வித்த கர்கள்
வெவ்வேறு துறைகளிலே விளங்கி நின்று
தேடரிய சாதனைசெய் குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகராகத் திகழ்வா ராமே. 9

398. தூவிமலர் அயலூரும் தொழுது போற்ற
தொண்டுபல இளையதம்பி தொடர்ந்து செய்யப்
பாவலரும் நாவலரும் பூவில் வைகும்
பாவையரும் பத்தியுடன் பணிந்து வாழ்த்தத்
தேவர்களும் வந்துதலை தாழ்த்திச் செல்லச்
சிவசக்தி யாயவருள் முத்து மாரித்
தேவியுந்தன் அருகிருக்கக் குரும்ப சிட்டிச்
சித்திவிநா யகரருளித் திகழ்வா ராமே. 10

3. குரும்பசிட்டி விநாயகர் பத்து

399. அன்பர்க் கன்பர் யாவருக்கும்
அருள்பா லிக்கும் ஆனைமுகர்
முன்பு துன்பஞ் செய்தகய
முகனின் ஆணவம் அடக்கியவர்
மன்பேர் அகத்திய முனிவர்பிரான்
மகிழ வரங்கள் வழங்கியவர்
இன்பக் குரும்பை நகர்மேவி
இருக்கும் சித்தி விநாயகரே. 1

400. கல்வி கலையில் நன்னடையில்
கடவுள் பக்தி வழிபாட்டில்
செல்வஞ் சேர்க்குந் தொழிற்பாட்டில்
அறங்கள் வளர்க்குஞ் செயற்பாட்டில்
பல்லோர் போற்றும் பண்பாட்டில்
பாங்குறக் குரும்பை நகரோங்க
நல்லா யருள்செய் தமர்ந்தாரே
நந்தி பெற்ற மூத்தவரே. 2

401. பெற்றார் தாமே உலகென்று
பேணி வலம்வந் தவரருளால்
உற்ற ஞானக் கனிபெற்றார்
உருகி நாளும் வழிபட்டுக்
கற்ற பொன்பர மானந்தர்
கல்வி புகட்ட வருள்செய்தார்
வெற்றிக் குரும்பை நகர்மேவி
விளங்கும் சித்தி விநாயகரே. 3

402. மூவர் செய்த கொடுமைகளை
முடிக்கத் துணிந்து வில்லெடுத்துத்
தேவர் வாழ்த்தச் சிவபெருமான்
தேரில் ஏறச் சில்லொடித்தார்
பூவில் மதுவண் டுறையுமெழிற்
பொழில்கள் பொலியுங் குரும்பைநகர்
காவல் செய்து களித்தருளும்
கருணைச் சித்தி விநாயகரே. 4

403. அரிய தவத்துப் பேரழகி
அளவிற் காதல் வள்ளியினை
முருகன் சேர அருளியவர்
முயற்சிக் கெல்லாம் ஒருமுதல்வர்
பருவ மழைபொய் யாதபதி
பஞ்சம் அறியாக் குபேரபுரி
விரிவான் புகழார் குரும்பைநகர்
வீற்றருள் புரியும் விநாயகரே. 5

404. நீரில் நிலத்தில் வளிவானில்
நெருப்பில் நிலவும் நின்மலனார்
வீரம் செல்வம் கல்விகலை
விளங்கும் புகழை வேண்டுபவர்க்(கு)
ஆர வழங்கும் வண்மையினார்
அருந்தேன் பால்சுவைத் தன்மையினார்
பேரார் சைவக் குரும்பைநகர்
பேணும் சித்தி விநாயகரே. 6

405. நில்லா உலகில் நிலைகொள்வார்
நிமலக் கல்வி கலைவல்லார்
பொல்லா வினைகள் போக்கிடுவார்
புண்ணிய வழிகள் ஆக்கிடுவார்
வல்லா ராக வளர்த்திடுவார்
வளங்கள் பலவும் கொழித்திடுவார்
அல்லல் இல்லாக் குரும்பைநகர்
ஆளும் சித்தி விநாயகரே. 7

406. அறிவின் ஆழம் அறிந்திடுவார்
அன்பும் சோதித்(து) அளந்திடுவார்
அறுகால் நெருப்பை அடக்கிடுவார்
அங்குச பாசம் தாங்கிடுவார்
சிறுமை பொறுக்கும் திருவாளர்
தீமை அறுக்கும் அருளாளர்
அறஞ்செய் கின்ற குரும்பைநகர்
அமருஞ் சித்தி விநாயகரே. 8

407. பங்கம் பழிகள் பார்த்தீரே
பாவ வினைகள் தீர்த்தீரா
அங்கச் செந்நீர் கொதிக்கிறதே
யாரை நோக அதிபதியே
எங்கே கோயில் விழாவெங்கே
எங்கே உந்தன் பதியையா
கங்குல் நீக்கித் தந்தருளும்
கதியைச் சித்தி விநாயகரே. 9

408. ஐயா எங்கள் ஆனைமுகா
அல்லல் அநீதி கண்டுமருள்
செய்யா திருத்தல் அழகாமோ
செல்வப் பதியும் விழுமாமோ
சைவம் எங்கே தமிழெங்கே
தருமம் எங்கே தீர்ப்பளிக்கும்
தெய்வம் நீயே குரும்பைநகர்
திகழும் சித்தி விநாயகரே. 10

4. குரும்பசிட்டி ஏசறவு

409. ஆதியே சோதியே ஆனைமா முகச்சித்தி
அண்ணலே அதிதீரனே
ஏதமில் பேதமில் நின்பதி குரும்பையூர்
இராணுவம் கைப்பட்டதோ
பாதகர் பயங்கர முறைகளால் நின்னரும்
பத்தரை வெளியேற்றவோ
நீதியோ நியாயமோ நீயென்ன செய்தனை
நெற்றிக்கண் ணுடைய தேவே! 1

410. பதியான பதியென்று மதிவாணர் போற்றிடும்
பதியுந்தன் பதியல்லவோ
பதியெழுந் தறியாத பழங்குடி மக்களின்
பதிக்குநீ பதியல்லவோ
அதிகாரம் அனைத்தையும் கொண்டவோர் ஐங்கர
அதிபதி நீயல்லவோ
சதிகார வெறியருன் அருளாட்சிப் பதியிலே
தாண்டவம் ஆடலாமோ? 2

411. மதில்மாட மனைகொண்ட வடிவான பதிதன்னை
மதயானை சிதைக்கலாமோ
மதுவூறும் மலர்ச்சோலை மதிப்பொன்றும் அறியாத
மந்திகள் மனையாவதோ
விதியென்றும் முன்வினைப் பயனென்றும் வேதனை
விழிநீரைத் துடைக்கலாமோ
விதியோடு வினைகளின் விளைவையும் வீழ்த்திடும்
விநாயகர் நீயல்லவோ? 3

412. நிதியரே நிமலரே நித்தமும் நெஞ்சிலே
நின்னையே நினைந்தெழுந்தோம்
புதுமலர்த் தாளிணை போற்றியே அன்புடன்
பூசனை புரிந்துவாழ்ந்தோம்
எதுவித குற்றமும் இழைத்ததை அறிகிலோம்
ஏனிந்த இடர்ச்சோதனை
கதிதந்து கதியென்று கழல்வீழ்ந்து பணிந்தாரைக்
காப்பதுன் கடனல்லவோ? 4

413. கட்டுக்க டங்காத கயமுகன் கொடுமைகள்
கட்டுப் படுத்திநின்றீர்
சொட்டைக் கதைமட்டும் சொன்னதற்கே யன்று
தூநிலா வைச்சபித்தீர்
சட்டத்தை மீறியே அட்டகா சஞ்செயும்
சண்டாளர் அநியாயத்தைத்
தட்டியார் கேட்பது நீயன்றி விநாயகா
தனிப்பெருந் தலைவன் நீயே! 5

414. கன்னிமான் வள்ளியும் கந்தனும் சேரவே
கருணைநா டகம்புரிந்தீர்
சொன்னவா றிந்திரன் தூயபூ சைமலர்ச்
சோலையைச் செழிக்கவைத்தீர்
மன்னுபேர் குரும்பையூர் மக்களை வெளியேற
வைத்ததேன் காரணத்தை
இன்னமும் அறிகிலோம் என்னநின் நாடகம்
ஏரம்ப மூர்த்தியாரே. 6

415. வானிலே மண்ணிலே நீரிலே நெருப்பிலே
வளியிலே கலந்தபோதும்
தானென நின்றவை தம்மையும் ஆள்கிறீர்
தந்திமா முகத்தண்ணலே
ஞானமும் கல்வியும் நல்கியே குரும்பைநல்
நகரினை வளர்த்தெடுத்தீர்
போனதோ கண்டவர் பூரித்த வளர்ச்சிகள்
புகழ்ச்சிகள் யாவும் ஐயா! 7

416. குற்றமில் லாத்தவக் குறுமுனி தன்தலை
குட்டியே வணங்கவைத்தீர்
சொற்றமிழ் அவ்வையைத் துன்னருங் கயிலையில்
தூக்கிவைத் தருள்புரிந்தீர்
பற்றுடன் நாள்தொறும் சுற்றியுன் கோயிலைப்
பணிந்தவர் பதியை இன்று
வெற்றரை யாக்கிநீ ரும்வெளி யேறினீர்
விநாயகா என்ன கூத்தே! 8

417. தந்தைதாய் உலகென்று சான்றாக வலம்வந்து
தத்துவக் கனியைப்பெற்றீர்
சிந்தைசெய் யாதுதேர் ஏறிய தந்தையைச்
சிந்திக்கச் செய்யவைத்தீர்
நந்தலில் லாப்புகழ்ச் செந்தமிழ்க் குரும்பைமா
நகர்வீழ்ச்சி நம்பவொண்ணா
விந்தையே எந்தையே விநாயகா வீணரை
விட்டுப்பி டிப்பதென்னே? 9

418. ஊரென்ன உலகென்ன உடலென்ன உயிரென்ன
உணர்வென்ன உறவென்னவோ
சீரென்ன பேரென்ன தொழுதுநாம் செய்கின்ற
திருவிழாச் சிறப்பென்னவோ
ஏரென்ன தொழிலென்ன போரென்ன பகையென்ன
எல்லாமே எனக்குநீயே
வேராக நெஞ்சிலே விநாயகா நீயூன்றி
வீற்றிருந் தருள்கின்றாயே! 10

5. புன்னையம் பதிகம்

419. உலகினில் அமைதி காண
ஒற்றுமை உணர்வு பேண
நலமினி தோங்கி யாள
நானிலம் மகிழ்ந்து வாழப்
புலவர்கள் புகழ்ந்து பாடும்
புன்னையங் கடவை கூடும்
திலகநற் சித்திப் பிள்ளை
திருவடி போற்றி செய்வாம். 1

420. நன்னெறி நீதி ஈழ
நாட்டினில் விளங்கி ஆளப்
புன்னெறி யாளர் செய்ய
போக்கினைத் தழுவி யுய்ய
மன்னெறி மலரக் காணும்
புன்னையங் கடவை பேணும்
இன்னருட் சித்திப் பிள்ளை
இணையடி போற்றி செய்வாம். 2

421. செந்தமிழ் அன்னை ஆட்சி
செய்திட எமக்கு மாட்சி
வந்திட வந்து வந்து
வாழ்வினில் மிகவும் நொந்து
வெந்தவர் தினமும் ஆவும்
புன்னையங் கடவை மேவும்
செந்திருச் சித்திப் பிள்ளை
சீரடி போற்றி செய்வாம். 3

422. வலிமைகள் தமிழர் பெற்றும்
வளர்கலை நிரம்பக் கற்றும்
உலகினில் ஓங்கி என்றும்
உரம்பெற வேண்டு மென்று
கலைநலத் தேரைக் கொண்ட
புன்னையங் கடவை கண்ட
பொலிமுகச் சித்திப் பிள்ளை
பூவடி போற்றி செய்வாம். 4

423. கல்வியுங் கலையும் வேண்டிக்
கவலையில்லாத வாழ்வும்
செல்வமும் சிறப்பும் வேண்டித்
திருப்பணி மனமும் வேண்டி
நல்லெழில் மண்ட பத்தை
நாட்டிட அருள்வி தைத்த
வல்லநம் சித்திப் பிள்ளை
வளரடி போற்றி செய்வாம். 5

424. முதல்முதல் வந்த பிள்ளை
முழுமுதல் ஞானப் பிள்ளை
இதமுடன் வேண்டும் யாவும்
எளிதினில் அருளும் பிள்ளை
பொதுநலத் தொண்டர் ஏற்றும்
புன்னையங் கடவை போற்றும்
புதுமைசெய் சித்திப் பிள்ளை
பொருளடி போற்றி செய்வாம். 6

425. தன்னலம் நீக்கும் பிள்ளை
சரிசமம் ஆக்கும் பிள்ளை
முன்னெழுந் தருளும் பிள்ளை
முயற்சிகள் காக்கும் பிள்ளை
தென்னையும் பனையும் சார்ந்த
புன்னையங் கடவை சேர்ந்த
மன்னெழிற் சித்திப் பிள்ளை
மாணடி போற்றி செய்வாம். 7

426. வஞ்சகம் நீக்கித் தீண்டும்
வல்வினை போக்கி ஆண்டு
நெஞ்சினில் இருக்கும் பிள்ளை
நினைக்கமுன் அருளும் பிள்ளை
தஞ்சமென் றடைவார் ஓங்கும்
புன்னையங் கடவை தாங்கும்
குஞ்சரச் சித்திப் பிள்ளைக்
குருவடி போற்றி செய்வாம். 8

427. அறிவினை விரிக்கும் பிள்ளை
அன்பினைப் பெருக்கும் பிள்ளை
நிறைவினை அளிக்கும் பிள்ளை
நின்றெமை யாளும் பிள்ளை
செறிபயிர்ச் செய்கை மேவும்
புன்னையங் கடவைத் தேவர்
அறிவறி சித்திப் பிள்ளை
அருளடி போற்றி செய்வாம். 9

428. ஐயனே பாரென் பார்க்கும்
அப்பனே காரென் பார்க்கும்
மெய்யனே கதியென் பார்க்கும்
விநாயகா துணையென் பார்க்கும்
உய்யவே யருளிக் கொற்றப்
புன்னையங் கடவை யுற்ற
செய்யதேர்ச் சித்திப் பிள்ளை
திருவடி போற்றி செய்வாம். 10

6. நுணாவில் மணங்குணாய் விநாயகர்

429. தலையானார் உலகந்தாய் தந்தை யென்றே
தான்சுற்றி வந்துகனி தகவே பெற்றார்
வலுவான கயமுகனின் மலத்தைப் போக்கி
வல்ல எலி யாகவரம் வழங்கி நின்றார்
கலைஞான வித்தகரும் கடிய வூக்கக்
கமக்காரப் பத்தர்களும் கசிந்து வாழ்த்த
மலைவேது மில்லாத நுணாவில் வாழும்
மணங்குணாய் விநாயகரை வணங்கு வாமே. 1

430. நிலையாக ஊழியிலும் நிற்க வல்லார்
நினைந்துருகும் அடியவரின் நெஞ்சில் உள்ளார்
தலையான தவமுனிவர் தலையிற் குட்டித்
தாழ்ந்துபணிந் தேத்தவரந் தந்து நின்றார்
சலியாத பத்தர்தலை சாய்த்து வாழ்த்தத்
தாக்குமிடர் களைந்துவள நுணாவில் சார்ந்த
மலைவேது மில்லாத மணங்கு ணாயில்
வளர்கின்ற விநாயகரை வணங்கு வாமே. 2

431. கதியானார் கருத்தானார் கண்ணு மானார்
காவேரி தனைத்தந்த கலைஞ ரானார்
விதியானார் பதியானார் வேத மானார்
வேதத்து மந்திரமாய் விளங்க லானார்
அதிதீரர் அன்பர்களுக் கன்ப ரானார்
ஆனைமுகர் ஐந்துகரர் ஆர்க்கும் பூசல்
மதுவண்டுச் சோலைவளர் நுணாவில் சார்ந்த
மணங்குணாய் விநாயகரை வணங்கு வாமே. 3

432. எங்முள்ளார் என்றுமுள்ளார் எல்லாம் வல்லார்
இணையில்லார் துணையையிடப் பாகம் வைத்தார்
சங்கரனார் புரம்மூன்றைச் சங்க ரிக்கத்
தானிவர்ந்த தேர்தன்னைத் தடுத்து நின்றார்
ஐங்கரனார் அங்குசபா சங்க ளாலே
ஆயமலம் மூன்றினையும் அகற்று விப்பார்
தங்கியுள்ளார் சான்றோர்வாழ் மணங்கு ணாயில்
சார்ந்தவரின் தாள்வணங்கின் தழைக்க லாமே. 4

433. வானகத்துக் கப்பாலும் வளர்ந்தி ருப்பார்
வையகத்துச் சேரியிலும் மகிழ்ந்தி ருப்பார்
ஈனமனச் சந்திரனை இழிவு செய்தார்
இதமான இந்திரனுக் குதவி செய்தார்
ஊனதற்கும் உயிருக்கும் உய்வு நல்கும்
ஓங்கார மந்திரமாய் உள்நிற் கின்றார்
தேனிகர்க்கு மினியவர்வாழ் மணங்கு ணாயில்
திகழ்கின்றார் தினமுருகிச் சேவிப் பாமே. 5

434. நலமான பசுக்களயற் குளத்தை நாடும்
நாகரிக மயிற்கூட்டம் நடன மாடும்
கலவாயும் குயிலோடு போட்டி போடும்
களிப்போடு கிளிகள்பல கதைகள் சொல்லும்
பலகாட்சி மத்தியிலே பத்தர் நாளும்
பரவிவர விநாயகரும் அருள்பா லித்து
மலர்ச்சோலை வளம்மலிந்த மணங்கு ணாயில்
மகிழ்ந்திருப்பார் அவரடிகள் வணங்கு வாமே. 6

435. சிலமந்தி தோட்டத்தில் திருடச் செல்லும்
தெரிந்துசுவைப் பழந்தேடி அணில்கள் தின்னும்
நிலமங்கை வயல்களிலே நெல்வ ளர்க்க
நெடுவானம் மழைபெய்யும் நிமித்தம் பேணும்
வலம்வந்து பத்தர்குழு வாழ்த்திப் பாட
மகிழ்ந்தருளி மணங்குணாய்ப் பதியில் வைகும்
கலைஞானி விநாயகரைக் கண்ணால் கண்டு
கசிந்துருகி வணங்கிவரின் கதியுண் டாமே. 7

436. செவ்வானம் மாலையிலே சித்தி ரங்கள்
சீராக வரைந்திறைவர் சிறப்புக் காட்டும்
வெளவாலுக் கிலுப்பைமரம் விருந்து வைக்கும்
வான்மதியும் வாயூற மறைந்து பார்க்கும்
இவ்வாறே இயற்கையுடன் இயைந்த செல்வர்
எரிமண்வான் வளிநீரா யிருக்கும் ஏந்தல்
வெவ்வேறே வினைபெருக்கும் மணங்கு ணாயில்
வீற்றருளும் விநாயகர்தாள் வீழ்ந்துய் வாமே. 8

437. பணியாத ஆணவத்தைப் பணிய வைப்பார்
பாடாத பத்தர்களைப் பாட வைப்பார்
தணியாத தாகமெலாம் தணிய வைப்பார்
தன்மானத் தமிழினத்தை ஆள வைப்பார்
குணமான வள்ளியினைக் குமர னோடு
கூடவைக்கக் கூத்துகளும் ஆடி நிற்பார்
மணியான காட்சிகளை வழங்கும் இன்ப
மணங்குணாய் விநாயகரை வணங்கு வாமே. 9

438. எல்லாமே ஓரிடத்தில் இருந்த வாறே
இயற்றியருள் பாலிக்கும் இன்ப நாதர்
நில்லாத உலகத்தில் என்றும் நின்று
நிலைக்கின்ற ஆனைமுகர் நெஞ்சில் ஏத்தும்
செல்வாய செந்தமிழர் துயரைத் தீர்த்துச்
செழிப்பான வாழ்வளித்துச் சிறக்க வைப்பார்
மல்லல்சேர் நுணாவிலூர்ப் பதியில் வாய்ந்த
மணங்குணாய் வளர்கின்றார் வாழ்த்து வாமே.10

7. குப்பிளான் கற்பக விநாயகர்

439. ஐயா அருள்நாதா ஆனைமுகா ஐந்துநலக்
கையா கருணைக் கணபதியே - உய்வுறநாம்
விற்பனர்வாழ் பொற்பதியாம் குப்பிளானில் வீற்றருளும்
கற்பகரே கண்டோம் கழல். 1

440. எங்கும் இருக்கின்றார் இன்னல் களைகின்றார்
கங்கில் கலைமேனிக் கற்பகரே - தங்கியெங்கள்
வல்ல பதிகுப்பி ளான்வளர வாழ்கின்றார்
நல்ல தவஞ்செய்தோம் நாம். 2

441. ஆதி சிவசத்தி ஆனைமுகப் பிள்ளையரே
கோதிற் பதிகுப்பி ளான்கோயில் - வேத
ஒலிகேட் டுவந்தருள்வீர் ஓங்காரம் கண்டு
தலைசாய்க்க நல்லடியார் தாம். 3

442. பெற்றவரைச் சுற்றிவந்து பேரார் கனிபெற்ற
கற்பகரே ஞானக் கலைமணியே - பற்றுடனே
நின்னையும்நாம் சுற்றி வலம்வந்தோம் நெஞ்சுருகி
மன்னுகலை ஞானம் வர. 4

443. தற்பெருமைச் சூரன் தலைகொய்தே வானோர்க்குப்
பொற்புறுவாழ் வீந்து புகழ்பெற்ற - கற்பகரே
நாளும் நினைவணங்கும் நல்லடியார் வேண்டுவதும்
ஆளும் அரசுரிமை யாம். 5

444. சற்குருநீ தாங்கும் தலைவன்நீ குப்பிளானின்
கற்பகரே எங்கள் கடவுள்நீ - நெற்பயிரில்
உள்ள களைகள்போல் ஊடாடி ஊறுசெய்யும்
கள்ள மனத்தவரைக் காண். 6

445. தென்னை மரம்போலத் தீதற்றார் கற்பகரே
நன்மை பலசெய்வார் நாள்தோறும் - நின்னருளால்
சித்திரமா தேரைச் சிறப்பாகச் செய்வித்த
பத்தர்களும் அன்னவரே பார். 7

446. தேரேறி நீயருளும் சீரதனைக் கற்பகரே
நீரூறும் கண்களுடன் நேர்காண - பாரெல்லாம்
பத்தியுடன் சேர்ந்தெழவே நின்பதியும் காட்சிதரும்
புத்துலகம் போலப் பொலிந்து. 8

447. வரிசையிலே பத்தர் வடக்கயிறு பற்றும்
பரிசை நெரிசலிலே பார்த்தல் - பரவசமே
ஊர்க்கோலம் ஒன்றுக்கும் கற்பகரே இல்லையுந்தன்
தேர்க்கோல மேன்மைத் திறம். 9

448. போற்றி அருளுகநின் பொன்னார் திருவடிகள்
போற்றி பொலிந்தருளும் போதக்கண் - போற்றி
அருளுகவே குப்பிளான் கற்பகரின் ஐந்து
கரங்களும்நாம் காணக் கதி. 10

8. குப்பிளான் சோதி விநாயகர்

449. வேத நாயகர் சூரரை வீழ்த்த
ஓது மந்திரத் துள்நின்று பெற்ற
நாதர் குப்பிளான் நற்பதி நாடி
சோதி யாயுளர் தொழுதுய்ய நாமே. 1

450. ஆதி நாயகர் ஆனைமு கத்தார்
தீது செய்தவ சுரனைத் தீர்த்தார்
கோதி லாப்பதி குப்பிளான் நாடி
சோதி யாயுளர் தொழுதுய்ய நாமே. 2

451. நாத நாயகர் ஞானமு தல்வர்
தாதை தேரினைத் தாழ்த்திய பிள்ளை
வேதம் ஓதிடும் குப்பிளான் மேவி
சோதி யாயுளர் தொழுதுய்ய நாமே. 3

452. நீதி செய்திரு நீள்கர முள்ளார்
சேதம் சந்திர தேவர்க்குச் செய்தார்
சீதச் சோலைகொள் குப்பிளான் சேர்ந்து
சோதி யாயுளர் தொழுதுய்ய நாமே. 4

453. மோதி ஆணவம் மூசிகஞ் செய்வார்
மோத கந்தெங்கு முக்கனி கொள்வார்
ஈதலில் வல்ல குப்பிளான் எய்திச்
சோதி யாயுளர் தொழுதுய்ய நாமே. 5

454. வேதக் கண்ணுதல் விளங்குமு கத்தார்
போத மாங்கனி போட்டியிற் பெற்றார்
சூதில் லாப்பதி குப்பிளான் தோன்றிச்
சோதி யாயுளர் தொழுதுய்ய நாமே. 6

455. தூது சென்றுதன் சுந்தரத் தம்பி
தீதில் வள்ளியைச் சேர்ந்திடச் செய்தார்
காத லார்பதி குப்பிளான் காத்துச்
சோதி யாயுளர் தொழுதுய்ய நாமே. 7

456. ஓது மந்திரம் ஓமில் இருப்பார்
பூதம் ஐந்திலும் நின்றுபு ரப்பார்
பேத மில்பதி குப்பிளான் பேணிச்
சோதி யாயுளர் தொழுதுய்ய நாமே. 8

457. மூது ரைத்தமிழ் அவ்வைக்கு முத்தி
வாத மின்றி வழங்கிய வள்ளல்
மாத வச்செந்தி நாதையர் மண்ணில்
சோதி யாயுளர் தொழுதுய்ய நாமே. 9

458. சாதி யற்றவர் சாத்திரம் பாரார்
வீதி ஓரமும் வீற்றிருந் தாள்வார்
ஏதமில் குப்பி ளானூர் இலங்கும்
சோதி விநாயகர் தூவடி போற்றி. 10

9. அனலைதீவு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார்

459. உனகன்[1]கெட ஓங்கார
மந்திரத்தில் உதித்த பிள்ளை
அனவரதம் தொழு மடியார்
அல்லல்களை அழிக்கும் பிள்ளை
அனலைமகா கண பதியாய்ப்
பெரியபுலம் அமர்ந் தருள்வார்
வினையகலும் அவர் மலர்த்தாள்
மிகவிரும்பித் தொழுப வர்க்கே. 1

460. முனையுமிருள் மலம் முடிக்க
அவதரித்த மூத்த பிள்ளை
கனைகடலின் இசை விரும்பிக்
கடல்கடந்து வந்த பிள்ளை
அனலைமகா கண பதியாய்ப்
பெரியபுலம் அமர்ந் தருள்வார்
மனைநிறையும் அவர் மலர்த்தாள்
வாழ்த்திவரும் அன்ப ருக்கே. 2

461. முனிவர்களும் தேவர்களும்
மனிதர்களும் முதல் வணங்கும்
கனல்புனல்விண் காற்று மண்ணில்
கலந்துமவை கடந்த பிள்ளை
அனலைமகா கண பதியாய்ப்
பெரியபுலம் அமர்ந் தருள்வார்
இனியனவே யாவு மவர்
இணையடிகள் பணிப வர்க்கே. 3

462. இனமிழிவுற் றலைக்கழிந்த
இமையவர்க்கு வாழ் வளித்தார்
பனைதென்னை வளர்ந் தோங்கிப்
பயனளிக்கும் பரிசு மிகும்
அனலைதிகழ் பெரியபுலம்
அருளுமகா கண பதிதாள்
தினமுருகித் தொழுபவரைச்
சேர்ந் தணைவாள் திருமகளே. 4

463. முனர்தாதை ஏறிய தேர்
முறித்து விளை யாடியவர்
கனிமரப்புள் ளின வோசை
கடலோசை தனைப் பழிக்கும்
அனலைதிகழ் பெரியபுலம்
அருளுமகா கண பதிதாள்
மனமுருகித் தொழுபவரை
வந்தடைவாள் கலை மகளே. 5

464. துனியறவே கண்ணபிரான்
துதிக்க அருள் செய்த பிள்ளை
பனிமலர்த்தேன் பருகுதற்கு
வண்டினங்கள் படை யெடுக்கும்
அனலைதிகழ் பெரியபுலம்
அருளுமகா கண பதிதாள்
குனிதருநல் லடியவர்க்குக்
குணமாகும் நாள் கோளே. 6

465. தினைவனத்தில் வள்ளியுடன்
செவ்வேளைச் சேர்த்து வைத்தார்
நனிவிளையும் நன்செய்நில
வளங்கொண்டு நன்மை செய்யும்
அனலைதிகழ் பெரியபுலம்
அருளுமகா கண பதிதாள்
புனையுமன்பர் தமக்குப் புத்தி
வித்தை சித்தி புகழ்வருமே. 7

466. தனைநினைத்த தக்கனுக்குத்
தகுந்தவரம் அளித்த பிள்ளை
தினையளவே நினைத்திடினும்
பனையளவு சேர்க்கும் பிள்ளை
அனலைதிகழ் பெரியபுலம்
அருளுமகா கண பதிதாள்
அனுதினமும் அடைபவரை
நோய் துன்பம் அடையாவே. 8

467. முனிவர்பிரான் அகத்தியரின்
முறைநீரைக் கவிழ்த்த பிள்ளை
மனநலமும் வினைநலமும்
வளர்கல்விச் சிறப்பு முள்ள
அனலைமக்கள் அன்பினிலே
குளித்தருளும் பெரியபுல
முனைவர்மகா கண பதிதாள்
முப்போதும் ஏத்துவமே. 9

468. பனுவல்அவ்வை பத்திமைக்குப்
பரமபதம் அளித்த பரன்
தனிமனிதர் தாமோதர
ஐயர் அன்பை நம்பி வந்தே
புனிதமுறு சங்கரையன்
புலத்தில்மகா கணபதியாய்
மனையிருந்தே பெரியபுலம்
மாறியதாள் வாழியவே. 10

---

1. உனகன் - இழிந்தவன்; இழிந்த செயல்களைச் செய்த கயமுகன்.

10. அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்

469. சோதி யாகநின் றென்றும் துலங்கிடும்
ஆதி யோம்பொருள் ஆனைமு கத்துடன்
போத மாவுருப் பூண்டுள்ள போதிலும்
பேத மில்கும்ப ழாவளைப் பிள்ளையே. 1

470. அரிய பாசமும் அங்குச முங்கொண்டு
கரிய காரியக் கயமுகன் ஆணவம்
சரியச் சங்கரன் தலைமகன் ஆனது
பெரியதே கும்ப ழாவளைப் பிள்ளையே. 2

471. உற்ற மாதவம் ஓங்கும் அளவையூர்
பற்றி நின்னடி பண்பும் ஒழுக்கமும்
நற்ற மிழ்க்கலை ஞானமும் கல்வியும்
பெற்றதே கும்ப ழாவளைப் பிள்ளையே. 3

472. சீரு லாவிய சோழன் திருமகள்
மாரு தப்புர வீகவல் லிக்குநோய்
தீர வந்தருள் செய்யத் திசையெலாம்
பேரெழு கும்ப ழாவளைப் பிள்ளையே. 4

473. மாசு நீங்கவும் வாழ்வொளி தாங்கவும்
பூசை காண்பது புண்ணிய மென்றநல்
ஆசையால் அடி யார்கள் அனுதினம்
பேசுவார் கும்ப ழாவளைப் பிள்ளையே. 5

474. வீணிலே திரி வாரும் விரும்பியே
காணுவார் கண்டு கண்டு கசிந்துளம்
ஏணிழந்து[1] பின் என்றுமுன் தாள்களே
பேணுவார் கும்ப ழாவளைப் பிள்ளையே. 6

475. நூறு நூறுவன் துன்பங்கள் நோகவே
கீறி நெஞ்சைக் கிழிக்கின்ற போதிலும்
ஆறி அன்பர் வணங்கி அருள்பெறும்
பேறுளார் கும்ப ழாவளைப் பிள்ளையே. 7

476. வழிவழி எங்கள் முன்னவர் வாழ்ந்தமண்
அழகுறத் தமிழ் ஆண்டு வளர்ந்தமண்
அழிய முன்னதை மீட்க முனைவது
பிழையதோ கும்ப ழாவளைப் பிள்ளையே. 8

477. கேடு நீங்கவும் கேளலர்[2] வீழவும்
ஈடில் நன்மைகள் எய்திநாம் வாழவும்
நாடு வேண்டும் நமக்கென நற்றமிழ்
பீடுறக் கும்ப ழாவளைப் பிள்ளையே. 9

478. உரிய வானவர் ஊறு களைந்தனை
பருகிப் பால் அன்பர் பாவங்கள் ஏற்றனை
உருகி வந்துனை யாமும் வணங்கினோம்
பெருமை சேர் கும்ப ழாவளைப் பிள்ளையே. 10

---

1. ஏண் - செருக்கு
2. கேள் - உறவு; கேள் அலர் - உறவு கொள்ளாத பகைவர்

11. மானிப்பாய் மருதடி விநாயகர்

479. மானிப்பாயில் மருதநீழல்
மகிழ்ந்திருக்கும் விநாயகா
வானும்வந்து மண்ணைமுந்தி
வாழ்த்தி வணங்கும் மன்னவா
ஊனுமுயிரும் உணர்வுமெங்கள்
ஊரும்உலகும் நின்னதே
ஆனவாழ்வை அருளியெம்மை
ஆண்டுகொள்ள வேண்டுமே. 1

480. தநதைதாயர் உலகமென்று
தாரணிக்குக் காட்டவே
சிந்தைசெய்து சுற்றிவந்து
செழும்பழத்தைப் பெற்றனை
அந்தரங்கள் தீர்த்துநல்ல
அமைதிகாண அருளுவீர்
மந்திரத்துள் நின்றுதித்த
மானிப்பாயின் வள்ளலே. 2

481. கொடியசூரன் ஆணவத்தைக்
கொம்பொடித்து வீழ்த்தினீர்
நடலைபோக்கி வானவர்க்கு
நல்கினீர்நல் விடுதலை
வடிவுகாட்டி மானிப்பாயில்
வளருகின்ற வாரணா
விடிவுவேண்டும் ஆண்டதமிழர்
மேன்மைமீண்டும் எய்தவே. 3

482. மறைகள்நான்கில் நிறைந்தமூல
மந்திரத்தில் இருந்துநம்
இறைவர்சிந்தை செய்தவடிவில்
எழுந்துவந்த பிள்ளையே
அறிஞர்வாழும் மானிப்பாயில்
அருளுமானை அண்ணலே.
முறையிலாட்சிச் சிறையிற்சிக்கி
முருகுத்தமிழர் தவிக்கவோ? 4

483. அரியவள்ளி அழகைமுருகன்
ஆண்டுகொள்ள அருளினீர்
விரியும்வேத வியாசர்வாக்கை
விளங்கும்வகையில் எழுதினீர்
மருதநிலத்து மானிப்பாயின்
மாமுகத்து மாதவா
உரிமைவேண்டும் உன்னையேத்தும்
உத்தமர்க்கும் அருள்கவே. 5

484. தேவர்கோனின் பூசைச்சோலை
செழிக்கநன்னீர் வழங்கவே
காவலற்ற முனிவர்கோனின்
கமண்டலத்தை வீழ்த்தினீர்
மேவியான்ற மானிப்பாயில்
வீற்றிருக்கும் விநாயகா
ஆவியன்ன அன்புத்தமிழை
ஆட்சியேற்றி யருள்கவே. 6

485. பவத்தைநீக்கிப் பத்தர்க்கேற்ற
பதங்கள்நல்கும் வித்தகா
தவத்தில்வல்ல அகத்தியர்தன்
தலையிற்குட்ட வைத்தவா
சிவத்தில்வல்ல மானிப்பாயில்
திகழ்ந்திருக்கும் அத்தனே
குவித்ததுன்பச் சுமையைநீக்கு
குனிந்தவாழ்வை நிமிர்த்தவே. 7

486. வல்லவீரன் இலங்கைமன்னன்
வணங்குமாத்ம லிங்கத்தை
மெல்லமண்ணில் ஊன்றவைத்து
வேந்தன்வீரம் சோதித்தீர்
கல்வியோங்கும் மானிப்பாயைக்
காவல்செய்யும் விநாயகா
அல்லல்தீர்த்துன் அன்பர்வாழ்வில்
அமைதிகாண அருள்வையே. 8

487. பாதகத்து முப்புரத்தர்
படையைவீழ்த்த எண்ணியே
தாதைகாலை வைத்ததேரைத்
தாழ்த்திநின்ற தனயனே
மாதவத்து மானிப்பாயில்
மகிழ்ந்தருள்செய் தேவரீர்
தீதில்லாத தமிழர்வாழ்வைச்
சிறக்கச்செய்ய வேண்டுமே. 9

488. அண்டம்யாவும் அடங்குமூழிக்
காலம் உயிர்கள் அனைத்தையும்
கொண்டுவயிற்றில் குலவிக்காக்கும்
கூர்ப்புக்கொள்கைக் கூத்தரே
தொண்டரேத்த மானிப்பாயில்
துலங்குந்தும்பிக் கையரே
அண்டியுந்தன் அடியில்வீழ்ந்தோம்
அருள்தந்தெம்மை யாள்கவே. 10

12. பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்

489. அற்புதம் கண்டேன் நற்பயன் விளைக்கும்
ஆனை முகத்து மன்னவர் செய்யும்
விற்பன ஆட்சி மேன்மையும் கண்டேன்
விநாயகா என்றே விதிர்ப்புற மேனி
பொற்கழல் அடியிற் குப்புற வீழ்ந்தேன்
பொய்ம்மைகள் மிகுந்த என்னையும் புதுக்கிக்
கற்பனைக் கெட்டாப் பிள்ளையார் பட்டிக்
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 1

490. முற்பிறப் புற்ற தீவினை தானோ
மூத்தவர் சொல்லைக் கேளாத தாலோ
அற்பர் இயற்றும் அநீதிகள் தாமோ
யாவும் இழந்த அகதிக ளோடு
சொற்பதம் கொள்ளாச் சோகவெள் ளத்தில்
சுழன்றுழன் றாலும் துயர்விடு நெஞ்சே
கற்சிலை வண்ணப் பிள்ளையார் பட்டிக்
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 2

491. உலகெலாம் பெற்றோர் எனவே சுற்றி
உன்னத ஞானச் சுவைக்கனி பெற்றார்
மலைவுறு சூரன் வலிமையை அழித்தார்
வானவர் மகிழும் வாழ்க்கையை அளித்தார்
அலைவுறும் அகதி அடியவ ருக்கும்
ஆதர வளித்துத் தண்ணருள் தந்து
கலைவளம் செழிக்கும் பிள்ளையார் பட்டிக்
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 3

492. வல்வினை போக்கும் வரங்களைத் தருவார்
வலிதா யத்தில் கன்னியர் இருவரை
நல்லருள் புரியத் திருமணஞ் செய்து
நரரும் சுரரும் வாழ்த்த மகிழ்ந்தார்
அல்லலை நீக்கி ஆற்றா தலையும்
அகதிகள் தமக்கும் அருட்கரம் நீட்டிக்
கல்லெழிற் கலைமலி பிள்ளையார் பட்டிக்
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 4

493. அந்தமில் இன்பச் செந்தமிழ் வளர்த்த
அகத்திய முனிவரின் கமண்டல மதனை
விந்தைகொள் காக வடிவினில் வந்தே
வீழ்த்திக் காவிரி தந்தே இந்திரன்
நந்த வனத்தைச் செழிக்கச் செய்த
நாடக நாதர் நாடிலா விந்தக்
கந்தலும் வாழப் பிள்ளையார் பட்டிக்
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 5

494. பதம்பெறும் பக்குவப் பசுவெனும் வள்ளி
பாரினில் வந்து பதியினை அடைய
இதமுடன் அருளிய ஏரம்ப நாதர்
இம்மை மறுமை இடர்களை நீக்கும்
அதிபர் அங்குச பாசக் கலைஞர்
அலையும் எமக்கும் அருட்கண் காட்டிக்
கதியினைத் தந்து பிள்ளையார் பட்டிக்
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 6

495. பாதையில் இருப்பார் பட்டியில் இருப்பார்
பகுதிகள் விகுதிகள் பாராஆயினும்
தாதை இவர்ந்த தேரினைத் தாழ்த்தியும்
தன்னருந் தகுதியை நாட்டிட வல்லார்
ஆதலின் தமிழரும் உரிமைகள் எய்த
ஆவன செய்தே அடியினில் வீழ்ந்து
காதலர் ஏத்தும் பிள்ளையார் பட்டிக்
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 7

496. வீணரைப் போற்றும் மின்மினிக் கூட்டம்
விதிகளை மீறுங் கொடுஞ்சதிர் ஆட்டம்
ஆணவ ஆட்சியில் ஆதிக் குடிகள்
அகதிக ளாகி அல்லலுற் றலைவர்
மாணுறும் தன்னருள் மகிமையைக் காட்டி
மன்னுயர் சைவ நீதியை நாட்டி
காணரும் கலைதிகழ் பிள்ளையார் பட்டிக்
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 8

497. அருந்தமிழ் அவ்வை அன்பினைப் போற்றி
அத்தனின் திருவடி நீழலை ஈந்தார்
திருவீ சர்திகழ்ந் தின்னருள் பரப்ப
திசை புகழ்கலைஞர் இசைநிதம் பாட
மருதங் குடியரும் வாடா மலரும்
வாழ்த்தநல் வரங்கள் அடியார்க் கருளும்
கருதரும் முதல்வர் பிள்ளையார் பட்டிக்
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 9

498. எண்ணரும் அடியார் சதுர்த்தி விழாவை
இதமுறக் கண்டு பதம்பெற வரவே
தண்ணருள் பரப்பி அவர்வினை யாவும்
தாங்கிடும் பிள்ளை தாளிணை போற்ற
விண்ணவர் தாமும் விரைந்தெழு வார்கள்
விடிவினை வீடில் அன்பர்க்கும் தந்து
கண்ணிகர் கணபதி பிள்ளையார் பட்டி
கற்பக விநாயகர் காத்தருள் வாரே. 10

13. திருச்சி மலைக்கோட்டை மாணிக்க விநாயகர் அகவல்

499. அகிலம் அறிந்து தொழுதற் கரியவர்
தகைசார் சக்தி தன்னுடன் அமர்ந்துவல்
ஆணவக் கயமுகன் அல்லல்கள் அகல
பேணருஞ் சித்திர கூடத்துப் பிரணவ
மந்திர சத்தியை மகிழ்வுடன் நோக்க
வந்த விநாயகர் தாமே வடிவுறச்
சீரும் திருவும் சிறப்புறப் பொலிய
ஊரும் உலகும் உவப்புடன் உலவும்
மாணெழில் திருச்சி மாநகர் அணியாய்ப்
பூணுமன் னற்புதப் புதுமைப் பதியாம்
மலைக்கோட்டை அடியில் மாணிக்க ராகக்
கலைக்கோலம் பூண்டு களித்தருள் கின்ற
காட்சியைக் கண்டேன் கருதருங் கருணை
ஆட்சியை உணர்ந்தேன் அகங்குழைந் தழுதேன்
அமரர்க்கும் அரிய அடிகளில் வீழ்ந்தேன்
சுமைகள் இறங்கிய சுகத்தினில் ஆழ்ந்து
மண்ணீர் விண்வெளி வளிதீ பூதங்கள்
உண்ணின் றியக்கியும் ஓம்பியும் ஆளும்
ஆனை முகத்தரை ஆழ்ந்தகன் றடங்கிய
ஞானச் செல்வரை அங்குச பாசம்
தாங்கியே அன்பர் சங்கடம் தீர்த்தருள்
ஓங்கார மூர்த்தியை ஓதுதற் கரிய
மந்திர மலையை மலைக்கோட்டை அடியின்
விந்தைகொள் மாணிக்க விநாயக வேந்தை
பெற்றவர் தாமே உலகெனப் பேணிச்
சுற்றிவந் தரிய கனிபெற்ற தோன்றலை
ஆணவச் சூரனை அடக்கிய வீரரை
வாணலம் வானோர்க் களித்த வள்ளலை
நலமார் நங்கையர் இருவரை நயந்து

வலிதா யத்தில் மணந்தமாப் பிள்ளையை
தந்தை சிவனை இந்திரன் வணங்க
நந்த வனத்துக்கு நன்னீர் வழங்கக்
காவிய அகத்தியர் கமண்டல நீரைக்
காவிரி யாக்கிய காகக் காளையை
தலையிலே குட்டித் தவமுனி வணங்க
அலகிலா வரங்கள் அளித்த அண்ணலை
அழகிய வள்ளியை அறுமுகன் அடைய
வழிவகை செய்த மன்மத யானையை
மதியா மதியைத் தண்டித்த மன்னரை
அதிமா புரங்களில் அல்லல் புரிந்த
பாதகர் பரிசைப் பாற்றிட எழுந்த
தாதையின் தேரைத் தாழ்த்திய பிள்ளையை
இலிங்கத்தை நிலத்தில் இருத்தி இராவணன்
கலங்கிடக் கண்டு களித்த வம்பரை
அல்லும் பகலும் தொழுத அவ்வையின்
தொல்வினை தீர்த்த தும்பிக் கையரை
நம்பி திருமுறை நலமுறத் தொகுத்தே
அம்புவிக் களிக்க அருள்புரிந் தவரை
ஊழியில் உயிர்களை உவப்புடன் தமது
பேழை வயிறதிற் பேணுநற் ரூயினை
ஏதமில் அடியார் இடர்களை நீக்க
மாதொரு பாகர் பெற்ற மைந்தரை
கணங்கள் பதியைக் கதிபெற யாவரும்
வணங்குங் கருணை வாரண வடிவை
கல்விக் கடலைக் கலைகளுக் கரசை
செல்வச் சிறப்புக் குரிய தேவரை
முயற்சிகள் முட்டின்றி முடிக்கும் முதல்வரை
உயர்ச்சியை அளிக்கும் ஒப்பில் தலைவரை
வேதம் நான்கிலும் வீற்றிருக் கின்ற
ஆதிப் பொருளை அறிவதற் கரிய
மூலப் பொருளை முத்தியை அளிக்கும்
தூலக் குருவை நேரினில் தொழுதே
போற்றி மலைக்கோட்டை போற்றும் முதலே

போற்றி மாணிக்க மலையே போற்றி
போற்றி நின்றன் திருவடி போற்றி
போற்றி எல்லையில் இன்னருள் போற்றி
போற்றி எந்தன் இன்னல்கள் போக்கி
ஆற்றுப் படுத்தி ஆளாக்கி அருளும்
மாற்ற மில்லா தென்மனக் கோயில்
வீற்றி ருக்கின்ற விநாயகா போற்றி
போற்றி என்றே பணிந்து போற்றி
ஏற்ற இளநீர் இன்னருந் தேனவல்
மோதகம் அமுது முக்கனி பால்பழம்
காத லுடனே படைத்துக் கசிந்து
திருவிளக் கேற்றித் தீந்தமிழ் பாடி
உருகியென் கைகளை உச்சியில் வைத்தே
காக்க காக்கத் தலைநலம் காக்க
காக்க காக்க முகநலம் காக்க
காக்க காக்க புலன்களைக் காக்க
காக்க தோள்களின் வலிமையைக் காக்க
காக்க கைகளின் வண்மையைக் காக்க
காக்க மார்பதன் உறுதியைக் காக்க
காக்கக் கருவாய் எருவாய் காக்க
காக்க கால்களின் நன்னடை காக்க
காக்கக் கல்வி கலைகளைக் காக்க
காக்கச் சிந்தனை செயற்றிறங் காக்க
காக்கச் சொல்லின் இனிமையைக் காக்க
காக்க எழுத்தின் நற்பயன் காக்க
காக்க மனநலம் இனநலம் காக்க
காக்கப் பண்பையும் பயனையும் காக்க
காக்க ஒழுக்க வாழ்வினைக் காக்க
காக்க உலகில் அமைதியைக் காக்க
காக்க நீதி நேர்மையைக் காக்க
காக்க அறமுறை ஆட்சியைக் காக்க
நன்றே காக்க இவ் வுயிரையும் காக்க
என்றே ஏத்தி இறைஞ்சிநின் றேனே. 1

14. திருச்சி மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார்

500. திருச்சி மலைக்கோட்டை உச்சி திகழ்ந்தெம்
மருட்சி அகற்றியருள் மன்னர் - புரட்சியதால்
பெற்றார் உலகென்று பேணிக் கனிசுற்றிப்
பெற்றார் கழல்பேணல் பேறு. 1

501. மந்திரத்துள் நின்றார் மலைக்கோட்டை உச்சிதனில்
வந்தமர்ந்தார் ஆனை வடிவழகில் - சிந்தைசெய்து
பத்தர் தொழுதேத்தப் பாலித் தருள்புரியும்
அத்தன் அவராவ ராம். 2

502. வானத்தின் உச்சி மலைக்கோட்டை உச்சியிலும்
தேனொத்த ஆட்சி திசைவிளங்க - ஞானத்துக்
கூத்தாடும் காட்சியினைக் கண்டுவந்து கும்பிட்டு
வாழ்த்தாத வாயென்ன வாய். 3

503. வானவரும் வந்து வணங்கும் மலைக்கோட்டை
மேனிலையில் வீற்றிருக்கும் வித்தகரை - ஊனுருகிப்
புத்தி துலங்கிடவும் வித்தை விளங்கிடவும்
பத்தர் தொழுவார் பணிந்து. 4

504. பொய்களவு சூது பொருந்தப் பலகொடுமை
செய்த கயமுகனைக் கொய்தவரை - எய்தி
மலைக்கோட்டை உச்சி வணங்குபவர் வையக்
கலைக்கோட்டை ஆள்வார் களித்து. 5

505. வீடணனார் பத்திசெய்ய வேண்டிவந்த மாலவனார்
தேடரிய மேன்மைச் சிலைதன்னை - நாடகத்தால்
மண்ணிற் பதித்தபிள்ளை யாரே மலைக்கோட்டை
விண்ணில் இருந்தருள்வார் வீடு. 6

506. கன்னி இளவள்ளி காதல் முருகனுடன்
மன்னி விளையாட வந்துவழி - சொன்னமதி
மன்னவரே உச்சி மலைக்கோட்டை வாழ்கின்றார்
இன்னருளைப் பெற்றுய்வோம் ஏறி. 7

507. முப்புரங்கள் வீழ்த்த முறுவலுடன் ஏறியதம்
அப்பரின்தேர்க் கால்கள் அசையாத - அற்புதத்தைச்
செய்த கணபதிதான் சீரார் மலைக்கோட்டை
எய்தி அருள்கின்றா ரே. 8

508. உச்சியிலே நின்றால் திருச்சி உலகத்தின்
பச்சையியல் பெல்லாம் படித்திடலாம் - இச்சகத்தில்
உள்ளத் தியல்பறிய உச்சிமலை வீற்றருளும்
பிள்ளைக் கழல்காண்பாம் பேணி. 9

509. மாணிக்கர் ஆக மலையின்கீழ் உள்ளவரே
காணக் கழல்மேலும் காட்டுவதால் - பேணி
அடிமுடிகள் எல்லாமே ஆனைமுகர் என்றே
படியிலுள்ளார் காண்பார் பரவி. 10

15. கோவை இரத்தின விநாயகர்

510. மன்னுமோம் என்னும் மூல
மந்திர வடிவில் வந்து
தன்னிக ரற்ற செல்வம்
தழைத்திடும் கோவை தங்கி
இன்னருள் பரப்பி ஆளும்
இரத்தின விநாய கர்தாள்
மன்னுவர் இன்னல் நீங்கி
மகிழ்வுற வாழ்வ ராமே. 1

511. முயற்சிக்கு முதல்வ ராவர்
முயல்பவர் எய்த வல்ல
உயர்ச்சியின் உச்சி யாவர்
ஊக்கத்தின் ஆக்க மாவர்
இகழ்ச்சியைப் போக்கி நிற்பர்
இரத்தின விநாய கர்நற்
புகழ்ச்சிகொள் கோவை போற்றப்
பொலிந்தருள் புரிவ ராமே. 2

512. ஞாலமே பெற்றோர் என்று
நன்கவர் தம்மைச் சுற்றி
வாலருங் கனியைப் பெற்றார்
மாநகர் கோவை மேவி
ஏலவார் கோயில் கொண்டார்
இரத்தின விநாய கர்தாள்
சாலவே பற்றி வேண்டும்
சரியைகள் செய்துய் வாமே. 3

513. கயமுகன் செருக்கை வென்றார்
கதிநலம் அமரர்க் கீந்தார்
அயர்விலா உழைப்பு மிக்க
அதிபுகழ் கோவை அன்பர்க்(கு)
இயல்பெலாம் காட்டு கின்றார்
இரத்தின விநாய கர்நம்
துயர்கெட வருளி வாழ்வைத்
துலக்குவர் வணங்கு வாமே. 4

514. காற்றுமண் விண்ணீர் தீயில்
கலந்தவை ஆளும் மன்னர்
வேற்றுமை இல்லாக் கோவை
விளங்கியன் பகலாப் பூசை
ஏற்றருள் பாலிக் கின்றார்
இரத்தின விநாய கர்தாள்
போற்றுவர்க் கில்லை நாள்கோள்
பூதங்கள் தொல்லை யாமே. 5

515. அருந்தவ வள்ளி கந்தன்
அருளினில் திளைக்க வைத்தார்
கரந்தரு தொழிலில் வல்ல
கற்பகச் செல்வக் கோவை
இருந்தருள் பாலிக் கின்ற
இரத்தின விநாய கர்தாள்
பொருந்திய பத்தர் வாழ்வு
புதுமலர்ச் சோலை யாமே. 6

516. அந்தமில் வரங்கள் பெற்ற
அகத்திய முனிவர் குட்டித்
தந்தலை வணங்கத் தக்க
சதுர்நட மாடி நின்றார்
இந்திரக் கோவை ஆள்வார்
இரத்தின விநாய கர்நம்
அந்தரம் போக்கி இன்ப
ஆறுதல் அளிப்பா ராமே. 7

517. பாதக அசுரர் மூவர்
பதிகளை வீழ்த்தச் சென்ற
தாதையின் தேரைத் தாழ்த்திச்
சத்திய நடனஞ் செய்தார்
ஏதமில் கோவை உள்ளார்
இரத்தின விநாய கர்தாள்
காதலால் ஏத்து வார்க்குக்
காலனும் அஞ்சு வானே. 8

518. வலிமைகொள் இலங்கை வேந்தன்
வணங்கிடும் இலிங்கம் மண்ணில்
நிலைகொள வைத்த பிள்ளை
நினைந்துகை யேந்து வாருக்
கிலையெனா தீயும் கோவை
இரத்தின விநாய கர்நம்
மலமருள் மாசு நீக்கி
வான்பதம் வழங்கு வாரே. 9

519. கல்வியில் உயர வேண்டில்
கலைகளில் வளர வேண்டில்
செல்வத்தைப் பெருக்க வேண்டில்
செய்தறம் சிறக்க வேண்டில்
இல்லற வாழ்வு வேண்டில்
இரத்தின விநாய கர்தாள்
நல்வினை பெருக்கும் கோவை
நகர்சென்று வணங்கு வாமே. 10

16. செங்காட்டங்குடி வாதாபி கணபதி

520. அங்கம் வேதஞ்சொல் மந்திர மானவர்
எங்கும் உள்ளவர் ஏரம்ப மூர்த்தியர்
கங்கிலாப் புகழ் வாதாபி கணபதி
செங்காட் டங்குடி சேர்ந்தருள் செய்வரே. 1

521. ஆதாரம் ஆகி அண்டத்தைக் காப்பவர்
தீதேதுஞ் செய்யாச் சிறுத்தொண்டர் வல்லமை
வாதாபிப் போரில் வென்றிட வைத்தவர்
பாதார விந்தம் பக்குவம் நல்குமே. 2

522. வானும் மண்ணும் வணங்க வரந்தரும்
கோனவர் கொற்றப் பாசாங்கு சத்தவர்
ஆனை மாமுகர் ஆணவம் போக்கிடும்
ஞான மேனியர் வாதாபி நாதரே. 3

523. உற்ற பெற்றவர் உலகென்று போற்றியே
சுற்றி வந்து சுவைக்கனி பெற்றவர்
கற்றவர் கனி வாதாபி கணபதி
நற்பதம் தரும் யாவர்க்கும் நன்மையே. 4

524. குற்றஞ் செய்தவ சுரனைக் கொன்றதோர்
குற்றம் நீங்கச்செங் காட்டங் குடியினிற்
பெற்ற தந்தையை வணங்கிய பிள்ளையைப்
பற்றின் பாவங்கள் முற்றும்ப றக்குமே. 5

525. அம்பொன் மானிள வள்ளியைத் தன்னரும்
தம்பி சேர்ந்திடத் தந்திரஞ் செய்தவர்
நம்பி நற்றொண்டர் நாளும் தொழுதிடும்
வம்பர் வாதாபி கணபதி வள்ளலே. 6

526. இந்திரன் சிவ பூசை இயற்றவான்
செந்த மிழ்முனி செம்புநீர் ஊற்றியே
கந்தங் குன்றிய சோலைக்குக் காவிரி
தந்த வாதாபி கணபதி வாழ்கவே. 7

527. ஏறு தோள்வலி இராவணன் ஏந்திய
நீறு தாங்கிய இலிங்கம் நிலத்தினில்
தேற வூன்றி யவன்திறம் சோதித்தார்
மாறில் மாவலி வாதாபி மன்னரே. 8

528. மூதுரை அவ்வை முப்போதும் செய்தநற்
காதல் பூசைக்குக் கயிலை அளித்தவர்
தீதில் செங்காட்டங் குடியினைச் சேர்ந்தவர்
வாதாபி கண பதிகழல் வாழ்கவே. 9

529. அல்லல் ஆழ்ந்திடும் அமைதியும் சூழ்ந்திடும்
செல்வஞ் சீரறம் சிறப்புகள் சேர்ந்திடும்
கல்வி யோங்கிடும் வாதாபி கணபதி
வல்ல தாள்மனம் வைத்து வணங்கவே. 10

17. மயிலாப்பூர் செல்வ விநாயகர்

530. காற்றில் கனலில் கலந்தருளும்
கபிலே சுவரர் தொல்பதியாம்
மாற்றம் பலவும் கண்டுவளர்
மயிலாப் பூரில் வானவரும்
கூற்றும் மாயா முனிவர்களும்
குவலய மக்களும் தொழுதேத்தத்
தேற்றித் திருவருள் பாலிக்கும்
செல்வ விநாயகர் தாள்போற்றி. 1

531. அந்தம் ஆதி இல்லாதார்
ஆனை முகத்து வல்லாளர்
சொந்தம் பந்தம் பாராதார்
தொண்டர் நெஞ்சம் பெயராதார்
வந்து தந்தை தாயர்வாழ்
மயிலைப் பதியில் மகிழ்ந்தருளிச்
சிந்தை செய்வார்க் கின்பஞ்செய்
செல்வ விநாயகர் தாள்போற்றி. 2

532. அம்மை அப்பர் உலகென்றே
அவரைச் சற்றி வலம்வந்து
செம்மைக் கனிபெற் றெல்லோர்க்கும்
சிறந்த பாடம் கற்பித்தார்
இம்மை மறுமைப் பயனளிக்கும்
மயிலாப் பூரில் இருந்தெல்லாத்
தின்மை வினையும் தீர்த்தருளும்
செல்வ விநாயகர் தாள்போற்றி. 3

533. தீராக் கொடுமை பலசெய்த
தீய சூரன் திறன்வென்றார்
ஆரா வன்பால் மயிலாக
அன்னை அப்பர் அடிதொழுத
பேரார் மயிலைப் பதிவாழும்
பெருமை சான்ற திருத்தொண்டர்
சீரும் சிறப்பும் பெறவருளும்
செல்வ விநாயகர் தாள்போற்றி. 4

534. சொல்லிற் பொருளில் இருக்கின்றார்
சொல்லச் சொல்ல இனிக்கின்றார்
அல்லல் யாவும் தீர்க்கின்றார்
அருளை அள்ளி வார்க்கின்றார்
வெல்லும் பாசாங் குசமுள்ளார்
மயிலை நகரில் விளங்குகின்றார்
தில்லை நாதர் முதற்பிள்ளை
செல்வ விநாயகர் தாள்போற்றி. 5

535. சூதும் வாதும் மிகச்செய்து
சுற்றிச் சூழும் உலகுக்கு
மோதித் துன்பம் விளைவித்த
முப்புரத் தவரை முடித்தற்குத்
தாதை இவர்ந்த தேர்க்காலை
தாழ்த்தி விளையா டியபிள்ளை
தீதில் மயிலைப் பதிதிகழ்வார்
செல்வ விநாயகர் தாள்போற்றி. 6

536. அத்தி முகத்தர் சித்தியெலாம்
அருளும் வள்ளல் ஆறுமுகன்
வைத்த அன்பால் அழகொளிரும்
வள்ளி மயிலைச் சேர்தற்கு
வித்தை செய்தார் மயிலாப்பூர்
வீற்றிருந் தன்பால் தொழுமடியார்
சித்தம் களிக்க அருள்செய்வார்
செல்வ விநாயகர் தாள்போற்றி. 7

537. கவலை கடந்த அகத்தியரின்
கமண்டல நீரைக் காவிரியாய்
இவரச் செய்தே இந்திரனின்
இறைவர் பூசைக் குதவியவர்
தவமார் மயிலைப் பதியினிலே
தங்கித் தாள்வீழ்ந் துருகியழும்
சிவமார் பத்தர்க் கருள்செய்யும்
செல்வ விநாயகர் தாள்போற்றி. 8

538. எறிக்கும் நீறார் இலிங்கத்தை
இராவணன் கொடுக்கக் கொண்டதனை
இறுக்கி நிலத்தில் வைத்தவனின்
இணையில் வலிமை சோதித்த
கிறுக்கர் மயிலைப் பதிமேவிக்
கேழில் கல்வி கலையோங்கிச்
சிறக்க வருளித் திகழ்ந்திருப்பார்
செல்வ விநாயகர் தாள்போற்றி. 9

539. சொந்தக் கடவுள் எனவுலகம்
சூழ்ந்து வணங்கும் ஐம்பூத
விந்தைக் கடவுள் விக்கினங்கள்
வீழ்த்தும் கடவுள் மயிலைவளர்
தந்திக் கடவுள் தாள்பணிந்து
ததும்பக் கண்ணீர் தொழுமடியார்
சிந்தைக் கடவுள் செயற்கடவுள்
செல்வ விநாயகர் தாள்போற்றி. 10

18. கனடா – ஒன்ராறியோ செல்வமலைப் பிள்ளையார்

தரிசனப் பதிகம்

540. ஒன்றாகிப் பலவாகி ஓம்பொருளாய் என்றென்றும்
நின்றாளும் சிவசத்தி நிதிபதியே நித்தியனே
அன்றுன்னை வீரகத்திப் பிள்ளையராய் அங்குகண்டேன்
இன்றுசித்தி விநாயகராய் இங்குகண்டு நெகிழ்ந்தேனே. 1

541. உள்ளங்கு ழைந்துருக உடல்முழுதும் புளகிக்க
வெள்ளக்கண் ணீர்சொரிய விம்மிக்கை தலைவைத்து
வள்ளல்தாள் வாழ்கவென வாயார வாழ்த்தியெந்தன்
உள்ளத்தில் உள்ளவுன்னைக் கோயிலுள்ளும் கண்டேனே. 2

542. பெருமுகனின் பிழைதீர்த்துப் பிரம்மாவின் குறைநீக்கித்
திருமாலுக் கருள்செய்து தேர்க்காலைப் பொடியாக்கி
அருஞானக் கனிபெற்றுப் பெருஞானி யாய்நின்ற
பெருமான்நீ எனக்கண்டே பேறுற்றேன் விநாயகரே. 3

543. வள்ளியினைத் திருமுருகன் மணஞ்செய்ய வழிசெய்தே
உள்ளமுயர் குள்ளமுனி உவப்பெய்த விளையாடி
தெள்ளுதமிழ் அவ்வைதனைத் திருக்கயிலை சேர்த்துவைத்த
பிள்ளையென்றே கண்டுகொண்டேன் வரசித்திப் பெருமானே. 4

544. முன்னாலே சோலைநதி இன்னோசை சேர்ந்திருக்கப்
பின்னாலே வளவயல்கள் பெரும்பரப்பிற் சூழ்ந்திருக்க
மின்னாரும் பெருங்கோயில் நீமகிழ்ந்து வீற்றிருக்க
என்னாகும் இங்குகுறை எமையாளும் விநாயகரே. 5

545. அங்கிங்கு தானலைந்து கடைசியிலே அகதிகளாய்
இங்குற்றுப் புதுவாழ்வை இயற்றியெழ விழைகின்ற
எங்கட்கென் றருஞ்செல்வ மலைஎழுந்த இதங்கண்டே
அங்கச்செந் நீராட அடிவீழ்ந்தேன் விநாயகரே. 6

546. படிப்பென்ன பட்டமென்ன பதவியென்ன பரிசென்ன
துடிப்பென்ன துணிவென்ன தூங்காத உழைப்பென்ன
பிடிப்பென்ன கலைவாழ்க்கைப் பெயரென்ன நயமாக
வடித்தென்னை வரவேற்கும் வரசித்தி விநாயகரே. 7

547. வீடென்ன வாசலென்ன விட்டெல்லாம் வெளியேறி
ஓடென்றாய் ஓடவிட்டே உதவிசெய்தே வெளியுலகப்
பாடெல்லாம் படிக்கவைத்துக் கடைசியிலே பத்தியுடன்
தேடியுன்னை வரச்செய்தாய் செழுங்கருணை விநாயகரே.8

548. அழகான பிறப்பதனின் பயனொன்றும் அறியாதே
வழுவாழ்க்கை வலைபின்னிப் பெரிதாகி வயதாகிக்
கிழமாகி விழுவார்க்கே உழவாரம் புரிந்தேனை
வழிகாட்டி வரவேற்றீர் விநாயகரே வாழியவே. 9

549. பள்ளவயல் சூழ்ந்துள்ள செல்வமலைப் பதிகண்டேன்
வள்ளல்பிரா னேயுந்தன் கோயிலையும் வலம்வந்தேன்
உள்ளியுடன் அமர்ந்தருளும் உறவுலகும் வழிபட்டேன்
உள்ளொளிபெற் றுயர்ந்துய்ந்தேன் ஒப்பரிய வாழ்முதலே. 10

19. கனடா – ஒன்ராறியோ செல்வமலைப் பிள்ளையார்

550. வல்ல வினைபோக்கி வாழ்வைத் தரவல்ல
செல்வச் சிவலோகம் ஆளும் சிவபெருமான்
அல்லல் அழிக்கவருள் செய்த ஆனைமுகர்
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 1

551. ஒல்லும் வகைபேணான் உண்மை ஒளிகாணான்
தொல்லை தேவர்க்குத் தொடர்ந்து செய்துவந்த
கல்லாக் கயமுகனைக் கடிந்த கணபதியார்
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 2

552. பல்கிப் பெருகுமுயிர் உலகப் படைப்புகளை
நல்கும் கலைவாணர் மலர்வாழ் நான்முகனும்
மெல்கும்[1] வினைசெய்த வித்தை விநாயகனார்
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 3

553. அல்லும் பகலும்பாற் கடல்போல் அருள்செய்வார்
செல்வ மகள்போற்றும் சீரார் திருமாலும்
ஒல்கி[2] அருள்பெற்ற முக்கண் ணுளமூர்த்தி
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 4

554. வல்ல புரம்மூன்றால் அல்லல் புரிவாரைக்
கொல்லக் குணங்கொண்ட குறையில் தாதைதேர்ச்
சில்லைப் பொடிசெய்த தீரப் பெருமானார்
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 5

555. வெல்ல உலகத்தை வேலன் மயிலேற
மெல்லப் பெற்றோரைச் சுற்றி மேலான
வெல்லக் கனிபெற்ற ஞான விநாயகனார்
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 6

556. நெல்லி மொழிவல்லி நிகரில் தவவள்ளி
எல்லை இல்லாத இளவல் அருள்நெஞ்சைப்
புல்ல வழிசெய்த போகப் பிள்ளைதிருச்
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 7

557. நில்லா உலகத்தில் தமிழை நிலைநாட்டிச்
செல்லா நின்றதவச் செல்வர் அகத்தியனார்
மல்கி மகிழவருள் செய்த வாரணர்மா
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 8

558. நல்ல அறிவுரைகள் சொல்லி நன்னடத்தைக்
கல்வித் தமிழ்வளர்த்த அவ்வை திருக்கயிலை
செல்ல அருள்புரிந்த செயல்மா கரத்தர்திருச்
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 9

559. அல்கி[3] ஊழிவர அனைத்துப் படைப்பையுந்தன்
வில்லை வயிற்றினிலே தாங்கி மேலோங்கும்
ஒல்கா[4] வோம்பொருளே ஒன்ரா றியோபோற்றும்
செல்வ மலைக்கோயில் திகழ்வார் காணீரோ. 10

---

1. மெல்குதல் - மென்மையாதல், வலிமை இழத்தல்
2. ஒல்குதல் - குழைதல்
3. அல்குதல் - சேருதல்
4. ஒல்கா - குறைவுபடாத

20. கனடா செல்வமலை சித்தி விநாயகர்

560. தில்லை நாதர் சத்தியுடனே
சித்திர கூடம் சேர்ந்திருந்து
சொல்ல மூல மந்திரத்தைத்
தோன்றி வந்து முன்னின்றீர்
ஒல்லும் புகழார் ஒன்ராறியோவில்
ஒழுக்க சீலர் தொழுதேத்தச்
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயகப் பெருமானே. 1

561. எல்லா வுலகும் எம்மைப்பெற்ற
இணையில் தந்தை தாயென்று
சொல்லிச் சுற்றி வலமாய்வந்து
வணங்கித் தூய கனிபெற்றீர்
எல்லை யில்லா இயற்கைச்சூழல்
எழிலார் இன்பம் கொழிக்கின்ற
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயப் பெருமானே. 2

562. சொல்ல வொண்ணாத் துயரம்விளைத்த
சூரன் வாழ்வைத் துவைசெய்து
அல்லல் இல்லா அமைதிவாழ்வை
அமரர் காண அருள்செய்தீர்
நல்லார் வாழும் பல்கலாச்சார
ஒன்ரா றியோவில் நாகரிகச்
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயகப் பெருமானே. 3

563. நல்ல முயற்சி யாவையுமினிதே
நடத்தி முடிக்கும் நாதன்நீர்
தொல்லை வினையால் தோன்றும்துயரைத்
துடைத்துக் காக்கும் துணையும்நீர்
கல்லின் அணைக்கீழ் கடுகதியருவி
கரைமீறாது சலசலக்கும்
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயகப் பெருமானே. 4

564. எல்லாம் வல்ல சிவபெருமானை
இந்திரன் பூசை செய்திடவே
மல்லற் சோலை மலர்வாடாது
வளரக் காவிரி நீர்தந்தீர்
அல்லல் தீர அடியார்கூடி
அன்பால் உருகித் தொழுதேத்த
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயகப் பெருமானே. 5

565. பல்லோர் வாழ்த்த வலிதாயத்தில்
பாவையர் இருவரை மணஞ்செய்தீர்
சொல்நே ரில்லாச் சந்திரதேவர்
துயரங் கொள்ளத் தண்டித்தீர்
கல்வி கலையிற் கனடாசிறக்கக்
கருணை செய்யும் கருத்தோடு
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயகப் பெருமானே. 6

566. எல்லை யில்லா வலிமைகொண்ட
இராவணன் பெற்ற இலிங்கத்தை
நல்ல பதியாம் கோகரணத்தில்
நாட்டி வைத்த நாதன்நீர்
நில்லா வுலகில் நிலைக்கும்சைவ
நீதியை வளர்க்கும் நிகரில்லாச்
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயகப் பெருமானே. 7

567. தொல்லை செய்யும் துன்னற்கரிய
சூரர் புரங்கள் தொலைத்தற்கு
வில்லை வளைத்துச் சிவனாரிவர்ந்த
விண்ணவர் தேரை வீழ்த்திநின்றீர்
பொல்லா வினைகள் போகப்பத்தர்
போற்றித் தொழவே அருள்செய்து
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயகப் பெருமானே. 8

568. வல்ல வீரர் ஆறுமுகரை
வள்ளி சேர வகைசெய்தீர்
அல்லும் பகலும் அவ்வைதொழவே
அவரைச் சிவனார் அடிசேர்த்தீர்
நல்ல பதவி நாளுமேத்தும்
நமக்கும் நல்கி நலஞ்செய்வீர்
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயகப் பெருமானே. 9

569. நல்ல கனடா நாட்டின்மனித
நேயம் போற்றி நாமுமவர்
செல்லும் நல்ல வழிகள்பற்றிச்
செந்தமிழ் நீதி நெறிமுறையைச்
சொல்லி லன்றிச் செயலிலும்நாட்ட
நின்னருள் வேண்டித் தொழுகின்றோம்
செல்வ மலைவான் பதியில்திகழும்
சித்தி விநாயகப் பெருமானே. 10

21. கனடா-துரந்தை வரசித்தி விநாயகர்

570. ஆதிப் பொருளாய் வளர்கின்றார்
ஆனை முகத்தால் அருள்கிறார்
சோதி வடிவில் படர்கின்றார்
தூவெண் ணீற்றில் சடர்கின்றார்
கோதில் அடியார் உள்ளத்தில்
குலவி அன்பு வெள்ளத்தில்
ஊதித் திளைப்பார் துரந்தையிலே
ஓம்வர சித்தி விநாயகரே. 1

571. மின்னார் சடைகொள் சிவபெருமான்
விண்ணும் மண்ணும் எதிர்கொள்ளும்
இன்னல் தீர மகிழ்ந்தளித்த
இணையிற் பிள்ளை ஆனைமுகர்
முன்னாள் கொடிய கயமுகனை
முடித்தே அமரர்க் கருள்செய்தார்
இந்நாள் எழுந்தார் துரந்தையிலே
இன்வர சித்தி விநாயகரே. 2

572. பெற்றார் தம்மை வலம்வந்து
பேணும் உலகம் அவரென்றே
மற்றோ ருக்குக் காட்டியவர்
மதிமா யானை முகப்பெருமான்
கற்றோர் போற்றக் கச்சியப்பர்
கந்த புராணம் பாடவைத்தார்
வற்றா வளமார் துரந்தையிலே
வளர்வர சித்தி விநாயகரே. 3

573. காக வடிவில் அகத்தியரின்
கமண்டல நீரை ஊற்றியொரு
வேக நதியால் இந்திரனின்
வேதனை தீர்த்த வேழமுகர்
சோகம் நிறைந்த தமிழர்க்குச்
சுந்தர வாழ்வை யளித்தற்கு
வாகுத் துரந்தை நகர்வளர்வார்
வான்வர சித்தி விநாயகரே. 4

574. மந்திரத் துள்ளே மண்டித்தார்
வன்கய முகனை வென்றிட்டார்
சந்திரன் மதியைக் கண்டித்தார்
தாதை தேர்க்கால் துண்டித்தார்
ஐந்து கரங்கள் கொண்டுள்ளார்
அன்பர்க் காலயங் கண்டன்னார்
அந்தரந் தீர்க்கத் துரந்தைநகர்
அருள்வர சித்தி விநாயகரே. 5

575. விழவு வேள்வி பலகாண்பார்
வேண்டும் வரங்கள் தரவல்லார்
அழுவார் தொழுவார் அன்பினிலே
ஆடிக் களித்தே அருள்செய்வார்
அழகு வள்ளி தனைமுருகன்
அணைக்க முன்னாள் துணையானார்
பொழிவார் கருணை துரந்தையிலே
புகழ்வர சித்தி விநாயகரே. 6

576. பாலும் பருப்பும் தெளிதேனும்
பாகும் கலந்து மூதாட்டி
சாலப் படைத்துப் பூசிக்க
சங்கத் தமிழை ஈந்தபிரான்
ஞாலம் வணங்க விண்ணவரும்
நாடிப் போற்ற வரசித்திக்
கோலம் பூண்டார் துரந்தையிலே
குறைவிற் சைவம் தழைத்திடவே. 7

577. பழிபா வங்கள் பொறுத்திடுவார்
பழைய வினைகள் அறுத்திடுவார்
தொழில்கள் இல்லார் தொழில்காண்பார்
துயரில் உழல்வார் துயர்தீர்ப்பார்
விழிநீர் பெருக்க விடமாட்டார்
வேதனைக் கிடங்கள் தரமாட்டார்
அழகார் துரந்தை வரசித்தி
ஐயனின் அருளவ் வாறாமே. 8

578. மாசில் மணிநகை அணிந்திடுவார்
வண்ணப் பொன்முடி சூடிடுவார்
பாசாங் குசங்கள் தரித்திடுவார்
பால்பழம் மோதகம் விரும்பிடுவார்
பூசைச் சிறப்பிற் பொலிந்திடுவார்
புத்தமிழ்க் கலைகளில் திளைத்திடுவார்
தேசம் புகழும் துரந்தையிலே
திகழ்வர சித்தி விநாயகரே. 9

579. சீரார் புத்தி நிறைந்திடவும்
சித்தி பெற்றுச் சிறந்திடவும்
நேரார் வாழ்க்கை கண்டிடவும்
நீதி நியாயம் வென்றிடவும்
பாரோர் ஏற்றப் புலிக்கொடியைப்
பைந்தமி ழீழம் பிறந்திடவும்
வாரார் துரந்தை நகர்வளரும்
வரசித்தி யாரை வணங்குவமே. 10

22. துரந்தை வரசித்தி விநாயகர்

580. ஆனை முகப்பேர் ஐயா துரந்தை மாநகரில்
ஆட்சி புரியும் அப்பா வரசித்திப் பெருமானே
வானில் மண்ணில் நீரில் நெருப்பில் வளியெல்லாம்
வளர்ந்தும் கலந்தும் அளந்தும் இயக்கும் திருவேளே
தேனும் பாகும் அவலும் பாலும் செங்கரும்பும்
செழுங்கனி பலவும் மோதகம் அமுதும் செலுத்திநின்றோம்
மானம் கல்வி செல்வம் வீரம் நோயில்லா
வாழ்வும் ஒழுக்கச் சிறப்பும் புகழும் வழங்குவையே. 1

581. ஆதிக்கும் ஆதி ஆன மந்திரப் பொருளாவீர்
அந்தமில் லாதீர் ஊழியை வென்றும் அரசாள்வீர்
மாதொரு பாகர் சிந்திக்க வந்தே முன்னின்றீர்
வல்லமை பெற்றோர் வழங்கிட வரசித்தி யானீரே
நீதியில் லாத ஆணவச் சூரன் தனைவென்றீர்
நிறைவுற வானோர் வாழ்வுக்கு நிம்மதி நிழலீந்தீர்
காதலில் வந்தோம் கதிதரும் மேன்மைக் கழல்கண்டோம்
கண்ணுக்கு நல்ல காட்சிகள் தந்தீர் தொழநாமே. 2

582. அங்குச பாச ஆயுதங் கொண்டே ஆன்மாக்கள்
ஆணவ முதலாம் அழுக்குகள் போக்கி யருள்செய்வீர்
பொங்குநல் லரவை அரைஞா ணாகப் புனைந்துள்ளீர்
பொன்னுடல் தன்னில் பூநூற் புரியும் தரித்துள்ளீர்
துங்கநால் வேத அரியா சனத்தில் வீற்றிருந்தே
தொழுமடி யாரின் துயர்களைந் தருள்வர சித்தியரே
எங்கணு முள்ள தமிழரின் வாழ்க்கை ஏற்றமுற
இன்னருள் புரியப் பணிவுடன் இன்றே வேண்டுவமே. 3

583. ஆசை யுடன்கண் ணாரக் கண்டு நாமுய்ய
அன்புடன் விஜயக் குமாரர் செய்யும் அலங்காரப்
பூசைச் சிறப்புன் புன்சிரிப் பென்றே பூரித்தோம்
பூரித்த மேனி விதிர்ப்புற ஆர வாரித்தோம்
பாசமும் பற்றும் விளைக்கும் பாவ வினையெல்லாம்
பரிசிழந் தகலப் பரிவுடன் அருளும் பாலித்தீர்
வாச மலர்த்தாள் மாட்சியைக் கண்ட பேரின்பம்
வானத்திற் பெரிது வரசித்தி யாரே வாழ்வீரே. 4

584. ஊரினில் உறவும் உடைமையும் இழந்தோம் ஆனாலும்
உன்னை இழந்தோம் அல்லோம் உள்ளம் ஒளிர்கின்றீர்
ஒருதற் கரிய ஓம்பொருளே வர சித்தியரே
உள்ளம் இருந்தே அறியா திதுவரை ஓம்பிடினும்
நேரினில் இன்று கண்டு களித்து நெஞ்சுருகி
நீர்கண் சொரியச் செய்தீர் நீர்மை காண்பீரே
சூரனை வீழ்த்தி வானவர்க் கீந்தீர் சுதந்திரத்தை
சுந்தரத் தமிழர் துயரையும் போக்கி யருள்வீரே. 5

585. பெற்றவ ருலகென் றேவலம் வந்து கனிபெற்றீர்
பேரெழில் வள்ளி குமரனைப் பேண வழிசெய்தீர்
நற்றவ முனிவர் அகத்தியர் நின்றன் நாடகத்தால்
நாணியே தலையிற் குட்டி வணங்க நகைசெய்தீர்
சொற்றிறம் பாத தூயவர் தொண்டைச் சோதிப்பீர்
சொல்வழி கேளா மற்றவர் தமையும் பேதிப்பீர்
வெற்றிபெற் றின்றே மேதினி போற்றத் தமிழீழம்
விடுதலைப் புலிகள்பெறவருள்வேண்டும்சித்தியரே. 6

586. செந்தமிழ் அவ்வை அன்புறச் செய்த பூசனையால்
சிந்தைம கிழ்ந்தே அந்தமில் இன்பத் திருக்கயிலை
விந்தைகொள் தும்பிக் கையாற் சேர்த்த வித்தகரே
வேதனை உலகில் தொடருவ தேனோ தீவினையோ
சிந்தனை யில்லாச் சிதடர்கள் செய்யும் கொடுமையினால்
தீங்கிழை யாத சிறுவரும் இறத்தல் திருவருளோ
அந்தரப் பட்டே அப்பாவி மக்கள் அகதிகளாய்
அந்தோ அலைவார் அருள்வீர் வரசித்திப் பெருமானே.7

587. தாயும் நீயே தந்தையும் நீயே எமையாளும்
தலைவனும் நீயே துரந்தைத் தமிழர்க் கருள்செய்யக்
கோயில் கொண்ட கூடும் ஞானக் குருவேயுன்
கோடை மழையை ஒத்த அருளிற் குளிக்கின்றோம்
மாயும் உலகம் மறத்தால் மாற்றி அறமோங்கி
மனிதப் பண்பை மனிதா பத்தை வளர்த்திடுவீர்
வாயும் வயிறும் வாடா துலகம் வாழ்வாங்கு
வளமுற வாழ வைத்தோம் பூசை வாழியவே. 8

588. மூவாப் பிள்ளை முதலில் வணங்கி முயற்சிகளை
முனைவார் தமக்கு முன்னின் றருளும் மூத்தவரே
மூவர் புரங்கள் முடிக்கத் தாதை தேரேற
முறித்துத் தேர்க்கால் முறுவல் செய்து பார்த்தவரே
தேவர் முனிவர் மனிதர் தேடி வந்துதொழ
திசைகள் போற்றும் பல்கலாசாரத் துரந்தைநகர்
மேவித் திகழும் வரசித்தி விநாயகப் பெருமானே
வீழ்ந்தடி வாழ்த்தி வணங்கினம் வினைகள் தீர்ப்பீரே. 9

589. மன்னன் இராவணன் முன்னர் தந்த இலிங்கத்தை
மண்ணில் அவனால் தூக்கவொண் ணாது வைத்தவரே
கன்னல் அமுதே கனியே கரும்பே கற்பகமே
கருணைக் கடலே தமிழே கம்பன் காவியமே
முன்னும் பின்னும் இன்றும் என்றும் முதல்வர்நீர்
மூச்சும் பேச்சும் முடிந்த முடிவும் முழுதும்நீர்
மன்னே மணியே வரசித்தி விநாயகப் பெருமானே
வாழ்வோ தாழ்வோ யாவும் நீயே வாழியவே. 10

23. துரந்தை வரசித்தி விநாயகர்

590. அருந்தமிழும் ஆன்ற அறிவியலும் அன்பும்
விருந்துவரும் இல்லறமும் மேவும் - துரந்தைநகர்
ஏத்துவர சித்தி விநாயகரை எப்பொழுதும்
வாழ்த்தி வணங்கி வரின். 1

591. பட்ட மரமும் பழுத்துப் பயனாகும்
குட்டிக் குனிந்துருகிக் கும்பிட்டு - மட்டில்
விருப்பால் துரந்தைவர சித்தி விநாயகரின்
அருட்பால் அருந்தி வரின். 2

592. கொள்ளைக் குழலின்பம் கொட்டிக் குலவிவரும்
பிள்ளைப் பெருஞ்செல்வப் பேறுவரும் - வள்ளல்
வரசித்தி கோயில் வலம்வந்து கண்ணீர்
சொரிபத்தி கொண்டு தொழின். 3

593. மன்னித் துரந்தை வளரும் வரசித்தி
மன்னர் மலர்த்தாள் வணங்கிவரின் - உன்னிக்கை
விட்ட பணிகள் நிறைவேறும் வேண்டிமிகப்
பட்ட கடனும்போம் பார். 4

594. தேவர்களும் வந்து வணங்கும்வர சித்தியரை
ஆவலுடன் நாடி அடிபணிந்தால் - பாவவினை
யாவும் அகன்றுவிழும் ஆட்சிப் பதவிகளும்
மேவிச் சிறந்துவரு மே. 5

595. உற்றநோய் மாறிவரும் ஊக்கம் மிகுந்துவரும்
குற்றமில் செல்வம் கொழித்துவரும் - பெற்றவரை
வாழ்த்தி வலம்வந்த வல்லவர சித்தியரைத்
தாழ்த்தி வணங்கத் தலை. 6

596. நாளும் நலமாகும் கோளும் குணமாகும்
ஆளும் அரசும் அடிபணியும் - நாளும்
துரந்தை நகர்மேவும் துங்கவர சித்தி
பரன்தாள் வணங்கு பவர்க்கு. 7

597. தாய்நாட்டில் உள்ள தமரும் தமக்குற்ற
நோய்வாட்டம் நீங்கி நுகங்[1]கொள்வார் - பேயாட்ட
ஆட்சி முறையும் அடங்கும் வரசித்தி
ஆட்சி அருளால் அறி. 8

598. புத்திவரும் சொத்துவரும் நத்துமுயர் வித்தைகளில்
சித்திகளும் மெத்தவரும் முத்திவரும் - எத்திசையும்
ஒத்துவரும் மாதுரந்தை உற்றவர சித்தியரைப்
பத்திசெய்து வாழ்த்து பவர்க்கு. 9

599. பரந்த பலவினத்தைப் பாங்குறவே ஆளத்
தெரிந்த கனடாவின் சீர்கள் - விரிந்தபுகழ்
மாநகர மான துரந்தை வரசித்தி
ஆனவரே தாருந்தமிழ் ஆட்சி. 10

---

1. நுகம் - வலிமை

24. துரந்தை வரசித்தி விநாயகர்

600. கங்கை திங்கள் அணிந்தவரின்
கருணைத் திறத்தால் வந்தவரை
துங்கக் கரிமா முகத்தவரை
துலங்கும் ஞான மேனியரை
பொங்கும் புகழார் துரந்தையிலே
பொலியும் வரசித்தி விநாயகரை
அங்கங் குளிரத் தொழுதுவரின்
அணுக நமனும் அஞ்சுவனே. 1

601. எங்கும் எதிலும் இருப்பவரை
எலிவா கனத்தில் எழுபவரை
அங்குச பாசந் தரித்தவரை
அரவை அரையில் அணிந்தவரை
மங்குல்[1] தவழும் துரந்தைநகர்
வைகும் வரசித்திப் பெருமானைக்
கண்கள் சொரியக் கைதொழுவார்
கவலை போக்கும் கலைஞர்களே. 2

602. பெற்றார் தாமே உலகென்று
சுற்றி வந்தே கனிபெற்றுப்
பெற்றார் மகிழத் தொழுதவரைப்
பேணிநின்ற முதற் பிள்ளை
வற்றா வளமார் துரந்தைநகர்
வளரும் வரசித்திப் பெருமானின்
நற்றாள் நாடித் தொழுவார்க்கு
நாளும் கோளும் நட்பாமே. 3

603. போருக் கெழுந்த கயமுகனாம்
பொல்லாச் சூரன் ஆணவத்தை
தீரச் சிதைத்தே தேவர்துயர்
தெளியச் செய்த அதிதீரர்
சேருஞ் செல்வத் துரந்தைநகர்
திகழும் வரசித்திப் பெருமானின்
வீரக் கழல்கள் வீழ்வார்கள்
வீழ்த்திப் பகைவரை எழுவாரே. 4

604. ஐவர் தொல்லை ஆர்ப்பாட்டம்
ஆசா பாசம் அடக்கிடுவார்
செய்யுந் தொழிலைச் சீராகச்
செய்ய முன்னின் றருள்புரிவார்
வையம் புகழும் துரந்தைநகர்
வதியும் வரசித்திப் பெருமானைத்
துய்ய மனத்தால் தொழுதுருகும்
தொண்டர்க் கில்லைத் துயராமே. 5

605. கோதில் வள்ளி குமரனுடன்
கூடிக் களிக்க அருள்செய்தார்
சாதி பேதம் பாரத
தன்னே ரில்லாத் தந்திமுகர்
நீதி பேணும் துரந்தைநகர்
நிலைகொள் வரசித்திப் பெருமானைக்
காதல் கொண்டு கைதொழுது
கசிவார் பெறுவார் நற்கதியே. 6

606. கல்வி செல்வம் வளர்த்திடுவார்
கலைகள் சார்ந்த போட்டிகளில்
வெல்லும் வரங்கள் தந்தருள்வார்
மேன்மைப் புகழும் வழங்கிடுவார்
பல்லோர் வாழும் துரந்தைநகர்
பயிலும் வரசித்திப் பெருமானின்
மல்லல்[2] மலர்த்தாள் மனமுருகி
வணங்கின் வீழும் வல்வினையே. 7

607. எல்லாம் வல்ல சிவபெருமான்
இடர்செய் முப்புர வசுரர்களை
வெல்ல எழுந்த தேர்க்காலை
வீழ்த்தி விளையா டியபிள்ளை
வல்ல துரந்தை நகர்விளங்கி
அருளும் வரசித்திப் பெருமானின்
வில்வத் தாளில் வீழ்பவர்கள்
வெல்வார் வீடு பேறினிதே. 8

608. தண்டமிழ் முனிவர் அகத்தியரைத்
தலையில் குட்டி வணங்கவைத்தார்
திண்டிறல் வேந்தன் இராவணனைத்
திகைக்க வைத்துச் சிரித்துநின்றார்
தொண்டினில் சிறந்த துரந்தைநகர்
துலங்கும் வரசித்திப் பெருமானைக்
மண்டியிட் டெழுவார் வாழ்க்கையைப்போல்
வாழ்க்கையொன் றில்லை வையகத்தே. 9

609. வேதங்கள் போற்றும் தத்துவனார்
விண்ணவர் ஏத்தும் வித்தகனார்
ஏதமில் அவ்வைக் கருள்புரிந்தார்
இடம்பெயர்ந் தலையும் அகதிகளுக்(கு)
ஆதரவு அளிக்கும் துரந்தைநகர்
அருள்புரி வரசித்தி யார்நடத்தும்
சோதனை வெல்வார் பெருமானின்
தோழமை பெறுவார் வாழியவே. 10

---

1. மங்குல் - மேகம்
2. மல்லல் - அழகு

25. துரந்தை வரசித்தி விநாயகர்

610. ஆதிமுதல் ஆனைமுக ஐயன் துரந்தைநகர்
வேதவர சித்தி விநாயகரை - காதலுடன்
போற்றுபவர்க் கில்லை புலன்கள் பொறித்தொல்லை
கூற்றுவனுக் கஞ்சும் குணம். 1

611. இரந்தமரர் வேண்ட இரங்கிநஞ் சுண்ட
பெருந்தலைவர் பெற்றெடுத்த பிள்ளை - துரந்தை
வரசித்தி யாரை வணங்குவார்க் குண்டாம்
பொருட்செல்வம் கல்வி புகழ். 2

612. பரந்த உலகெல்லாம் பத்தியுடன் வந்து
பொருந்தித் தொழத்தொல் புகழார் - துரந்தைவளர்
எம்மான் வரசித்தி எல்லோர்க்கும் ஈந்தருள்வார்
சும்மா யிருக்குஞ் சுகம். 3

613. மூன்றுகண் நான்குகரம் கொண்ட முதற்பிள்ளை
ஏன்றவர்க் குற்ற இடர்தீர்க்க - ஆன்ற
துரந்தைநகர் தோன்றித் துலங்குகின்றார் வீழ்ந்து
சிரம்பணிவார் வாழ்வார் சிறந்து. 4

614. பெற்றார் தமைச்சுற்றி வந்து கனிபெற்றார்
நற்றாள் நலம்காட்டி நாம்தொழவே - வற்றா
வளமார் துரந்தை வரசித்தி யானார்
இளிவே தெமக்கிங்(கு) இனி. 5

615. சூரன் பகைவென்ற சூரர் துரந்தைநகர்
ஆர வரசித்தி யாகவுள்ளார் - ஈர
மனத்துடனே போற்றி வருமடியார் தேவ
இனத்துடனே வாழ்வர் இலங்கி. 6

616. வியக்கும் அருஞ்செயலால் வீடணனை வென்ற
கயக்கை அதிபர்கதி காணார் - நயக்க
உதவும் துரந்தைநகர் உள்ளார் அவர்தாள்
இதயம் இருத்தினுயர் வே. 7

617. எட்டுக் குணத்தாதை ஏறியதேர் தாழ்த்திக்கை
கொட்டிச் சிரித்துநின்ற கோமகனார் - முட்டுபனி
கொட்டும் துரந்தைஎழிற் கோயிலுற்றார் அன்பர்தலை
குட்டி வணங்கக் குனிந்து. 8

618. கல்வி கலைவளரக் காட்சி தெளிவுபெறச்
செல்வம் செழிக்கவர சித்தியர்தாள் - அல்லும்
பகலும் கசிந்துருகிப் பாடத் துரந்தை
நகரா லயமடைவோம் நாம். 9

619. தகவாக ஈழம் தமிழ்மக்கள் ஆண்டு
சுகமாக வாழத் துரந்தை - நகர்மேவும்
வல்லாளர் எங்கள் வரசித்தி நாயகரை
எல்லோரும் ஏத்துவா மே. 10

26. கனடா பிராம்டன் கற்பக விநாயகர்

620. ஊரார் வாழ்த்த உலகேத்த
உயிர்கள் பிறப்பின் பயனெய்த
சீரார் சைவ நெறியோங்கச்
செல்வம் கொழிக்க அறந்தாங்கப்
பேரார் கனடா நாட்டினிலே
பிராம்டன் நகரில் வீற்றிருந்து
கார்மே கம்போல் அருள்பொழியும்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 1

621. கோலம் குறிகள் இல்லாத
குணமார் பெற்றோர் தாமிந்த
ஞாலம் என்றே சுற்றிவந்து
ஞானக் கனியைப் பெற்றமகன்
சீலம் மிகுந்த கனடாவில்
செல்வப் பிராம்டன் அடியாரைக்
காலம் முழுதும் காத்தருளும்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 2

622. விண்மண் வளிதீ நீரானார்
விதியும் கதியும் அவரானார்
உண்ணின் றுதவும் ஒளியானார்
ஓமென் பிரணவப் பொருளானார்
புண்ணிய மாநிலம் ஒன்ராறியோ
புகழும் பிராம்டன் பதிவாழ்வார்
கண்ணிற் கருத்தில் நிறைந்தருளும்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 3

623. அல்லல் தீர்க்கும் ஆனைமுகர்
அன்பால் ஆறு முகன்வேண்ட
வல்லே வந்து வடிவுமிகு
வள்ளியைச் சேர்த்து வைத்தபிரான்
செல்வம் கொழிக்கும் ஒன்ராறியோ
திகழும் பண்பார் பிராம்டனிலே
கல்வி கலைகள் வளர்த்தருளும்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 4

624. ஆதி அந்தம் இல்லாதார்
ஆணவ மனத்தில் நில்லாதார்
வேதம் நான்கில் வீற்றிருப்பார்
வீட்டு வாயிலிற் காத்திருப்பார்
நீதி நியாயக் கனடாவில்
நிகரில் பிராம்டன் நமர்மேவி
காதல் அடியார் கசிந்துருகும்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 5

625. சூழ்ச்சிக் கயமுகன் ஆணவத்தைத்
துண்டுக் கொம்பால் அடக்கியவர்
தீட்சை அங்குச பாசத்தால்
சித்த முடையார் பெறுதற்கு
மாட்சி மிகுந்த கனடாவில்
பிராம்டன் பதியில் வளர்ந்தருளும்
காட்சிக் கெளிய கலைவாணர்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 6

626. மதியின் மதியை வருத்தியவர்
மாதேர்க் காலை இருத்தியவர்
முதுமா முனிவர் அகத்தியனார்
முரண்டு வணங்க அருளியவர்
மிதமார் செல்வக் கனடாவில்
விளங்கும் பிராம்டன் அடியார்க்குக்
கதிதந் தருளும் விதியாளர்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 7

627. பவசா கரத்தைத் தாண்டிடலாம்
பாவ வினைகள் போக்கிடலாம்
அவலம் அநீதி படுகொலைகள்
ஆறா நோய்கள் எனத்தொடரும்
கவலைக் கெல்லாம் மருந்தான
கனடா பிராம்டன் நகர்மேவும்
கவினார் மேனிக் கருணையினார்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 8

628. அரியும் அயனும் அடிமுடியை
அறிய முயன்ற வேளையிலே
விரிவான் வெளிக்கும் மேலாக
விரிந்த சிவனார் முதற்பிள்ளை
பெருமா செல்வக் கனடாவில்
பிராம்டன் நகரின் அடியார்க்குக்
கரிமா முகத்தைக் கொண்டருளும்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 9

629. முனையும் முயற்சிகள் முற்றிடவும்
முன்னைய வல்வினை முடிந்திடவும்
தனிநா டழம் பிறந்திடவும்
தமிழர் வாழ்வு சிறந்திடவும்
இனிய கரும்பு மோதகந்தேன்
இளநீர் பால்பழம் அவல்விரும்பும்
கனடா பிராம்டன் நகர்மேவும்
கற்பக விநாயகர் கழல்போற்றி. 10

27. மொன்றியல் சோவையம்பதி கற்பக விநாயகர்

630. ஆதிசிவன் பெற்றபிள்ளை ஆனைமுகம் கொண்டபிள்ளை
மோதகம்போல் தித்திக்கும் மூத்தபிள்ளை - மேதினியில்
மொன்றியலில் கற்பகராய் நற்செயல்கள் முற்றுவிப்பார்
சென்றுதொழின் சேரும் சிறப்பு. 1

631. என்றுமுள்ளார் எங்குமுள்ளார் இன்னல்புரி சூரனைமுன்
கொன்றொழித்த கொம்புக் குலமகனார் - மொன்றியலில்
கற்பகராய்ச் சோவைப் பதியடியார் கண்கலங்க
அற்புதங்கள் செய்தருள்வா ராம். 2

632. பெற்றவரைச் சுற்றிவந்து முற்றுகனி பெற்றபிள்ளை
பற்பலர்வாழ் சோவைப் பதிமேவி - கற்பகராய்
விண்ணவரும் மண்ணவரும் வீழ்ந்துதொழ வீற்றருள்வார்
பண்ணவரைப் போற்றும் பணிந்து. 3

633. ஆறுமுகர் வள்ளியினை ஆட்கொள்ள வைத்தவள்ளல்
கூறுமுனர் அன்பர் குறைதீர்ப்பார் - ஏறுபுகழ்
கொண்டபதி சோவை கொலுவிருப்பார் கற்பகராய்க்
கண்டுதொழின் உண்டாம் கதி. 4

634. ஐந்து தொழிலுடையார் ஐந்து முகமுடையார்
ஐந்து புலன்களையும் ஆளவைப்பார் - ஐந்து
கரமுடையார் மொன்றியலிற் கற்பகராய் வந்தார்
வரமடையத் தாள்வணங்கு வாம். 5

635. தீதுபுரி முப்புரத்தார் தீமைகளைத் தீர்த்தருளத்
தாதையிவர் தேரதனைத் தாழ்த்தியவர் - பேதமிலா
மக்கள்வாழ் மொன்றியலில் வாழ்வார் வணங்கியெங்கள்
விக்கினங்கள் தீர்ப்பாம் விரைந்து. 6

636. சந்திரனின் வஞ்சம் தனையறிந்து தண்டனையைத்
தந்தறிவைத் தானருள்செய் தந்திமுகர் - செந்தமிழர்
சூழ்கின்ற மொன்றியலில் சோவைப் பதிவளர்வார்
தாள்போற்றி வாழ்வாம் தக. 7

637. இலங்கை அரசன் சிவலிங்கம் தன்னை
நிலங்கொள்ள வைத்த நிமலர் - துலங்கி
வளநகராம் மொன்றியலில் கற்பகராய் வாய்த்தார்
உளமுருகி நாமுய்ய வாம். 8

638. குறுமுனிவர் தன்தலையிற் குட்டி வணங்க
முறுவலித்த யானை முகத்தர் - அறமுறைகள்
தாங்கிவளர் மொன்றியலில் தங்கியருள் செய்வார்தாள்
பாங்குறவே வீழ்வாம் பணிந்து. 9

639. நன்றருளும் நாயகரை ஞானியரை யானைமுகக்
கன்றவரை மொன்றியிலின் கற்பகரைச் - சென்றுருகி
ஆண்ட தமிழ்மக்கள் ஆளத் தமிழீழம்
வேண்டித் தொழுவோம் விழுந்து. 10

28. கனடா-எட்மண்டன் மகா கணபதி

640. ஆதியில்லார் அந்தமில்லார்
யாவருக்கும் சொந்தமுள்ளார்
காதலினார் காட்சியினார்
கருணைமகா கணபதியார்
மோதகம்பால் அவல்கரும்பு
முக்கனிதேன் படைத்துருகும்
ஏதமிலா அடியவர்வாழ்
எட்மண்டன் இருந்தனரே. 1

641 எங்குமுள்ளார் என்றுமுள்ளார்
இடர்களைந்து காக்கவல்லார்
அங்குசபா சங்கரங்கள்
ஆண்டருளத் தாங்கியுள்ளார்
பங்கமில்லா வளங்கொழிக்கும்
பண்புநகர் எட்மண்டன்
தங்குமகா கணபதிதாள்
சார்பவர்க்கோர் தாழ்வில்லையே. 2

642. இருள்மலத்துக் கயமுகனை
இமைப்பொழுதில் அடக்கிநின்றார்
தருமநெறி முயற்சிகளைச்
சரிவரவே நடத்திவைப்பார்
பொருள்பொலியும் அல்பேட்டா
புகழ்பதியாம் எட்மண்டன்
அருளுமகா கணபதிதாள்
அடைபவர்க்கோர் இடரில்லையே. 3

643. பெற்றவர்தாம் உலகமென்று
பற்றுடனே சுற்றிவந்தே
உற்றகனி பெற்றுநின்ற
ஒப்பரிய ஞானப்பிள்ளை
கற்றவர்வாழ் எட்மண்டனில்
கருணைமகா கணபதியாய்
நற்றிருத்தாள் காட்டியெல்லா
நன்மைகளும் நல்குவரே. 4

644. வல்லாளர் நல்லாளர்
வரமளிக்கும் மணியாளர்
சொல்லாளர் சுவையாளர்
சுகமளிக்கும் துணையாளர்
சொல்லரிய கைத்தொழில்கள்
தொடருமெட்மண் டனிலருள்வார்
வல்லமகா கணபதிதாள்
வணங்கவரும் வல்லமையே. 5

645. கல்விகலை ஊட்டிடுவார்
காட்சிகளைக் காட்டிடுவார்
வல்வினைகள் போக்கிடுவார்
வான்வினைகள் ஆக்கிடுவார்
எல்லவரும் வந்துதொழ
எட்மண்டனில் எழுந்தருளும்
செல்வமகா கணபதிதாள்
சேரின் இல்லைத் தீவினையே. 6

646. கூர்த்ததவக் குறுமுனியைக்
குட்டித்தலை குனிய வைத்தார்
நேர்த்தியற்ற வார்த்தைசொன்ன
நிலவுகலை தேயவைத்தார்
சீர்த்தசெல்வ எட்மண்டனில்
சிறந்தபூசை கண்டுவக்கும்
மூத்தமகா கணபதிதாள்
முதல்தொழுதால் வருங்கதியே. 7

647. பாதகஞ்செய் முப்புரங்கள்
பட்டொழிய வில்லெடுத்த
தாதைஇவர் தேரதனைத்
தாழ்த்திவம்பு பண்ணியவர்
மேதினியார் போற்றுபுகழ்
எட்மண்டனில் வீற்றிருக்கும்
நாதர்மகா கணபதிதாள்
நண்ணின் உண்டாம் நன்மைகளே. 8

648. இளவலுடன் அழகுவள்ளி
இணையவருள் பாலித்தவர்
அளவறியா வலிமைமிகு
இராவணனுக் கருளியவர்
தளர்வறியாப் பேருழவர்
தானியஞ்செய் எட்மண்டனில்
வளருமகா கணபதியை
வாழ்த்தவினை வீழ்த்துவரே. 9

649. அந்தமிலா அன்புடனே
அவ்வைசெய்த பூசையினைச்
சிந்தைகளித் தேற்றவரைத்
திருக்கயிலை சேர்த்தபிரான்
எந்தவித குறையுமில்லா
எட்மண்டனில் எழுந்தருள்வார்
தந்தைமகா கணபதிதாள்
தாழ்பவர்க்குத் தாழ்வில்லையே. 10

29. நெதலாந்து – தென்கெல்டர் திருவரதராஜ செல்வ விநாயகர்

650. அரியவளம் பெருக்கும் அழகுநெத லாந்தில்
திருவளர்தென் கெல்டர் செந்தமிழர் பதியில்
கருணையுடன் கோயில் கொண்டருளிக் காப்பார்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 1

651. விரிசெவிகள் ஆட்டி வியனெயிறு நீட்டி
கரிமுகத்தை உலகம் களிப்புறவே காட்டி
வரமளிக்க நெதலாந் தெழுந்தருளி வளர்வார்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 2

652. செருவிலெழு சூரர் செருக்கழித்த வீரர்
தரமிழந்த வானோர் தழைக்கவருள் செய்தார்
அருள்புரிய நெதலாந் தாலயம மர்ந்தார்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 3

653. அருவமெனத் திரிவார் உருவமது தாங்கி
ஒருமுதல்வர் சிவனார் உவந்தழைக்க வந்தார்
மருவிநெத லாந்துத் தென்கெல்டர் மகிழ்வார்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 4

654. உருவமதைப் பழித்த ஒண்மதியைப் பழித்தார்
உருகித்தொழு தளிக்கும் மோதகத்தை உவப்பார்
பரவநெத லாந்தில் பதிகொண் டருள்கின்றார்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 5

655. திரிபுரத்தை எரிக்கத் தேரெழுந்த தாதை
பெருமையினை விரிக்கப் பிள்ளைக்குறும் பிழைத்தார்
பரிவுடனே நெதலாந் துயரப்பதி கொண்டார்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 6

656. புரியச்சிவ பூசை புரந்தரனும் நன்கு
கருதரிய முனிவர் கமண்டலத்தைக் கவிழ்த்தார்
தெரியநெத லாந்தில் திகழ்வர்தென் கெல்டர்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 7

657. அருகிலுள பெற்றோர் அகிலமெனச் சுற்றி
முருகனையும் முந்தி மோனக்கனி பெற்றார்
உருமுகடல் சூழும் நெதலாந்தில் உள்ளார்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 8

658. வருமிடர்கள் கொய்வார் வழிபிறக்கச் செய்வார்
உரவினைகள் தீர்ப்பார் உடனிருந்து காப்பார்
நிரைபொழில்நி றைந்த நெதலாந்தில் அருள்வார்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 9

659. அரியதமி ழீழம் மலரஅருள் வேண்டும்
பெருமைமிகு தமிழர் உரிமைபெற வேண்டும்
தருமநெத லாந்தில் தென்கெல்டர் தங்கும்
திருவரத ராஜ செல்வவிநா யகரே. 10

660. நெதலாந்தில் அருளும் நிகரில்விநா யகரின்
பதம்போற்றிக் கந்த வனஞ்சொன்ன பத்தும்
பதமாக நாளும் படித்துருகும் பத்தர்
அதிநல்ல வாழ்வை அடைந்துய்வ ராமே. 11

30. இங்கிலாந்து விம்பிள்டன் கணபதியார்

661. காதலுடன் அமரர்குலம் நீண்ட காலம்
கருத்தூன்றிச் செய்தகடுந் தவத்தைக் கண்டு
மாதொருபா கத்தருயர் மந்தி ரத்தில்
வைத்துமனம் பெற்றமுதல் மாட்சிப் பிள்ளை
ஆதிமுதல் அண்டமெலாம் அளந்த பிள்ளை
ஆனைமுகங் கொண்டருள வந்த பிள்ளை
மேதினியிற் புகழோங்கும் இங்கி லாந்தில்
விம்பிள்டன் நகர்மேவி யருள்வா ராமே. 1

662. நீரானார் காற்றானார் நெருப்பு மானார்
நிலமானார் நிகரில்லா வெளியு மானார்
ஊரானார் உலகங்கள் பலவு மானார்
உடலானார் உயிரானார் உணர்வு மானார்
சீரானார் பேரானார் சிறப்பு மானார்
தேனானார் தெவிட்டாத அமிழ்து மானார்
வேரான வினைகளுடன் விதியு மானார்
விம்பிள்டன் கணபதியார் மேன்மை மேலே. 2

663. கருத்தான காதலுடன் கசிந்து போற்றிக்
காட்சிக்கு விருந்தாய விழாக்கள் கண்டு
பிரித்தானி யச்சைவர் பேணும் செல்வம்
பேணார்க்கும் பெருங்கருணை பெருக்கும் தெய்வம்
வருத்தாதின் னடியவரை வாழ்விக் கின்றார்
வல்வினைகள் தமையெல்லாம் மாள்விக் கின்றார்
விருத்திக்குப் பெயர்பெற்ற இங்கி லாந்து
விம்பிள்டன் கணபதியார் மேன்மை மேலே. 3

664. அல்லல்செய் கயமுகனை அடக்கி நின்றார்
ஆறுமுகர் ஆரணங்கை அடைய வைத்தார்
வல்லதவ அகத்தியர்க்கு வரங்கள் ஈந்தார்
மாசிற்கனி பெற்றவரை வணங்கிப் பெற்றார்
நல்லதமிழ் அவ்வைக்கு நயந்த ளித்தார்
நகைசெய்த சந்திரனை நாணச் செய்தார்
வெல்லுவகை சொல்லிவளர் இங்கி லாந்து
விம்பிள்டன் விளங்குகண பதியா ராமே. 4

665. சித்திகளைப் புத்தியுடன் சேர வைப்பார்
தீராத தீவினைகள் தீர வைப்பார்
உத்தமரின் வழிமுறைகள் ஓங்க வைப்பார்
உதவாத பேர்களையும் உயர வைப்பார்
தத்துவங்கள் கடந்துசிவம் தன்னைச் சாரும்
பக்குவத்தைத் தந்தருளித் தாங்கி நிற்பார்
வித்தைநலத் தொழில்கள்வளர் இங்கி லாந்து
விம்பிள்டன் விளங்குகண பதியா ராமே. 5

666. மண்மீது சிவபூசை மலர்கள் வாட
வருந்திமனம் இந்திரனும் வழுத்தி நாட
கண்காணக் காகவுரு வாக வந்து
கருதரிய முனிவர்பிரான் கமண்ட லத்துத்
தண்ணீரால் காவிரியைத் தந்த பிள்ளை
தாதையிவர் பெருந்தேரைத் தடுத்த பிள்ளை
விண்மாட மனைவீதி மிகுந்த செல்வ
விம்பிள்டன் கணபதியாய் விளங்கி னாரே. 6

667. சாதிமத பேதங்கள் சாத்தி ரங்கள்
தத்துவங்கள் வித்துவங்கள் கடந்த விண்ணர்
ஆதியையும் பாதியையும் மதிக்கும் பிள்ளை
அண்டமெல்லாம் தன்னாணை விதிக்கும் அண்ணல்
வேதவியா சர்சொல்லப் பார தத்தை
விரைவாக வேயெழுதி முடித்த வீரர்
மேதினியிற் பாதியினை ஆண்ட நாட்டு
விம்பிள்டன் பதிமேவி யருள்வா ராமே. 7

668. திங்கள்சடை யார்குணங்கள் செறிந்த பிள்ளை
சித்திபுத்தி வல்லமைகள் நிறைந்த செல்வர்
செங்கமலம் திகழ்ந்தருள்வார் முனிவர் தேவர்
திசையடியார் யாவருமே சிரங்கள் தாழ்த்த
அங்கரங்கள் கொம்பு கனி கலசம் பாசம்
அங்குசமென் றவைதாங்கி ஆட்சி செய்வார்
பொங்குபுகழ் விம்பிள்டன் நகரிற் போந்து
பொலிகின்றார் போற்றிவினை போக்கு வாமே. 8

669. இந்திரனும் உமையவளும் அயனும் மாலும்
இமயவரும் இராவணனும் நளனும் மற்றும்
சந்திரனும் மன்மதனும் தக்கன் தானும்
சந்திராங் கதன்வீமன் சூர சேனன்
அந்தரமில் அகத்தியரும் வணங்கி முன்னாள்
அருள்பெற்ற ஆனைமுகப் பெருமான் இந்நாள்
வந்தருள்வார் விம்பிள்டன் மக்கள் வாழ
மனமுருக விழிபெருக வணங்கு வாமே. 9

670. எங்களுக்கோர் நாடில்லை நகரு மில்லை
என்றாலும் அஞ்சேலென் றருள்செய் தற்கு
மங்கையொரு பாகத்தார் மகிழ்ந்து தந்த
வாரணனார் ஆரணங்கள் வணங்கி ஏத்தும்
துங்கநல அறிவுருவாய்த் தோன்று மேனிச்
சுடர்காட்டி விம்பிள்டன் துலங்க வந்து
தங்கியுளார் தமிழ் சைவத் தவந்தான் என்னே
தலையாரக் கும்பிட்டுத் தழைப்போம் நாமே. 10

31. நியூயோக்கு மகா வல்லப கணபதி

671. முதலெழு மூல மந்திரம் ஓங்கி
முழுமத யானை முகமொன்று தாங்கி
அதிவலு சூரர் ஆணவம் போக்கி
அமைதியை அமரர்க் களித்தவர் தாமே
நிதிவளம் மிகுந்த அமெரிக்க நாட்டின்
நிகரற்ற புகழ்மா நியூயோக்கு நகரில்
மதிவளர் கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 1

672. பாசாங்கு சங்கள் பாங்குடன் தாங்கி
பணிந்தடி வீழ்ந்து பரவிடும் பத்தர்
பாசவல் வினைகள் பரிவுடன் நீக்கிப்
பரகதி யருளிப் பாலிக்க வல்லார்
தேசங்கள் மதிக்கும் அமெரிக்க நாட்டின்
செல்வங்கள் கொழிக்கும் நியூயோக்கு நகரில்
மாசறு கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 2

673. முதல்முடி வில்லா மூர்த்தியு மானார்
முயற்சிகட் கெல்லாம் முதல்வரு மானார்
கதைவிரைந் தெழுதும் காரண ரானார்
கதிதர வல்ல பூரண ரானார்
நதிவளம் மிகுந்த அமெரிக்க நாட்டின்
நாகரி கஞ்செய் நியூயோக்கு நகரில்
மதிதவழ் கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 3

674. கலைஞருக் கெல்லாம் கலைஞரு மானார்
கணங்களைப் பேணும் கணபதி யானார்
தலைவருக் கெல்லாம் தலைவரு மானார்
சங்கரர் தமக்குத் தலைப்பிள்ளை யானார்
அலைகடல் மேவும் அமெரிக்க நாட்டின்
அடியவர் சூழும் நியூயோக்கு நகரில்
மலிவளக் கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 4

675. இகழ்வுறு சந்திரன் இயல்பினை ஒறுத்தார்
இறையவர் ஏறிய தேரினை இறுத்தார்
நெகிழ்வுறு நான்முகன் குறைகளைத் தீர்த்தார்
நெடுமால் பெற்ற சாபத்தை நீத்தார்
அகழ்வுறு செல்வ அமெரிக்க நாட்டின்
அணியென விளங்கும் நியூயோக்கு நகரில்
வகையறு கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 5

676. பணிவுடன் அம்மை அப்பரைச் சுற்றிப்
பழத்தினைப் பெற்ற பக்குவ ஞானி
குணநலம் தருவார் இனநலம் தருவார்
குறைகளை ஒழிப்பார் நிறைவினை அளிப்பார்
இணையற்ற செல்வ அமெரிக்க நாட்டின்
இதயத்தை யொத்த நியூயோக்கு நகரில்
மணியெழிற் கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 6

677. குறமகள் வள்ளி குமரனைச் சேரக்
குஞ்சர வடிவம் கொண்டருள் செய்தார்
அறிவொளி எறிக்க ஆக்கங்கள் பிறக்க
அறமுறை சிறக்க அருந்துணை யாவார்
நிறைவளம் பெருக்கும் அமெரிக்க நாட்டின்
நெடுமனை மாட நியூயோக்கு நகரில்
மறையொலி கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 7

678. முன்னரு முனிவர் கமண்டல நீரை
முழுவதும் காக வடிவினில் ஊற்றித்
தென்னவர் மண்ணில் காவிரி பாயத்
திருவிளை யாடல் செய்தவர் எழுந்து
தன்னிக ரில்லா அமெரிக் நாட்டின்
தகைசால் வண்மை நியூயோக்கு நகரில்
மன்னுயர் கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 8

679. அருந்தமிழ் அன்னை அவ்வையின் பூசை
அகமிழ்ந் தேற்றே அன்புறத் தும்பிக்
கரங்கொடுத் தவரைக் கயிலையிற் சேர்த்த
கருணையின் வடிவாம் கண்ணுதற் கடவுள்
நிரந்தர மாக அமெரிக்க நாட்டின்
நித்தில மன்ன நியூயோக்கு நகரில்
வரந்தரக் கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 9

680. மாதொரு பாகர் மகிழ்வுற நன்கு
வேதமும் வாழ்த்த விண்ணவர் போற்ற
காதலுற் றடியார் கைதொழு தேத்த
ஏதமிற் பாலை எங்கணும் ஏற்ற
நாதர்சு தந்திர அமெரிக்க நாட்டின்
நீதியில் நிற்கும் நியூயோக்கு நகரில்
மாதவக் கோயில் மகிழ்ந்தருள் கின்றார்
மகா வல்லப கணபதி யாரே. 10

32. சீசெல்சு-விக்டோரியா நவசக்தி விநாயகர்

681. ஆதியிலார் அந்தமிலார் யாவும் வல்லார்
அண்டசரா சரமெல்லாம் ஆண்டு கொள்ளும்
சோதியினார் உமையம்மைத் துணையா லோடும்
தோற்றுவித்த தும்பிக்கைத் தோன்றல் வந்து
காதல்மிகும் அடியார்கள் கசிந்து போற்றக்
கடல்சார்ந்த சீசெல்சில் கருணை மிக்க
நாதரென விக்டோரியா நகரில் உள்ள
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 1

682. காலமெலாம் கடந்தொளிரும் வேத மாக
கல்வியிலே கலந்துள்ள போத மாக
ஞாலமெலாம் பெற்றவரென் றவரை யேத்தி
நன்குவலம் வந்துகனி பெற்ற ஞானி
சீலமிகும் அடியார்கள் சேர்ந்து வாழ்த்த
சீசெல்சில் விக்டோரியா நகர்த்தி கழ்வார்
நாலரிய வேதத்து நாத நாதர்
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 2

683. ஊடுருவி வானவரை உலைத்து நின்ற
உன்மத்தக் கயமுகனை உதைத்து வென்றார்
ஓடியொளித் துயர்விழந்த வானோர்க் கெல்லாம்
உரிமைகளை வழங்கியநல் ஒப்பில் வீரர்
தேடரிய கடல்வளங்கள் சிறக்கும் செல்வச்
சீசெல்சில் விக்டோரியா நகரைச் சேர்ந்தார்
நாடரிய நன்மைகளை நல்கும் நாதர்
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 3

684. வெல்லாத வீரரையும் வெல்ல வல்லார்
மெலியாரை வலியாராய் விளங்க வைப்பார்
கல்லாத பேர்களையும் கற்க வைப்பார்
காணாத காட்சிகளைக் காண வைப்பார்
செல்லாத இடமெல்லாம் செல்ல வைப்பார்
சீசெல்சில் விக்டோரியா நகரைச் சேர்ந்தார்
நல்லாரின் முயற்சிகளை நடத்து விப்பார்
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 4

685. விந்தைமிகு புரங்களிலே விண்ண வர்க்கு
வேதனைசெய் சூரர்தமை வீழ்த்தச் சென்ற
தந்தையிவர் தேர்க்காலைத் தாழ்த்தி நின்ற
தந்திமுகப் பிள்ளையவர் தன்னே ரில்லார்
சிந்தைநலத் தொண்டரினாற் சிறந்த நாடாம்
செறிகடலார் சீசெல்சில் செழிக்கச் சைவம்
நந்தவன விக்டோரியா நகரில் உள்ளார்
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 5

686. காகமென வந்துமுனி கமண்ட லத்தைக்
கவிழ்த்தரிய காவிரியைத் தந்து பூசை
ஏகமுதற் கிந்திரனும் இயற்றப் பூங்கா
இதமுறவே செழித்தோங்க வைத்த வம்பர்
ஆகமத்துப் பொருளான வோம்மு கத்தர்
அலைகடல்சூழ் சீசெல்சில் அழகு சேர்க்கும்
நாகரிக விக்டோரியா நகரின் நாதர்
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 6

687. நாட்டமிகு மாறுமுக நம்பி தன்னை
நாணமிகு மாணழகு வள்ளி யோடு
கூட்டுவிக்க மதயானை வடிவு கொண்டு
கூத்தாடி நின்றகுண வாளக் கோமான்
வாட்டமிலா வூக்கமுள மக்கள் வாழும்
வார்கடல்சூழ் சீசெல்சில் மதிப்பை யெல்லாம்
நாட்டுமுயர் விக்டோரியா நகரில் வாழ்வார்
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 7

688. இடர்கெடவே இராவணனார் வடபால் பெற்ற
இணையில்லா இலிங்கத்தை ஏற்றுக் கொண்டு
திடமுறவே மண்ணிலதை ஊன்றி வைத்துத்
திசைவீரன் வலிமைதனைச் சிறுகச் செய்தார்
இடரறியா இறையுணர்வு மக்கள் வாழும்
எறிகடல்சூழ் சீசெல்சின் தவத்தால் வந்து
நடலையிலா விக்டோரியா நகரை ஆள்வார்
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 8

689. சொல்லறியாச் சந்திரனும் துயரங் கொள்ளத்
தோற்றத்தை மாற்றமுறச் செய்த தோன்றல்
வல்லதவ மெல்லியலார் இருவர் தம்மை
வலிதாயப் பதியினிலே மணந்த மாண்பர்
கல்விகலை வளர்ந்தோங்கக் கருணை காட்டிக்
கடல்சார்ந்த சீசெல்சைக் கணமும் காத்து
நல்லவள விக்டோரியா நகர ருள்வார்
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 9

690. அனுதினமும் அருந்தமிழை வளர்த்த அவ்வை
அன்புக்குப் பரிசாக அளித்தார் முத்தி
வினைமுதல்வர் வீழ்ந்தடிகள் தொழுவார் முன்னை
வினையகற்றி வீடுபே றளிக்க வல்லார்
மனநலமும் இனநலமும் உடைய மக்கள்
மகிழ்ந்துறையும் சீசெல்சை வளர்த்து நன்கு
நனிபுகழார் விக்டோரியா நகர்வ ளர்வார்
நவசக்தி விநாயகரின் நற்றாள் போற்றி. 10

33. மலேசியா மலாக்கா பொய்யாத விநாயகமூர்த்தி

691. ஐயாவே அரனார் பெற்ற
பிள்ளையே ஆற்றல் யானைக்
கையானே கருணை யானே
கணங்களின் பதியே என்று
மையாத[1] மலேசி யாவில்
தொல்நகர் மலாக்கா மேவிப்
பொய்யாத விநாயக மூர்த்தி
பொலிகின்றார் போற்று வாமே. 1

692. வெய்யானைக் கயமு கத்துச்
சூரனை வென்ற வீரர்
நெய்தேன்பால் அவல்க ரும்பை
நிறைகனி மோத கத்தை
மெய்யன்பர் படைத்து வேண்ட
மிகுசெல்வ மலாக்கா மேவிப்
பொய்யாத மூர்த்தி யாகப்
பொலிகின்றார் போற்று வாமே. 2

693. வையந்தான் பெற்றோர் என்று
வலம்வந்து கனியைப் பெற்ற
மெய்ஞ்ஞான வடிவ மான
விநாயகப் பெருமான் தாமே
பொய்யாது மழைபெய் கின்ற
புகழ்நகர் மலாக்கா மேவிப்
பொய்யாத மூர்த்தி யாகப்
பொலிகின்றார் போற்று வாமே. 3

694. மொய்வீர முருகன் வள்ளி
முத்தன்ன அழகி யோடு
கைகோத்துக் களிக்க வைத்த
கணபதிப் பிள்ளை யாரே
வெய்யோனும் தண்மை செய்யும்
வியன்னகர் மலாக்கா மேவிப்
பொய்யாத மூர்த்தி யாகப்
பொலிகின்றார் போற்று வாமே. 4

695. செய்யாத செயல்கள் செய்து
சித்தத்தைக் கலங்க வைக்கும்
ஐவர்தம் ஆதிக் கத்தை
அடக்கநல் அருள்பா லித்து
நையாத மனங்கள் தம்மை
நைவிக்க மலாக்கா மேவிப்
பொய்யாத மூர்த்தி யாகப்
பொலிகின்றார் போற்று வாமே. 5

696. ஐயாவென் றமரர் வேண்ட
அரனாரும் புரங்கள் மூன்றைத்
தொய்வாக்க[2] எழுந்த தேர்க்கால்
துண்டித்த தும்பிக் கையர்
எய்தாத செல்வ மெய்தச்
செய்யவே மலாக்கா மேவிப்
பொய்யாத மூர்த்தி யாகப்
பொலிகின்றார் போற்று வாமே. 6

697. மெய்யான தமிழைத் தந்த
மேன்மைகொள் அகத்தி யர்தம்
கையாலே தலைமேற் குட்டி
வணங்கிடக் களித்த பிள்ளை
தெய்வாதி தெய்வங் கூடிச்
சேவிக்க மலாக்கா மேவிப்
பொய்யாத மூர்த்தி யாகப்
பொலிகின்றார் போற்று வாமே. 7

698. சைவான[3] சொல்ம திக்குத்
தண்டனை அளித்த தும்பிக்
கையாளர் கருணை கொண்டு
கண்ணிய மலேசிய மக்கள்
கையாரத் தொழுது கண்கள்
கசியவே மலாக்கா மேவிப்
பொய்யாத மூர்த்தி யாகப்
பொலிகின்றார் போற்று வாமே. 8

699. மெய்வீர இலங்கை வேந்தன்
விரும்பிய இலிங்கந் தன்னை
ஒய்யார மாக வாங்கி
நிலத்தினில் ஊன்றி வைத்த
தெய்வீக விநாய கர்தாம்
செந்நெறி மலாக்கா மேவிப்
பொய்யாத மூர்த்தி யாகப்
பொலிகின்றார் போற்று வாமே. 9

700. எய்யாமை[4] அகல ஞான
இன்பம்வந் தெய்த யாவும்
உய்வாகச் செய்யும் சைவம்
உலகெலாம் ஓங்கும் வண்ணம்
துய்யாளர்[5] தும்பிக் கையர்
தொண்டர்வாழ் மலாக்கா மேவிப்
பொய்யாத மூர்த்தி யாகப்
பொலிகின்றார் போற்று வாமே. 10

---

1. மையாத - ஒளிகுன்றாத
2. தொய்வாக்க - தளர்வாக்க, கெடுக்க
3. சைவான - இழிவான
4. எய்யாமை - அறியாமை
5. துய்யாளர் - தூய்மையானவர்

34. சிங்கப்பூர் செண்பக விநாயகர்

701. உண்மை யானவர் ஓம்பொரு ளானவர்
தண்மை யானவர் தந்திமு கத்தவர்
வண்மை மிக்க வளநகர் சிங்கப்பூர்
செண்பகப் பிள்ளை யார்கழல் சேர்மினே. 1

702. எங்கு முள்ளவர் என்றும்நி லைப்பவர்
துங்க ஞானியர் தும்பிக்கை மேனியர்
சிங்கப் பூரினில் செண்பக நீழலில்
தங்கி யுள்ளனர் தாளிணை சேர்மினே. 2

703. அனாதி யானவர் அந்தமில் லாதவர்
வினாவு வார்க்கும் விளங்காத விந்தையர்
தினமுயர் செல்வச் சிங்கப்பூர்ச் செண்பக
விநாயகர் அருள் வியன்கழல் சேர்மினே. 3

704. உரிய பெற்றவர் உலகமென் றேத்தியே
அரிய போட்டியில் அம்பழம் பெற்றவர்
திருவளர்ந் தோங்கு சிங்கப்பூர்ச் செண்பகர்
அருளைப் பெற்றவர்க் கல்லலொன் றில்லையே. 4

705. ஐம்பு லன்களின் தொல்லை அகற்றுவர்
கொம்பி னாற்கய முகனிடர் கொன்றவர்
அன்புடன் கூடி அழகிய சிங்கப்பூர்
செண்பக விநாய கர்கழல் சேர்மினே. 5

706. அங்குச பாசம் அங்கையிற் சேர்த்தவர்
திங்கள் கொண்டசெ ருக்கினைத் தீர்த்தவர்
சிங்கப் பூரினிற் செண்பகர் ஆனவர்
எங்கள் இன்னல்கள் யாவையும் தீர்ப்பரே. 6

707. மட்டிலாத் தவ மாமுனி தன்தலை
குட்டிக் கும்பிடக் கூத்தாடி நின்றவர்
திட்ட மாநகர் சிங்கப்பூர்ச் செண்பகர்
நட்டத் தாள்பல நன்மைகள் நல்குமே. 7

708. தும்பிக் கையினால் தூக்கிக் கயிலையில்
அம்புவி போற்றும் அவ்வையை வைத்தவர்
செம்பொருள் கிட்டும் சிங்கப்பூர் செண்பகர்
வம்பலர் தாள்கள் வாழ்த்தி வணங்கவே. 8

709. அறிவில் ஊக்கத்தில் சுத்தத்தில் ஆக்கத்தின்
நிறைவில் சிங்கப்பூர் நிகரற்ற தென்றெலாம்
திறமை பேசிடச் செண்பக விநாயகர்
குறைவிலா அருள் காரணம் கொள்விரே. 9

710. தேடிச் சிங்கப்பூர்ச் செண்பக விநாயகர்
மாடச் சித்திரக் கோயில் வலம்வந்து
கூடும் அன்பினில் கும்பிடில் ஈடிலா
வீடு கண்டு விளங்குதல் திண்ணமே. 10

35. பொது – நற்கதிப் பதிகம்

711. ஊரறிவார் ஊர்விருத்திக் குழைத்து நிற்பார்
உறவாடி உற்றவருக் குதவி செய்வார்
பாரறிவார் பாடறிந்தே ஒழுக வல்லார்
பதவிகளுக் கேற்றபணி செய்வார் ஆயின்
யாரறிவார் ஆனைமுகப் பெருமான் ஆற்றல்
அருளாட்சி மாட்சியினை அறிவை எல்லாம்
சூரனின்பேர் ஆணவத்தைச் சுருக்கி நின்ற
தூமணியே சிற்றறிவைத் துலக்கு வாயே. 1

712. இளவயதில் பேச்செல்லாம் இடது சாரி
இடைவயதில் இடைநடுவில் இருக்கப் பார்ப்பார்
வளர்கையிலே வலதுபக்கம் வளைந்து செல்வார்
வரையறையொன் றில்லாத வாழ்வு மாறித்
தளர்வயதில் சமயமொன்றைத் தழுவிக் கொள்வார்
சாரியெல்லாம் சரியான ஞான மாகி
அளவரிய நின்னருளை அறிய முன்னர்
ஆனைமுகா அவர்வாழ்வும் முடியு மாமே. 2

713. பக்கமெங்கும் பார்க்கின்றேன் படித்த மக்கள்
பட்டங்கள் பரிசுகளும் பலவாய்ப் பெற்றார்
மிக்கவுயர் பதவிகளில் விளங்கு கின்றார்
வித்துவத்தில் மேலவர்கள் ஆன போதும்
பக்குவமில் லாதவர்கள் உலகப் பற்றால்
படுகுழியில் தத்தளிப்பார் பாம ரர்போல்
விக்கினங்கள் தீர்க்கவல்ல விநாய காநல்
விளக்கமளித் திவர்க்கருள வேண்டு வனே. 3

714. பண்பிலார் பண்பாட்டுக் கூட்டம் வைப்பார்
படிப்பிலார் பகுத்தறிவு பேசக் கூசார்
நண்பிலார் நட்புறவின் பெருமை சொல்வார்
நாத்திகர் கோயில்களை நடத்து வார்கள்
மண்புகழ் பேசுவார் மதிக்க மாட்டார்
மானத்தைப் போற்றுவார் ஈனஞ் செய்வார்
விண்புகழ் விநாயகா போலிக் கூட்ட
வீணர்க்கும் அருள்புரிய வேண்டு வேனே. 4

715. பதவியை விரும்புவார் பணிகள் செய்யார்
பாராட்டுச் சாப்பாட்டிற் பாசம் வைப்பார்
முதுமைவந் தாலுந்தம் பதவி தள்ளார்
முதன்மையை இளைஞர்க்கு வழங்க மாட்டார்
சதிசெய்தும் பதவியைத் தாங்கி நிற்பார்
சந்ததி இடைவெளித் தீங்கு காணார்
அதிபதி ஐங்கரா பதவி ஆசைக்(கு)
அடிபடும் அவர்களைக் கண்டு கொள்ளே. 5

716. நல்லவர்கள் இருக்கின்றார் நான்கு பேர்கள்
நடுக்காட்டில் பூத்தநறு மலர்கள் போல
சொல்லதனைக் கேளாதார் தொடர்ந்து செய்யும்
தொல்லைகளால் அவர்தள்ளித் தூர வுள்ளார்
எல்லையிலா அறிவுமநு பவமும் எல்லாம்
எவருக்கும் பயன்படா திருத்தல் நன்றோ
கல்விகலை அடியவருக் களித்துக் காக்கும்
கணபதியே காலத்தின் கோலம் காணே. 6

717. சூதுகளும் வாதுகளும் தொடர்வ தாலே
தொல்லைதுயர் அல்லலிடர் படர்வ தாலே
மேதினியிற் பாதகர்கள் மிகுவ தாலே
விண்ணுலகிற் அசுரர்களை வீழ்த்தி முன்னாள்
நீதிநிலை நாட்டியது போல நீயும்
நீள்நிலத்திற் சூரன்போர் நிகழ்த்த வேண்டும்
ஆதியரே ஆனைமுக நீதி மன்னா
அதிதீர வருள்காட்டி ஆண்டு கொள்ளே. 7

718. உள்ளவருக் குள்ளமதைத் தருதல் வேண்டும்
உரியவருக் குரிமைகளை அளித்தல் வேண்டும்
வெள்ளமெழ முன்னதனைத் தடுத்தல் வேண்டும்
மேன்மைமிகு நீதிமுறை விளங்க வேண்டும்
தெள்ளமுதத் தமிழினிமைத் தென்றல் உள்ள
திசையெங்கும் சிறப்பாக வீச வேண்டும்
அள்ளிவரம் அகத்தியருக் களித்த ஞான
ஆனைமுகப் பெருமானே அருள்செய் வீரே. 8

719. எனக்கென்றிவ் வுலகத்தில் உன்னை யன்றி
யாருமில்லை எதுவுமில்லை என்ப தெல்லாம்
நினைக்கின்ற உன்னருளால் உணரப் பெற்றேன்
நிலையில்லா உலகத்தின் நிலையும் கண்டேன்
உனக்கன்றிப் பிறருக்குத் தொண்டு செய்யேன்
உடலாவி உணர்வெல்லாம் உனக்கே தந்தேன்
கனக்கின்ற மனமில்லைக் கண்ணீ ரில்லைக்
கணபதியே எனக்குள்ளே நீதான் காணே. 9

720. புலன்சோர உடல்சோர்ந்து புவியிற் பெற்ற
பொய்வாழ்வைப் புறக்கணித்திவ் வுயிர்போம் வேளை
குலஞ்செல்வம் கூடியநல் மனைவி மக்கள்
குணமான கற்றவர்கள் நண்பர் கூட்டம்
வலஞ்செய்த மாணவர்கள் விழாக்கள் வைத்து
மதிப்பளித்தார் எவரேனும் உதவ மாட்டார்
நலஞ்செய்தவ் வேளையிலே விநாய காநீ
நல்லகதி தந்தருள வேண்டு வேனே. 10

36. பொது - இகபரப் பதிகம்

721. உலகெ லாமொலி ஓரொலி ஓமொலி
பலரும் கண்டு பணியக் கருணையால்
மலைவில் யானை வடிவினில் வந்துள்ள
தலைவரின் திருத் தாள்தலை தாங்குவாம். 1

722. வானும் விண்ணும் வணங்கி வரம்பெறும்
தானொப் பிற்சிவ சக்தி முதற்பிள்ளை
ஞான மேனியர் நால்வேத நாதனார்
ஆனை மாமுக அண்ணலைப் போற்றுவாம். 2

723. மூல மந்திர முகத்தினைக் கொண்டவர்
கால ஊழிக் கணக்குகள் வென்றவர்
மால யன்தேவ மன்னும் வணங்கிடும்
மேல வர்பிள்ளை யாரருள் வேண்டுவாம். 3

724. கல்வி கற்கவும் கற்றதில் நிற்கவும்
பல்வகைக் கலை பயின்றரங் கேறவும்
செல்வம் சேர்க்கவும் சீரறஞ் செய்யவும்
வல்ல மாகண பதியை வணங்குவாம். 4

725. புத்தி சித்தி பொருந்திச் சிறக்கவும்
வித்துவம் நன்கு விருத்தியுற் றோங்கவும்
பத்தி செய்து பரவி அனுதினம்
சித்தி விநாயகர் திருவடி போற்றுவாம். 5

726. தளர்ச்சி நீங்கவும் ஊக்கம் தழைக்கவும்
அதிர்ச்சி அல்லல் அலைச்சல் அகன்றுநல்
முயற்சி முட்டின்றி முற்றுற வாகவும்
புகழ்ச்சி மிக்கஏ ரம்பரைப் போற்றுவாம். 6

727. ஆசை ஆடம்ப ரங்கள் அடங்கவும்
பாசம் நீங்கவும் பக்குவம் தாங்கவும்
பூசு நீறுபோல் உள்ளம் பொலியவும்
ஈசர் ஐங்கரப் பிள்ளையை ஏத்துவாம். 7

728. ஏய மச்சம் குடிவகை இன்றியும்
நோய்கள் இன்றியும் நூதன இவ்வுடல்
கோயி லாக விளங்கக் குருபரன்
ஆய ஆனை முகனருள் வேண்டுவாம். 8

729. சோத னைதுயர் வென்று துலங்கவும்
நீதி நேர்மையில் நின்று நிலைக்கவும்
காதல் செய்து கணபதிப் பிள்ளையார்
வேத வார்கழல் வீழ்ந்து வணங்குவாம். 9

730. பித்தம் தீரவும் சித்தம் தெளியவும்
தத்துவப் படி தாண்டிக் கடைசியில்
முத்தி இன்பத்தில் மூழ்கித் திளைக்கவும்
அத்தி மாமுக ஐயனை வேண்டுவாம். 10

37. பொது - வேண்டற் பதிகம்

731. நல்லதை நினைக்க வேண்டும்
நல்லதைப் பேச வேண்டும்
நல்லதை எழுத வேண்டும்
நல்லதைச் செய்தல் வேண்டும்
நல்லவை நடப்ப தற்கு
நன்குகை கொடுத்தல் வேண்டும்
நல்லவர்க் குதவு மென்வி
நாயகா அருள்செய் வீரே. 1

732. அன்புடன் எழுதல் வேண்டும்
அன்புடன் தொழுதல் வேண்டும்
அன்புடன் பழக வேண்டும்
அன்புடன் உழைக்க வேண்டும்
அன்புடன் உதவ வேண்டும்
அன்பர்கள் கூட்டம் வேண்டும்
அன்பினை வளர்க்க எந்தன்
ஐங்கரா அருள்செய் வீரே. 2

733. அறஞ்செய விரும்ப வேண்டும்
அறஞ்செயத் துணிய வேண்டும்
அறஞ்செய உழைக்க வேண்டும்
அறப்பணிக் குதவ வேண்டும்
அறஞ்செயத் தூண்ட வேண்டும்
அறவழி நடக்க வேண்டும்
அறமுறை உலகை யாள
ஐங்கரா அருள்செய் வீரே. 3

734. வஞ்சமில் லாத எண்ணம்
வஞ்சமில் லாத பேச்சு
வஞ்சமில் லாத செய்கை
வஞ்சமில் லாத நட்பு
வஞ்சமில் லாத நெஞ்ச
வாழ்க்கையை வாழ வேண்டும்
குஞ்சரப் பிள்ளை உம்மைக்
கும்பிட்டு வேண்டு வேனே. 4

735. மனத்தினை அடக்க வேண்டும்
மாசுகள் துடைக்க வேண்டும்
நினைத்தவை கிடைக்க வேண்டும்
நேர்மையில் நடக்க வேண்டும்
சினத்தினைக் கடக்க வேண்டும்
சிறந்தவை படைக்க வேண்டும்
அனைத்தையும் அருள வேண்டும்
ஐங்கரப் பிள்ளை யாரே. 5

736. எப்பொருள் எவர்சொன் னாலும்
அப்பொருள் இயல்பை யாய்ந்து
மெய்ப்பொருள் அறிய வேண்டும்
விடாப்பிடி யாளர் நாட்டும்
பொய்ப்பொருள் விளைக்குந் தீமை
போக்கிடுந் துணிவும் வேண்டும்
ஒப்பரும் ஞான மேனி
ஓம்முகா அருள்செய் வீரே. 6

737. ஆசைக்கும் அளவு வேண்டும்
ஆசையை அடக்க வேண்டும்
பாசங்கள் குறைய வேண்டும்
பக்குவம் நிறைய வேண்டும்
வேசங்கள் கலைய வேண்டும்
மேன்மைகொள் நேர்மை பூண்டு
தேசங்கள் சிறக்க யானைச்
செம்முகா அருள்செய் வீரே. 7

738. மக்களை மதிக்க வேண்டும்
மக்களுக் குதவ வேண்டும்
தக்கவை போற்ற வேண்டும்
சாதிகள் போக்க வேண்டும்
பக்குவ மனத்தைக் கொண்டு
பகைமையை நீக்க வேண்டும்
விக்கினம் தீர்க்க வல்ல
விநாயகா அருள்செய் வீரே. 8

739. மாசறு சூழல் வேண்டும்
மாலைநல் மதியம் வேண்டும்
பூசல்வண் டார்க்கும் வாசப்
புதுமலர்ச் சோலை வேண்டும்
வீசுதண் தென்றல் மெல்ல
வீழ்ந்திடும் அருவி மேவும்
ஆசிலா அமைதி வேண்டும்
ஐங்கரா அருள்செய் வீரே. 9

740. என்னைநான் அறிய வேண்டும்
என்னுளே இருக்கும் ஈசன்
தன்னைநான் உணர வேண்டும்
தவமிருந் தவரைப் பேணும்
உன்னத வாழ்க்கை யாலே
உயர்வடைந் துய்ய வேண்டும்
மின்னலார் ஞான மேனி
விநாயகா அருள்செய் வீரே. 10

38. பொது - திருத்தாட் பதிகம்

741. மந்திரத் துள்ளி ருந்து
மகிழ்வுறத் தந்தை தாயர்
வந்துமுன் நின்ற தாளை
வானவர் தொழுத தாளை
எந்தைவி நாய காநின்
இன்னருள் பொழிய வந்தென்
ஐந்துபேர் தாமும் ஆர்க்க
அழகுறக் காட்டி னீரே. 1

742. ஆதியில் லாத தாளை
அண்டங்கள் அளக்கும் தாளை
ஓதரும் ஊழி நின்றே
உலகத்தை ஓம்புந் தாளை
வேதங்கள் ஏத்தும் தாளை
விநாயகா கருணை கொண்டிப்
பேதையும் கண்டு மேலாம்
பேறெய்தக் காட்டி னீரே. 2

743. பெற்றவர் தாமே இந்தப்
பேருல கென்று பேணிச்
சுற்றிவந் தொப்பில் லாத
சுவைக்கனி பெற்ற தாளை
உற்றவ ரன்றி மற்றோர்
உணர்வதற் கரிய தாளை
சிற்றறி வுடையே னுக்கும்
சிறப்புறக் காட்டி னீரே. 3

744. அந்தரம் தொழுதால் தீர்க்கும்
அல்லல்கள் அழுதால் போக்கும்
மந்திரத் தேரை வீழ்த்தும்
மதியினைத் துயரில் ஆழ்த்தும்
விந்தைகொள் தாளை எந்தை
விநாயகா விருப்பால் வந்தென்
சிந்தனை சிறக்க வேண்டித்
தெளிவுறக் காட்டி னீரே. 4

745. பகைத்திறம் எளிதில் நீக்கும்
பக்குவம் வளர்த்துக் காக்கும்
இகத்தினில் எமது வாழ்வை
இங்கித மாக்கும் ஆன்ற
அகத்தியர் துரத்த ஓடும்
ஆனைமா முகத்தீர் எந்தன்
அகத்தையும் அற்பு தத்தாள்
ஆட்கொள்ளக் காட்டி னீரே. 5

746. ஆர்வுடன் அடியார் நாட்டும்
ஆகமக் கோயில் கொள்ளும்
ஊர்மனை உள்ளி ருக்கும்
வீதியின் ஓரம் தங்கும்
சீர்வளர் விநாய காவிச்
சிறியவன் தனக்கும் நின்றன்
வார்கழல் மகிமை தன்னை
வடிவுறக் காட்டி னீரே. 6

747. தேவர்கோன் சிவ பிரானைச்
சேவித்துப் பூசை செய்பூங்
காவினைத் தழைக்கச் செய்யக்
காவிரி தந்த தாளை
ஆர்வலர் அன்பில் ஊறி
ஆனந்த நடஞ்செய் தாளைத்
தீவினை அகல விந்தச்
சிதலைக்கும் காட்டி னீரே. 7

748. ஆடக வள்ளி காதல்
அறுமுகன் அழகில் தூங்க
நாடகம் நடித்த தாளை
நற்றவ அடியார் நண்ணி
வீடகம் வேண்டும் தாளை
விநாயகா எந்தன் நெஞ்சும்
தேடக மாகி ஏத்திச்
சேவிக்கக் காட்டி னீரே. 8

749. புத்தியைப் புதுக்கும் தக்க
புகழினைப் பெருக்கும் நல்ல
சித்தியை அளிக்கும் தெய்வ
சிந்தையை வளர்க்கும் வல்ல
வித்தைகள் விருத்தி யாக்கும்
விநாயகா வியன்தாள் தன்னைப்
பத்திசெய் தோங்க இந்தப்
பதருக்கும் காட்டி னீரே. 9

750. அனாதையாம் என்னை ஏத்தி
ஆதரித் தருள்பா லித்த
விநாயகா வீர கத்தி
வித்தகா போற்றி சித்தி
விநாயகா எனது வாழ்வின்
விதிமுறை நீயே போற்றி
கனாவிலும் காக்கும் செல்வக்
கணபதி போற்றி போற்றி. 10

39. பொது – நீறணிப் பதிகம்

751. நீறணிவோம் திரு நீறணிவோம் - உயர்
ஏறுடைய சிவப் பிள்ளையினை - ஏத்தி
நீறணிவோம் திரு நீறணிவோம். 1

752. மாறுபடு கய மாமுகனை - வென்ற
வீறுடைய பிள்ளை மேன்மைதனைப் - போற்றி
நீறணிவோம் திரு நீறணிவோம். 2

753. ஆறுமுகர் அண்ணர் ஆனைமுகர் - வெற்றி
நீறணிகொள் நெற்றிக் கண்ணுடையார் - இன்ப
நீறணிவோம் திரு நீறணிவோம். 3

754. மீறிவருந் துயர் தீர்த்தருளி - நல்ல
ஆறுதலைத் தரும் ஆனைமுகர் - அணி
நீறணிவோம் திரு நீறணிவோம். 4

755. ஏறிடுவர் எலி மீதினிலே - பொருள்
கூறிடுவர் வேத வியாசருக்கே - அவர்
நீறணிவோம் திரு நீறணிவோம். 5

756. சீறிவரும் பகை கூறுபட - அருள்
மீறிவரச் செயும் விநாயகரைப் - பாடி
நீறணிவோம் திரு நீறணிவோம். 6

757. தேறிவரச் செல்வம் தேடிவரப் - புகழ்
ஆறுசெயும் எங்கள் ஐங்கரனார் - பூசும்
நீறணிவோம் திரு நீறணிவோம். 7

758. ஊறிவரக் கவி ஒத்துவருந் - தமிழ்
மீறிவரச் செயும் விநாயகரின் - அருள்
நீறணிவோம் திரு நீறணிவோம். 8

759. நீறுசெயப் புரம் மூன்றினையும் - சிவன்
ஏறியதேர் தனை இருத்தியவர் - சித்த
நீறணிவோம் திரு நீறணிவோம். 9

760. ஆறுதலைச்[1] சிவன் மூத்தபிள்ளை - வினை
பாறிவிழ[2] அருள் பாலிப்பவர் - நெற்றி
நீறணிவோம் திரு நீறணிவோம். 10

---

1 ஆறுதலை - ஆறுபாயுந் தலை
2 பாறிவிழ - சிதறி விழ

40. பொது – ஓங்காரப் பதிகம்

761. ஓங்கார வடிவத்தை ஓங்குமா சிகரத்தை
ஓங்காரம் என்று சொல்லியே
ஓங்கார மூர்த்தியுடன் ஓயாமல் உறவாடின்
ஓங்காரச் சுகம் ஓங்குமே. 1

762. ஓங்கார இன்பசுகம் நீங்காத பத்தருக்குத்
தீங்கேதும் வருவ தில்லையாம்
பாங்காவர் பகைத்தவரும் பாராளும் திறமைகளும்
பகல்போல ஒளி வீசுமே. 2

763. ஓங்கார மந்திரத்தை ஓயாமல் உச்சரித்தால்
ஆங்காரம் பட்டு விடுமாம்
நீங்காத தேவசுகம் நீந்தாமல் நீந்திமனம்
நித்தியத்தைத் தொட்டு விடுமாம். 3

764. அரனாரின் மூத்தபிள்ளை அவராற்றல் யாவற்றையும்
வரமாகப் பெற்றி ருக்கின்றார்
அரனாரை விநாயகரிற் சரியாகக் காண்பவர்க்குத்
தெரியாத தொன்று மில்லயாம். 4

765. தீராத தீமைகெடும் வாராத நன்மைவரும்
சீராக ஆனை முகனை
ஆராத பத்தியுடன் ஆதார சுத்தியுடன்
அடைந்தார்க்கும் அடிய வருக்கே. 5

766. ஆடாமல் அசையாமல் பாசாங்கு சத்தாலே
அனைத்தையும் செய்ய வல்லவர்
கூடாமல் கூடியெங்கள் குறையாவும் நீக்கிவீடு
கூடிவர அருள் செய்பவர். 6

767. ஊரில்லைப் பேரில்லைச் சீரில்லைச் சிறப்பில்லை
ஓங்கார மூர்த்தி யில்லையேல்
வீராதி வீரரிவர் விடுதலையைத் தரவல்ல
பேரான தலைவர் இவரே. 7

768. ஒருதலை இரண்டுதாள் மூன்றுகண் நான்குதோள்
ஐந்துகரம் கொண்ட பிள்ளையே
அருமாறு முகற்கண்ணர் ஏழுலகை ஆளுகின்ற
எட்டுக்குணத் தந்தை மகனே. 8

769. சாத்திரங்கள் தேவையில்லை வாத்தியங்கள் தேவையில்லை
யாத்திரையும் தேவை யில்லையே
காத்தருளக் காத்திருக்கும் பூத்தமுகப் பிள்ளையின்தாள்
ஏத்தி ஏத்தித் தொழுபவர்க்கே. 9

770. ஓங்குமுடல் ஓங்குமுள்ளம் ஓங்குமுயிர் உண்மை ஓங்கும்
ஓம் என்னும் ஓங்காரத்தினால்
ஓங்கும்கல்வி செல்வம்வீரம் நீங்கும் நோய்கள் தேங்குமின்பம்
ஓம் முகத்தர் செய்வர் அருளே. 10

6

எங்குமுள்ள பிள்ளையார்

எங்குமுள்ள பிள்ளையார் – உள்ளடக்கம்

		பக்க எண்
	அணிந்துரை	243
	காப்பு	251
	நூல்	
1.	நுணாவில் கோலங்கரை (கொல்லாபுரி) வீரகத்தி விநாயகர்	252
2.	நுணாவில் மணங்குணாய்ப் பிள்ளையார்	252
3.	மறவன்புலவு வள்ளக்குள வீரகத்திப் பிள்ளையார்	253
4.	குரும்பசிட்டி சித்தி விநாயகர்	253
5.	புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்தி விநாயகர்	253
6.	ஊரெழுப் பிள்ளையார்	254
7.	உரும்பராய் ஓடையம்பதிக் கற்பகப் பிள்ளையார்	254
8.	உரும்பராய் கருணாகரப் பிள்ளையார்	254
9.	கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார்	255
10.	திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார்	255
11.	மயிலிட்டி வருத்தலைவிளான் மருதடி விநாயகர்	255
12.	குப்பிளான் கற்பக விநாயகர்	256
13.	குப்பிளான் சோதி விநாயகர்	256
14.	இணுவில் செகராசசேகரப் பிள்ளையார்	256
15.	இணுவில் பரராசசேகரப் பிள்ளையார்	257
16.	ஏழாலை அத்தியடி விநாயகர்	257
17.	சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார்	257
18.	மல்லாகம் பழம் பிள்ளையார்	258
19.	தெல்லிப்பளை காசி விநாயகர்	258
20.	அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்	258
21.	அளவெட்டி அழகொல்லை விநாயகர்	259
22.	அளவெட்டி பெருமாக்கடவை விநாயகர்	259
23.	அளவெட்டி – மல்லாகம் குருக்கள் கிணற்றடி விநாயகர்	259
24.	பன்னாலை வரத்தலை விநாயகர்	260
25.	இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார்	260

26.	இளவாலை பெரியவிளான் பிள்ளையார்	260
27.	இளவாலை முள்ளானை விநாயகர்	261
28.	எழுதுமட்டுவாள் மருதங்குள விநாயகர்	261
29.	சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர்	261
30.	மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார்	262
31.	வரணி கும்பிட்டான்புலம் கற்பகப் பிள்ளையார்	262
32.	கைதடிப் பிள்ளையார்	262
33.	நாவற்குழி சித்தி விநாயகர்	263
34.	அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர்	263
35.	வண்ணார்பண்ணை விசுவேச விநாயகர்	263
36.	தாவடி விநாயகர்	264
37.	உடுவில் சிவஞானப் பிள்ளையார்	264
38.	உடுவில் கிழக்கு கற்பக விநாயகர்	264
39.	மானிப்பாய் மருதடி விநாயகர்	265
40.	ஆனைக்கோட்டை உத்துங்க விநாயகர்	265
41.	சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார்	265
42.	சங்கானை மகாதேவப் பிள்ளையார்	266
43.	சுழிபுரம் - பறாளாய் ஈசர விநாயகர்	266
44.	அராலி சிந்தாமணிப் பிள்ளையார்	266
45.	அராலி கரைப்பிட்டி விநாயகர்	267
46.	மூளாய் சித்திவிநாயகர்	267
47.	கொல்லன்கலட்டி வீரகத்தி விநாயகர்	267
48.	காங்கேசன்துறை ஆனந்தப் பிள்ளையார்	268
49.	வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையார்	268
50.	அச்சுவேலி உலவிக்குளத்துப் பிள்ளையார்	268
51.	நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார்	269
52.	நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார்	269
53.	சிறுப்பிட்டி செல்லப் பிள்ளையார்	269
54.	அல்வாய் மாலைச்சந்தைப் பிள்ளையார்	270
55.	அல்வாய் புதுக்குளக்கரைப் பிள்ளையார்	270
56.	நவுண்டில் குலணைப்பதி விநாயகர்	270
57.	கரவெட்டி தச்சன்தோப்புப் பிள்ளையார்	271
58.	உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார்	271
59.	புலோலி தெற்கு அத்தியடிப் பிள்ளையார்	271
60.	புலோலி தெற்கு முறாவில் பிள்ளையார்	272
61.	புலோலி தெற்கு சின்னத்தாய்ப் பிள்ளையார்	272
62.	புலோலி தெற்கு பெரியத்தாய்ப் பிள்ளையார்	272
63.	புலோலி தெற்கு புற்றளை சித்தி விநாயகர்	273
64.	புலோலி ஆலடிப் பிள்ளையார்	273

65. வல்லிபுரம் குருக்கட்டு சித்தி விநாயகர் 273
66. வல்லிபுர மாயவன் நாமக்குளப் பிள்ளையார் 274
67. கரணவாய் வடக்கு மூத்த விநாயகர் 274
68. கரணவாய் தெற்கு கலட்டிப் பிள்ளையார் 274
69. வல்வெட்டி - வேவில் வீரகத்திப் பிள்ளையார் 275
70. வல்வெட்டி - மாடந்தைப் பிள்ளையார் 275
71. வல்வெட்டித்துறை நெடிகாட்டுப் பிள்ளையார் 275
72. வல்வெட்டித்துறை வைகுந்தப் பிள்ளையார் 276
73. வல்வெட்டித்துறை திருச்சிற்றம்பலப் பிள்ளையார் 276
74. வல்வெட்டித்துறை உலகுடைய பிள்ளையார் 276
75. வல்வெட்டித்துறை புஸ்கரணிப் பிள்ளையார் 277
76. வல்வெட்டித்துறை தச்சுக்கொல்லை விநாயகர் 277
77. பருத்தித்துறை சித்தி விநாயகர் 277
78. பொலிகண்டி சித்தி விநாயகர் 278
79. துன்னாலை வெல்லிகந்தோட்டப் பிள்ளையார் 278
80. துன்னாலை கோயிற்கடவைப் பிள்ளையார் 278
81. வலிக்கண்டி சங்களைப் பிள்ளையார் 279
82. தும்பளை இலட்சுமாந்தோட்டப் பிள்ளையார் 279
83. துன்னாலை வல்லியானந்தப் பிள்ளையார் 279
84. வியாபாரிமூலை சித்திவிநாயகர் 280
85. நல்லூர் கைலாசபிள்ளையார் 280
86. நல்லூர் நிழல்விழுந்த பிள்ளையார் 280
87. நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் 281
88. நல்லூர் பண்டாரக்குளப் பிள்ளையார் 281
89. புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் 281
90. வேலணை மகா கணபதிப்பிள்ளையார் 282
91. மண்கும்பான் பிள்ளையார் 282
92. மண்டைதீவு சித்திவிநாயகர் 282
93. புங்குடுதீவு - கலட்டி பட்டிவிநாயகர் 283
94. புங்குடுதீவு - இறுப்பிட்டி வரசித்தி விநாயகர் 283
95. புங்குடுதீவு பெரியபுலம் பிள்ளையார் 283
96. புங்குடுதீவு அரியநாயகன்புலம் பிள்ளையார் 284
97. புங்குடுதீவு சந்தையடிப் பிள்ளையார் 284
98. புங்குடுதீவு - வல்லன்பதி கண்டிப் பிள்ளையார் 284
99. புங்குடுதீவு மடத்துவழிப் பிள்ளையார் 285
100. புங்குடுதீவு காட்டுப் பிள்ளையார் 285
101. அனலைதீவு - பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் 285
102. நெடுந்தீவு நடுக்குறிச்சிப் பிள்ளையார் 286
103. நெடுந்தீவு நெழுவினி விநாயகர் 286

104. நெடுந்தீவு காட்டுப் பிள்ளையார் 286
105. பூநகரி - செட்டியகுறிச்சி திகிரி விநாயகர் 287
106. பரந்தன் பன்னைக்கண்டிப் பிள்ளையார் 287
107. முறிகண்டி வழிப்பிள்ளையார் 287
108. மாங்குளம் கனகராயப் பிள்ளையார் 288
109. துணுக்காய் விநாயகர் 288
110. துணுக்காய் ஆலங்குளப் பிள்ளையார் 288
111. வவுனியா சிந்தாமணி விநாயகர் 289
112. வவுனியா - புதுக்குளம் சித்திவிநாயகர் 289
113. முள்ளியவளை காட்டாவிநாயகர் 289
114. தண்ணீரூற்று - ஊற்றங்கரை சித்திவிநாயகர் 290
115. முள்ளியவளை - கணுக்கேணி கற்பகப் பிள்ளையார் 290
116. முல்லைத்தீவு - கரைச்சிக் குடியிருப்பு வீரகத்திப் பிள்ளையார் 290
117. முல்லைத்தீவு சிலாவத்தைப் பிள்ளையார் 291
118. முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப் பிள்ளையார் 291
119. முல்லைத்தீவு உப்புமாவடிப் பிள்ளையார் 291
120. முல்லைத்தீவு செம்மலைப் பிள்ளையார் 292
121. முல்லைத்தீவு - கோட்டகக்கேணி கைவெட்டிப் பிள்ளையார் 292
122. முல்லைத்தீவு தென்னைமரவடிப் பிள்ளையார் 292
123. முல்லைத்தீவு - அமரிவயல் கூன்பிள்ளையார் 293
124. குமிழமுனை கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் 293
125. குமிழமுனை கற்பக விநாயகர் 293
126. மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் 294
127. புளியந்தீவு ஆனைப்பந்திப் பிள்ளையார் 294
128. பழுகாமம் மாவேற்குடாப் பிள்ளையார் 294
129. காரைதீவு நந்தவனப் பிள்ளையார் 295
130. வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார் 295
131. கோமாரி சங்கமான்கண்டிப் பிள்ளையார் 295
132. கதிர்காமம் செல்வப் பிள்ளையார் 296
133. கல்முனை - பாண்டிருப்பு மாணிக்கப் பிள்ளையார் 296
134. வில்லூன்றி வீரகத்திப் பிள்ளையார் 296
135. திருகோணமலை - திரியாய் கட்டுக்குளம் விநாயகர் 297
136. திருகோணமலை - திரியாலை தஞ்ச விநாயகர் 297
137. புத்தளம் சித்தி விநாயகர் 297
138. கொழும்பு - பம்பலப்பிட்டி சம்மாங்கோடு மாணிக்க விநாயகர் 298
139. கொழும்பு - முகத்துவாரம் சித்தி விநாயகர் 298
140. கொழும்பு - செட்டித்தெரு முத்து விநாயகர் 298
141. கொழும்பு - கொட்டாஞ்சேனை வரதராசப் பிள்ளையார் 299
142. மருதானை - கப்பித்தாவத்தை பாலசெல்வ விநாயகர் 299

143.	குருநாகல் செல்வ விநாயகர்	299
144.	கண்டி செல்வ விநாயகர்	300
145.	மாத்தளை முத்து விநாயகர்	300
146.	இரத்தோட்டை செல்வ விநாயகர்	300
147.	அல்தும் முல்லை ஆதிவிநாயகர்	301
148.	அட்டன் மாணிக்கப் பிள்ளையார்	301
149.	பதுளை மாணிக்க விநாயகர்	301
150.	காரைக்குடி பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்	302
151.	காரைக்குடி வழிவிடும் பிள்ளையார்	302
153.	செங்காட்டங்குடி வாதாபி கணபதி	302
154.	திருவலஞ்சுழி வெள்ளை விநாயகர்	303
156.	திருச்சி மலைக்கோட்டை மாணிக்க விநாயகர்	303
157.	திருச்சி மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார்	303
158.	மதுரை சித்தி விநாயகர்	304
159.	திருவையாறு காரியசித்தி விநாயகர்	304
160.	திருவண்ணாமலை செந்தூர கணபதி	304
161.	தஞ்சாவூர் உச்சிட்ட கணபதி	305
162.	திருவெண்ணெய் நல்லூர் பொல்லாப் பிள்ளையார்	305
163.	திருநாரையூர் ஆண்ட பிள்ளையார்	305
164.	மயிலாப்பூர் செல்வ விநாயகர்	306
165.	காஞ்சிபுரம் விகடசக்கர விநாயகர்	306
166.	சிதம்பரம் நரமுக விநாயகர்	306
167.	சிதம்பரம் திருமுறைசுட்டிய விநாயகர்	307
168.	சிதம்பரம் கற்பகப் பிள்ளையார்	307
169.	திருவாவடுதுறை அழகிய விநாயகர்	307
170.	திருக்கடவூர் கள்ளவாரணப் பிள்ளையார்	308
171.	திருமறைக்காடு சிந்தாமணி விநாயகர்	308
172.	கோவை புலியக்குளம் மகாகணபதி	308
173.	கோவை ஆர். எஸ். புரம் இரத்தின விநாயகர்	309
174.	காசி துண்டி விநாயகர்	309
175.	கனடா - பிராம்டன் கற்பக விநாயகர்	309
176.	கனடா - மொன்றியல் மகாகணபதி	310
177.	கனடா - எட்மன்டன் மகாகணபதி	310
178.	இங்கிலாந்து - சரே, தோன்டன் ஈத்து சக்தி கணபதி	310
179.	யேர்மனி - சூரூக்காத்து (ஸ்ரூட்கார்ட்) சித்தி விநாயகர்	311
180.	யேர்மனி - அற்றிங்கன் வரசித்தி விநாயகர்	311
181.	பிரான்சு - இலாக்கூர்னெவ் சித்தி விநாயகர்	311
182.	சீசெல்சு - விக்டோரியா நவசக்தி விநாயகர்	312

உ

அணிந்துரை

திரு. முருகேசு இராமலிங்கம், B.Sc., Dip. in Ed.,
முன்னைநாள் அதிபர், யாழ். கனகரத்தினம் ம.ம.வி.
கொத்தணி அதிபர், நல்லூர்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன் னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலான ஈழத்து இலக்கிய வளர்ச்சி ஐம்பதுகளிலிருந்து துரித நடைபோட்டு வருவது அறியக் கிடக்கின்றது. தற்போதைய இலக்கியப் படைப்புகள் மிகுதியும் ஈழத்துத் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்தே வெளிவரு கின்றன. இதற்கு முக்கிய காரணர்களாக இருப்பவர்கள் கவிநாயகர் கந்தவனம் போன்ற மூத்த இலக்கிய கர்த்தாக்களாவர். அவர்களின் சிந்தனைச் செறிவு, பல்துறை அறிவு, ஆற்றல், அயரா முயற்சி ஆகியவற்றின் பலனாகப் பல்துறை சார்ந்த நூல்கள் புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

கடந்த கால்நூற்றாண்டு காலமாகத் தாம் பிறந்த மண்ணாகிய ஈழத் திருநாட்டில் ஏற்பட்டுள்ள கொடிய போர்ச்சூழல் காரணமாக, அநுபவித்த துன்ப துயரங்களிலிருந்து நீங்கிப் புலம்பெயர்ந்து வாழும் புதிய சூழலிற் புதிய சமூகக் கட்டமைப்பில் தம்மைப் பொருத்திக் கொள்ளுவதில் ஏற்பட்ட பலவித இன்னல்களும் இடையூறுகளும் அச்சவால்களை எதிர்த்து வெற்றிகொள்ள எடுத்த முயற்சிகளும் பண்பாடு கலாச்சாரச் சிக்கல்களும் இன அடையாளம் அழியாது பாதுகாக்க வேண்டிய கடப்பாடுமே இத்தகைய ஆக்கங்களின் முக்கிய உரிப்பொருள்களாகின்றன. அதே வேளை தாயக நினைவும் விடுதலை உணர்வும் கலந்த ஆக்கங்களும் படைக்கப்பட்டுவருகின்றன.

இவற்றோடு சமயம், சமூக முன்னேற்றம், சூழற் பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற துறைகளையும் அளாவி அதிக ஆக்கங்களைப் படைத்தவராகக் கவிநாயகர் கந்தவனம் விளங்குகின்றார். இவரது *சூழற் பாதுகாப்பு, ஆன்மிகக் கவிதைகள், பாவாரம்* போன்றவற்றை வித்தியாசமான படைப்புகளாக நாம் அவதானிக்கிறோம். கவிதை,

கதை, கட்டுரை, நாடகம் போன்ற வடிவங்கள் அனைத்திலும் வல்லவ ராயினும் இவருக்குக் கைவந்த கலையாக இருப்பது கவிதையே யாகும். அதனாலன்றோ கவிநாயகர் என்று மக்கள் இவரை அழைத்து வருகின்றனர்.

தென்மராட்சியில் நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிநாயகர், சாவகச்சேரி இறிபேக் கல்லூரியிற் கல்வி கற்ற காலத்திலேயே தமது எழுத்தாற்றலை அன்றைய *ஈழகேசரி* இதழில் வெளிவந்த சிறுசிறு ஆக்கங்கள்மூலம் வெளிப்படுத்தியிருந்தார். பின்னர் உயர் கல்விக்காக அவர் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் 1954ஆம் ஆண்டு சேர்ந்த பொழுது, நானும் அங்கு கற்கச் சென்றேன். அங்குதான் இவ்வுத்தமரைக் கண்டு பழகி உற்ற நண்பனாகும் வாய்ப்பினைத் திருவருளாற் பெற்றேன்.

நாம் இருவரும் அக்கல்லூரியின் செலையூர் விடுதியில் வாழ்ந்த காலம் உண்மையிலேயே இன்பகரமானதும் மறக்க முடியாததுமாகும். அவர் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் உதவிச் செயலாளர் பதவிக்குப் போட்டியிட்டு வென்றதைத் தனது வரலாற்று நூலிற் குறிப்பிடும்பொழுது நானும் சேலம் பார்த்தசாரதி போன்ற நண்பர்களும் செய்த சிறு உதவிகளைக்கூட மறவாது குறிப்பிட்டிருக்கின்றார். என்னே அவரின் நன்றி மறவா நற்பண்பு! இதனையே,

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்

என்பார் வள்ளுவர். கவிஞர் கந்தவனம் கல்லூரி விடுதித் தமிழ் மன்றத்தால் வெளியிடப்பட்ட *இளந்தமிழன்* என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகவும் பணியாற்றினார். அதற்கு முந்தைய ஆண்டு அதன் ஆசிரியராகச் சிற்பி சரவணபவன் இருந்தார்.

கவிஞர் முதன்முதலாக எழுதி வெளிவந்த நூல் *1½ ரூபாய்* என்பது. 1954இல் விடுதியில் வாழ்ந்த காலை நாம் இருவரும் அதை வாசித்து மகிழ்ந்து நயந்ததை அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் என்னால் மறக்க முடியவில்லை என்பதை இன்று கவிஞரால் நம்ப முடியவில்லை.

நீண்ட காலத்துக்குப் பிறகு அவரைக் கனடாவிற் சந்திக்கக் கிடைத்தமை விநாயகப் பெருமானின் சித்தம். விநாயகப் பெருமான் அவரது குலதெய்வம். குலதெய்வத்தைப் பற்றி அவர் பாடிய பாடல்களை எல்லாம் தொகுத்து வெளியிடும் திட்டத்தில் இப்பொழுது அவர் ஈடுபட்டிருக்கின்றார். அதில் இடம்பெறவிருக்கும் இந்த

எங்குமுள்ள பிள்ளையார் என்ற நூலுக்கு அணிந்துரை எழுதக் கிடைத்த வாய்ப்பு நட்பின் உரிமையால் எனக்குக் கிடைத்திருக்கிறது.

விநாயகப் பெருமான் எமது விக்கினங்களை எல்லாம் தீர்ப்பதனால் அவரை விக்னேஸ்வரன் என வணங்குகின்றோம். நாம் மேற்கொள்ளும் அனைத்துக் காரியங்களும் எந்தவித குறையும் ஏற்படாது நிறைவேற வேண்டுமென முதலில் நாம் வேண்டுவது பிள்ளையாரையே. சமய அநுட்டானங்கள் யாவற்றிலும் நடைபெறும் பூசைகளில் முதலில் இடம்பெறுவது விநாயகர் பூசையே. முழுமுதற் கடவுளாம் சிவபெருமானின் பல்வேறு வடிவங்களில் மூத்த புதல்வராயும் ஞானவடிவினராயும் ஓங்கார மூர்த்தியாயும் ஐந்து கரத்தராயும் ஆனைமுகத்தராயும் விளங்கும் பிள்ளையாரின் பெருமை கூறும் பாடல்கள் பல உளவாயினும் கவிநாயகர் கந்தவனம் அவர்க ளின் பாடல்கள் சற்று வித்தியாசமானவை; காலத்துக்கு ஏற்றவை; காலத்தைக் காட்டுபவை.

விநாயகப் பெருமான் எங்கும் எதிலும் எழுந்திருப்பார். அவர் மிக எளிமையானவர். அதனாலன்றோ ஆற்றங்கரையோரங்களிலும் ஆலமர நீழலிலும் வீற்றிருக்கின்றார். அதனால் அவரை எங்குமுள்ள பிள்ளையார் என அழைத்தல் மிகப் பொருத்தமானதே. எங்கும் நிறைபவரே இறைவன் என்னும் உண்மைப் பொருளை உட்பொரு ளாகக் கொண்டதோடு, நகரங்கள்தோறும் கிராமங்கள்தோறும் குறிச்சி கள்தோறும் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் என்ற வெளிப்படைப் பொருளையும் இத்தலைப்புக் கொண்டிருக்கிறது.

நூலில் 180 பிள்ளையார் கோயில்களைக் கவிஞர் வழிபட் டிருக்கின்றார் எங்களையும் வழிபடத் தூண்டுகின்றார். நம்மிற் பலருக்குத் தெரியாத கிராமங்களிற் பல்வேறு திருநாமங்களுடன் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானின் பெருமைகளைப் பாடி உருகுகின்றார். தான் பிறந்த கிராமமாகிய நுணாவிற் கோலங்கரை (கொல்லாபரி) வீரகத்தி விநாயகரில் ஆரம்பித்து, அடுத்து அயற் கிராமமாகிய மறவன்புலவு, பின் தான் திருமணஞ் செய்து இல்லறம் நடத்திய குரும்பசிட்டி சித்தி விநாயகர் என்ற ஒழுங்கிலே பாடல்கள் அமைந்துள்ளமை இயல்பானதே.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள தீவுப் பகுதிகள் அடங்கலாக அநேக கிராமங்களை நினைவுபடுத்தும் கவிநாயகர் அவற்றின் உட்பிரிவுகளான பல குறிச்சிகளையும் அறிந்து அப்பகுதிகளில் எழுந் தருளியிருக்கும் பிள்ளையாரையும் பாடியிருப்பது அவரது பெரு முயற்சியையும் பக்தியையும் காட்டுகின்றது. எம் மண்ணில் இன்று ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக எத்தனையோ ஆலயங்கள்

சிதிலமாகியுள்ள நிலையில் என்றும் அழியா ஆவணமாக இந்நூலை ஆக்கி அளித்த கவிநாயகர் தொண்டு பெரிதும் பாராட்டுதலுக்குரியது.

ஈழத்துப் பிள்ளையார் கோயில்களன்றித் தமிழ்நாட்டிலுள்ள பெயர்பெற்ற பிள்ளையார் ஆலயங்கள் பற்றியும் மேலைநாடுகளிற் புலம்பெயர்ந்த மக்களால் அமைக்கப் பெற்ற ஆலயங்கள் பற்றியும் கவிநாயகர் பாடியுள்ளார்.

தமிழீழத் திருக்கோயில்கள் குறித்த பாடல்களிற் பரவியிருக்கும் சில குறிப்புகள் அந்தந்தக் கிராமத்தவர்க்கே தெரியாத சங்கதிகளாகவும் இருக்க வாய்ப்புண்டு. உதாரணமாக, அரியாலை நொச்சித்தாழ்வு சித்திவிநாயகர் ஆலயத்தை நிறுவியவர் சேதுராயர் என்பதும் கணேசையர் அதனை வளர்த்தெடுத்தார் என்பதும் அங்குள்ள இன்றைய சந்ததியினர் பலருக்குத் தெரியாத தொன்று. மற்றுமோர் உதாரணம் புங்குடுதீவு மடத்துவழிப் பிள்ளையார் பாடல்.

நெற்றியிலே நீறிலங்கும் பெற்றி யாளர்
நீறனைய தூநெறியில் நிற்குஞ் சீலர்
கற்றவர்கள் கலைவாணர் வர்த்த கத்தில்
கைதேர்ந்தார் கண்ணிகர்செந் தமிழில் மிக்கப்
பற்றுடையார் வாழ்புங்கைப் பதியில் வள்ளப்
பயணிகளின் மடத்துவழி தங்கிப் பாவப்
பற்றறுத்துப் பாலிக்கும் பிள்ளை யாரைப்
பற்றிவரின் பிறந்தபயன் முற்று மாமே. ୭୭

இதில் வரும் வள்ளப் பயணிகள் பற்றிய செய்தி இன்றைய சந்ததியினர் அறியாததொன்று எனினும் நாற்பதுகளில் அப்பயணத்தை மேற்கொண்ட நான் நன்கு அறிவேன். இவைபோன்று பல வரலாற்றுச் செய்திகளை இத்தொகுதியிலுள்ள பாடல்கள் கொண்டிருக்கின்றன.

மயிலிட்டி வருத்தலைவிளான் மருதடி விநாயகர் பாடலில் வித்துவான் கணேசையரையும் நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் பாடலில் நல்லைநகர் நாவலர் பெருமானையும் மட்டக்களப்பு காரைதீவு நந்தவனப் பிள்ளையார் பாடலில் சுவாமி விபுலானந்தரையும் சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் பாடலில் குமாரசாமிப் புலவரையும் குறிப்பிட்டிருப்பது பெரியோரைப் பொன்போலப் பொதிந்து வைக்கும் நற்பண்பாகும்.

கவிநாயகருக்குத் தமிழீழத் தாகம் அதிகம். அது இத் தொகுதியிற் பல இடங்களிற் பிரதிபலிக்கின்றது.

செந்தமிழர் சிறந்து வாழ
செழித்தோங்கித் தமிழீழம் திகழ

வேங்கைகள் மிகவருள் வழங்கி நிற்பார்
விடுதலைத் தமிழீழம் விளங்க வைப்பார்

துணிவோடு சுதந்திரத்தை வெல்ல வேண்டும்
எல்லாளன் ஆண்டநிலம் எமக்கு வேண்டும்

இன்னமுதத் தமிழீழம் மலரவேண்டும்
எங்குமுள்ள தமிழ்மக்கள் இணைய வேண்டும்

ஊரதிர உலகதிர உரிமை காக்க
உயிர்கொடுத்துப் போராடும் நாட்டுப் பற்று

வீரர்களை உருவாக்கும் வல்வை மேவும்
விநாயகரை மேன்மையுற வேண்டு வாமே

எண்ணியிதைக் கேட்கின்றேன் தமிழீ ழத்தை
ஈந்தருள வேண்டும்

என்பனவும் பிறவுமாக வரும் அடிகள் கவிநாயகரின் தமிழீழப் பற்றையும் விடுதலை வேட்கையையும் புலப்படுத்தி நிற்கின்றன.

குடிமக்களைக் காக்கும் அரசாங்கமே கொடுமை செய்கின்ற பொழுது அல்லற்பட்டு ஆற்றாது கடைசியிலே ஆண்டவனிடத்தில் முறையிடுவது அடியார் இயல்பு. அந்த இயல்பைக் கவிநாயகரின் *பாவாரத்*திற் படித்து அநுபவித்தது போலவே இந்தத் தொகுதியிலும் அநுபவித்தேன்.

உரிமைகளும் உடைமைகளும் இழந்தால் என்ன
ஊரூராய்ப் பெயர்ந்திடங்கள் அலைந்தால் என்ன 32

முற்றுமுழு முனைப்புடனே மூண்ட சண்டை
முறைகேட்டால் முயற்சிகளை முடித்திட் டாலும்
உற்றவரைப் பிரிந்தாலும் உழைத்துப் பெற்ற
உடைமைகளை இழந்தாலும் உறுதி கொண்டே
அற்பவுயிர் தாங்கியருங் கனடா அண்டி
அகதியென வாழ்ந்தாலும் அஞ்சேல் நெஞ்சே
கற்றவர்வாழ் பிராம்டனிலே கருணை காட்டும்
கற்பகரின் கழல்போற்றின் கதியுண் டாமே. 173

என்பனபோன்று வரும் இடங்கள் ஆயிரமாயிரம் தாயக மக்களின் அவலத்தைப் பதிவு செய்கின்றன.

பத்திப் பாடல்களுக்குரிய பாங்கில் விநாயகப் பெருமானின் பெருமைகளையும் அற்புதங்களையும் எல்லாப் பாடல்களுமே எடுத்தியம்புகின்றன. உதாரணமாக,

வேதநா தாசொல்லில் விளங்கு நாதா
அத்தனே ஆதியே அந்தம் இல்லா
முத்தனே முன்னேற முயல்வார்க் கெல்லாம் முதல்வனே
செல்வாய செல்வத்தைத் தருவாய்
இருபொருளும் காட்டாத மலத்தில் ஏறி
எதிர்த்தவிறற் கயமுகனை இரித்த ஐயன்

எனப் பல இடங்களைத் தொட்டுக் காட்டலாம்.

உத்தமர்வாழ் ஊரெழுவின் பிள்ளை யாரே
உருகியுளம் ஏத்துகின்றேன் ஏத்து வோரை
நித்தமும்நீ காத்தருளி நீடு நன்மை
நிகழ்வித்து வாழ்வித்து வினைகள் நீக்கிப்
பத்திசெயும் பக்குவத்தைப் பரிந்த ளித்துப்
பரஞானச் சுடரேற்றிப் பற்றெ ரித்துச்
சித்தமெலாந் தெளிவித்துத் தித்திக் கின்ற
சிவத்தோடு சேர்த்திடுவாய் என்ப தாலே. 6

போன்ற பத்திச் சுவையுடன் பல பாடல்கள் சொற்சுவையும் ஓசைச் சிறப்பும் கற்பனை நயமும் கலந்த கனியமுதக் கவிதைகளாகவும் விளங்குகின்றன. ஆங்காங்கு கையாளப்பட்;டிருக்கும் உவமைகளும் உருவகங்களும் அருமை. பின்வரும் பாடல்கள் நல்ல உதாரணம்:

சுழிபுரம் - பறாளாய் ஈசர விநாயகர்

கண்பார்வைக் கெட்டாத காட்சி யாளர்
கல்விக்குங் கிட்டாத மாட்சி யாளர்
விண்போரிற் கயமுகனை வென்ற திண்ணர்
விடுதலையை வானவருக் களித்த விண்ணர்
வெண்பாபோற் கட்டுப்பாட் டமைதி மிக்க
மேலான ஒழுக்கத்தில் விளங்கி நிற்கும்
இன்பாளர் சுழிபுரத்துப் பறாளாய் ஏத்த
ஈசரவி நாயராய் இலங்கி னாரே. 43

நாவற்குழி சித்தி விநாயகர்

முல்லைமகன் முகங்கோணும் நெய்தற் பெண்ணை
முத்தமிட முனைதல்முறை யல்ல வென்று
மெல்லவலர் தூற்றியிடை மருதம் மேவும்
மேலோர்வாழ் நாவற்குழி வீற்றி ருந்தே
அல்லலறுத் தாட்சிபுரிந் தமைதி நாட்டும்
அருளாளர் மூலமலம் ஆட்ட மேனாள்
வெல்லவென வந்தவனை வென்ற சித்தி
விநாயகரை வணங்கிவினை வெல்லு வாமே. 33

பல இடங்களிற் கவிநாயகரின் அநுபவத்தோடு கூடிய பாடல்கள் எம்மையும் அழவைக்கின்றன. நான் உருகிய சில இடங்கள் இவை:

வேலணை மகா கணபதிப்பிள்ளையார்

சிந்தைக்குள் நின்றென்றும் தித்திக் கின்ற
செழுங்கனியே செந்தமிழே தேனே பாலே
வந்துள்ளேன் வேலணைமா பதியில் வைகும்
மகாகண பதிப்பிள்ளை யாரே வந்த(து)
எந்தனுக்கோ பிறருக்கோ வரத்துக் கன்றென்
னிதயத்தில் இருக்கின்ற நின்னைக் காண
வந்துள்ளேன் வற்றாத அன்பி னாலே
வாழ்வுற்ற பயன்பெற்றேன் வாழ்க மன்னே. 90

கோவை ஆர். எஸ். புரம் இரத்தின விநாயகர்

திருத்தமலர் விற்பவரைத் தெருவிற் கண்டேன்
சிறந்ததிருக் கோயிலதன் சிறப்புக் கண்டேன்
சிரத்தையுடன் அடியார்கள் சேரக் கண்டேன்
சேர்ந்தொன்றாய்ப் பாடச்செவி மடுத்துக் கேட்டேன்
விருத்தியுரை அறிவாளர் விளம்பக் கேட்டேன்
மேலான கண்காட்சிப் பூசை கண்டேன்
இரத்தினவி நாயகரின் எழிலுங் கண்டேன்
இரந்தவரின் அருள்வேண்டி வணங்கி னேனே. 171

எங்குமுள்ள பிள்ளையார் கவிநாயகர் கந்தவனம் அவர்க ளின் நாற்பத்துமூன்றாவது வெளியீடாகிய *விநாயகப்பா* என்ற தொகுதியில் இடம்பெறவுள்ளது. இந்தப் புதுவரவில் எனது அணிந்துரை ஒன்றும் இடம்பெறுவது குறித்துப் பெருமகிழ்ச்சி

அடைகின்றேன். கவிநாயகர் தொடர்ந்து கவி பாடவேண்டும். அவர் நீண்ட காலம் வாழ்ந்து தமது பத்தித் தமிழால் எங்களையும் வாழ்வித் துத் தமிழையும் வளப்படுத்த வேண்டும் என்று எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இறைஞ்சி இவ்வுரையை நிறைவு செய்கின் றேன். வணக்கம்.

11. 11. 2008

முருகேசு இராமலிங்கம்
Ringparken 58 ITH
7500 Holstebro
DANMARK

எங்குமுள்ள பிள்ளையார்

காப்பு

771. வேதநா தாசொல்லில் விளங்கு நாதா
வித்தைநா தாமெய்ம்மை விளக்கு நாதா
போதநா தாபுன்மை போக்கு நாதா
புலமைநா தாநன்மை பூக்கு நாதா
மோத[1]நா தாயானை முகத்து நாதா
முதலான மூர்த்தியாய் எங்கு முள்ள
பாதநா தாதாதா பரவி நின்னைப்
பத்தியால் நித்தமும் பாடு நாவே.

---

1 மோதம் - மகிழ்ச்சி

நூல்

நுணாவில் கோலங்கரை (கொல்லாபுரி)
வீரகத்தி விநாயகர்

772. ஒன்றான செல்வத்தை உள்ளத் துள்ளே
ஒளிர்கின்ற தெய்வத்தை உலகம் யாவும்
மன்றாடும் மாவித்தை மாசில் முத்தை
வளமான வயல்சூழ்ந்த நுணாவிற் சொத்தை
வென்றாளும் வினைதீர்க்கும் வீர கத்தி
விநாயகரை ஊழியிலும் மிகவி ளங்கி
நின்றாளுந் நிர்மலனை நினைந்து நாளும்
நெகிழ்ந்தேத்தி நீள்வினைகள் நீக்கு வேனே. 1

நுணாவில் மணங்குணாய்ப் பிள்ளையார்

773. தண்ணிழலார் நுணாவிலதன் மணங்குணாயில்
தங்கியருள் பாலிக்குந் தலைவ ரேறே
கண்ணினிலே கருத்தினிலே நிறைவ தாலே
கருதுபவை கனிந்தருள்வாய் என்ப தாலே
விண்ணவர்க்கு வாழ்வளித்த மேன்மை யாலே
வினைகளுக்கு முதல்வன்நீ என்ப தாலே
எண்ணியிதைக் கேட்கின்றேன் தமிழீ ழத்தை
ஈந்தருள வேண்டுமுடன் எல்லாம் நீயே. 2

மறவன்புலவு வள்ளக்குள வீரகத்தி பிள்ளையார்

774. ஒண்ணுதலிற் கண்ணுடைய உண்மை யாளர்
ஓங்கார மாயொலிக்குந் தொன்மை யாளர்
வண்ணமிலா அசுரனுக்கு வன்மை யாளர்
வானவர்க்கு வாழ்வளித்த மென்மை யாளர்
பண்ணவரும் பணிந்தேத்தும் முதன்மை யாளர்
பலவடிவப் பலநாமப் பன்மை யாளர்
மண்ணதனில் நல்லவள மருதஞ் சூழ்ந்த
மறவன்புலம் வள்ளக்குளப் பிள்ளை யாரே. 3

குரும்பசிட்டி சித்தி விநாயகர்

775. வேண்டுவதை வேண்டமுன் விளைவிக் கின்றார்
வேண்டாத தருளாதே யழவைக் கின்றார்
தீண்டமுனர் தீவினைகள் விழவைக் கின்றார்
தேனமுதாய்ச் சுவையூட்டித் தொழவைக் கின்றார்
நீண்டதுயில் நீக்கிவிழித் தெழவைக் கின்றார்
நினைவின்றேல் நினைப்பூட்டி நெகிழ்விக் கின்றார்
ஆண்டுகலைக் குரும்பைநகர் அருளு கின்றார்
அவர்சித்தி விநாயகராம் அடைந்துய் வாமே. 4

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்தி விநாயகர்

776. மென்னோலைச் சாமரையை விரும்புஞ் சித்தி
விநாயகரே விண்ணூர்போல் விளங்குஞ் செல்வப்
புன்னாலைக் கட்டுவனூர் போற்றும் ஆயாக்
கடவைபோந் துனைக்கண்டு புகழ்ந்து பாடத்
தன்னாலே நாத்தளர மெய்வி திர்க்கத்
தாங்காதே கண்சொரியத் தலையிற் குட்டி
என்னானென் றவைநீக்கி எஞ்சி நிற்கும்
எளியேனை ஏற்றருள வேண்டு வேனே. 5

ஊரெழுப் பிள்ளையார்

777. உத்தமர்வாழ் ஊரெழுவின் பிள்ளை யாரே
உருகியுளம் ஏத்துகின்றேன் ஏத்து வோரை
நித்தமும்நீ காத்தருளி நீடு நன்மை
நிகழ்வித்து வாழ்வித்து வினைகள் நீக்கிப்
பத்திசெயும் பக்குவத்தைப் பரிந்த ளித்துப்
பரஞானச் சுடரேற்றிப் பற்றெ ரித்துச்
சித்தமெலாந் தெளிவித்துத் தித்திக் கின்ற
சிவத்தோடு சேர்த்திடுவாய் என்ப தாலே. 6

உரும்பராய் ஓடையம்பதிக் கற்பகப் பிள்ளையார்

778. ஆங்காரக் கயமுகனை அழித்த கொம்பர்
அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்த வம்பர்
ஓங்கார ஒலியோங்க வேதம் ஓங்க
ஒப்பற்ற சைவநெறி உலகில் ஓங்க
ஓங்கூக்க உழைப்பாக்க உரும்ப ராயின்
ஓடையம் பதியுவந் தருளு கின்றார்
காங்கேயர்[1] தமக்குமுனர் உதித்த கற்ப
கப்பிள்ளை யார்கழல்கள் காப்ப தாமே. 7

1. காங்கேயர் - கங்கையில் தோன்றிய முருகன்

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார்

779. செல்வாய செல்வர்க்குஞ் செல்வா போற்றி
தேவாதி தேவர்க்குந் தேவா போற்றி
வெல்வீரர் யாவர்க்கும் வீரா போற்றி
விறற்பாவ வினைச்சூரை வென்றாய் போற்றி
அல்லல்கள் யாவையுமே அறுப்பாய் போற்றி
ஆனைமுக மானபொரு ளாவாய் போற்றி
கல்வியூர் உரும்பராய் காப்பாய் போற்றி
கருணாக ரப்பிள்ளை யாரே போற்றி. 8

கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார்

780. மொழிப்பிள்ளை அவ்வைக்கு மகிழ்ந்து முன்னாள்
முத்தமிழைக் கனிவித்த மூத்த பிள்ளை
தொழிற்பிள்ளை முயல்வோர்க்குத் துணையாம் பிள்ளை
துயர்களையும் அருட்பிள்ளை தொடர்ந்து செல்வம்
கொழிக்கின்ற செழிப்புற்ற செம்மண் தோட்டக்
கோண்டாவில் அரசடியிற் குடிகொண் டுள்ள
வழிப்பிள்ளை மலரடிகள் வணங்கிச் செல்லும்
வழிவாழ்வுக் கேற்றவளம் வழங்கு மாமே. 9

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார்

781. அரியவெளி யண்டசரா சரத்தின் ஆதி
அம்மையப்பர் மகிழத்தலை மகனு மாகி
வரவலிமை யுடையகய முகனை வென்றார்
மண்ணவரும் விண்ணவரும் வணங்க நின்றார்
தருமநெறி தழைத்தோங்குந் திருநெல் வேலி
சார்ந்தழகுத் தலங்காவற் பிள்ளை யாக
அருள்புரிவார் அன்பர்களே பாரீர் வாரீர்
அவர்கமலத் திருவடிகள் அடைந்துய் வாமே. 10

மயிலிட்டி வருத்தலைவிளான் மருதடி விநாயகர்

782. ஒருத்தருமே எனக்கில்லை உன்னை விட்டால்
ஒப்பில்லா வென்னெஞ்சே ஒருசொற் கேளாய்
தெருத்தெருவாய் அலையாது சிறுவர் கூட்டம்
சேராது செல்லாத செயல்செய் யாது
விருத்திபெற வேண்டுமெனில் விரைந்து சென்று
வித்துவான் கணேசையர் தவம்மேற் கொண்ட
வருத்தலைவி ளான்பதியில் மகிழ்ந்து வைகும்
மருதடிவி நாயகரை வணங்கு வாயே. 11

குப்பிளான் கற்பக விநாயகர்

783. குப்பையிலே கிடந்தாலுங் குணங்கள் கண்டு
குறைபோக்கி நிறைவாக்கிக் கோபு ரத்தில்
வைப்பதிலே வல்லவராம் வார்க ரத்தார்
வளர்தென்னை பனைசோலை வளஞ்செய் தோட்டக்
குப்பிளானின் கற்கரையிற் குடிகொண் டுள்ளார்
கொண்டாடிக் கற்பகவி நாய கர்தாள்
செப்பிநிதம் திருமுறைகள் சேவிப் பார்க்குச்
திருவாகும் வினையாவுந் திண்ண மாமே. 12

குப்பிளான் சோதி விநாயகர்

784. ஆக்கங்கள் அளித்திடுவார் அல்லல் தீர்ப்பார்
அழமுன்னர் அருளமுதம் அள்ளி வார்ப்பார்
ஊக்கத்தால் வளமானார் ஒப்பில் லாத
ஒழுக்கத்தால் உயர்வானார் உண்மைச் சைவ
வாக்குக்கே தாமானார் வாழும் ஊராம்
மாதவத்துக் குப்பிளானை மதித்து நாளும்
காக்கின்ற சோதிவிநா யகர்தாள் கண்டு
கசிந்துருகிக் கண்ணிலொற்றிக் களித்துய் வாமே. 13

இணுவில் செகராசசேகரப் பிள்ளையார்

785. தகவான சைவநெறி தழைக்க வேண்டின்
தருமவழி பொருள்தேடி உழைக்க வேண்டின்
மகிழ்வோடு வாழ்வாங்கு வாழ வேண்டின்
வல்லதமிழ் வையமளந் தாள வேண்டின்
புகழ்மேவு கலைவாணர் புலவர் வாழும்
புண்ணியமா பதியிணுவை பொலிந்தி லங்கும்
சேகராச சேகரனார் சிரம்ப ணிந்த
சிவபெருமான் பிள்ளைகழல் சேவிப் பாமே. 14

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார்

786. எரிகாற்று நிலநீரும் வானு மானார்
எங்குஞ்செங் கோலோச்சும் கோனு மானார்
பரிசாகப் போட்டியிலே பழத்தை வென்றார்
படுபாவக் கயமுகனின் பரிசு கொன்றார்
திருவாய திருயாவும் இணுவை யூரிற்
சேரவருள் பாலித்துத் திகழு கின்றார்
பரராச சேகரனார் பரவி முன்னாள்
பணிந்தபெரு வரலாற்றுப் பிள்ளை யாரே. 15

ஏழாலை அத்தியடி விநாயகர்

787. ஊழாதி வினைதீர்க்கும் ஓம்மு கத்தார்
உள்ளியே ஓம்புவார் தம்ம கத்தார்
வாழாரை வாழ்விக்கும் வார்க ரத்தார்
வானோரின் துயர்போக்கி வாழ்வ ளித்தார்
ஆழாழக் கிணறுபோல் அறிவில் ஊறும்
ஆன்றோரின் நீதியால் அமைதி காணும்
ஏழாலை அத்தியடி இலங்கு கின்றார்
ஏத்தியிவர் இணையடிகள் இறைஞ்சு வாமே. 16

சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார்

788. சந்திரனைத் தாதைதலை அணிய வைத்தார்
தந்திரத்தில் மிகவல்லார் மந்தி ரத்தார்
விந்தைமிகு கயமுகனின் வீரம் வென்றார்
வேகமுடன் வந்தபெரு நெருப்பை யுண்டார்
அந்தமிலாத் தமிழ்க்கல்வி வளர்த்த ஆசான்
அறிஞர்புகழ் குமாரசாமிப் புலவர் ஏத்தச்
சந்தைவளச் சுன்னாகஞ் சார்ந்து காக்குஞ்
சந்திரசே கரப்பிள்ளை தாள்வீழ் வாமே. 17

மல்லாகம் பழம் பிள்ளையார்

789. பொல்லாத வினையெல்லாம் போக வைப்பார்
பொருளான பொருளெல்லாம் பொலிய வைப்பார்
செல்லாத வாக்கெல்லாம் செல்ல வைப்பார்
செயற்கரிய செயலெல்லாம் செய்ய வைப்பார்
நில்லாத உலகைநீள் வீதி யோரம்
நின்றுகை யேந்திநெக் குருக வைப்பார்
மல்லாகப் பழம்பிள்ளை யவர்ம லர்த்தாள்
வணங்குவார்க் கேதுகுறை வாழ்வி லாமே. 18

தெல்லிப்பளை காசி விநாயகர்

790. அத்தனே ஆதியே அந்தம் இல்லா
ஆனைமா முகத்தனே யருட்கண் ணானே
சித்தனே சித்தாந்த வித்தே சொத்தே
சிந்திக்கச் சிந்திக்கத் திகட்டாத் தேனே
முத்தனே முன்னேற முயல்வார்க் கெல்லாம்
முதல்வனே கல்வியில் முன்னிற் கின்ற
வித்தையார் தெல்லியூர் விளங்கும் காசி
விநாயகா எமக்கென்றும் வேண்டும் நீயே. 19

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்

791. வாடாத தேவருறை வான மாகும்
வாடுபவர் வளர்ந்தோங்கும் வைய மாகும்
நாடோறும் மறையோதும் நாடு மாகும்
நாகசுர தவிலோசை நகரு மாகும்
காடேகக் கருதுபவர் வீடு மாகும்
கயிலாய மென வெண்ணிக் கசிந்து நாளும்
கோடானு கோடியடி யார்கள் கூடும்
கும்பழா வளைப்பிள்ளை கோயி லாமே. 20

அளவெட்டி அழகொல்லை விநாயகர்

792. வெறிவாதக் கூட்டத்தை விட்டு நீங்கி
மெய்ஞ்ஞானத் தேட்டத்தை வேண்டு வாயேல்
சிறுகால உலகியலிற் சிக்கு ணாது
திருப்பணிகள் செய்துய்யச் சிந்திப் பாயேல்
மறைநூல்கள் வழிநின்று மக்கள் வாழ்வு
வளமெய்த உழைத்தற்கு மனம்வைத் தாயேல்
அறிவாளர் வாழ்கின்ற அளவை யூரின்
அழகொல்லை விநாயகரை அடைவாய் நெஞ்சே. 21

அளவெட்டி பெருமாக்கடவை விநாயகர்

793. வல்வினைகள் போக்கியருள் செய்ய வல்லார்
வரவுள்ள தீமைகளுங் கொய்ய வல்லார்
சொல்லரிய வரம்பெற்ற சூரை வென்றார்
தொல்வேதம் முழுவதிலும் தொக்கு நின்றார்
பல்கலையும் பாங்குறவே வளரு கின்ற
பண்புமிகு அளவையம் பதியின் மேன்மை
சொல்லுபெரு மாக்கடவை தொடர்ந்து வைகும்
தும்பிமுகப் பிள்ளைதுயர் துடைப்பா ராமே. 22

அளவெட்டி – மல்லாகம்
குருக்கள் கிணற்றடி விநாயகர்

794. தொழக்கண்டும் உதவாரைத் தூற்று வாரை
சொன்னசொற் காவாத சூழ்ச்சி யாரை
வழக்காடு மன்றேறிப் பொய்சொல் வாரை
வழியற்ற ஏழைகளை வாட்டு வாரை
ஒழுக்கத்தை ஓம்பாரை துர்க்கை யோடும்
ஒப்பற்ற மல்லாகப் பதியை ஓம்பும்
கிழக்கெழுசெங் கதிர்போலக் கிளர்கு ருக்கள்
கிணற்றடிவி நாயகர்தாம் கேட்பா ராமே. 23

பன்னாலை வரத்தலை விநாயகர்

795. மன்னாதி மன்னர்க்கும் மன்ன ராவார்
மதியாத மலத்தர்க்கும் மகிமை யீவார்
தொன்னூலின் பொருளாகத் தோன்றி நிற்பார்
தூயமனக் கோயில்களில் ஊன்றி நிற்பார்
எந்நாளும் நெற்றியிலே திருநீ றாளும்
ஏற்றமிகு தூயதிருத் தொண்டர் வாழும்
பன்னாலை வரத்தலையைப் பதியாய்க் கொண்ட
பரமசிவன் பிள்ளையினைப் பரவு வாமே. 24

இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார்

796. ஈனமனக் கயமுகனைக் கடிந்த வேந்தல்
இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் கடந்த வேந்தர்
ஆனவினை ஆகும்வினை யாவும் ஆள்வார்
அன்பர்களின் இன்பமனப் பூவில் வாழ்வார்
வானவர்கள் வாழ்த்துமிள வாலை வந்த
மாருதப் புரவீக வல்லி யாரின்
ஆனைவிழுந் தான்பதியில் அருளு கின்றார்
ஆனைமுக மானவவர்க் காளா வாமே. 25

இளவாலை பெரியவிளான் பிள்ளையார்

797. பாசாங்கு சப்படைகள் பற்று வாரை
படருமா பாசத்துப் பற்றி லாரை
மூசீக[1] வாகனத்தில் தொற்று வாரை
மூவுலகும் ஓர்கணத்திற் சுற்று வாரை
ஆசாரம் பார்க்காதே அகிலம் எங்கும்
அடியார்கைப் பாலுண்ட அன்புத் தெய்வம்
பேர்சீரார் இளவாலை காக்கும் பெம்மான்
பெரியவிளான் பிள்ளையாரைப் பேணு வாமே. 26

1 மூசிகம் - ஓசைகுறித்து நீண்டது.

இளவாலை முள்ளானை விநாயகர்

798. உள்ளாருள் இல்லானை உணர்வார் போற்றும்
ஓரானை ஈரானைப் பலபே ரானை
தெள்ளானைச் செழுங்கனித்தீஞ் சுவையி னானைத்
தேனானைப் பாலானைத் தீயா ரேனும்
தள்ளானைத் தாயானைத் தந்தை யானைச்
சான்றோர்வாழ் இளவாலைப் பதியைச் சார்ந்த
முள்ளானை விநாயகரை முகிழ்ந்து நெஞ்சம்
முப்போதும் தொழுவார்க்கு முத்தி யாமே. 27

எழுதுமட்டுவாள் மருதங்குள விநாயகர்

799. அளவற்ற ஆற்றலுடன் வந்து தித்தார்
அதிகாரந் தாய்தந்தை உவந்த ளித்தார்
தெளிவற்ற கயமுகனைச் செருவில் வென்றார்
திசையாவும் தொழுதேத்த அருளி நின்றார்
வளமிக்க வளர்ந்தோங்கும் எழுது மட்டு
வாள்மருதங் குளவிநா யகரைப் போற்றி
உளமார நாளெல்லாம் உருகி நின்றால்
ஒப்பாகி இருவினையும் உய்ய லாமே. 28

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர்

800. பெய்யாத மழைநன்கு பெய்ய வேண்டின்
பேசுமுயர் செல்வங்கள் பெருக வேண்டின்
நையாத உள்ளங்கள் நைய வேண்டின்
நமச்சிவா யம்நாளும் ஒலிக்க வேண்டின்
பொய்யான போய்மெய்யர் ஆக வேண்டின்
புவியோர்கள் பழிக்கின்ற பொல்லாங் கொன்றுஞ்
செய்யாத சரசாலை நுணுவில் சென்று
சிதம்பரவி நாயகரைச் சேவிப் பாமே. 29

மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார்

801. ஈசானர் முதற்பிள்ளை யானார் தம்மை
இணையற்ற தும்பிமுகக் கோனார் தம்மை
காசாசை பொருள்பண்டக் கவலை தீர
கணமேயும் ஓயாத புலன்கள் சோர
பாசாதி பாசங்கள் பாறி வீழ
பதிஞானம் தலைப்பட்டு மனத்தை ஆள
மாசேது மிலாதமீ சாலை வெள்ளை
மாவடியிற் கண்டுருகி வணங்கு வாமே. 30

வரணி கும்பிட்டான்புலம் கற்பகப் பிள்ளையார்

802. அற்புதர் ஆனந்தர் அந்தம் ஆதி
அற்றவர் பெற்றவர் தம்மைச் சுற்றிப்
பொற்புறு கனிநொடிப் பொழுதிற் பெற்ற
புத்தியர் சித்தியர் புவனம் போற்றும்
கொற்கைபோல் பொலிந்திடும் வரணிக் கோவூர்
கும்பிட்டான் புலம்நாடிக் குடிகொண் டுள்ள
கற்பகப் பிள்ளையார் கழல்கள் போற்றிக்
கசிபவர் வினையெலாம் கழியு மாமே. 31

கைதடிப் பிள்ளையார்

803. அரசபதம் அதிகாரம் போனால் என்ன
ஆங்கார அடிபிடிகள் ஆனால் என்ன
உரிமைகளும் உடைமைகளும் இழந்தால் என்ன
ஊரூராய்ப் பெயர்ந்திடங்கள் அலைந்தால் என்ன
இருபொருளும் காட்டாத மலத்தில் ஏறி
எதிர்த்தவிறற் கயமுகனை இரித்த ஐயன்
கருதரிய கழலேத்தும் காதல் மிக்கக்
கைதடிமா பதிப்பிள்ளை காப்ப தாமே. 32

நாவற்குழிச் சித்தி விநாயகர்

804. முல்லைமகன் முகங்கோணும் நெய்தற் பெண்ணை
முத்தமிட முனைதல்முறை யல்ல வென்று
மெல்லவலர் தூற்றியிடை மருதம் மேவும்
மேலோர்வாழ் நாவற்குழி வீற்றி ருந்தே
அல்லலறுத் தாட்சிபுரிந் தமைதி நாட்டும்
அருளாளர் மூலமலம் ஆட்ட மேனாள்
வெல்லவென வந்தவனை வென்ற சித்தி
விநாயகரை வணங்கிவினை வெல்லு வாமே. 33

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர்

805. விரிவான மருதநிலச் சூழல் எங்கும்
வேதநெறி வாழ்வியலின் மேன்மை தங்கும்
அரியாலை நீர்நொச்சித் தாழ்வில் அந்நாள்
அருட்சித்தி விநாயகர்க்குக் கோயில் கண்ட
அருளாளர் கனஞ்சேது ராயர் வாழ்க
அந்தணர்க ணேசையர் தொண்டும் வாழ்க
பொருளான பெருமானின் புகழும் வாழ்க
புடைசூழும் அடியாரும் பொலிந்தே வாழ்க! 34

வண்ணார்பண்ணை விசுவேச விநாயகர்

806. தகவுறவே அன்புநெறி தழைத்து வாழ
தாங்கியுயர் சிவநீதி தரணி ஆள
பகையறவே பலவினமும் பண்பு பேணி
பரந்தமனப் பான்மையுடன் பழகி ஓங்க
திகழ்வுறவே செந்தமிழும் ஆட்சி செய்யச்
செழுங்கலைகள் தெய்வீகத் தென்றல் வீச
மிகுபுகழார் யாழ்ப்பாண வண்ணார் பண்ணை
விசுவேச விநாயகரை வேண்டு வாமே. 35

தாவடி விநாயகர்

807. பழிபாவப் பாதைகளை ஒழிக்க வேண்டும்
பத்தியினால் நின்னடியைப் பரவு தற்கே
தொழில்வேண்டுந் திருத்தொண்டுக் குதவு தற்கே
தொழுதேத்த விழிவேண்டும் தூய தான
மொழிவேண்டும் நினைப்போற்றி வழிப டற்கே
முத்தோட்டச் செய்கையிலே முன்னிற் கின்ற
அழகான தாவடியில் அருள்பா லிக்கும்
ஆனைமுகப் பெருமானே அருள்செய் வீரே. 36

உடுவில் சிவஞானப் பிள்ளையார்

808. தூலமே சூக்குமமே துலங்கி ஓங்கும்
சோதியே ஆதியே தொடர வொண்ணாக்
காலமே கருதரிய இடருக் கெல்லாம்
காலனே பதியடையப் பசுக்கள் கண்ட
பாலமே கல்விகலைப் படிப்பில் வல்ல
பண்பாளர் பதியாய உடுவி லூரின்
சீலமே சிவஞானப் பிள்ளை யாரே
திருவாழ்வு வேண்டியுனைச் சேவித் தோமே. 37

உடுவில் கிழக்குக் கற்பக விநாயகர்

809. அடலசுரன் ஆணவத்தை அடக்கஞ் செய்தார்
அதனாலே அமரர்புது வாழ்வுற் றுய்ந்தார்
கடலதனைக் கடந்தபெருங் கருணை யாளர்
காலமெலாங் கண்ணிமைபோற் காக்குங் கல்விக்
கொடையினிலே நடையினிலே குணங்கள் மிக்கக்
கொள்கையிலே வல்லபெருங் குருமா ராய
கடவுளர்வாழ் உடுவிலதன் கிழக்கைக் காக்கும்
கற்பகவி நாயகரின் கழல்வீழ் வாமே. 38

மானிப்பாய் மருதடி விநாயகர்

810. மருவுமுயர் கல்வியொடு திருவும் வாய்ந்த
மருதநில வளஞ்சார்ந்த மானிப் பாயூர்
மருதடியில் மகிழ்ந்தருளும் விநாய கர்தாள்
மண்டியிட்டு வலம்வந்து வாழ்த்தும் அன்பர்
அரியபல சாதனைகள் எளிதில் ஆற்றி
அறிவுலகும் பொதுவுலகும் வியந்து போற்ற
இருளகலச் சித்தாந்த ஞானம் எய்தி
இருபயனும் சமனாகி இலங்கு வாரே. 39

ஆனைக்கோட்டை உத்துங்க விநாயகர்

811. வையகமும் வானகமும் மகிழ்ந்தே வாழ
மாதேவர் பெற்றமுதல் மகனே வாழ்க
வெய்யவினை யோகொடுமை வீழ்ச்சி யுற்றோம்
வெவ்வேறு வேதனையால் தொடர்ந்து வெம்பிச்
செய்வதறி யாதுனது கோயில் சேர்ந்தோம்
திருவடியில் விழுந்தழுது தொழுது நின்றோம்
உய்யவுயர்ந் தோர்வாழும் ஆனைக் கோட்டை
உத்துங்க விநாயகரே உதவு வீரே. 40

சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார்

812. பெருயானை முகமுடைய கருணை யாளர்
பெற்றவரே உலகென்ற பெருமை யாளர்
உரமான கயமுகனின் உயிரை மாய்த்தார்
உம்பர்களின் உள்ளங்களிற் பாலை வார்த்தார்
அருளானைப் பொருளானை அல்லல் தீர்க்கும்
அரியானைக் கல்விகலை அடியார் சூழும்
திருவாரூ ரெனவிளங்குஞ் சித்தன் கேணி
திகழ்மகா கணபதியைச் சேவிப் பாமே. 41

சங்கானை மகாதேவப் பிள்ளையார்

813. முன்னவராய்ப் பிறந்தாலும் மூப்பில் லாதார்
மூவாத பிள்ளையரென் றாலும் முந்தி
முன்னுரிமை தந்துசெயும் முயற்சிக் கெல்லாம்
முதல்வரென மூவுலகும் வணங்கி நிற்கும்
தன்னிகரில் லாதபெருந் தலைவ ரானார்
தமிழ்சைவம் கலைச்செல்வம் தழைக்க நாளும்
மன்னுபுகழ் சங்கானை வாழ்த்தி வாழும்
மகாதேவப் பிள்ளையரை வணங்கு வாமே. 42

சுழிபுரம் – பறாளாய் ஈசர விநாயகர்

814. கண்பார்வைக் கெட்டாத காட்சி யாளர்
கல்விக்குங் கிட்டாத மாட்சி யாளர்
விண்போரிற் கயமுகனை வென்ற திண்ணர்
விடுதலையை வானவருக் களித்த விண்ணர்
வெண்பாபோற் கட்டுப்பாட் டமைதி மிக்க
மேலான ஒழுக்கத்தில் விளங்கி நிற்கும்
இன்பாளர் சுழிபுரத்துப் பறாளாய் ஏத்த
ஈசரவி நாயகராய் இலங்கி னாரே. 43

அராலி சிந்தாமணிப் பிள்ளையார்

815. ஆதியிலார் அந்தமிலார் அரனார் வேண்ட
ஆனைமுக மானவொரு பிள்ளை யானார்
தீதுசெயும் கயமுகனின் சிறுமை தீர்த்துத்
தேவருக்கு வாழ்வளித்த தீர ரானார்
மோதகம்போல் முக்கனிபோல் முத்த மிழ்போல்
மூளுபசிக் கமுதாகும் மூர்த்தி யானார்
மாதவமா பதியாய அராலிச் சிந்தா
மணிப்பிள்ளை யானார்நல் வழிசெய் வாரே. 44

அராலி கரைப்பிட்டி விநாயகர்

816. செல்வநிலை மேலதெனத் தேடி யென்ன
தேடிமது மாதில்தினம் திளைத்து மென்ன
பல்லவரும் போற்றிப்புகழ் பாடிச் சூழப்
பல்லக்கில் இவர்ந்துசெலும் பவனி யென்ன
அல்லலறுத் தாண்டுதொழும் அன்பர் ஆர்க்க
ஆனைமுக மானபொருள் அருளி ஆன்ற
கல்விகலை ஓங்குபதி அராலி காக்கும்
கரைப்பிட்டி விநாயகரின் கழல்கா ணார்க்கே. 45

மூளாய் சித்திவிநாயகர்

817. மாளாத வருத்தங்கள் யாவும் மாற்றி
மாறாத மனம்மாற்றி வாழ்வும் மாற்றி
ஆளாகு மடியவருக் கன்னை யாகி
அகலாது பேணிநிதம் அருள்பா லிக்கும்
மூளாயில் வளர்சித்தி விநாய கர்முன்
முப்போதும் வீழ்ந்துருகி முதிர்வா ருக்கு
நாளேது கோளேது நலந்தீங் கேது
நண்ணுதொல் வினையேது நமனும் ஏதே. 46

கொல்லன்கலட்டி வீரகத்தி விநாயகர்

818. களங்கமுறு கயமுகனைக் கலங்கச் செய்தார்
கருவமிகு சந்திரனின் கலையைக் கொய்தார்
உளங்கசியும் அன்பர்களின் உள்ளத் துள்ளார்
உயிர்க்கூட்டம் யாவுக்கும் உயிராய் உள்ளார்
வளங்களுடன் சைவத்தை வளர்த்த நால்வர்
வழிநிற்கும் மாசற்றார் மாண்பும் மிக்க
விளங்குகொலன் கலட்டியுறை வீர கத்தி
விநாயகரை வணங்கியுள வினைதீர்ப் பாமே. 47

காங்கேயன்துறை ஆனந்தப் பிள்ளையார்

819. ஆத்திரச் சூரனை அடக்கி வென்றார்
அத்தனின் தேரினை முடக்கி நின்றார்
தீர்த்தமா டித்திரை கடலுக் கப்பால்
திருத்தலஞ் செல்பவர் சிந்தை செய்யும்
யாத்திரைப் பிள்ளையா யருளி மேனாள்
ஆனந்தப் பிள்ளையா யிந்நாள் ஆனார்
காத்தருள் காங்கேயன் துறையிற் செய்வார்
கவின்கழல் ஏத்துவார் காண்பார் பேறே. 48

வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையார்

820. முன்னுளார் பின்னுளார் முதல்வ ரானார்
முப்புரம் எரித்தவர் பிள்ளை யானார்
உன்னுமுன் உதவிடும் உறவு மானார்
உலகெலாம் வணங்கிடும் இறையு மானார்
அன்னையுந் தந்தையும் அகிலம் என்றே
அன்புடன் வலம்வந்து பணிய லானார்
மன்னுபேர் வயவையூர் மக்கள் போற்ற
மானம்ப ராய்தங்கி யருளு வாரே. 49

அச்சுவேலி உலவிக்குளத்துப் பிள்ளையார்

821. நிலநீராய் வளிவானாய் நெருப்பாய் நிற்பார்
நிலைபெறவே நினைவார்க்குப் பொறுப்பாய் நிற்பார்
வலம்வந்து பெற்றோரை வணக்கஞ் செய்தார்
வள்ளிமகள் வேலவனை மணக்கச் செய்தார்
அலகில்லா அடியார்வாழ் அச்சு வேலிக்(கு)
அழகூட்டும் உயர்தென்னை நிழலைத் துய்க்கும்
உலவிக்குளம் உவந்தருளும் ஒப்பிற் பிள்ளை
ஒண்கழல்கள் தொழுதுருகின் உய்வுண் டாமே. 50

நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார்

822. முன்பசுரன் மூர்க்ககுணம் முடித்த மூத்தோன்
முடித்தழுத வானவரின் முகாரந்[1] தீர்த்தோன்
ஒன்பதையுஞ் சீராக்கி உடலைப் பேணி
உயிருற்ற தீவினைகள் ஒழித்து நன்கு
மன்பதையில் வாழவழி வகுக்க வல்லோன்
வணங்குவரோ டென்றென்றும் வாழும் நல்லோன்
அன்புவளர் நீர்வேலி அடைந்து வாய்க்கால்
தரவையிலே அருள்கின்ற பிள்ளை யாரே. 51

1 முகாரம் - ஓலம்

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார்

823. கலகஞ்செய் கயமுகனைக் கடிந்த கொம்பர்
காலத்தைக் கோலத்தைக் கடந்த வம்பர்
அலகில்செந் தமிழ்முனிக்கும் அவ்வை யார்க்கும்
ஆர்வுடனே அருள்புரிந்த அரிய நம்பர்
உலகெல்லாம் தொழுதேத்தும் ஓம்மு கத்தார்
ஒழுக்கத்தில் உயர்ந்தநீர் வேலி யுள்ளார்
அலமரலும்[1] அடியவருக் கருள வல்லார்
அவரரச கேசரிப் பிள்ளை யாரே. 52

1 அலமரல் - வருந்துதல்

சிறுப்பிட்டி செல்லப் பிள்ளையார்

824. அஞ்சாத ஆணவத்தை அடக்க வல்லார்
அஞ்சுபவர்க் கருள்பாலித் தணைக்க வல்லார்
நெஞ்சார நீங்காது நினைக்கும் அன்பர்
நெஞ்சத்தில் நிறைந்தென்றும் நிலைக்கும் நண்பர்
துஞ்சாத ஊக்கமொடு துணிவுள் ளாரும்
சொற்றிறம் பாதவரும் துலங்கச் செய்யும்
செஞ்சோலைச் சிறுப்பிட்டி திகழுந் தேவர்
செல்லப்பிள் ளைகழல்கள் சேர்ந்துய் வாமே. 53

அல்வாய் மாலைச்சந்தைப் பிள்ளையார்

825. முதலாகி முடிவாகி முடியா தாகி
மூன்றாகி நான்காகி ஐந்து மாகி
விதியாகி வித்தாகி விளைவு மாகி
வினைதீர்த்து வீடேற்றும் பதியு மாகி
அதிசைவப் பதியாய அல்வாய் மாலைச்
சந்தைவளர் பிள்ளையருக் கன்ப ராகி
மதிவேண்டிக் கல்விகலை வளங்கள் வேண்டி
மனைவேண்டி மனம்வேண்டி வணங்கு வாமே. 54

அல்வாய் புதுக்குளக்கரைப் பிள்ளையார்

826. செல்வாய செல்வத்தைத் தருவாய் போற்றி
தேடமுன் னோடிவந் தருள்வாய் போற்றி
பொல்லாத வினையாவும் அறுப்பாய் போற்றி
புரியாது விட்டபிழை பொறுப்பாய் போற்றி
பல்லோரும் போற்றுகலை வல்லார் வாழும்
பத்திநெறி வளர்கின்ற பண்பு மிக்க
அல்வாயின் புதுக்குளத்துக் கரையில் ஆளும்
ஆனைமுகப் பெருமானே போற்றி போற்றி. 55

நவுண்டில் குலனைப்பதி விநாயகர்

827. ஆரமுதை யானைமுகப் பிள்ளை யாரை
அமரர்துயர் தீர்த்தவுயர் வள்ள லாரை
ஓரமுனர் நாடியுற வாடு வாரை
ஊருலகம் எங்கெங்கும் வீடு ளாரை
தீரவிடர் அருள்புரியுந் தேவ தேவை
சீரமைதி ஊக்கமுயர் ஒழுக்கம் பேணும்
வீரநவுண் டிற்குலனைப் பதியில் மேவும்
விநாயகரை வீடுபெற வேண்டு வாமே. 56

கரவெட்டி தச்சன்தோப்புப் பிள்ளையார்

828. மருளான சூரற்கு மருந்தாய் நின்றார்
வாலேரின் வாழ்வுக்கு விருந்தாய் நின்றார்
பொருளாகத் தருமத்தைப் போற்றும் மக்கள்
பொலிகின்ற மருதஞ்சூழ் பொருவில் ஊராம்
கரவையம் பதிகாணும் தச்சன் தோப்பில்
கல்விகலை செல்வநிலை பல்கி யோங்க
அருள்பாலித் தாள்கின்ற பிள்ளை யாரை
அடைவாரைத் தீவினைகள் அடையா வாமே. 57

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார்

829. வன்பகைகள் மன்பதையில் மாள வேண்டின்
வாழ்வாங்கு வாழ்தற்கு வழிகள் கூறும்
அன்புநெறி அகிலத்தை ஆள வேண்டின்
ஆருயிர்கள் அமைதியுடன் வாழ வேண்டின்
இன்பநலக் கல்விகலை ஏற்றம் வேண்டின்
இணையற்ற மருதவள எழிலில் ஓங்கும்
பண்புவளர் உடுப்பிட்டிப் பதியைத் தாங்கும்
பண்டகைப் பிள்ளைகழல் பரவு வாமே. 58

புலோலி தெற்கு அத்தியடிப் பிள்ளையார்

830. கயமுகனைக் கொன்றமரர் வாழ்வு காத்தார்
கைத்திறத்தால் அவ்வையினைக் கயிலை சேர்த்தார்
உயிருலகை ஓம்பிமிகத் தாங்கி நிற்பார்
ஊழிவருங் காலத்தும் ஓங்கி நிற்பார்
தயிரதனில் நெய்போலக் கலந்தி ருப்பார்
தலையாரக் கும்பிட்டால் துலங்கி நிற்பார்
அயர்வறியா ஆற்றல்மிகு புலோலி தெற்கின்
அத்தியடி யமர்ந்தருளும் பிள்ளை யாரே. 59

புலோலி தெற்கு முறாவில் பிள்ளையார்

831. அந்தமிலார் ஆதியிலார் யாது மில்லார்
ஆனைமுக மானாலும் அதுவு மில்லார்
எந்தயுக மானாலும் என்றும் உள்ளார்
எந்தவிட மானாலும் எங்கும் உள்ளார்
சிந்தைசெயும் அடியாரின் சிந்தை தேங்கித்
தெவிட்டாத தேனமுதாய்த் திரள வல்லார்
செந்தமிழ்வாழ் தென்புலோலி முறாவில் உள்ளார்
சென்றவரைத் தினமேத்திச் சிறந்துய் வாமே. 60

புலோலி தெற்கு சின்னத்தாய்ப் பிள்ளையார்

832. கள்ளார்ந்த சிந்தனைகள் கழிய வேண்டின்
கடியமனம் கசிந்தினிது கனிய வேண்டின்
உள்ளார்ந்த சிவமோங்கி ஒளிர வேண்டின்
உலகியலின் பிரச்சனைகள் ஒழிய வேண்டின்
ஒள்ளார்ந்த ஓங்கார உருவந் தாங்கி
உயிர்வாழ உவந்தருளி உலகைக் காக்கும்
தெள்ளார்ந்த தமிழோங்கு தென்பு லோலிச்
சின்னத்தாய்ப் பிள்ளையரைச் சேவிப் பாமே. 61

புலோலி தெற்கு பெரியத்தாய்ப் பிள்ளையார்

833. தீராத துன்பங்கள் தீர்க்க வல்லார்
சேராத இன்பங்கள் சேர்க்க வல்லார்
நேரான நெறிமுறையில் நிற்க வைப்பார்
நிகரற்ற ஞானத்தில் நீந்த வைப்பார்
தேராத கயமுகனின் சிறுமை போக்கித்
தேவர்களை வாழ்வித்த தீர தேவர்
பேரான பதிதென்பு லோலி பெற்ற
பெம்மான் எம் பெரியத்தாய்ப் பிள்ளை யாரே. 62

புலோலி தெற்கு புற்றளை சித்தி விநாயகர்

834. மங்குதொழிற் கயமுகனை மாள வைத்தார்
வானவரின் நெறிமுறையை வாழ வைத்தார்
வெங்கனலை விழுங்கியதன் வெம்மை போக்க
வெறுமறுகிற் குளித்துவிளை யாடி நின்றார்
பொங்கும் அருள் பாலிக்கத் தென்பு லோலிப்
புற்றளையிற் பொலிந்திலங்கிப் புதுமை செய்யும்
செங்கமலச் சித்திவிநா யகரைச் சிந்தை
செய்தொழுகின் தீவினைகள் சேரா வாமே. 63

புலோலி ஆலடிப் பிள்ளையார்

835. ஆதிசிவன் பெற்றபிள்ளை அகிலம் வாழ
யாவுமென நின்றருளும் யானைப் பிள்ளை
நீதியிலாக் கயமுகனை நெரித்த பிள்ளை
நேர்மைமிகு நெஞ்சுகளில் நிலைத்த பிள்ளை
போதுமெனும் பொன்மனத்தார் உவந்தெப் போதும்
புண்ணியஞ்செய் புலோலியதன் புகழில் ஓங்கும்
பேதமிலா ஆலடியின் பிள்ளை யாரைப்
பேணிவரின் பிறப்பறுக்கும் பேறுண் டாமே. 64

வல்லிபுரம் குருக்கட்டு சித்தி விநாயகர்

836. எல்லவரும் ஏத்துகின்ற ஏக நாதர்
ஏத்துபவர்க் கருள்செய்யும் இதய நாதர்
தொல்வினையால் வருகின்ற துயர்கள் போக்கிச்
சுகஞ்செய்து துணைநிற்குந் தூய்மை யாளர்
கல்விகலை தந்தருளுங் கருணை யாளர்
கார்மேனி மாலுறையுங் கனத்த செல்வ
வல்லிபுரம் போற்றுகுருக் கட்டில் வந்து
வளர்சித்தி விநாயகரை வாழ்த்து வாமே. 65

வல்லிபுர மாயவன் நாமக்குளப் பிள்ளையார்

837. அவதாரம் எடுத்தருளும் திருமால் ஆளும்
அருந்தொன்மைப் புகழ்வல்லி புரத்தின் ஆன்ற
தவநாமக் குளத்தருகில் தங்கி நாளும்
சமரசன் மார்க்கத்தைத் தழைக்கச் செய்யும்
சிவனாரின் தலைமைந்தன் திருவார் செந்தாள்
தினம்போற்றிச் சேவிக்கும் திருக்கூட் டத்தார்
புவிவாழ்வின் சிறப்புக்கும் புத்தே ளுக்கும்
பொருளீட்டும் பதவிகளிற் பொலிவா ராமே. 66

கரணவாய் வடக்கு மூத்த விநாயகர்

838. ஐயாவென் றழைப்பார்க்கும் அன்பாற் சென்றே
ஆனைமுகா வென்பார்க்கும் அருகில் வந்தே
தெய்வந்தான் என்பதனைத் தெரியக் காட்டிச்
செய்யாத நன்மைகளைச் செய்து நிற்பார்
கையாலே அவ்வையினைக் கயிலை சேர்த்தார்
கல்விகலைக் கருணையூர் வடக்கில் மூத்த
மெய்ஞ்ஞான விநாயகராய் விளங்கு கின்றார்
மேலோங்க வீழ்ந்தவரை வேண்டு வாமே. 67

கரணவாய் தெற்கு கலட்டிப் பிள்ளையார்

839. வேதநா தன்வரச் சொல்ல வந்தார்
விபரீதக் கயமுகனை வெல்ல வந்தார்
மாதவ வள்ளிக்கு மணம்மு டித்தார்
மதியாத மதிக்குநல் மதியும் ஈந்தார்
நீதியால் சைவத்தை நிலைக்கச் செய்யும்
நிகரிலாத் தென்கருணைப் பதியில் நித்தம்
காதலார் கசிந்தேத்தும் கலட்டிப் பிள்ளை
கருணைபெற் றுய்யவே காணீர் வந்தே. 68

வல்வெட்டி – வேவில் வீரகத்திப் பிள்ளையார்

840. மாலான கயமுகனை மடியச் செய்தார்
வானவரின் வாழ்க்கைமுறை விடியச் செய்தார்
வேலோனும் வேறுவழி யின்றி வேண்ட
விரைந்தோடி வந்துதவ வலிமை மிக்க
ஆலோல வள்ளியினை அளித்து நின்றார்
அரநெறியில் அருந்தமிழில் அமைதி வாழ்வில்
மேலான வல்வெட்டி வேவில் மேவி
வீரகத்திப் பிள்ளையாராய் விளங்கி னாரே. 69

வல்வெட்டி – மாடந்தைப் பிள்ளையார்

841. முந்தியே உள்ளவர் முந்தி வந்தார்
முக்கணும் நாற்கையும் முதன்மை யான
தந்தயா னைவடிவுந் தாங்கி வந்தார்
தருமநன் னெறியெங்கும் ஓங்க வந்தார்
வந்துமே லானவல் வெட்டி வாழ
மாடந்தைப் பதியிலே வளரு கின்றார்
சிந்தைசெய் தவர்செய்ய தாள்கள் போற்றின்
செல்வாய செல்வங்கள் சேரு மாமே. 70

வல்வெட்டித்துறை நெடிகாட்டுப் பிள்ளையார்

842. எல்லையிலாப் பிரபஞ்சம் எங்கு முள்ளார்
ஏகநா யகராக இயக்கு கின்றார்
வல்லசுரன் தனைவெல்ல வந்து தித்தார்
வானுலகும் மண்ணுலகும் வணங்க நின்றார்
வெல்வினைகள் செய்துபகை வீழ்த்த வல்ல
வீராதி வீரர்களை விளைவிக் கின்ற
வல்வையதன் நெடிகாட்டில் வளரு கின்றார்
வாழ்வுதரும் ஆனைமுகப் பெருமா னாரே. 71

வல்வெட்டித்துறை வைகுந்தப் பிள்ளையார்

843. எல்லையிலா அண்டவெளிக் கெல்லை யானார்
ஏகநா தன்சிவனின் பிள்ளை யானார்
வல்லசுரர் தொல்லைகளை வாட்டி வென்றார்
வானவருக் கானவழி காட்டி நின்றார்
கல்விகலை வாணர்வதி மாட வீதிக்
கடற்கரையில் தேவர்களும் காற்று வாங்கும்
வல்வைவளர் வைகுந்தப் பிள்ளை யாரை
வணங்கிவரின் வல்லவராய் வாழ லாமே. 72

வல்வெட்டித்துறை திருச்சிற்றம்பலப் பிள்ளையார்

844. அருச்சித்தே யமரர்சிவ னருளை வேண்ட
ஆதியிலார் ஆனைமுகப் பிள்ளை யானார்
கருச்சிந்தைக் கயமுகனைக் கடிந்து நின்றார்
கலங்கியவா னவர்க்கெல்லாம் கதிய ளித்தார்
பொருட்சொத்தை யருட்சொத்தாய்ப் புதுக்க வல்ல
புண்ணியத்தார் பொற்பதியாம் வல்வை போற்றும்
திருச்சிற்றம் பலப்பிள்ளை யார்தாள் சேர்வார்
செல்கின்ற திசையெங்குஞ் சிறப்பார் தாமே. 73

வல்வெட்டித்துறை உலகுடைய பிள்ளையார்

845. அலகிலரும் பொருளானார் அமுத மானார்
ஆதியந்த மில்லாத அதிப ரானார்
கலகமிடும் மனத்தவரின் கதிய தானார்
கணமேயும் மறவாதார் மதியு மானார்
பலகலையும் பைந்தமிழும் பாங்கில் ஓங்கும்
பண்புமிகு வல்வையரின் பதியில் மேவி
உலகுடைய பிள்ளையராய் ஒளிரு கின்றார்
உருகியவர் பாதமலர் பரவு வாமே. 74

வல்வெட்டித்துறை புஸ்கரணிப் பிள்ளையார்

846. பாகமுறு சிவசத்தி பால னானார்
பாசவினை பாவவினைக் கால னானார்
தோகைமயில் தம்பிக்குத் தூய வள்ளி
துணையாகத் தும்பிக்கைத் துணையு மானார்
காகமென வந்துமுனி கமண்ட லத்தை
கவிழ்த்தருளி இந்திரனின் கவலை தீர்த்தார்
போகநல வல்வைநகர் பொலிந்தி லங்கும்
புஸ்கரணிப் பிள்ளையரைப் போற்று வாமே. 75

வல்வெட்டித்துறை தச்சுக்கொல்லை விநாயகர்

847. தேரரிய[1] தாதையிவர் தேரை இற்றார்
தேவர்களின் துயர்தீர்த்துப் பேரைப் பெற்றார்
நாரதரின் ஞானக்கனி நன்கு வென்றார்
நற்றமிழை வளர்த்தமுனி நாண நின்றார்
ஊரதிர உலகதிர உரிமைக் காக
உயிர்கொடுத்துப் போராடும் நாட்டுப் பற்று
வீரர்களை உருவாக்கும் வல்வை மேவும்
விநாயகரை மேன்மையுற வேண்டு வாமே. 76

1 தேர்அரிய - விளங்கமுடியாத

பருத்தித்துறை சித்தி விநாயகர்

848. மேலதுகீ ழதுவாகி நாலு மாகி
வியாபிக்கும் திசையெங்கும் விளங்கி நின்று
காலமெலாம் உலகத்தைக் கண்கா ணிப்பார்
காலத்தின் முடிவுவரத் தானே நிற்பார்
மாலயனும் காணாத மாதே வற்கு
மகவானார் நெய்தல்வள வணிகத் தொல்லூர்
மேலவர்வாழ் பருத்தித்துறை விளங்கும் சித்தி
விநாயகர்தாள் வீழ்ந்துவினை விடுவிப் பாமே. 77

பொலிகண்டி சித்தி விநாயகர்

849. புத்தியினாற் கண்டறியாப் புதிரா யுள்ளார்
பொருளுக்கும் மேலான பொருளா யுள்ளார்
வித்தைபல புரிந்தாலும் விலகி நிற்பார்
விரதங்கள் இருந்தாலும் விளங்கா நிற்பார்
பத்தியினால் மெய்யடியார் பாடி அடிப்
பணிந்தேத்தப் பொலிகண்டிப் பதியை நாடிச்
சித்திவிநா யகராகத் திகழ்ந்தாள் கின்றார்
சென்றுசிரம் பணிந்தேத்திச் சிறந்துய் வாமே. 78

துன்னாலை வெல்லிகந்தோட்டப் பிள்ளையார்

850. முன்னான முன்னானார் முன்னி லாதார்
முடிவான முடிவானார் முடிவி லாதார்
சொன்னாலும் விளங்காத சூக்கு மத்தர்
சொல்லாம லேதோன்றிக் காக்கும் அத்தர்
பொன்னான மனத்தவர்கள் புகழ்ந்து போற்றிப்
பொழுதெல்லாம் பணிந்துருகிப் புடைசூழ் மேன்மைத்
துன்னாலை வெல்லிகந்தோட் டத்துப் பிள்ளை
தூவடிகள் தொழுதுவருந் துயர்தீர்ப் பாமே. 79

துன்னாலை கோயிற்கடவைப் பிள்ளையார்

851. தும்பிமுகங் கொண்டபெருந் தூய்மை யாளர்
துயர்போக்கி அணைத்தருளும் தாய்மை யாளர்
ஐம்புலத்து வாயில்களை அடைக்க வல்லார்
ஆதாரம் ஆறினையும் அடக்க வல்லார்
செம்பொருளைச் சித்தத்தில் தெளியச் செய்வார்
சிவமாக்கிப் பெருவாழ்வில் திளைக்கச் செய்வார்
கம்பலையில்[1] துன்னாலை கவினார் கோயிற்
கடவையருள் பிள்ளைகழல் காப்ப தாமே. 80

1 கம்பலையில் - துன்பம் இல்லாத

வலிக்கண்டி சங்களைப் பிள்ளையார்

852. வேள்விகளோ நோன்புகளோ விளங்கா வெற்று
வீதியிலும் வீற்றிருக்கும் விமல நாதர்
ஆள்வினையும் நாள்வினையும் காட்டும் பிள்ளை
ஐம்பூத ஆற்றல்களின் கூட்டுப் பிள்ளை
வாழ்வினையில் வல்லவலிக் கண்டி மக்கள்
மதிக்கின்ற சங்களையில் வளரும் பிள்ளை
தாள்பணிவார் சமதருமம் சாந்தம் பேணித்
தாரணியின் மேன்மையினைத் தாங்கு வாரே. 81

தும்பளை இலட்சுமாந்தோட்டப் பிள்ளையார்

853. ஆதியே ஆதரவில் லாதார்க் கெல்லாம்
அன்னையே தந்தையே ஆனைக் கோல
நாதனே நண்பனே நங்கை வள்ளி
நாயகன் தனைச்சேர வைத்த நம்பீ
ஏதிலாத் தும்பளையில் இசைந்த செல்வ
இலட்சுமாந் தோட்டத்தைப் பிள்ளை யாரே
காதலாற் கசிந்துருகிக் கண்ணீர் வாரக்
கைகூப்பி நிற்குமெமைக் கண்டு கொள்ளே. 82

துன்னாலை வல்லியானந்தப் பிள்ளையார்

854. பரஞ்சோதி யானவரின் பால னானார்
பஞ்சபூ தங்களொடு ஞால மானார்
சிரஞ்சீர்தாள் சேர்பவரின் சீல ரானார்
சித்தத்திற் பூசிப்பார் கோல மானார்
சிரஞ்சீவி யாகவுயர் ஒழுக்க சீலர்
செய்தவலு வானதவச் சிறப்ப தாலே
அருஞ்செல்வத் துன்னாலைப் பதியை யாள்வார்
அவர்வல்லி யானந்தப் பிள்ளை யாரே. 83

வியாபாரிமூலை சித்திவிநாயகர்

855. தயாவான தத்துவனார் தந்த பிள்ளை
தலைமையெலாக் கணங்களுக்குந் தாங்கும் பிள்ளை
சுயாதீன வாழ்வொளிரும் தொல்ப ருத்தித்
துறையினிலே நிறைவுடனே துலங்குஞ் செல்வ
வியாபாரி மூலைதனில் விளங்குஞ் சித்தி
விநாயகரின் திருவடிகள் வணங்கி வீழின்
வயாவீனம்[1] மனைமாட்சி மக்கட் பேறு
மதிஞானம் வளர்செல்வம் வழங்கு வாரே. 84

1 வயாவீனம் - நோய் இன்மை

நல்லூர் கைலாசபிள்ளையார்

856. உருவொன்று மில்லாதார் ஊர்பே ரில்லார்
ஓங்கார உருவிலுல கெல்லாம் உய்ய
கருநெஞ்சக் கயமுகனின் கருவங் கொய்ய
கருணையுடன் பெற்றகண பதியே காணும்
வரலாற்றுப் புகழ்பெற்ற திருநல் லூரில்
மனமுருகி மெய்யன்பர் வாழ்த்தி ஏத்த
அருள்கின்றார் கைலாச பிள்ளை யாக
அவர்செந்தாள் பணிந்துகதி அடைவோம் யாமே. 85

நல்லூர் நிழல்விழுந்த பிள்ளையார்

857. அழல்பழுத்த நிறமேனிப் பிள்ளை யாரை
ஆதிசிவன் தந்தமுதற் பிள்ளை யாரை
மொழிவளத்து நல்லூர்முத் திரைச்சந் தைக்கு
முதலாய நிழல்விழுந்த பிள்ளை யாரை
கழலிணைகள் விழுந்துருகிக் கசிந்து போற்றிக்
கள்ளமெலாங் கடிதினிலே கழிவ தற்கும்
பழவினைகள் இப்பிறப்பிற் பாறு தற்கும்
பதிஞானம் பிறப்பதற்கும் பணிவோம் யாமே. 86

நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார்

858. இருவிழிகள் எனச்சைவம் தமிழ்வ ளர்த்த
எங்கள்பிரான் நாவலரை ஈன்றெ டுக்கத்
தருமபதி நல்லூருக் கருள்பா லித்த
சந்திரசே கரப்பிள்ளை தாள்கள் சேர்வார்
அருள்வெள்ளப் பொழிவினிலே ஆர்ப்ப ரிப்பார்
அதியின்ப வாழ்க்கைதனை அனுப விப்பார்
இருளில் இடர்ப் படுவீரோ இனியும் ஐயன்
இணையடிகள் தொழுதுய்ய எழுவீர் இன்றே. 87

நல்லூர் பண்டாரக்குளப் பிள்ளையார்

859. ஒன்றானார் இரண்டானார் பலவும் ஆனார்
உயிரானார் உடலானார் உலகும் ஆனார்
இன்றானார் நேற்றானார் நாளை யானார்
இங்கானார் அங்கானார் எங்கும் அனார்
நின்றாளும் ஆனைமுக நிமலன் ஆனார்
நீர்வேணி மதிசூடி மகனும் ஆனார்
அன்றாண்ட நல்லூருக் கரசும் ஆனார்
அவர்பண்டா ரக்குளத்துப் பிள்ளை யாரே. 88

புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர்

860. இல்லார்க்கும் உள்ளார்க்கும் இருப்ப வற்றை
இன்புடனே பகிர்ந்துண்ணும் இதயம் மிக்க
நல்லார்க்கும் அல்லார்க்கும் நாடு வாழ
நலிவற்ற உழைப்பாலே நன்மை செய்யும்
வல்லார்க்கும் நினைந்துருகி வாழ்த்து வார்க்கும்
வாழ்த்தாத வறியார்க்கும் தூற்று வார்க்கும்
எல்லார்க்கும் இறையான புளியன் கூடல்
இந்தன்முத்து விநாயகர்தாள் ஏத்து வாமே. 89

வேலணை மகா கணபதிப்பிள்ளையார்

861. சிந்தைக்குள் நின்றென்றும் தித்திக் கின்ற
செழுங்கனியே செந்தமிழே தேனே பாலே
வந்துள்ளேன் வேலணைமா பதியில் வைகும்
மகாகண பதிப்பிள்ளை யாரே வந்த(து)
எந்தனுக்கோ பிறருக்கோ வரத்துக் கன்றென்
னிதயத்தில் இருக்கின்ற நின்னைக் காண
வந்துள்ளேன் வற்றாத அன்பி னாலே
வாழ்வுற்ற பயன்பெற்றேன் வாழ்க மன்னே. 90

மண்கும்பான் பிள்ளையார்

862. ஈசான முகத்தாரின் பிள்ளை யானார்
இணையிலா வதிகார வள்ள லானார்
பேசாத பெருமைகொள் மறையு மானார்
பீழைகள் நீக்குமோர் இறையு மானார்
பாசாங்கு சத்தானை முகத்த ரானார்
பரவிடும் அடியாரின் அகத்த ரானார்
மாசேது மில்லாத மக்கள் வாழும்
மண்கும்பான் பதிவைகும் பிள்ளை யாரே. 91

மண்டைதீவு சித்தி விநாயகர்

863. முற்றாத மனக்கனியை முற்ற வைப்பார்
மூளாத பத்தியினை மூள வைப்பார்
உற்றாரை உலகியலை உதற வைப்பார்
உருகிவிழி பெருகவுடல் பதற வைப்பார்
கற்றா[1]வின் கன்றெனவே கதற வைப்பார்
கடலோசைக் கலைமண்டை தீவைக் காத்து
வற்றாத அருள்மழையைப் பொழியுஞ் சித்தி
விநாயகரை வாழ்முதலாய் வணங்கு வாமே. 92

1 கற்றா - ஈன்ற பசு

புங்குடுதீவு – கலட்டி பட்டிவிநாயகர்

864. விண்ணகத்துச் சூரரன்றி மனத்தில் விஞ்சி
வேதனைசெய் சூரனையும் வீழ்த்த வந்தார்
கண்ணுதலார் ஆனைமுகக் கருணை யாளர்
கடுவினைகள் கட்டறுத்துக் காக்குந் தோழர்
புண்ணியத்துப் புங்கைநகர்க் கலட்டி போந்து
பொலிந்தருளிப் புதுமைசெயப் புடைசூழ்ந் தன்பர்
பண்ணிசைத்துப் பணிந்துருகிப் பரவி வாழும்
பட்டிவிநா யகர்பாதம் பணிவோம் யாமே. 93

புங்குடுதீவு – இறுப்பிட்டி வரசித்தி விநாயகர்

865. தங்கிவான் செல்வங்கள் தழைத்து மல்கும்
சமயத்தில் மேலான சைவம் ஓங்கும்
எங்குமே அமைதியுடன் இன்பஞ் சூழ
எல்லோரும் ஒற்றுமைபூண் டிலங்கி வாழும்
புங்கைமா நகர்நாளும் பரவிப் போற்றப்
பொழில்சூழும் இறுப்பிட்டி பொலிந்தி லங்கும்
மங்கைபா கத்தார்க்கு வாய்த்த மைந்தர்
வரசித்தி விநாயகரை வணங்கு வாமே. 94

புங்குடுதீவு பெரியபுலம் பிள்ளையார்

866. ஆசைகளை அளித்தருளி அறுக்க வல்லார்
அறியாத பிழையாவும் பொறுக்க வல்லார்
பாசமுடன் படைக்கும்பால் பழங்கள் ஏற்றுப்
பாசவலை நீக்கியுறு பதம் அளிப்பார்
பூசுமுயர் நீறுநிகர் புனிதர் வாழும்
பொற்பதியாம் புங்கைநகர் பொலிந்தி லங்கும்
பேசரிய பெரியபுலம் பிள்ளை யாரைப்
பேணுபவர் பெருவாழ்வு பெறுவ ராமே. 95

புங்குடுதீவு அரியநாயகன்புலம் பிள்ளையார்

867. கருதவொண் ணாததவக் கவசம் மிக்கக்
கயமுகனின் கதியழித்துக் காசில்[1] வானோர்க்(கு)
உரியதாம் வாழ்வீந்த ஒப்பில் தெய்வம்
உணர்வாரின் உருவமாய் ஒளிருந் தெய்வம்
புரியும்செம் பணிகளால் உலகம் போற்றும்
புங்கைமா நகரிலே பொழில்கள் சூழ்ந்த
ஆரியநா யகன்புலத்தில் அமர்ந்தே ஆளும்
ஆனைமுகப் பெருமானை அடைந்துய் வாமே. 96

1 காசில் - குற்றம் இல்லாத

புங்குடுதீவு சந்தையடிப் பிள்ளையார்

868. பங்கமிலா வானவரைப் பகைத்து வென்ற
பாதகவன் கயமுகனை நகைத்து வென்றார்
திங்களினோர் நகைப்புக்குத் தண்டஞ் செய்தார்
தேன்மொழியை வேலனுடன் சேர்த்து வைத்தார்
துங்கமுனி கமண்டலத்தைத் தொட்டு வீழ்த்தித்
தொடர்ந்தரிய காவிரியாய்ச் சுரக்க விட்டார்
தங்கியுயர் புங்கைநகர் சார்ந்த செல்வச்
சந்தையடி யருள்செய்வார் தாள்சேர் வாமே. 97

புங்குடுதீவு – வல்லன்பதி கண்டிப் பிள்ளையார்

869. நீர்பாய நிலமோங்க நீதி ஓங்க
நீறோங்க நிறைவாய அறங்கள் ஓங்கச்
சீர்மேவிச் செந்தமிழர் சிறந்து வாழச்
செழித்தோங்கித் தமிழீழம் திகழப் புங்கைப்
பேரூரின் புகழ்வல்லன் பதியில் கண்டிப்
பிள்ளையராய் அருள்செய்யும் பெருமான் துங்கத்
தார்மேனி யாளர்திருத் தாள்கள் பற்றித்
தலையாரக் கும்பிட்டுத் தழைப்போம் யாமே. 98

புங்குடுதீவு மடத்துவழிப் பிள்ளையார்

870. நெற்றியிலே நீறிலங்கும் பெற்றி யாளர்
நீறனைய தூநெறியில் நிற்குஞ் சீலர்
கற்றவர்கள் கலைவாணர் வர்த்த கத்தில்
கைதேர்ந்தார் கண்ணிகர்செந் தமிழில் மிக்கப்
பற்றுடையார் வாழ்புங்கைப் பதியில் வள்ளப்
பயணிகளின் மடத்துவழி தங்கிப் பாவப்
பற்றறுத்துப் பாலிக்கும் பிள்ளை யாரைப்
பற்றிவரின் பிறந்தபயன் முற்று மாமே. 99

புங்குடுதீவு காட்டுப் பிள்ளையார்

871. பெருகுசீர் புங்கையூர் பிறங்கும் காட்டுப்
பிள்ளையார் கழல்பேணும் பெரியோர் கோயில்
விரைகுவார் மேவுவார் மெய்ம்ம றப்பார்
விளங்குமெய்ஞ் ஞானத்தால் விதிர்வி திர்ப்பார்
பருகுவார் உருகிநீர் பெருக நிற்பார்
பாடுவார் ஆடுவார் பரமன் பிள்ளை
திருவருள் வெள்ளத்தில் தெளிந்த இன்பத்
தேறலில் மிகவூறித் தேறு வாரே. 100

அனலைதீவு – பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார்

872. ஓசையலை ஓவியங்கள் தவழ்ந்து கீறும்
ஓயாது தென்றலிசை உவந்து பாடும்
ஆசிரிய அறிஞர்பதி அனலை தீவில்
அறமோங்கும் பெரியபுலம் அமர்ந்து தொண்டர்
மாசுகளை நீக்கிமகிழ்ந் தாளும் மன்னர்
மகாகணப திப்பிள்ளை யாரை வாழ்த்தி
வாசமலர்த் தாளிணைகள் வணங்கு வார்க்கு
வருத்துநோய் துன்பங்கள் வாரா வாமே. 101

நெடுந்தீவு நடுக்குறிச்சிப் பிள்ளையார்

873. கனக்கின்ற வினையெல்லாங் கரைப்பாய் என்று
கலந்துன்றன் பழவடியார் களிக்கின் றார்கள்
எனக்கொன்றுந் தெரியாது தெரிந்த தெல்லாம்
எனக்குள்ளே இருக்கின்ற இறைவன் நீயே
மனக்கன்றுன் இனிக்கின்ற அருட்பால் மாந்தி
மகிழ்கின்ற வாழ்வல்லால் மற்றொன் றில்லை
நினைக்கின்ற அடியாரின் நெஞ்சுள் நிற்கும்
நெடுந்தீவு நடுக்குறிச்சிப் பிள்ளை யாரே. 102

நெடுந்தீவு நெழுவினி விநாயகர்

874. ஆறுமுக மானவருக் கண்ணர் ஆவார்
ஆனைமுகங் கொண்டவொரு திண்ணர் ஆவார்
வீறுமிகு கயமுகனை வீழ்த்த வந்தார்
விண்ணுலகும் மண்ணுலகும் வாழ்த்த வந்தார்
நீறுபொலி நெற்றியடி யார்கள் வாழும்
நெடுந்தீவின் நெழுவினிலே நிலைகொண் டுள்ளார்
பாறிவிழப் பழவினைகள் பாடி மேன்மை
பணிந்தவரைப் பத்தியுடன் பரவு வாமே. 103

நெடுந்தீவு காட்டுப் பிள்ளையார்

875. சொல்லாமல் துதியாமல் சுழன்றிட் டாலும்
தொடர்ந்துண்ணா வறுமையினால் துவண்டிட் டாலும்
கல்லாதே காலத்தைக் கரைத்திட் டாலும்
கடுமுழைப்பால் முன்னேறுங் கலையின் றாலும்
நல்லாரை நாடாமல் நடைகெட் டாலும்
நரகத்திற் சிக்குண்டு கடைகெட் டாலும்
கல்லாகப் பிறந்தாலும் நெடுந்தீ வுற்ற
காட்டுப்பிள் ளைகருணை காட்டு வாரரே. 104

பூநகரி – செட்டியகுறிச்சி திகிரி விநாயகர்

876. மூநகரம் முற்றாக முடித்த முக்கண்
மூர்த்தியரு ளால்வந்த மூத்த பிள்ளை
வானவரை வாழ்வித்த வள்ளல் நாளும்
வறியவரின் மனங்களிலே வாழும் பிள்ளை
பூநெகிழ வண்டறையும் பொழில்செய் வாசப்
பூநகரி செட்டியகு றிச்சி போற்றும்
தேனமுதைச் செழுங்கனியைத் தென்றல் தேவைத்
திகிரிவிநா யகரடிகள் சேவிப் பாமே. 105

பரந்தன் பன்னைக்கண்டிப் பிள்ளையார்

877. தேரானைத் திருக்கொம்பால் தீர்த்தாண் டானை
தேர்வாரின் சித்தத்தில் தித்திப் பானை
ஓரானைப் பலவானை உலகே யான
ஓமானை உயிரானை உய்விப் பானை
நேரான முயற்சிகளை நிகழ்விப் பானை
நிகரற்ற ஒழுக்கத்தில் நிற்போர் வாழும்
பாரான பரந்தனிலே பன்னைக் கண்டிப்
பதியாளும் பிள்ளையினைப் பரவு வாமே. 106

முறிகண்டி வழிப்பிள்ளையார்

878. வானகத்தில் கயமுகனை வதைத்து நின்றார்
வல்லபெரும் அரவையரைக் கசைத்து நின்றார்
கானகத்திற் பயணிகளைக் காக்க வல்லார்
கருதரிய செலவையெளி தாக்க வல்லார்
தானமுதாய் விளைகின்ற தன்மை யாளர்
தண்டமிழிற் குழைகின்ற மென்மை யாளர்
ஞானமுதல் முறிகண்டிப் பதியில் ஆளும்
ஆனைமுகப் பெருமானின் ஆணை வாழி! 107

மாங்குளம் கனகராயப் பிள்ளையார்

879. தாங்கிநம் மனங்களைக் குழைக்க வல்லார்
தத்துவப் பொருள்களில் தழைக்க வல்லார்
வேங்கைகள் மிகவருள் வழங்கி நிற்பார்
விடுதலைத் தமிழீழம் விளங்க வைப்பார்
கோங்கமார்[1] மாங்குளக் கனக ராயன்
குளத்தயல் குடியிருந் தருளும் பிள்ளை
பூங்கழல் பூண்பவர் புன்மை நீங்கிப்
புண்ணியத் தண்ணகர் பொலிவா ராமே. 108

1 கோங்கம் - நெல்லிமரம்

துணுக்காய் விநாயகர்

880. பிணக்கான கயமுகனைப் பேதித் தாண்டு
பெருவாழ்வை வானவருக் கீந்த பிள்ளை
வணக்கத்துத் தமிழவ்வை மனம்போல் தூக்கி
வார்கரத்தாற் கயிலையிலே வைத்த பிள்ளை
கணக்காகக் கனிந்தவிளா மரங்கள் தேடி
கன்னமதக் கரிபார்த்துப் பறித்துக் காதல்
துணைக்கீயும் தொடர்காட்டு வளத்தில் தோயும்
துணுக்காயில் வளர்கின்றார் தொழுதுய் வாமே.109

துணுக்காய் ஆலங்குளப் பிள்ளையார்

881. துயர்யாவுந் துடைக்கின்ற தும்பிக் கையர்
தூய்மையே வடிவாகத் துலங்கும் மெய்யர்
உயர்வான வாழ்க்கையினை உம்பர்க் கீந்தார்
உணராத சந்திரனும் உணரக் காய்ந்தார்
சுயமான பயிர்ச்செய்கைத் தொழிலில் வல்ல
துணிவோடு தூயநடைத் துணுக்காய் தன்னில்
அயராத அன்பாலே அடியார் போற்றும்
ஆலங்குளப் பிள்ளையினை அடைந்துய் வாமே. 110

வவுனியா சிந்தாமணி விநாயகர்

882. தன்னிகரில் லாதவோர் தலைவர் ஆனார்
சங்கரனார் பிள்ளையாய்த் தவழ லானார்
துன்னரிய சூரனின் துடிப்பை மாய்த்தார்
சுந்தரமா தம்பியின் துயரைத் தீர்த்தார்
இன்னரிய கரும்பினும் இனிமை யானார்
ஏற்றமா துளையினுங் கனிமை யானார்
வன்னியதன் தலைநகர் வவுனி யாவில்
வளர்சிந்தா மணிவிநா யகப்பெம் மானே. 111

வவுனியா – புதுக்குளம் சித்திவிநாயகர்

883. முன்னாளில் தேவர்துயர் முடித்த மூர்த்தி
மூலாதி மூலத்தில் முகிழ்ந்த மூர்த்தி
பின்னாளில் விளாங்கனிகள் பெருக நல்கும்
பெருநாடாம் பண்டார வன்னி வீரன்
பொன்னான ஆட்சியிலே பூத்த மண்ணின்
புதுக்குளத்து மெய்யடியார் போற்ற நாளும்
மின்னார்பொன் முடியோடு விளங்குஞ் சித்தி
விநாயகரை வேண்டவரும் வீர மாமே. 112

முள்ளியவளை காட்டா விநாயகர்

884. காற்றினிலே கமழ்பூக்கள் வாசம் சேர்க்கும்
காகங்குயில் முட்டையையும் கட்டிக் காக்கும்
பாற்றலைப்பாம் பெலிகளுடன் பழகிச் சூழும்
பலாபாலை மிகையாகப் பழுத்து வீழும்
சேற்றுவயல் நாற்றுகளைச் செழிக்கச் செய்யும்
சீராரும் முள்ளிநகர்ப் பதியைச் சேர்ந்து
வேற்றுமையில் ஒற்றுமையை வளர்க்குங் காட்டா
விநாயகரை வேண்டிவினை வீழ்த்து வாமே. 113

தண்ணீரூற்று – ஊற்றங்கரை சித்திவிநாயகர்

885. மூலாதி முழுப்பொருளின் மூத்த பிள்ளை
மூலமலக் கயமுகனை முடித்த பிள்ளை
பாலாவி முகில்வண்ணப் பண்ணை நல்லூர்
பண்டார வன்னியனின் பழைய நெல்லூர்
சாலீர முள்ளிநகர்த் தண்ணீ ரூற்றில்
சன்மார்க்க நெறிநிற்குஞ் சான்றோ ராலே
மேலான ஊற்றங்கரை விளங்குஞ் சித்தி
விநாயகரை வேண்டினறம் விளங்கு மாமே. 114

முள்ளியவளை – கணுக்கேணி கற்பகப் பிள்ளையார்

886. படராத கொடியோங்கிப் படர வைப்பார்
பழுக்காத காய்முற்றிப் பழுக்க வைப்பார்
படியாத பசுநாடிப் படிக்க வைப்பார்
பாடாத குயில்பாடிக் களிக்க வைப்பார்
விடியாத பொழுதினையும் விடிய வைப்பார்
வேங்கைகளை வரவேற்று விருந்து வைப்பார்
கடிதான தவமுள்ளி நகரைக் காக்கும்
கணுக்கேணிக் கற்பகப் பிள்ளை யாரே. 115

முல்லைத்தீவு – கரைச்சிக் குடியிருப்பு
வீரகத்திப் பிள்ளையார்

887. முடிமீது மதிகங்கை முடித்த முக்கண்
முதல்வனார் அருளினால் முகமோர் யானை
வடிவாகி விண்ணுடன் மண்ணும் வாழ
வந்துமா சூரனை வதைத்த பிள்ளை
முடிவில்லா வளமோங்கும் முல்லைத் தீவின்
முதுகரைச் சிக்குடி யிருப்பில் வைகும்
கடிதாய வினைபோக்கும் வீர கத்திக்
கருணைகொள் பிள்ளையார் கழல்வீழ் வாமே. 116

முல்லைத்தீவு சிலாவத்தைப் பிள்ளையார்

888. பொய்வித்தை போயகலப் புலன்க ளைந்தும்
பூப்பெய்திப் பொற்பெய்திப் புனித மாகச்
சைவத்தில் நின்றொழுகித் தருமஞ் செய்யச்
சார்ந்தவினைக் கூட்டத்தின் தாக்கம் நீங்க
மெய்வித்தை உலகத்தில் விளங்கி யாள
மேலான அமைதிநிலை மேவி நிற்கத்
தெய்வத்தை நம்புமுயர் முல்லைத் தீவின்
சிலாவத்தைப் பிள்ளையரைச் சேவிப் பாமே. 117

முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப் பிள்ளையார்

889. ஆனைமுக மானபொரு ளாக வந்தார்
ஆதிமலச் சூரவினை அடக்க வந்தார்
வானவரும் மண்ணவரும் வாழ்த்த நின்றார்
வள்ளியினை வேலனுடன் சேர்த்து வைத்தார்
ஞானமுனி நாரதருக் கருள்பு ரிந்தார்
நாகரிக முல்லைநகர் நற்ற வத்தால்
கானமயில் களித்துநடம் ஆடுஞ் சோலைக்
கள்ளப்பா(டு) அமர்ந்துள்ளார் கழல்சேர் வாமே. 118

முல்லைத்தீவு உப்புமாவடிப் பிள்ளையார்

890. சமயத்தின் பெயராலே சண்டை செய்வார்
சாத்திரத்தைப் பூசிப்பார் சாதி பார்ப்பார்
நிமித்தத்தால் நியாயத்தை வீழ்த்தி நிற்பார்
நெஞ்சத்தை வஞ்சத்தால் நிறைத்து வைப்பார்
அமைதிக்கும் ஆணவத்தால் ஆப்பு வைப்பார்
அவர்யாரும் இல்லாத முல்லை மண்ணை
உமைபங்கர் பெற்றமுதற் பிள்ளை ஓம்ப
உப்புமா வடிதங்கி ஒளிர்கின் றாரே. 119

முல்லைத்தீவு செம்மலைப் பிள்ளையார்

891. பீடாரும் பதிமுல்லை பெற்ற பேறால்
பேராச்செம் மலைவாழும் பிள்ளை யாரே
கூடேதும் இல்லாத குருவி யில்லை
கொழுகொம்பில் லாதவோர் கொடியு மில்லை
காடேயும் விலங்குகளும் கவலை யின்றிக்
களைப்பாற இடமுண்டு கருதி நின்னை
வீடேதும் இல்லாதேன் விரைந்து வந்தேன்
வேதனைகள் தீர்த்தருள வேண்டு வேனே. 120

முல்லைத்தீவு – கோட்டகக்கேணி கைவெட்டிப் பிள்ளையார்

892. கைகட்டி வாய்பொத்திக் காலில் வீழும்
கடைகெட்ட வாழ்க்கையுடன் கழிய வேண்டின்
செய்திட்ட தீவினைகள் தீர வேண்டின்
தெய்வத்தைத் தெளிந்தருளில் திளைக்க வேண்டின்
பொய்விட்டுப் புடமிட்ட போதம் வேண்டின்
புகழ்முல்லைக் கோட்டகக் கேணி போற்றும்
கைவெட்டிப் பிள்ளையரைச் சென்று கண்டு
கசிந்துநீர் சொரிந்துபூங் கழல்வீழ் வீரே. 121

முல்லைத்தீவு தென்னைமரவடிப் பிள்ளையார்

893. பொல்லாரின் கொடுமைகளைப் போக்க வேண்டும்
புண்ணியத்தைக் கண்ணியத்தைக் காக்க வேண்டும்
சொல்லாத மந்திரத்தைச் சொல்ல வேண்டும்
துணிவோடு சுதந்திரத்தை வெல்ல வேண்டும்
எல்லாளன் ஆண்டநிலம் எமக்கு வேண்டும்
எல்லோரும் இன்புறவே வாழ வேண்டும்
வல்லாரின் முல்லைநகர் மதிக்கும் தென்னை
மரவடியிற் பிள்ளையரே வழிசெய் வீரே. 122

முல்லைத்தீவு – அமரிவயல் கூன்பிள்ளையார்

894. மந்திரத்தில் எழுந்தருள வந்த பிள்ளை
மாசுமனக் கயமுகனை மாய்த்த பிள்ளை
இந்திரனின் நந்தவனம் இனிது பூக்க
இணையில்முனி கண்டிகைநீர் இறைத்த பிள்ளை
செந்தமிழும் சிவநெறியும் சிறக்கும் முல்லை
தென்னைமர வடியமரி வயல்சேர்ந் தன்பர்
அந்தரந்தீர்க் கின்றார்கூன் பிள்ளை யாக
அவரடிகள் போற்றிவினை அகல்விப் பாமே. 123

குமிழமுனை கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார்

895. ஈனத்துக் கயமுகனை எலிய தாக
ஏற்றருளி இவர்ந்தாண்ட இணையிற் பிள்ளை
கானத்து மயில்வள்ளி வேலன் காதல்
கைகூட வழிசெய்த கருணைப் பிள்ளை
கோனொத்த வீரர்தோள் கொட்டி வாழும்
குமிழமுனை தனிற்கொட்டுக் கிணற்றை ஆளும்
தேனொத்த பிள்ளைகழல் சேர்ந்து வாழின்
தீவினைகள் யாதொன்றும் சேரா வாமே. 124

குமிழமுனை கற்பக விநாயகர்

896. இன்னமுதத் தமிழீழம் மலர வேண்டும்
எங்குமுள தமிழ்மக்கள் இணைய வேண்டும்
தன்னலங்கள் பொதுநலங்க ளாக வேண்டும்
சன்னதங்கள் சாத்வீக மாக வேண்டும்
வன்னியர்கள் சாதனைகள் வரைய வேண்டும்
வானுயரக் கொம்பறைகள் வளர வேண்டும்
கன்னலரின் குமிழமுனை கசிந்து போற்றும்
கற்பகவி நாயகரே கனிந்தாள் வீரே. 125

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார்

897. ஓமோங்க உள்ளிருக்கும் ஒலியு மாவார்
ஊழியிலும் ஓங்கிவளர் ஒளியு மாவார்
நாவோங்கத் தேவர்தொழும் நாத ரானார்
நல்லசெயல் அனைத்துக்கும் ஏது வானார்
தேமோங்க மீன்பாடும் தெய்வ மண்ணில்
சிவலிங்க வடிவத்தில் திகழும் அண்ணல்
மாமாங்கப் பிள்ளைகழல் வணங்கி வாழா
வாழ்வுமொரு வாழ்வோஇவ் வைய கத்தே. 126

புளியந்தீவு ஆனைப்பந்திப் பிள்ளையார்

898. ஆராத அன்போடு கண்ணீர் வார
ஐயாவென் றொருகாலிங்(கு) அழைக்குங் காலை
தீராத தேனமுத மாகத் தேங்கித்
தெவிட்டாமல் இனிக்கின்ற திருவே தேவே
சீரான ஒழுக்கத்துப் புளியந் தீவின்
திருவானைப் பந்தியினர் தினமும் போற்றும்
பேரான பிள்ளையரே பேறே இந்தப்
பித்தனையுங் கண்டிரங்கிப் பேணிக் கொள்ளே. 127

பழுகாமம் மாவேற்குடாப் பிள்ளையார்

899. வழிகாணா தெங்கெங்கும் அலைவீர் வாரீர்
மலத்துக்குக் கட்டுண்டு மலைவீர் வாரீர்
பழிபூணும் கயமுகனின் பகைமை நீக்கிப்
பரிவுடனே வானோர்க்குப் பதவாழ் வீந்தார்
பழுகாமப் பதிஞான பாலன் வேலன்
பார்த்திருக்க வீற்றிருந்து பரவி நாளும்
குழைவாரின் குறைதீர வருளு மாவேற்
குடாப்பிள்ளை கழலேத்திக் குறைதீர்ப் பீரே. 128

காரைதீவு நந்தவனப் பிள்ளையார்

900. செந்தமிழை வளர்த்தகுறு முனிவர் சீறச்
சிரித்தவரின் சிறுகுடத்தைக் கவிழ்த்த செல்வன்
சிந்தைநல அன்பர்பதி காரை தீவில்
திகழ்ந்தருளித் தொல்லைதுயர் தீர்க்கும் பிள்ளை
அந்தமிலா மதிநலத்தை விபுலா நந்த
அடிகள்தொழு தேத்தவுவந் தருளிச் செய்த
நந்தவனப் பிள்ளைகழல் வணங்கின் நாடி
நற்றமிழும் கலைமகளும் நண்ணு வாரே. 129

வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார்

901. ஓர்மூல மந்திரத்தில் உதித்த பிள்ளை
உலகமே பெற்றோரென் றுரைத்த பிள்ளை
நீர்மூழ்கி நெடுங்காலம் நிலைத்த பிள்ளை
நீள்பயண நாவாயை நிறுத்தி வைத்துச்
சீர்பாத தேவிக்குக் கருணை செய்த
சிந்தாத்தி ரைப்பிள்ளை யாரைச் சென்று
பார்போற்றும் வீரமுனைப் பதியில் வாழ்த்தின்
பயணசுகம் புகழ்செல்வம் பலிக்கு மாமே. 130

கோமாரி சங்கமான்கண்டிப் பிள்ளையார்

902. பதியானார் பலவுயிர்க்கும் பாச மானார்
பசுவானார் பாலானர் நெய்யு மானார்
முதலாக அடியார்கள் முயற்சிக் கெல்லாம்
முன்னிற்க வெனப்பெற்ற மூத்த பிள்ளை
கதிர்காமம் எழுந்தருளும் தம்பி கந்தன்
கழல்காண யாத்திரைசெய் காத லார்க்குக்
கதியாகச் சங்கமான் கண்டி நாடிக்
கருணைபுரி பிள்ளைகழல் காவ லாமே. 131

கதிர்காமம் செல்வப் பிள்ளையார்

903. ஞானவடி வானவரை ஞானி கட்கு
ஞானகுரு வானவரை விமல ஞானம்
ஆனகனி பெற்றவரை ஆதி தேவை
அன்பர்பொருட் டெழுந்தெங்கும் அருளு வோரை
ஆனைமுக மானவரை ஆண வத்தை
அடக்கியருள் செய்பவரை அடர்த்தி மிக்கக்
கானமதில் வானகத்தைக் காட்டுஞ் செல்வக்
கதிர்காமந் தனிற்கண்டு கதிபெற் றேனே. 132

கல்முனை – பாண்டிருப்பு மாணிக்கப் பிள்ளையார்

904. சொன்னபடி சூரனைமுன் கொன்று தேவர்
தொல்லைகளைத் துடைத்தசெயல் வீர ராவர்
கன்னலினை விரும்புகின்ற கருணை யாளர்
கல்முனைசேர் பாண்டிருப்பிற் கலிங்க நாட்டு
மன்னசிங்கன் காலம்முதல் மகிழ்ந்து வைகும்
மாணிக்கப் பிள்ளையரின் வார்க ழல்கள்
உன்னியெழும் அடியவர்நல் லொழுக்கஞ் செல்வம்
உயர்கல்வி புகழெய்தி ஓங்கு வாரே. 133

வில்லூன்றி வீரகத்திப் பிள்ளையார்

905. பொல்லாத பெண்பாவம் ஒன்றுக் காகப்
புகழ்மன்னன் இராவணனைப் பொருது வென்ற
வல்லாளன் வில்லூன்றி எடுத்து நீரை
மாபூசை சிவனுக்குச் செய்த மாசில்
சொல்லூன்றி வளர்தொன்மைப் பதியில் தோன்றித்
தொழுமடியார் துயர்துடைத்துச் சொல்ல வொண்ணா
நல்வாழ்வு நல்கிவரும் வீர கத்தி
நாதர்விழுப் பாதமலர் நாடு வாமே. 134

திருகோணமலை - திரியாய் கட்டுக்குளம் விநாயகர்

906. பாரதிலே பண்புநலம் பரவி யோங்க
பாங்குறவே இப்பிறவிப் பயன்கள் தாங்க
நாரணனும் நான்முகனும் தேவர் கோனும்
நாளும்நனி வணங்கிவரும் நாதர் பிள்ளை
சீர்திரியா யிற்கமலத் தேவி மார்கள்
திகழ்கட்டுக் குளப்பக்கல் செழித்து நிற்கும்
வீரமர நிழல்மேவி யருள்பா லிக்கும்
விநாயகரை வீழ்ந்துருகி வினைதீர்ப் பாமே. 135

திருகோணமலை – திரியாலை தஞ்ச விநாயகர்

907. ஆனைகளின் அமளிமதம் அடக்க வல்லார்
அருஞ்சாலி வயல்நோய்கள் அகற்ற வல்லார்
தானதரு மச்செயல்கள் தழைக்கச் செய்வார்
தஞ்சைபுகழ் விஞ்சத்திரி யாலை சார்ந்த
கானமலர்த் தென்றலிதக் கல்லம் பத்தை
காத்தருளும் விநாயகரின் கழல்ப ணிந்தே
ஆனவழி அல்லலுறும் தமிழர் வாழ
அருள்புரிய வேண்டிநிதம் அருச்சிப் பாமே. 136

புத்தளம் சித்தி விநாயகர்

908. முத்துவளம் கொழிக்கின்ற மூத்த பேரூர்
முனைப்போடு தென்னைகள்வான் முட்டு மாவூர்
புத்தளத்திற் பத்தியுடன் போற்று வாரைப்
பொழுதெல்லாம் புரந்தருளும் புதுமை யாளர்
அத்திமுகர் ஆதிமுகர் அருள்மு கத்தார்
அசுரையழித் தமரர்தமைக் காத்த வீரர்
சித்திவிநா யகர்மலர்த்தாள் சேரு வார்க்குத்
தீராத வினையாவும் தீரு மாமே. 137

கொழும்பு – பம்பலப்பிட்டி
சம்மாங்கோடு மாணிக்க விநாயகர்

909. ஈனவிருள் மலக்கொடுமை இரிய வேண்டி
எச்சவினைப் பாவங்களை எறிய வேண்டி
ஞானவொளி நாகரிக வண்ணம் வேண்டி
நல்லகதி வந்தெளிதில் நண்ண வேண்டி
ஆனைமுக வசுரனுயிர் ஆய்ந்த மன்னர்
ஆறுமுகற் காரணங்கை ஈந்த வண்ணல்
மாநகர கொழும்புதிகழ் சம்மாங் கோட்டு
மாணிக்க விநாயகரை வணங்கு வாமே. 138

கொழும்பு – முகத்துவாரம் சித்தி விநாயகர்

910. நில்லாத உலகமதில் நீதி நிற்க
நேரான உரிமைகளை அநுப விக்கப்
பொல்லாத தீவினைகள் பொன்ற நாளும்
புவியினிலே அமைதிநிலை பொலிய மக்கள்
எல்லோரும் வேண்டுவன எய்தி ஆன்ற
இன்பத்தில் திளைத்தன்போ டினிது வாழச்
செல்வாய கொழும்புமுகத் துவாரந் தன்னில்
திகழ்சித்தி விநாயகர்தாள் சிந்திப் பாமே. 139

கொழும்பு – செட்டித்தெரு முத்து விநாயகர்

911. அல்லலறுத் தாண்டருளும் அற்பு தத்தார்
ஆனைமுகம் பூண்டவரும் பொற்ப தத்தார்
தொல்லைபுரி கயமுகனைத் துவள வைத்தார்
தூயமனக் கோயில்களில் தோன்றி நிற்பார்
பல்லினமும் பாடறிந்து பழகும் பண்பார்
பார்போற்றும் மாநகரம் கொழும்பில் எல்லாம்
வெல்லுசெட்டித் தெருவீற்றி ருக்கும் முத்து
விநாயகர்தாள் வீழ்ந்துபழ வினைதீர்ப் பாமே. 140

கொழும்பு – கொட்டாஞ்சேனை வரதராசப் பிள்ளையார்

912. பெற்றாரை உலகென்று சுற்றி வந்தார்
பேரசுரன் வல்லுடலைப் பிளந்து நின்றார்
முற்றாகும் ஊழியிலும் மூசி கத்தில்
மோனவலம் வரும்மூல மோத கத்தார்
பற்றாளர் பணிந்துருகிப் பரவி யேத்தப்
பரிந்தருளி வரமளித்துப் பாலிக் கின்ற
வற்றாத வளக்கொழும்புக் கொட்டாஞ் சேனை
வரதராசப் பிள்ளையாரை வணங்கு வாமே. 141

மருதானை – கப்பித்தாவத்தை பாலசெல்வ விநாயகர்

913. மதியென்ன நிதியென்ன பதவியென்ன
மனையென்ன மகிழ்வென்ன மக்க ளென்ன
புதிதென்ன மரபென்ன புரட்சியென்ன
புகழென்ன வலமென்ன பூரிப் பென்ன
அதிவீரர் ஆதிமுத லான செல்வர்
அரியநகர் மருதானை மருவி யுள்ள
பதியான கப்பித்தா வத்தை மேவும்
பாலசெல்வ விநாயகர்தாள் பரவாக் காலே. 142

குருநாகல் செல்வ விநாயகர்

914. துன்னுதுயர் ஆணவத்தைத் துடைக்க வல்லார்
தூவயிற்றில் உலகையெலாம் அடைக்க வல்லார்
மன்னுபுகழ் அகத்தியருக் கருள வல்லார்
மாவீரன் இராவணனுக் குதவ வல்லார்
சின்னவிடம் என்றாலும் தெருவென் றாலும்
திகழ்ந்தடியார் தொல்லைகளைத் தீர்க்க வல்லார்
தென்னைவளக் குருநாகல் நகரின் தேவர்
செல்வவிநா யகர் தாள்கள் சேவிப் பாமே. 143

கண்டி செல்வ விநாயகர்

915. மந்திரத்தைச் சிவன்சக்தி யோடு நோக்க
வானவர்கள் படுமின்னற் பாடு போக்க
வந்துதித்த வல்லபிரான் வார்க ரத்தார்
வரந்தருவார் புரந்தருள்வார் வாழ்வ ளிப்பார்
இந்திரரும் சந்திரரும் வியந்து காணும்
எல்லையிலா வியற்கையெழில் மாறி மாறி
விந்தைசெயும் கண்டியிலே வந்து செல்வ
விநாயகராய் விளங்குகின்றார் வேறென் பேறே. 144

மாத்தளை முத்து விநாயகர்

916. மூத்ததமிழ் முன்னோர்முன் னேறக் கண்ட
முதியவரை இதயமலர் பதியச் சூட்டி
ஏத்துபவர் தமையேத்தும் இன்ப வூற்றை
ஏறுமலைச் சாரல்வளர் கொக்கோத் தோட்ட
மாத்தளையில் மகிழ்பவரை வணங்கி எல்லா
மதத்தவரும் மதிப்பவரை மதத்தைப் போக்கும்
வேத்தியரை விக்கினங்கள் விலக்கும் முத்து
விநாயகரை வணங்கினெல்லாம் விளங்கு மாமே. 145

இரத்தோட்டை செல்வ விநாயகர்

917. தந்தைசிவன் தகைமையெலாம் பெற்ற பிள்ளை
தந்தத்தால் கயமுகனைச் செற்ற பிள்ளை
ஐந்துகரங் கொண்டபெரும் ஆற்றற் பிள்ளை
அழகுறவே விளங்குதிரு நீற்றுப் பிள்ளை
எந்தவித அடியார்க்கும் ஏற்ற பிள்ளை
இலங்குவள மாத்தளையின் நலங்கள் மேவும்
அந்தண்பதி இரத்தோட்டை நகரை ஆளும்
அருஞ்செல்வ விநாயகரை அடைந்துய் வாமே. 146

அல்தும் முல்லை ஆதிவிநாயகர்

918. வேதமொழி யாவுள்ளும் விளங்கும் நாதர்
வீரமா கயமுகனை வீழ்த்த வந்தார்
பேதவிதம் பாராத பெருமை யாளர்
பெருமைநலம் அறிந்தவரின் உரிமை யாளர்
மோதகம்பால் கரும்புவிளா விரும்பி நிற்பார்
மூசிகத்தில் இவர்ந்தருளும் மூத்த பிள்ளை
ஆதிவிநா யகராக அல்தும் முல்லை
அருள்கின்றார் அடைந்தல்லல் அகற்று வாமே. 147

அட்டன் மாணிக்கப் பிள்ளையார்

919. வானவர்கள் வாழ்விலொளி ஏற்றி வைத்தீர்
வலம்வந்து பெற்றவரைப் போற்ற வைத்தீர்
ஆனபெருந் தோட்டத்தே யிலையை ஆடை
யாகவணிந் தழகுறவே விளங்கும் அட்டன்
மாநகரில் எழுந்துமகிழ்ந் தருள்பா லிக்கும்
மாணிக்கப் பிள்ளையரே மண்ணில் நாமும்
மானமுடன் வளமெய்தி வாழ வேண்டி
மண்டியிட்டோம் வரலாற்றை மாற்று வீரே. 148

பதுளை மாணிக்க விநாயகர்

920. தீதாட்டக் கயமுகனைத் தெளிய வைத்தார்
செந்தமிழ்மா குறுமுனியைக் குனிய வைத்தார்
வாதாட்டச் சந்திரனை வருந்த வைத்தார்
வருந்தி மிகவாடிவரும் அடியார் தம்மைக்
கோதாட்டிக் குணமாக்கும் கருணைக் கோமான்
குறைவில்லாத் தேயிலையால் வளங்கொ ழிக்கும்
மாதோட்ட பதுளைப்பதி மகிழ்ந்து வைகும்
மாணிக்க விநாயகரை வாழ்த்து வாமே. 149

காரைக்குடி பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்

921. வீரர்கோன் கயமுகனை வீழ்த்தி முன்னாள்
விண்ணவருக் கருள்செய்த மேன்மை யாளர்
ஊரெங்கும் உவந்தெழுவார் உலகம் ஆள்வார்
உதவார்க்கும் உதவுகின்ற கருணை வள்ளல்
சூர்நீக்குந் தாதைதேர் துவள வைத்தார்
தொல்காலம் முதலாகக் கல்லில் தோன்றிப்
பார்போற்றும் பிள்ளயார் பட்டி மேவும்
பதியாய கற்பகர்தாள் பணிவோம் யாமே. 150

காரைக்குடி வழிவிடும் பிள்ளையார்

922. நாவாளர் நால்வர்திருப் பாடல் நாதர்
நங்கையொடு மந்திரத்து நம்பி தன்னை
ஏவாதே உலகத்தார் இடர்கள் தீர்க்க
எழுந்தருளச் செயவந்த இணையிற் பிள்ளை
பூவாலே சொரிந்தேத்திப் போற்ற முன்னாள்
பொல்லாத கயமுகனைப் பொன்றச் செய்தார்
காவேரி தனைத்தந்த கருணை யாளர்
காரைக்குடி வழிவிடுவார் கழல்வீழ் வாமே. 151

செங்காட்டங்குடி வாதாபி கணபதி

923. செல்லாத வழியெல்லாம் செல்ல வைப்பார்
தீராத வினையெல்லாம் தீர வைப்பார்
வெல்லாத போரெல்லாம் வெல்ல வைப்பார்
விளங்காத பொருளெல்லம் விளங்க வைப்பார்
பொல்லாரை நல்லாராய்ப் புதுக்கி நிற்பார்
புகழ்சான்ற செங்காட்டங் குடியைப் போற்றி
வல்லாளர் சிறுத்தொண்டர் வணங்க நின்ற
வாதாபி கணபதியை வணங்கு வாமே. 152

திருவலஞ்சுழி வெள்ளை விநாயகர்

924. வெள்ளைநீ றணிந்துள்ள மேனி யாரை
வேதத்து மந்திரமாய் விளங்கு வாரை
வெள்ளைமா தந்தத்து வேழத் தாரை
விரிசடையார் பெற்றமுதற் பிள்ளை யாரை
நள்ளிருளாய்க் கள்ளஞ்செய் யாண வத்தை
ஞானத்தால் அடக்கிவலஞ் சுழியில் நண்ணும்
வெள்ளையரை வித்தகரை வினைகள் தீர்க்கும்
விநாயகரை வலம்வருவார் வெல்வார் வீடே. 153

திருச்சி மலைக்கோட்டை மாணிக்க விநாயகர்

925. நாணக்கார் கூந்தலிள வள்ளி தன்னை
நாதத்தால் மருட்டிநல நம்பிக் கீந்தார்
பேணிக்கை யேந்திவிழி நீர்பெ ருக்கி
பிழையாவும் பொறுத்தருளப் பிதற்றி வேண்டி
மாணிக்கும் மலைக்கோட்டை ஏறு வார்க்கு
வாரியருள் வழங்கிவழி அனுப்பும் வள்ளல்
மாணிக்க விநாயகரைத் திருச்சி சென்று
வணங்குவார்க் கேதுகுறை வாழ்வி லாமே. 154

திருச்சி மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார்

926. குறைவின்றிக் குறைதீர்க்கும் அரங்க நாதர்
கோயிலெழ அருள்செய்த கூர்த்த ஞானர்
அறைகூவி அழைத்தகய முகனை ஆண்ட
ஆணவத்தை அடக்கியவர் அடியார் உள்ளம்
உறைகின்ற மலைக்கோட்டை உச்சிப் பிள்ளை
உவந்தேறி வருவாருக் குதவும் பிள்ளை
அறிவோடு பொருள்புகழும் அளிக்கும் பிள்ளை
அவரடிகள் தொழுதெல்லாம் அடைந்துய் வாமே. 155

மதுரை சித்தி விநாயகர்

927. அன்னைமீ னாட்சியின் அருளைக் கண்டார்
அத்தனின் திருவிளை யாடல் கண்டார்
மன்னரின் ஆட்சியின் மாண்பு கண்டார்
மக்களின் சிக்கலில் வாழ்வும் கண்டார்
தன்னிகர் இல்லாத சங்கம் மேவி
தமிழாய்ந்த புலவரின் தகைமை கண்டார்
மன்னுபேர் மதுரைமா நகர்ம கிழ்ந்து
வளர்சித்தி விநாயகர் மாட்சி யாலே. 156

திருவையாறு காரியசித்தி விநாயகர்

928. அருள்யானை முகமுடையார் அண்ட மெல்லாம்
அன்பான பெற்றோரென் றவரைச் சுற்றிப்
பொருள்ஞானக் கனிபெற்ற புத்திப் பிள்ளை
பூமகளும் நாமகளும் போற்றும் பிள்ளை
திருவையா றெழுந்தருளித் தேச மெல்லாம்
செழித்தோங்க வருள்செய்வார் சிந்திப் பார்க்குக்
கருதாத சாதனைகள் கனிய வைப்பார்
காரியசித்தி விநாயகரின் கழல்வீழ் வாமே. 157

திருவண்ணாமலை செந்தூர கணபதி

929. தீராத நோய்கடிதில் தீர வேண்டின்
சேராத செல்வங்கள் சேர வேண்டின்
ஊரான ஒற்றுமையால் உயர வேண்டின்
ஒப்பற்ற தமிழுலகை ஆள வேண்டின்
பாராத திருவண்ணா மலையார் பாதம்
பார்த்துய்ய வேண்டினவண்[1] பண்டு தொட்டுச்
சீராகச் சேர்ந்தடியார் குறைகள் தீர்க்கும்
செந்தூர கணபதியைச் சிந்திப் பாமே. 158

1 வேண்டின் + அவண் = அவண் - அவ்விடத்தில்

தஞ்சாவூர் உச்சிட்ட கணபதி

930. பதியாக உலகெங்கும் பரந்தி ருப்பார்
பழஞான மந்திரத்துட் பதிந்தி ருப்பார்
மதயானை தன்னுள்ளும் மறைந்தி ருப்பார்
மடமானுக் குள்ளேயும் மகிழ்ந்தி ருப்பார்
விதமான வேடத்து வேந்தர் பிள்ளை
வெண்ணீற்றுத் தூய்மையிலே விளங்கி னாலும்
உதவாத குப்பையிலும் உள்ளார் தஞ்சை
உச்சிட்ட கணபதியின் உயர்வு மேலே! 159

திருவெண்ணெய் நல்லூர் பொல்லாப் பிள்ளையார்

931. அகமேவி அடியாருக் கருள்வாய் போற்றி
ஐந்துகர அத்திமுக அழகா போற்றி
இகழ்வாரைத் தாங்குமிறை மைந்தா போற்றி
இடர்போக்கிக் காத்தின்பம் செய்வாய் போற்றி
பகையான கயமுகனைப் பழித்தாய் போற்றி
பக்குவத்தார் நாள்தோறும் பரவ வந்து
புகழ்மேவு திருவெண்ணெய் நல்லூர் வைகும்
பொள்ளாத பிள்ளையரே போற்றி போற்றி. 160

திருநாரையூர் ஆண்ட பிள்ளையார்

932. விரிவான வெளியெங்கும் வியாபிக் கின்றார்
விளங்காத சூக்குமமாய் விளங்கு கின்றார்
பொருளாகிப் புவியாகிப் போக மாகி
புலனாகிப் போதமாகிப் புதுமை யாகி
அருளாகித் தெவிட்டாத அமுத மாகி
அரிதாய ஆனைமுகப் பெருமா னாகித்
திருநாரை யூராண்ட பிள்ளை யாரை
சேவிப்பார் தீவினைகள் தீர்ப்பா ராமே. 161

மயிலாப்பூர் செல்வ விநாயகர்

933. மூலாதி மூலமந் திரமா யுள்ளார்
முயற்சிகளை முட்டின்றி முடிக்க வைப்பார்
நாலாறோ டேழைந்தைக்[1] கடக்க வைப்பார்
ஞானவெளி நடமாடிக் களிக்க வைப்பார்
பாலோடு தேன்பாகு பருப்பைப் பெற்றுப்
பாங்கான அவ்வைக்குத் தமிழை ஈந்தார்
மேலான மயிலாப்பூர் விளங்கும் செல்வ
விநாயகரை வேண்டிவினை வீழ்த்து வாமே. 162

1 36 தத்துவங்களை

காஞ்சிபுரம் விகடசக்கர விநாயகர்

934. திடங்கொண்ட கயமுகனைத் திருத்தி வென்றார்
திசையெங்கும் நாயகராய்த் திகழ்ந்து நின்றார்
நடங்கண்டு சக்கரத்தை விசுவச் சேனர்
நயக்கவீந் தருள்செய்தார் நற்ற மிழ்ப்பாக்
கடல்கச்சி யப்பருயர் சைவம் வாழக்
கந்தபுரா ணஞ்செய்யக் கருணை செய்தார்
விடமுண்ட தந்தைபுகழ் மைந்த ரான
விகடசக் கரத்தாரை வேண்டு வாமே. 163

சிதம்பரம் நரமுக விநாயகர்

935. எல்லையிலாக் கருணைவளர் இன்பப் பிள்ளை
இறைவருக்கு வாய்த்தபெரும் இணையிற் பிள்ளை
அல்லல்புரி கயமுகனை அழித்த பிள்ளை
ஆறுமுகற் காரணங்கை அளித்த பிள்ளை
மல்லல்[1]வளர் தில்லைநகர் வைகும் பிள்ளை
வையமெலாம் வாழ்ந்தோங்க வைக்கும் பிள்ளை
நல்லதமிழ்க் கல்விபொருள் நாளும் நல்கும்
நரமுக விநாயகரை நாடு வாமே! 164

1 மல்லல் - செல்வம், அழகு, வலிமை.

சிதம்பரம் திருமுறை சுட்டிய விநாயகர்

936. அருமறையில் அமர்ந்திருக்கும் அரனார் தந்த
ஆதியனார் சோதியனார் ஆற்றல் மிக்கார்
ஒருவரென நின்றுவரும் ஊழிக் காலம்
உலகனைத்தும் திருவயிற்றில் ஒடுக்கும் நாதர்
திருநெறியில் நின்ற அருளாளர் செய்த
செம்பொருள்நூ லேடுகளைக் காத்த செல்வர்
திருவளரும் தில்லையிலே திகழ்ந்தி ருக்கும்
திருமுறைசுட் டியபெருமான் செந்தாள் போற்றி. 165

சிதம்பரம் கற்பகப் பிள்ளையார்

937. அண்டத்தை வயிற்றினிலே அடக்கும் பிள்ளை
ஆதிமுதல் தில்லையிலே அமர்ந்த பிள்ளை
அண்டித்தம் துயர்சொல்லி அழுவார்க் கெல்லாம்
ஆறுதலை அளித்தருளும் ஆனைப் பிள்ளை
துண்டித்த கொம்பாலே துயர்வி ளைத்த
சுரர்பகை துடைத்தபெருஞ் சூரர் நீல
கண்டத்தர் பிள்ளையினைக் கருணை மிக்கக்
கற்பகரைப் போற்றிநிதம் கசிந்துய் வாமே. 166

திருவாவடுதுறை அழகிய விநாயகர்

938. தேவியர் இருவராம் சித்தி புத்தி
சிந்திப்பார்க் கருள்வராம் சிறந்த முத்தி
தீவினைக் கயமுகன் தன்னை வீழ்த்தித்
தேவருக் கருள்செய்த கருணைச் செல்வர்
பூவிரி சோலைகள் பொலியு மாபோல்
பொன்பொருள் பூத்திடும் பொற்ப திப்பேர்
ஆவடு துறைமேவி அருள்பா லிக்கும்
அழகிய விநாயகரை அர்ச்சிப் பாமே. 167

திருக்கடவூர் கள்ளவாரணப் பிள்ளையார்

939. வெல்வினைகள் வழிவகைகள் விளங்கக் காணார்
வேதங்கள் தமைவிளக்கும் வித்தை காணார்
சொல்வகையிற் பொருள்நயத்திற் சுவைகள் காணார்
தொக்குநிற் கின்றவையும் துலங்கக் கணார்
நல்வினையால் உள்நின்று நலஞ்செய் கின்ற
நவையறுதூ வொளியினையும் நாடிக் காணார்
கல்விகலை சிறந்ததிருக் கடவூர் மேவும்
கள்ளவா ரணப்பிள்ளை காட்டாக் காலே. 168

திருமறைக்காடு சிந்தாமணி விநாயகர்

940. அருநெறியாம் சைவத்தாற் பெருக்கி அன்பை
அழுக்குகளைக் நீக்கியரன் அருளில் தோய்ந்து
பெருநிறைவு வாழ்க்கையிலே பெற்றுக் கொள்ள
பிறந்தவிந்தப் பிறப்பதனாற் பெருமை கொள்ள
கருவறையிற் காணுகின்ற கல்லைக் கொண்டு
காயத்துள் கரந்துறையும் ஒளியைக் காணத்
திருமறைக்கா டெழுந்தருளும் சிவனார் பிள்ளை
சிந்தாமணி விநாயகரைச் சேவிப் பாமே. 169

கோவை புலியக்குளம் மகாகணபதி

941. ஆங்காரக் கயமுகனை ஆண்ட வீரர்
அன்பென்னும் பயிர்வளர அருளும் செல்வர்
நீங்காது நெஞ்சத்தில் நிறையும் நண்பர்
நிகரற்ற ஞானத்தில் நிறுத்தும் நித்தர்
பாங்கான பண்பாளர் வாழும் கோவைப்
பதிசார்ந்த புலியக்குளம் பாதை ஓரம்
ஓங்கார வடிவினிலே வானம் ஓங்கி
உயருமகா கணபதியைக் கண்டுய்ந் தேனே. 170

கோவை ஆர்.எஸ். புரம் இரத்தின விநாயகர்

942. திருத்தமலர் விற்பவரைத் தெருவிற் கண்டேன்
சிறந்ததிருக் கோயிலதன் சிறப்புக் கண்டேன்
சிரத்தையுடன் அடியார்கள் சேரக் கண்டேன்
சேர்ந்தொன்றாய்ப் பாடச்செவி மடுத்துக் கேட்டேன்
விருத்தியுரை அறிவாளர் விளம்பக் கேட்டேன்
மேலான கண்காட்சிப் பூசை கண்டேன்
இரத்தினவி நாயகரின் எழிலுங் கண்டேன்
இரந்தவரின் அருள்வேண்டி வணங்கி னேனே. 171

காசி துண்டி விநாயகர்

943. ஊன்றியுள் ளிருக்குமோங் கார மூர்த்தி
உலகெலாம் ஆனவொப் பற்ற மூர்த்தி
மூன்றுகண் நாற்கரம் கொண்டு யானை
முகத்துடன் முதல்வந்த மூல மூர்த்தி
ஆன்றகோ டரிகலசம் அட்ச மாலை
அரக்கனை அடக்கிய தந்தம் தாங்கித்
தோன்றிமா பதிகாசி துலங்க நின்றார்
துண்டிவிநா யகரருள்வார் தொழுதுய் வாமே. 172

கனடா – பிராம்டன் கற்பக விநாயகர்

944. முற்றுமுழு முனைப்புடனே மூண்ட சண்டை
முறைகேட்டால் முயற்சிகளை முடித்திட் டாலும்
உற்றவரைப் பிரிந்தாலும் உழைத்துப் பெற்ற
உடைமைகளை இழந்தாலும் உறுதி கொண்டே
அற்பவுயிர் தாங்கியருங் கனடா அண்டி
அகதியென வாழ்ந்தாலும் அஞ்சேல் நெஞ்சே
கற்றவர்வாழ் பிராம்டனிலே கருணை காட்டும்
கற்பகரின் கழல்போற்றின் கதியுண் டாமே. 173

கனடா – மொன்றியல் மகாகணபதி

945. தான்மலர முனைகின்ற தன்னே ரில்லாத்
தமிழீழம் மலர்ந்திடவும் தமிழர் எங்கும்
மேன்மையுடன் வாழ்ந்திடவும் அமைதி மேவி
மேதினியை ஆண்டிடவும் வேறு பாட்டுப்
பான்மையெலாம் மறைந்திடவும் பரந்த நெஞ்சப்
பக்குவத்திற் சிறந்திடவும் பண்பு சான்ற
ஆன்மிகமா மொன்றியலில் அருள்பா லிக்கும்
ஐயன்மகா கணபதியை அர்ச்சிப் பாமே. 174

கனடா – எட்மன்டன் மகாகணபதி

946. பவநன்மை கைகூடப் பதம்பெற் றோங்கப்
பழவினைகள் தாம்வீழப் பதவி எய்தத்
தவஞான முனியோகர் தலைமைச் சீடர்
சற்குருசுப் பிரமுனியர் சாட்சி யாகப்
புவிபோற்றும் கனடாவில் பொன்றாச் செல்வம்
பொலிகின்ற எட்மன்டன் சைவர் போற்ற
நவகோயில் கொண்டருளி நலஞ்செய் கின்ற
நாதர்மகா கணபதியை நாடு வாமே. 175

இங்கிலாந்து – சரே, தோன்டன் ஈத்து சக்தி கணபதி

947. அணியான வேதாக மங்க ளாள்வார்
ஆனைமுக மாதேவாய் அவனி யெங்கும்
பணியாளர் புடைசூழப் பவனி கொள்வார்
பத்தர்களின் பழவினைகள் பாறச் செய்வார்
மணியான தமிழீழம் மலர வைப்பார்
வையத்தார் மதிக்கின்ற இங்கி லாந்தில்
துணிவாளர் பதிசரே தோன்டன் ஈத்தில்
துலங்குசக்தி கணபதிதாள் துணைய தாமே. 176

யேர்மனி – சுரூக்காத்து (ஸ்ரூட்கார்ட்) சித்தி விநாயகர்

948. பேரான முனிவர்பிரான் கனியைப் பீடார்
பெற்றாரை வலம்வந்து பெற்ற பிள்ளை
ஆராத கயமுகனின் ஆண வத்தை
அடக்கியே அமரர்தமக் கருள்பா லித்தார்
தீராத பழவினைகள் தீர்த்து வைப்பார்
செல்வமிகு யேர்மனியிற் சிறக்கச் சைவம்
சீரான சுரூக்காத்தில் திகழும் தெய்வம்
சித்திவிநா யகர்செந்தாள் சேரு வாமே. 177

யேர்மனி – அற்றிங்கன் வரசித்தி விநாயகர்

949. கல்விகலைக் கடல்தோய்ந்து செல்வம் ஈட்டி
கதியற்றார் தமக்கென்றும் உதவ வல்ல
நல்லமனம் நல்லகுணம் நன்கு பெற்று
நாகரிக உலகத்தை நாட்டி இன்பம்
சொல்லுதமிழ் மரபினிலே துய்த்து வாழ
தொன்மைநெறி யேர்மனியில் துலங்கத் தோன்றி
வல்லவர்வாழ் அற்றிங்கன் நகரில் வைகும்
வரசித்தி விநாயகரை வணங்கு வாமே. 178

பிரான்சு – இலாக்கூர்னெவ் சித்தி விநாயகர்

950. ஊரென்ன உறவென்ன உலக மென்ன
உடலென்ன மனமென்ன உயிரு மென்ன
பேரென்ன புகழென்ன செல்வ மென்ன
பிறப்பென்ன இறப்பென்ன பிரியா துள்ள
நீரென்ன நிலமென்ன காற்று மென்ன
நெருப்பென்ன வானென்ன நினைக்கின் எல்லாம்
சீர்மன்னும் பிரான்சினிலே இலாக்கூர் னெவ்வாழ்
சித்திவிநா யகப்பெருமான் திருத்தா ளாமே. 179

சீசெல்சு – விக்டோரியா நவசக்தி விநாயகர்

951. உவந்துமையோ டொன்றாகச் சிவனார் உன்ன
ஓமென்னும் மந்திரமா முகத்தி னோடு
வியந்துலகம் தொழவந்தார் வேண்டும் அன்பர்
விக்கினங்கள் விழவந்தார் விண்ணோர்க் கின்னல்
பயந்தகய முகசுரனைப் பணிய வைத்தார்
பரந்தகடல் சீசெல்சுப் பண்பார் நாட்டில்
நயந்தருளி விக்டோரியா நகரில் உள்ளார்
நவசக்தி விநாயகரின் நாமம் வாழி. 180

7

விநாயக கீர்த்தனைகள்

விநாயக கீர்த்தனைகள் – உள்ளடக்கம்

		பக்க எண்
	அணிந்துரை	315
1.	விநாயக வணக்கம்	320
2.	வரசித்தி விநாயகர்	321
3.	வரசித்தி விநாயகர்	322
4.	வல்லப கணபதி	323
5.	கற்பக விநாயகர்	324
6.	சித்தி விநாயகர்	325
7.	செல்வ விநாயகர்	326
8.	சோதி விநாயகர்	327
9.	மகா கணபதி	328
10.	முத்து விநாயகர்	329
11.	மாமாங்கப் பிள்ளையார்	330
12.	நந்தவனப் பிள்ளயார்	331
13.	வீரகத்தி விநாயகர்	332
14.	மாணிக்கப் பிள்ளையார்	333
15.	மாணிக்கப் பிள்ளையார்	334
16.	உச்சிப் பிள்ளையார்	335
17.	இரத்தின விநாயகர்	336
18.	வாதாபி கணபதி	337
19.	சக்தி கணபதி	338
20.	மூத்த பிள்ளையார்	339
21.	துரந்தை வரசித்தி விநாயகர்	340
22.	நியூ யோக்கு மகா வல்லப கணபதி	341

அணிந்துரை

சங்கீதபூஷணம் திருமதி பூமணி இராசரத்தினம் அவர்கள்

*விநாயகர் கீர்த்தனை*களுக்கு அணிந்துரை எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவற்றைப் பாடியிருக்கும் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களை நான் நெடுங்காலமாகவே நன்கு அறிவேன். அவரும் நானும் தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள். நான் படித்த சாவகச்சேரி இறிபேக் கல்லூரியிலேயே அவரும் படித்தார். இத்தகைய ஊர்த் தொடர்பும் இந்த அணிந்துரை எழுதக் கிடைத்த வாய்ப்புக்கு ஒரு காரணம் என்று நினைக்கிறேன். அதை நினைந்து நான் பெருமைப் படுகிறேன்.

பத்திப் பாடல்கள் பாடுவதில் கவிநாயகர் புகழ் பெற்றவர். அதற்குப் பத்திமட்டுமன்றிச் சமய, தமிழ் அறிவும் கவிதை பாடும் ஆற்றலும் வேண்டும். கவிதை இலக்கண மரபும் கற்றிருக்க வேண்டும். இவை யாவும் கவிநாயகரிடத்தில் சிறப்பாக உள்ளன. கனடா சைவ சித்தாந்த மன்றம் மிசிசாகாவில் நடத்தும் சமய விழாக்களிலும் பிற இடங்களிலும் கவிநாயகரின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந் திருக்கிறேன். அவரது பேச்சுவன்மை கவர்ச்சியானது. சமய அறிவும் ஆழமானது.

இவர் அண்மையில் இந்த *விநாயக கீர்த்தனை*களை எனக்கு அனுப்பி அவற்றுக்குப் பொருத்தமான இராகம் போட்டுத் தருமாறும் அவை பற்றி எனது கருத்துக்களை எழுதித் தருமாறும் கேட்டது அவர் என்மீது வைத்திருக்கும் அன்பையும் மதிப்பையும் காட்டுகின்றது.

கீர்த்தனைகள் தெய்வங்களின் குணங்களையம் அருட் சிறப்புக்களையம் புகழ்ந்துரைக்கும் இசைப் பாடல்களாகும். அந்த வகையில் *விநாயக கீர்த்தனைகள்* விநாயகப் பெருமானுடைய பெருமைகளை எடுத்துக் கூறுவனவாக உள்ளன.

கவிநாயகர் பெரும் விநாயக பத்தர். சாவகச்சேரியைச் சேர்ந்த நுணாவில், கவிநாயகரின் பிறந்த பதி. நுணாவிலில் பல குறிச்சிகள். இவர் பிறந்த குறிச்சிக்குக் கொல்லங்கிராய் என்று பெயர். கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் இவரது குலதெய்வம். கொல்லங் கிராயின் பழைய பெயர் கொல்லாபுரி என்பது. கோலங்கரை என்பது புதிய பெயர். அதனை வைத்தவர் கவிநாயகர்தான்.

திரிதரநல் நிழல்சொரியும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வா ராமே

என்று அவர் வீரகத்தி விநாயகர்மீது பாடிய *விநாயகப்பா* என்ற நூலில் கொல்லங்கிராய்க்குக் கோலங்கரை என்று புதுப்பெயர் சூட்டியதோடு திரு அடை வைத்துத் திருக்கோலங்கரை ஆக்கிச் சிறப்பித்திருத்தலையும் காணலாம்.

தமிழில் பலர் கீர்த்தனைகள் பாடியிருக்கிறார்கள். ஏறத்தாழ கி. பி. 16ஆம் நூற்றாண்டு அளவில் வாழ்ந்த முத்துத்தாண்டவர் என்பவர் கீர்த்தனை ஆசிரியர்களுக்கு முன்னோடியானவர். இவரையடுத்து மாரிமுத்தாபிள்ளை, அருணாசலக் கவிராயர், திரிகூடராசப்பக் கவிராயர், சியாமா சாஸ்திரிகள் என்று பலபேரைச் சொல்லலாம்.

கீர்த்தனைகளை வளர்த்தெடுத்தவர்களாக நந்தனார் சரித்திரம் புகழ் கோபாலகிருஷ்ண பாரதியாரும் அவரது சீடராகிய வேதநாயகம்பிள்ளையும் போற்றப்படுகிறார்கள். இவர்களைத் தொடர்ந்து கீர்த்தனைகள் பாடியவர்கள் பலராயினும் அவர்களில் இராமலிங்க சுவாமிகள், பாபநாசம் சிவன் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்.

எமது நாட்டில் அதிக கீர்த்தனைகள் பாடியவராக இணுவை யூர் வீரமணி ஐயர் விளங்குகின்றார். கனடாவில் பிருந்தகானாலயா அதிபர் கலாபூஷணம் திருமதி இராஜமணி சிங்கராஜா அவர்கள் கீர்த்தனைத் தொகுதி ஒன்றை வெளியிட்டிருக்கின்றார். அவர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர். மாவைக் கந்தன் அவரது குலதெய்வம். அதனால் அவரது கீர்த்தனைகள் முருகன் புகழைப் பாடுபவையாக உள்ளன.

கவிநாயகர் தமது குலதெய்வாமாகிய விநாயகரைப் பற்றி இதில் 22 கீர்த்தனைகள் பாடியிருக்கின்றார். விநாயகரின் பெருமை யையும் திருவிளையாடல்களையம் அவரை வணங்குவதால் கிடைக் கக் கூடிய நன்மைகளும் இக் கீர்த்தனைகளில் இடம் பெற்றிருக் கின்றன. திருவிளையாடல்களுக்கு விநாயக வணக்கம் என்ற முதலாவது பாடலையே உதாரணமாக் காட்டலாம்.

பல்லவி

விநாயகரே வணக்கம் - வரசித்தி
விநாயகரே வணக்கம்

அனுபல்லவி

அனாதியில் ஆன்மாவில் அறியாமல் செறிந்துள்ள
ஆணவ மலத்தினை அறுத்தருள் புரிந்திடும்

சரணம்

ஆர்வுடன் தாய்தந்தை அகிலமென் றேத்தியும்
வீரனைக் கயமுகச் சூரனை வீழ்த்தியும்
பேருயர் அகத்தியர் பெருமையைத் தாழ்த்தியும்
நேரரும் நாடகம் நிலைபெற நிகழ்த்திய

விநாயகப் பெருமானை வணங்குவதனால் வரக்கூடிய நன்மைகள் பல இடங்களில் பேசப்படுகின்றன. இதற்குச் செல்வ விநாயகர் என்ற ஏழாவது கீர்த்தனை நல்ல உதாரணம்.

பல்லவி

திருவருள் தந்தருள் செல்வ விநாயகா
அருமையும் பெருமையும் அறித்துன்னை வணங்கவே

அனுபல்லவி

பெருகிக்கண் ணீரோட உருகிச்செந் தமிழ்பாடி
அருகில்நிற் கின்றேனை உரிமைக்கை கொடுத்துந்தன்

சரணம்

கல்வியும் செல்வமும் கலைகளும் பெருகவும்
நல்லவை வல்லவை நாள்தொறும் புரியவும்
தொல்வினை நிகழ்வினை வருவினை யாவுமே
நல்வினை யாகவும் நன்கெனக் கிரங்கியே

கீர்த்தனைகளுக்கு ஓசைச் சிறப்பும் இருத்தல் வேண்டும். கவிநாயகரின் பாடல்களில் அதற்குப் பஞ்சமே இல்லை. எதுகை மோனைகள் இயல்பாக அமைந்து இன்பம் பயக்கின்றன. ஓசை இன்பத்துக்கு எல்லாப் பாடல்களுமே உதாரணங்கள் என்றாலும் மூன்றை எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

அந்தரம் தீர்த்திடும் மந்திர முகத்தவர்
சிந்தித்துத் தொழுதெழும் இந்திரன் அகத்தவர்

தந்தைதாய் உலகென்று வலம்வந்த தலைமகன்
கந்தனின் காதலுக் குதவிய கலைமகன்.

கீர்த்தனை 9

நில்லாத உலகத்தில் நிற்கின்ற நித்தியரை
சொல்லாத பொருள்யாவும் சொல்கின்ற தத்துவரை
வெல்லாத வெற்றிகளை வெல்லவைக்கும் வித்தகரை
செல்வாய செல்வமெல்லாம் தரவல்ல முத்தியரை.

கீர்த்தனை 15

சத்தி தரவல்லார் புத்தி தரவல்லார்
வித்தை வருவிப்பார் வெற்றி விளைவிப்பார்
முத்தி முகிழ்விப்பார் பித்தர் பெற்றமுதல்
அத்தி முகப்பிள்ளை அத்தன் அருள் வள்ளல்.

கீர்த்தனை 19

இவற்றுடன் தமிழீழ விடுதலை உணர்வும் இப்பாடல்களிற் கலந்திருப்பதை வாசகர்கள் கவனிக்கலாம். சுயநலம் என்று இல்லாமல் இனநலமும் இவரது ***விநாயகப்பா, விநாயக வெண்பா, விநாயக விருத்தம்*** ஆகிய படைப்புக்களிலும் கலந்திருப்பதை நான் கவனித் திருக்கிறேன். எனினும் அவற்றிலே காணப்படும் சொந்த அநுப வங்கள் இக் கீர்த்தனைகளில் குறைவாகவே காணப்படுகின்றன. அதற்கு ஒரு சமாதானம் சொல்லலாம். அநுபவங்கள் ஆளுக்காள் வேறுபடுவன. கீர்த்தனைகளைக் கவிநாயகர் தமக்காகப் பாடவில்லை. மற்றவர்களுக்காகத்தான் பாடியிருக்கின்றார். அதனால் எல்லோருக் கும் பொதுவானவகையில் போற்றுதல், வேண்டுதல் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடல்களை அமைத்துள்ளார்.

இவற்றை நான் அநுபவித்துப் பாடி இராகங்களை அமைத் துள்ளேன். சிலவற்றை ஒலிவடிவிலும் பாடி அவரிடம் கொடுத் துள்ளேன்.

விநாயகப் பெருமான் ஓங்காரமானவன். ஓங்காரத்திலிருந்தே இசை பிறந்தது. அதனால் விநாயகப் பெருமானை இசையால் வழி படுவது அவருக்குப் பிடித்தமானது என்பது நம்பிக்கை. அதற்குத்தக இக்கீர்த்தனைகளைச் சிறப்புற அமைத்த கவிநாயகரைப் பாராட்டு கின்றேன். எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அவருக்கு எல்லா நலங்களையும் வழங்கப் பிரார்த்திக்கின்றேன்.

- பூமணி இராசரத்தினம்

1. விநாயக வணக்கம்

இராகம்: நாட்டை *தாளம்: ஆதி*

பல்லவி

952. விநாயகரே வணக்கம் - வரசித்தி
விநாயகரே வணக்கம்

அநுபல்லவி

அனாதியில் ஆன்மாவில் அறியாமல் செறிந்துள்ள
ஆணவ மலத்தினை அறுத்தருள் புரிந்திடும்

சரணம்

ஆர்வுடன் தாய்தந்தை அகிலமென் றேத்தியும்
வீரனைக் கயமுகச் சூரனை வீழ்த்தியும்
பேருயர் அகத்தியர் பெருமையைத் தாழ்த்தியும்
நேரரும் நாடகம் நிலைபெற நிகழ்த்திய

2. வரசித்தி விநாயகர்

இராகம்: அம்ஷத்வனி *தாளம்: ஆதி*

பல்லவி

953. வரசித்தி விநாயகரே - வணங்கி
வரந்தர வேண்டுகின்றோம்

அநுபல்லவி

அரியநின் திருவருள் அன்பருக் கிலையெனின்
உரியநற் கலை-கல்வி உயர்வில்லை ஆதலின்

சரணம்

மேதினி தனிலுயர் மேன்மைகள் விளங்கிட
மோதகம் பால்பழம் முற்றிய கரும்பவல்
தீதறு தேனமு தானவை வைத்தடி
ஏதமில் பூசனை காதலில் இயற்றியே

3. வரசித்தி விநாயகர்

இராகம்: கர்நாடக தேவகாந்தாரி *தாளம்: ஆதி*

பல்லவி

954. வாழ்த்தாத நாளில்லை வரசித்தி விநாயகா
ஆத்தாது நேரினிற் அருள்பெற வந்தனன்

அநுபல்லவி

பார்த்தேநான் பத்தியில் பணிந்தனன் பாதங்கள்
பூத்தேனே உனதரும் பூசையைக் கண்டார்த்து

சரணம்

ஊரென்ன உறவென்ன யாரென்றால் எனக்கென்ன
சீரென்ன சிறப்பென்ன சிந்திக்கின் எல்லாமே
தீராத வினைகளைத் தீர்த்திடும் நீயெனச்
சோராது நினைக்குமித் துரும்பினை ஆண்டருள்

4. வல்லப கணபதி

இராகம்: கானடா *தாளம்: திஸ்ரலகு*

பல்லவி

955. கணபதிதாள் போற்றி - வல்லப
கணபதிதாள் போற்றி

அநுபல்லவி

இணையற்ற இணையடி துணையென அனுதினம்
அணுகியே அடியவர் அன்புடன் வணங்கிடும்

சரணம்

தாய்தந்தை உலகென்று வலம்வந்த தாளிணை
தூயநல் அகத்தியர் துரத்திய துணையடி
போயொரு சூரொடு போர்செய்த புகழடி
ஓய்வின்றி ஓம்புவர் உள்ளத்தில் ஓங்கிடும்

5. கற்பக விநாயகர்

இராகம்: பிலகரி *தாளம்: ரூபகம்*

பல்லவி

956. பொற்புறு தேர் இவர்ந்தார் புதுமைசெய்யும்
கற்பக விநாயகர்தான்

அனுபல்லவி

அற்புதக் காட்சிகண் டடியவர் ஆர்த்தெழ
விற்பனச் சித்திரம் சிற்பங்கள் விளங்கிடும்

சரணம்

கல்வியைத் தந்தருள கவின்கலைகள்
பல்கிப் பயன்கள் பொழிய
செல்வச் சிறப்பு வளரச் செந்தமிழர்
அல்லல் அகற்றி அருள

6. சித்தி விநாயகர்

இராகம்: மார்க்க இந்தோளம் *தாளம்: ஆதி*

பல்லவி

957. அடியவன் தனக்கும் அருள்சித்தி விநாயகா
கொடுமைகள் அகன்றோடக் கும்பிட்டு வேண்டினேன்

அனுபல்லவி

அடிமையாய் வாழ்ந்துநான் அல்லலால் அலைவுற்றேன்
விடுதலை வேண்டியே வீழ்ந்தனன் நினதடி

சரணம்

இருள்மலச் சூரனைச் செருவினில் வென்றனை
திருநல வாழ்வினைத் தேவருக் கீந்தனை
கருணைசெய் கடவுளே கவலைகள் நீங்கவும்
உரிமையும் பெருமையும் பெற்றினிது ஓங்கவும்

7. செல்வ விநாயகர்

இராகம்: ஷண்முகப்பிரியா *தாளம்: ஆதி*

பல்லவி

958. திருவருள் தந்தருள் செல்வ விநாயகா
அருமையும் பெருமையும் அறித்துன்னை வணங்கவே

அநுபல்லவி

பெருகிக்கண் ணீரோட உருகிச்செந் தமிழ்பாடி
அருகில்நிற் கின்றேனை உரிமைக்கை கொடுத்துந்தன்

சரணம்

கல்வியும் செல்வமும் கலைகளும் பெருகவும்
நல்லவை வல்லவை நாள்தொறும் புரியவும்
தொல்வினை நிகழ்வினை வருவினை யாவுமே
நல்வினை யாகவும் நன்கெனக் கிரங்கியே

8. சோதி விநாயகர்

இராகம்: அடானா *தாளம்: ரூபகம்*

பல்லவி

959. விநாயகர் காட்சி தந்தார் - தேர்மீதில்
விண்ணவ ரும்வந்து கண்டு மகிழச் சோதி

அநுபல்லவி

கனாவிது வோஎனக் கண்களும் வியந்திடும்
கலைவளச் சித்திரச் சிலைநலத் தேரேறி

சரணம்

உருவளர் சித்தியும் புத்தியும் அருகெழ
அரகர அரகர வோ என மருவியே
திருமிகு வடிவினை அடியவர் பருகியே
உருகிட விரிவெளி வீதியில் அருள்மிகு

9. மகா கணபதி

இராகம்: கேதாரகௌளை *தாளம்: மிஸ்ரசாப்பு*

பல்லவி

960. மகா கணபதி தாள் வாழ்க - எங்கள்
மகா கணபதி தாள் வாழ்க

அநுபல்லவி

ககோளம் பூகோளம் காதல்கொண் டேத்துவார்
தகாத வினைகளைத் தகர்த் தருள் பாலிக்கும்

சரணம்

அந்தரம் தீர்த்திடும் மந்திர முகத்தவர்
சிந்தித்துத் தொழுதெழும் இந்திரன் அகத்தவர்
தந்தைதாய் உலகென்று வலம்வந்த தலைமகன்
கந்தனின் காதலுக் குதவிய கலைமகன்

10. முத்து விநாயகர்

இராகம்: கரகரப்பிரியா *தாளம்: ஆதி*

பல்லவி

961. முத்து விநாயகரை எண்ணித் தொடங்கும்
முயற்சிகள் சித்திபெறல் திண்ணமாமே

அநுபல்லவி

அத்தி முகத்தவரை வித்தை மிகுந்தவரை
புத்தி தருபவரைப் போற்றிப் பத்தியுடன்

சரணம்

தனிப்பெருந் தலைவரின் தலைமகன் ஆனவர்
மனிதரும் நாகரும் முனிவரும் வானவர்
அனைவரும் அனுதினம் நினைந்தெழும் தேனவர்
வினைமுதல் கயமுகன் தனைவென்ற கோனவர்

11. மாமாங்கப் பிள்ளையார்

இராகம்: இந்தோளம் *தாளம்: ஆதி*

பல்லவி

962. பிள்ளையாரைத் தொழுவோம் - மாமாங்கப்
பிள்ளையாரைத் தொழுவோம்

அநுபல்லவி

உள்ளத் தழுக்குகள் ஓடி ஒழிந்திட
தெள்ளத் தெளிந்தமெய்ஞ் ஞானம் வளர்ந்திட

சரணம்

செந்தமிழ்ச் செல்வச் சிறப்புக்கள் சேரவும்
நந்தமிழ் மக்களின் அந்தரம் தீரவும்
வெந்துயர் ஆணவச் சூரனை வதைத்தவர்
மந்திர மாமலைத் தந்தி முகத்தராம்

12. நந்தவனப் பிள்ளையார்

இராகம்: சங்கராபரணம் *தாளம்: ரூபகம்*

பல்லவி

963. உள்ளம் உருகுகிறதே நந்தவனப்
பிள்ளையார் பெருமை எண்ணி

அநுபல்லவி

அள்ளி அள்ளி வேண்டும் யாவையுந் தருகின்ற
வள்ளலின் வார்கழல் கண்டு வணங்க என்

சரணம்

முத்தமிழ் முக்கனி முன்வந்தும் மூவாத
அத்தி முகத்தரைப் பத்தரின் பித்தரைத்
தத்துவ ஞானியை வித்துவப் பிள்ளையை
புத்தமு தானவர் பூங்கழல் காண என்

13. வீரகத்தி விநாயகர்

இராகம்: பாகேஸ்ரீ *தாளம்: ஆதி*

பல்லவி

964. உனையன்றித் துணைவேறு உலகிலுண்டோ - முன்னை
வினைதீர்க்க வீரகத்தி விநாயகா எங்களுக்கு

அநுபல்லவி

மனிதருடன் சேர்ந்து வானவரும் சென்னி
குனிதரும் குஞ்சர முகத்தரே குணக் குன்றே

சரணம்

சொல்லரும் துயர்புரி சூரன் தன்னை வீழ்த்தி
மல்லல்சேரும் வாழ்வை வானவர்க் கீந்தனை
தில்லைநட மாடும் சிவபெருமான் செல்வா
அல்லல்தீர்த் தன்பரைக் காத்தருள வல்லவா

14. மாணிக்கப் பிள்ளையார்

இராகம்: பந்துவராளி *தாளம்: ஆதி*

பல்லவி

965. அள்ளி அள்ளி வழங்க வல்லார் மாணிக்கப்
பிள்ளையார் பெருமை யார் சொல்ல வல்லார்

அநுபல்லவி

கள்ளமில்லா அடியவர் கசிந்துள்ளம் சொரிந்துகண்
உள்ளி உள்ளித் தொழுதேத்தி உருகியே கேட்பதெல்லாம்

சரணம்

எல்லவரும் ஏத்துகின்ற கல்விகலை ஞானமுடன்
செல்வங்களும் செயற்கரிய செயல்திறனும் திடநலமும்
வெல்லுகின்ற வீரநெஞ்சும் மேன்மைகளும் நிம்மதியும்
சொல்லரிய புகழும் எல்லாம் தொடர்ந்தென்றும் துய்த்து வாழ

15. மாணிக்கப் பிள்ளையார்

இராகம்: காம்போதி *தாளம்: ஆதி*

பல்லவி

966. காணக்கண் ஆயிரம் வேண்டும் - எங்கள்
மாணிக்கப் பிள்ளையாரின் மாட்சிகொள் காட்சியை

அநுபல்லவி

ஆணிப்பொன் மேனியை அலங்கார அணிகளை
சேணுயர் தேர்சிற்பக் கலையினைப் பொலிவினை

சரணம்

நில்லாத உலகத்தில் நிற்கின்ற நித்தியரை
சொல்லாத பொருள்யாவும் சொல்கின்ற தத்துவரை
வெல்லாத வெற்றிகளை வெல்லவைக்கும் வித்தகரை
செல்வாய செல்வமெல்லாம் தரவல்ல முத்தியரை

16. உச்சிப் பிள்ளையார்

இராகம்: கீரவாணி *தாளம்: ஆதி*

பல்லவி

967. உள்ளம் மிக நாடுதே - உச்சிப்
பிள்ளை தனைக் கண்டு வெள்ள அருளில் தோய

அநுபல்லவி

தள்ளிப் பிரிந்தகன்று தாய்ப்பசுவுக்கு ஏங்குதல்போல்
மள்ளர் வறட்சிகண்டு வான்முகிலை நோக்குதல்போல்

சரணம்

மன்னும் புகழ்சான்ற மலைக்கோட்டை மகிழ்ந்தருளிப்
பொன்னும் பொருளும் தந்து பொழுதெல்லாம் காப்பவரை
முன்னை வினைமுடித்து முத்தி அளிப்பவரை
கன்னற் கனியமுதை எண்ணிக் கசிந்துருகி

17. இரத்தின விநாயகர்

இராகம்: மோகனம் *தாளம்: ஆதி*

பல்லவி

968. விநாயகர் தாள் போற்றி - இரத்தின
விநாயகர் தாள் போற்றி

அனுபல்லவி

அனாதியில் உள்ளவர் அந்தம் இல்லாதவர்
கனாவிலும் கருத்திலும் கண்ணிலும் நிறைந்தவர்

சரணம்

அல்லல்கள் தீர்த்திடும் ஆனை முகத்தவர்
கல்வியும் கலைகளும் செல்வமும் ஆனவர்
நல்லறச் செயல்களின் நாதனும் ஆனவர்
வல்வினை முடித்தெம்மை வாழ்விக்க வல்லவர்

18. வாதாபி கணபதி

இராகம்: கல்யாணி *தாளம்: ஆதி*

பல்லவி

969. வாருங்கள் வணங்க வாருங்கள் வாருங்கள்
வாதாபி கணபதி வார்கழல் வணங்க

அனுபல்லவி

தீருங்கள் திரண்ட தீவினை யாவும்
ஆராத காதலுடன் அவரடி வணங்கி

சரணம்

நல்லாரின் வினைகளை நலிவுறச் செய்வார்
செல்வாய செங்காட்டங் குடியினில் திகழ்வார்
வெல்லாத போர்தனை எளிதினில் வென்ற
வல்லாளர் சிறுத்தொண்டர் வணங்கிய வள்ளலை

19. சக்தி கணபதி

இராகம்: பைரவி *தாளம்: ஆதி*

பல்லவி

970. கணபதி தாள் வாழ்க - சக்தி
கணபதி தாள் வாழ்க

அநுபல்லவி

அணுக்களுக் கதிபதி அண்டங்கட் கதிபதி
கணங்களுக் கதிபதி கலைகளுக் கதிபதி

சரணம்

சத்தி தரவல்லார் புத்தி தரவல்லார்
வித்தை வருவிப்பார் வெற்றி விளைவிப்பார்
முத்தி முகிழ்விப்பார் பித்தர் பெற்றமுதல்
அத்தி முகப்பிள்ளை அத்தன் அருள் வள்ளல்

20. மூத்த பிள்ளையார்

இராகம்: மத்தியமாவதி *தாளம்: ஆதி*

பல்லவி

971. மூத்த பிள்ளையார் முப்போதும் எங்களைக்
காத்து நிற்பவர் கழல் தொழுவோம்

அநுபல்லவி

ஆர்த்து வாருங்கள் அன்போடு சேருங்கள்
சேர்த்த தீவினை இன்றோடு தீர்ந்திட

சரணம்

ஆன ஆணவம் அடங்க வைப்பவர்
ஞான மேனியர் வேத நாயகர்
வான நாடரும் வணங்கி வரம்பெறும்
ஆனை மாமுக அண்ணல் அருள் பெற

21. துரந்தை வரசித்தி விநாயகர்

இராகமாலிகை
இராகம்: ஆனந்தபைரவி *தாளம்: ஆதி*

பல்லவி

972. விநாயகர் சித்தி விநாயகர்
வர சித்தி விநாயகர்

சரணம்

துரந்தை நகரில் தொடர்ந்தருள்வார் - எங்கள்
துயர்கள் யாவும் துடைத்தருள்வார்
வரங்கள் தந்தே உருக்கிடுவார் - வளம்
வாழ்க்கை சிறக்கப் பெருக்கிடுவார்.
- விநாயகர் சித்தி விநாயகர்...

இராகம்: கல்யாணி *தாளம்: ஆதி*

கரங்கள் ஐந்தைக் கொண்டபிரான் - கொடுங்
கயமுகன் தன்னைக் கொன்றபிரான்
புரங்கள் மூன்றை முடித்திடவே - சிவன்
பொலிந்தெழு தேரை ஒடித்தபிரான்.
- விநாயகர் சித்தி விநாயகர்...

இராகம்: பாகேஸ்ரீ *தாளம்: ஆதி*

ஊழிக் காலம் கடக்கவல்லார் - உள்ள
உயிர்களை வயிற்றில் அடக்கவல்லார்
கேழிற் கல்வி செல்வமெல்லாம் - தந்து
கேடுகள் தீர்த்தருள் செய்யவல்லார்.
- விநாயகர் சித்தி விநாயகர்...

இராகம்: ரஞ்சனி *தாளம்: ஆதி*

பூசைச் சிறப்பைக் காட்டிடுவார் - பத்தி
புணர்ந்தெழ இன்பம் ஊட்டிடுவார்
வாச மலர்த்தாள் வணங்கிடுவீர் - உள்ள
வல்வினை தீர இணங்கிடுவீர்.
- விநாயகர் சித்தி விநாயகர்...

22. நியூ யோக்கு மகா வல்லப கணபதி

இராகம்: ஆனந்தபைரவி *தாளம்: ஆதி*

பல்லவி

973. மகா வல்லப கணபதியே - இந்தத்
தகாத மகனுக்கும் தா கதியே

சரணம்

அழகப்பன் அகத்தியர் ஆணைமேற் கொண்டு
அமெரிக்க அடியவர் வணங்குதற் கென்று
அழகிய நியூயோக் நகரத்தில் அமைத்த
விழுமிய கோயிலில் வீற்றிருந் தருளும்
- மகா வல்லப கணபதியே ...

ஓமெனும் பிரணவ ஒலியினில் உதித்தாய்
தாமெனும் அசுரரின் ஆணவம் தகர்த்தாய்
பாமரர் படித்தவர் யாவரும் ஒன்றாய்
ஆர்வுடன் தொழுதிட அருள்செய்து நின்றாய்
- மகா வல்லப கணபதியே ...

தந்தையின் தேரதன் அச்சினை ஒடித்தாய்
சந்திரன் மடமையைச் சதுர்த்தியில் முடித்தாய்
மந்திர முனியுடன் நாடகம் நடித்தாய்
சுந்தர வள்ளியைத் தம்பிக்குக் கொடுத்தாய்
- மகா வல்லப கணபதியே ...

புத்திக்கும் சித்திக்கும் புகழுக்கும் நீயே
வித்தைக்கும் விறலுக்கும் சத்திக்கும் நீயே
பத்திக்கும் பேரின்ப முத்திக்கும் நீயே
எத்திக்கும் ஏத்திடும் இறைவனும் நீயே
- மகா வல்லப கணபதியே ...

பாட்டு முதற் குறிப்பு அகராதி

அ

அகத்தவரை 116
அகமேவி அடியாருக்கு 931
அகிலம் 499
அங்கம் நீ வேதம் 273
அங்கம் வேதஞ்சொல் 520
அங்கிங்கு 545
அங்குச பாச 582
அங்குச பாசம் 706
அங்கும் இங்கும் 252
அங்கொருகால் 6
அஞ்சாத 824
அடங்காத கயமுகனை 391
அடலசுரன் 809
அடியவர் பெருவண்ணக் 109
அடியவன் தனக்கும் 957
அடியேன்தனக்குமவர் 364
அண்டங்கள் யாவையுமே 130
அண்டத்தை 937
அண்டம் யாவும் 488
அண்டமெங்கும் 251
அண்ணலேயெனக் 259
அணியான வேதாக 947
அத்தனின் பிள்ளை 226
அத்தனுக்கு மூத்த பிள்ளை 249
அத்தனே ஆதியே 790
அத்தி முகத்தர் 536
அத்திமுகன் ஆக்குவித்த 217
அதிகாரச்சதிகாரச் 274
அந்தம் 531
அந்தமில் 493
அந்தமில் வரங்கள் 516
அந்தமிலா 649
அந்தமிலார் 60
அந்தமிலார் 831
அந்தமு மற்றாய் 244
அந்தரம் 744
அம்பொன் மானிள 525
அம்மை அப்பர் 532
அரசபதம் 803
அரனார் மகனே 21
அரனாரின் 764
அரிய தவத்துப் பேரழகி 403
அரிய பாசமும் 470
அரியதமி 659
அரியநிதி 87
அரியவளம் 650
அரியவள்ளி 483
அரியவெளி 781
அரியவொரு 1
அரியும் அயனும் 628
அருகிலுள 657
அருச்சித்தே 844
அருந்தமிழ் 497
அருந்தமிழ் 679
அருந்தமிழும் 590
அருந்தவ வள்ளி 515
அருநெறியாம் 940
அருமறையில் அமர்ந் 936
அருவமெனத் 653
அருவானார் 396
அருள்யானை முகமு 928
அல்கி ஊழி 559
அலகிலரும் 845
அல்லல் ஆழ்ந்திடும் 529
அல்லல் தீர்க்கும் 623
அல்லல் போக்கி 258
அல்லல்செய் 664
அல்லலறுத் தாண்டருளும் 911
அல்லலை நீக்கி 248
அல்லும் பகலும் 30
அல்லும் பகலும் 553
அலைமோதும் கடல் 271
அவதாரம் 837
அழகான 548
அழல்பழுத்த 857
அழவேண்டாம் 121
அழுக்கையுண் 357
அழுவேனும் இல்லை 127
அளவற்ற 799
அள்ளி அள்ளி 965
அறஞ்செய 733
அற்புதம் 489
அற்புதர் 802
அறியாத பருவமதில் 2
அறிவறிந்த 69
அறிவில் ஊக்கத்தில் 709
அறிவின் ஆழம் 406
அறிவினை விரிக்கும் 427
அன்பதேசிவ மாய 279

பாடல்	பாடல் எண்
அன்பர்க் கன்பர்	399
அன்பாள வேண்டும்	142
அன்புடன்	732
அன்புடனே	115
அன்புமிகு	67
அன்புள்ளார் எதிலுமே	350
அன்பே வடிவான	120
அன்பேசிவமாய	203
அன்றைத் தமிழான்ற	194
அன்னநடைக் கன்னியிள	395
அன்னைமீனாட்சியின்	927
அன்னையவ்வை பூசை	164
அனாதி யானவர்	703
அனாதிக் காதியான	231
அனாதையாம்	750
அனுதினமும்	690
ஆ	
ஆக்கங்கள்	784
ஆங்காரக் கயமுகன்	778
ஆங்காரக் கயமுகன்	941
ஆசை ஆடம்ப	727
ஆசைக்கும்	737
ஆசைகளை	866
ஆசையுடன் கண்	583
ஆடக வள்ளி	748
ஆடாமல் அசையாமல்	766
ஆடிமனம்	72
ஆடுகள் போலத்	354
ஆடுது பாடுது	327
ஆணவம்	106
ஆணையே யாம்	280
ஆத்திரச் சூரனை	819
ஆதாரம் ஆகி	521
ஆதி அந்தம்	624
ஆதி சிவசக்தி	372
ஆதி சிவசக்தி	441
ஆதி நாயகர்	450
ஆதி முதலை	178
ஆதிக்கும் ஆதி	581
ஆதிசிவன்	835
ஆதிசிவன் பெற்ற	630
ஆதிப் பொருளாய்	570
ஆதிமுதல்	610
ஆதிமூலமே	265
ஆதியானவன்	283
ஆதியில்	742
ஆதியில்லார்	640
ஆதியிலார்	15
ஆதியிலார்	681
ஆதியிலார்	815
ஆதியே ஆதரவில்	853
ஆதியே சோதியே	409
ஆதியே பால்வெண்	239
ஆதிவித்தை அந்த	199
ஆரமுதை	827
ஆர்வுடன்	746
ஆராத அன்பொடு	898
ஆவலுடன் தொழுது	393
ஆவியினினியான்	46
ஆவினந் தானுமன்	332
ஆழஞான அவ்வையார்	304
ஆற்றல் அளித்தருளும்	132
ஆற்றல் படைத்தாலும்	201
ஆற்றல்கள்	42
ஆறுதலைச்	760
ஆறுமுக மானவருக்	874
ஆறுமுகர்	753
ஆறுமுகர் வள்ளியி	633
ஆன்றசிவம் சக்தி	51
ஆனை முகப்பேர்	580
ஆனை முகன் அன்பு	388
ஆனைகளின் அமளிமதம்	907
ஆனைமுக மான	889
ஆனைமுகச்சூரன்	118
ஆனைமுகத்தையா	207
ஆனைமுகம் வாழ்கவருள்	216
இ	
இகழ்வுறு	675
இடர்கெடவே	688
இந்த நல்யாத்திரையில்	366
இந்திரன் சிவபூசை	374
இந்திரன் சிவபூசை	394
இந்திரன் சிவபூசை	526
இந்திரன் பிரமன்	227
இந்திரனின் பூசைக்	212
இந்திரனும்	669
இயற்கையப்பனை	40
இரந்தமரர்	611
இருவிழிகள்	858
இருள்மலத்துக்	642
இலங்கை அரசன்	637
இல்லார்க்கும்	860
இவரடியார்க்குக்	79
இவ்வுலகத்துக்கும் ஈவான்	358
இளவயதில்	712
இளவலுடன்	648

பாடல்	பாடல் எண்
இனமிழிவுற்றலைக்	462
இன்னமுத தமிழீழம்	896
இன்னருள் மழையே	247
ஈ	
ஈசான முகத்தாரின்	862
ஈசானார்	801
ஈனத்துக் கயமுகனை	895
ஈனமனக்	796
ஈனவிருள்	909
உ	
உச்சியிலே	508
உடன்பிறந்தார்	85
உண்மை இன்மை	299
உண்மை யானவர்	701
உணவும் உடையும்	26
உத்தமர்வாழ	777
உம்பர்க்கும் புவிக்கும்	223
உயிர்தருவான்	65
உரிமை பெற வேண்டும்	145
உரிய பெற்றவர்	704
உரிய வானவர்	478
உருவமதைப்	654
உருவொன்று	856
உலகழியும் ஊழியிலும்	198
உலகினில் அமைதி	419
உலகெலாம்	491
உலகெலாமுண்டவ	114
உலகெலாமொலி	721
உவகையுடன்	81
உவந்துமையோ	951
உள்ளங்கு	541
உள்ளதெல்லாம்	76
உள்ளம் உருகுகிறதே	963
உள்ளம் குழைந்துருக	174
உள்ளம் மிக நாடுதே	967
உள்ளவருக்குள்ளமதை	718
உள்ளாருள்	798
உறவோங்கி யாள	211
உற்ற நோய்	595
உற்ற பெற்றவர்	523
உற்ற மாதவம்	471
உற்றவரும்	56
உற்றவுடன்	63
உனக்கும் எனக்கும்	29
உன்கருத்துடன்	92
உனகன்	459
உன்னத உலகத்தில்	276
உன்னியழ	61

பாடல்	பாடல் எண்
உன்னை வணங்கிவரும்	144
உன்னைப்போல் உற்ற	128
உனையன்றித்	964
ஊடுருவி	683
ஊரறிவார்	711
ஊரார் வாழ்த்த	620
ஊரில்லைப்	767
ஊரிலுள்ளவனை	50
ஊரினில்	584
ஊரென்ன உலகென்ன	418
ஊரென்ன உறவென்ன	950
ஊழாதி	787
ஊழி நேரின்	311
ஊழியுற	20
ஊழிவென் றுள்ளதமிழ்	113
ஊறிவரச்	758
ஊன்றியுள்ளிருக்கு	943
எ	
எங்கணும் கோபுர	108
எங்களுக்கோர்	670
எங்கு முள்ளவர்	702
எங்கும் இருக்கின்றார்	440
எங்கும் எதிலும்	601
எங்குமுள்ளார்	432
எங்குமுள்ளார்	641
எங்கெனினும் எப்பொ	200
எட்ட நிற்கவும்	262
எட்டுக் குணத்தாதை	617
எண்ணரும்	498
எத்தகை முறையான்	47
எந்த மருந்தினையும்	175
எப்பொருள்	736
எய்யாமை அகல	700
எரிகாற்று	786
எல்லவரும்	836
எல்லா வுலகும்	561
எல்லாம் வல்ல	564
எல்லாம் வல்ல	607
எல்லாமே ஓரிடத்தில்	438
எல்லூரும் நல்லூராம்	186
எல்லை யில்லா	566
எல்லையிலா	843
எல்லையிலாக்	935
எல்லையிலாப்	842
எழவைப்பவனும்	28
எள்ளுருண்டை	36
எறிக்கும் நீறார்	538
எனக்கென்றிவ்	719

பாடல்	பாடல் எண்
என்றுமுள்ளார்	631
என்ன பெற்ற	74
என்னிலும்நல்	70
என்னைநான்	740
ஏ	
ஏதமில் அழகிருந்தும்	361
ஏதுமெதிர்	123
ஏய மச்சம்	728
ஏலவேவர	38
ஏழை மக்கட்	310
ஏறி எலி மீதில்	387
ஏறிடுவர்	755
ஏறு தோள்வலி	527
ஐ	
ஐந்து தொழிலு	634
ஐந்து பூத	317
ஐந்து முறையெழுதி	360
ஐம்பு லன்களின்	705
ஐயனே	94
ஐயனே பாரென்	428
ஐயனே பிள்ளையா	102
ஐயா அருள்நாதா	439
ஐயா ஆனைமுகா	369
ஐயா எங்கள்	408
ஐயாவென்	838
ஐயாவென் றமரர்	696
ஐயாவே அரனார்	691
ஐவர்	604
ஐவர் மயல்நீங்க	138
ஐவரை ஆண்டிடல்	346
ஒ	
ஒண்ணுதலிற்	774
ஒப்பிலரும்	64
ஒருத்தருமே	782
ஒருத்திக்கும் ஒருவருக்கும்	218
ஒருதலை	768
ஒல்லும் வகைபேணான்	551
ஒன்றல்லப் பத்தல்ல	209
ஒன்றாகிப்	540
ஒன்றான	772
ஒன்றானார்	859
அ	
ஓங்கார இன்பசும்	762
ஓங்கார மந்திரத்தை	763
ஓங்கார வடிவத்தை	761
ஓங்காரச் செல்வன்	122
ஓங்குமுடல்	770
ஓசை ஒலியாய்	235

பாடல்	பாடல் எண்
ஓசையலை ஓவியங்கள்	872
ஓசையாகியும்	263
ஓது மந்திரம்	456
ஓமோங்க உள்ளிருக்கும்	897
ஓர்மூலமந்திரத்தில்	901
க	
கங்கை திங்கள்	600
கட்டுக்கடங்காத	413
கடிதங்கள் எழுதுதல்	345
கண்கண்ட	68
கண்டுமனம் ஆர்த்துக்	179
கண்டேன் கரிமுகத்	166
கண்ணில் ஆடுங்	301
கண்ணில் நடக்கின்றீர்	169
கண்ணினில்	99
கண்ணுதல்	97
கணபதிதாள் போற்றி	955
கணபதிதாள் வாழ்க	970
கண்பார்வைக்	814
கதியானார்	431
கயமுகன்	513
கயமுகன் கொடுமைகள்	103
கயமுகன் செருக்கை	221
கயமுகனின்	11
கயமுகனைக்	830
கரியநிறக்	14
கருணைக்கதிரே	22
கருத்தான	663
கருதமுன் கருணை	220
கருதவொண்ணாதவக்	867
கல்லாதார் கற்றிடுவார்	192
கல்வி கலைஞானம்	151
கல்வி கலையில்	400
கல்வி கலைவளரக்	618
கல்வி கற்கவும்	724
கல்வி கேள்விகலை	286
கல்வி செல்வம்	606
கல்வி நல்கும்	316
கல்விக்கலைக்	949
கல்விகலை	53
கல்விகலை	645
கல்வியில் உயர	519
கல்வியுங் கலையும்	423
கலகஞ்செய்	823
கலைஞருக்	674
கவலை கடந்த	537
கவின்மனையார்	58
கள்ளார்ந்த	832

பாடல்	பாடல் எண்
களங்கமுறு	818
கற்றும் வேலையின்றி	363
கன்றாகவுள்ளவர்	112
கன்னல் அமுதை	230
கன்னி இளவள்ளி	506
கன்னித் தமிழின்	27
கன்னிமான் வள்ளியும்	414
கனக்கின்றவினை	873
கனத்துக் கசிந்துள்ளம்	322
கனலில்மண்	44
கா	
காக வடிவில்	573
காகமென	686
காகவுருக்கொண்டு குறு	163
காணக்கண் ஆயிரம்	966
காதலரைச்	57
காதலற்றவன்	294
காதலுடன்	661
காயம்பொய் என்றார்	176
கால்நடைகளைக்	34
காலமெலாம்	682
காலனை மதியார்	222
காலை கன்றைவிட்டு	365
காற்றில்	530
காற்றினிலே கமழ்பூக்கள்	834
காற்றுமண்	514
கி	
கிள்ளை மொழி	381
கு	
குப்பையிலே	783
குறமகள்	677
குற்றஞ் செய்தவ	524
குற்றமில்லாதவக்	416
குறிப்புணரும்	88
குறுமுனிவர் தன்	638
குறைவின்றிக் குறைதீர்	926
கூ	
கூர்த்ததவக்	646
கூவமுன்னோடி வந்து	224
கூவுமோர்சேவலைக்	340
கே	
கேடு நீங்கவும்	477
கேடுபுரி	17
கேளாத கீழ்மகனை	272
கை	
கைகட்டி வாய்பொத்	892
கைத்தலை சேரடி	111

பாடல்	பாடல் எண்
கொ	
கொடியசூரன்	481
கொம்பொடித்துச் சூரர்	157
கொல்லாமை பூண்டு	141
கொள்ளைக் குழலின்	592
கோ	
கோதில்	605
கோயில் கும்பிட	292
கோயிலிலே	8
கோயிலின் திக்குத்	320
கோலம் குறிகள்	621
ச	
சந்தனவிருக்கை	91
சந்திரர்க்கு ஞானம்	161
சந்திரனின் வஞ்சம்	636
சந்திரனைத்	788
சமயத்தின் பெயராலே	890
சவியுறத் தங்க	95
சற்குருநீ தாங்கும்	444
சற்றுத் தந்தை	308
சா	
சாத்திரங்கள்	769
சாதி மதங்களைக்	344
சாதி யற்றவர்	458
சாதிமத பேதங்கள்	667
சாதிமொழிச்சண்டை	153
சார மில்லாதேன்	240
சி	
சித்தி புத்தி	312
சித்திகளைப்	665
சிந்தைக்குள்	861
சிலமந்தி தோட்டத்தில்	435
சிவசக்தி சேர்ந்தவொரு	278
சிவசக்தி பெற்ற	206
சிவபெருமான் பெற்ற	125
சிவபெருமானின்	41
சின்னொரு கோயிலில்	335
சீ	
சீரார் புத்தி	579
சீருலாவிய	472
சீறிவரும்	756
சுந்தரமா	75
சூ	
சூதுகளும்	717
சூதும் வாதும்	535
சூரன் பகைவென்ற	615
சூரியரே யானைமுகச்	149
சூழ்ச்சிக் கய	625

பாடல்	பாடல் எண்
சூழ்ந்த வயல்வெளிகள்	371
செ	
செங்கதிர் தண்ணருள்	351
செந்தமிழ் அவ்வை	586
செந்தமிழ் அன்னை	421
செந்தமிழை வளர்த்தகுறு	900
செய்யாத செயல்கள்	695
செருப்பறையோ	12
செருவிலெழு	652
செல்கின்ற வழிமிக்கத்	349
செல்லாத வழியெல்லாம்	923
செல்வநிலை	816
செல்வாய	779
செல்வாய செல்வத்தை	826
செவ்வானம்	436
செவ்விளநீர்	59
செறிந்தவின	66
சென்னியிலே	10
சே	
சேவல் வெண்சங்கு	39
சை	
சைவான சொல்ம	698
சொ	
சொல்லறியாச்	689
சொன்னபடி	904
சொந்தக் கடவுள்	539
சொல்லா வொண்ணாத்	562
சொல்லாமல் துதியாமல்	875
சொல்லிற் பொருளில்	534
சொல்லுதமிழ் ஈழம்	134
சோ	
சோதனைகள் செய்து	210
சோதனைதுயர்	729
சோதி யாக	469
ஞா	
ஞாயிற்று கிழமையே	342
ஞாலம்நம்	512
ஞானந்தருந்தல மீதே	338
ஞானவடிவானவரை	903
த	
தக்கவற்றைச் செய்வதற்	173
தகவாக ஈழம்	619
தகவான	785
தகவுறவே	806
தங்கத் தமிழ்	386
தங்கிவான் செல்வங்கள்	865
தடுமாறி நாளும்	119
தண்டமிழ்	608

பாடல்	பாடல் எண்
தண்ணிழலார்	773
தண்மை தரும்	383
தத்துவத்தில் தக்கவன்	314
தந்த முகத்தைப்	236
தந்தை தாயின்	284
தந்தை போயினும்	291
தந்தை மனம்	382
தந்தை முதற்போகத்	147
தந்தைசிவன் தகைமை	917
தந்தைதாய்	417
தந்தைதாயர்	480
தந்தைப் போல	315
தந்தையர்க்கொருதலம்	329
தந்தையாகினை	261
தந்தையினுஞ்	62
தயாவானத்தத்துவனார்	855
தராதரங்க ளாவீர்	148
தலையானார்	429
தலையினிலே	136
தவமிலருந்தாமுணர்ந்து	78
தளர்ச்சி	726
தற்பெருமை சூரன்	443
தன்னலம் நீக்கும்	425
தன்னிகரில்லாதவோர்	882
தன்னிகரிற்	13
தன்னை முதல்	77
தனைநினைத்த	466
தா	
தாங்கிநம் மனங்களைக்	879
தாதை தேர் ஒடித்தீர்	375
தாதையிவர் தேரைத்	160
தாமார்க்கும் மேலான	180
தாய்நாட்டில்	597
தாயானத் தத்துவனார்	189
தாயும் நீயே	587
தான்மலர	945
தி	
திங்கள் சடை	668
திங்களைக் கங்கையை	389
திடங்கொண்ட கயமுக	934
திரிந்துமனம்	19
திரிபுரத்தை	655
திருக்குளத்தில்	7
திருச்சி மலைக்கோட்டை	500
திருத்தமலர்	942
திருமனர் தீர்இத்	341
திருவருள் தந்தருள்	958
தில்லைநாதர்	560

பாடல்	பாடல் எண்
தில்லையம் பலமென்று	319
தினைவனத்தில்	465
தீ	
தீதாட்டக் கயமுகனை	920
தீதுபுரி முப்புரத்	635
தீராக் கொடுமை	533
தீராத கொடுமைகளை	392
தீராத தீமை	765
தீராத துன்பங்கள்	833
தீராத நோய்கடிதில்	929
து	
தும்பி முகங்கொண்ட	851
தும்பிக் கையினால்	708
துயர்யாவுந் துடைக்கின்ற	881
துன்பங்கள் பொடிபட்டு	326
துன்னுதுயர்	914
துனியறவே	464
தூ	
தூதுசென்று தன்	455
தூலமே	808
தூவிமலர் அயலாரும்	398
தூற்றுவார் தோற்பார்	188
தெ	
தென்னை தாகத்தைத்	37
தென்னை மரம்போலத்	445
தே	
தேங்காயுள்தேங்கும்	202
தேடரும் திருநீறு	105
தேடிச் சிங்கப்பூர்ச்	710
தேடித் தேடுதற்கரிய	264
தேரரிய	847
தேரானைத் திருக்கொம்	877
தேரேறி நீயருளும்	446
தேவர்களும் வந்து	594
தேவர்கோன்	747
தேவர்கோனின்	484
தேவியர் இருவராம்	938
தேறிவரச்	757
தேனே திரவியமே	155
தொ	
தொல்லை செய்யும்	567
தொழக்கண்டும்	794
தொண்டரின் தோள்	107
தொல்மூலமந்திரத்	168
தோ	
தோழனாகத்து	285
ந	
நந்தமிழைப்	18
நயவினை நாதன்	45
நலமான பசுக்களயற்	434
நல்ல அறிவுரைகள்	558
நல்ல கனடா	569
நல்ல முயற்சி	563
நல்லகுணம்	82
நல்லதை	731
நல்லதையே எண்ணி	143
நல்லவர்கள்	716
நல்லார்க்கு நல்லாராம்	126
நன்குனை அறிவான்	49
நன்றருளும் நாயகரை	639
நன்றி மற்ந்தோரும்	190
நன்று செய்தவர்	297
நன்று மில்லைத்	257
நன்றெனது	90
நன்றென்னுள்	184
நன்னெறி நீதி	420
நா	
நாகம் அணி	384
நாட்டமிகு	687
நாட்டின் செல்வம்	32
நாணக்கார் கூந்தளில்	925
நாத நாயகர்	451
நாந லத்தினால்	295
நாய்க்கொரு வேலை	355
நாயகர் மோதக வட்டில்	334
நாயனையேன் எந்நாளும்	183
நாவாளர்	922
நாளும் நலமாகும்	596
நி	
நித்திரை மயக்கம்	48
நிதியரே நிமிலரே	412
நிலநீராய்	821
நில்லா உலகத்தில்	557
நில்லா உலகில்	405
நில்லாத உலகமதில்	910
நிலையாக	430
நின்னை வலம்வந்து	167
நீ	
நீதி செய்திரு	452
நீதிதளர்வெய்த	154
நீதிபுரிவித்தகனார்	55
நீர்பாய நிலமோங்க	869
நீராடிய பின்	25
நீரானார்	662
நீரில் நிலத்தில்	404
நீரினிலே நீந்தல்	193

பாடல்	பாடல் எண்
நீறணிவோம்	751
நீற்வரியில் நீறணிவான்	195
நீறுசெயப்	759
நூ	
நூறு நூறுவன்	475
நெ	
நெதலாந்தில்	660
நெல்லி மொழி	556
நெற்பயிர் போலிவனை	368
நெற்றியிலே	870
நோ	
நோயால் என்குழந்தை	362
ப	
பக்கமெங்கும்	713
பகைத்திறம்	745
பகையும் படியாது	187
பங்கம் பழிகள்	407
பங்கமிலாவானவரை	868
பசுக்களின் அமைதியைப்	353
பஞ்ச பூத வடிவுடையான்	233
பட்ட மரமும்	591
பட்டங்கள் விட்டேன்	150
படராத கொடியோங்கிப்	886
படிப்படியா	73
படிப்பென்ன	546
படிவுறுதூபம்	96
பண்டும் இன்றும்	253
பண்ணவனே எங்கள்	146
பண்பிலார்	714
பணியாத ஆணவத்தைப்	437
பணிவுடன்	676
பத்தி செய்யின் பக்குவம்	307
பத்தியற்றவன்	293
பதம் பெறும்	494
பதவியை	715
பதியாக உலகெங்கும்	930
பதியான பதினென்று	410
பதியானார்	902
பந்தம்போம் பாரம்போம்	172
பயிர்களைக் காப்பான்	43
பரஞ்சோதியானவரின்	854
பரந்த உலகெலாம்	612
பரந்த பலவீனத்தைப்	599
பரம்பொரு ளாய	242
பல்கிப் பெருகுமுயிர்	552
பல்லோர் வாழ்த்த	565
பலவகைப்பண்ணி	98
பவசா கரத்	627
பவத்தைநீக்கி	485
பவநன்மைகை	946
பழிபாவங்கள்	577
பழிபாவப்	807
பள்ளவயல்	549
பள்ளியெனப்	4
பனுவல் அவ்வை	468
பா	
பாகமுறு	846
பாங்குடனே	89
பாசக் கயிற்றாலே	196
பாசாங்கு	672
பாசாங்கு	797
பாடங்களை	5
பாடிடாதவன்	296
பாதக அசுரர்	517
பாதகஞ்செய்	647
பாதகத்து	487
பாதகப் பழவினை	337
பாதகர்கள்	9
பாதையில்	495
பாரதிலேபண்பு	906
பால்போல் பயனா	124
பாலறுகுச்சி	93
பாலும் பருப்பும்	576
பாலைப் பருகியுள்ள	165
பி	
பிணக்கான கயமுக	880
பித்தம் தீரவும்	730
பித்து பிடித்துவிடும்	328
பிரணவமுகத்துத்	228
பிள்ளையாரைத்	962
பிள்ளையில்லாக்குறை	359
பிறைமேலுடைச் சடை	379
பின்னர் பின்னரென்	298
பீ	
பீடாரும் பதிமுல்லை	891
பீடுறுசெந் தமிழவ்வை	397
பு	
புத்தி சித்தி	725
புத்திசித்தி	83
புத்தியினாற்	849
புத்தியைப்	749
புத்திவரும்	598
புரிந்து கொள்ளற்	238
புரியச்சிவ	656
புல்லும்வாளாகும்	135
புலன்சோர	720

பாடல்	பாடல் எண்
பூ	
பூசித்தவர்க்கருள்வார்	330
பூணுமறைக் கெட்டாத	275
பூவாள் தொழு	380
பெ	
பெய்யாத	800
பெருகுசீர்	871
பெருமுகனின்	542
பெருயானை	812
பெற்றதாய் தந்தை	290
பெற்றமிக்கப் பித்தனுக்கு	250
பெற்றவ ருலகென்	585
பெற்றவர்	743
பெற்றவர் உலகன்று	104
பெற்றவர்தாம்	643
பெற்றவரைச் சுற்றி	632
பெற்றவரைச் சுற்றிவந்து	442
பெற்றார்	614
பெற்றார் தம்மை	572
பெற்றார் தாமே	401
பெற்றார் தாமே	602
பெற்றார் போகப்	23
பெற்றாரை உலகென்று	912
பே	
பேசாத கல்லென்றார்	277
பேதங்கள் இல்லைப்	191
பேரான முனிவர்பிரான்	948
பே	
பையவே பத்தர்பன்	110
பொ	
பொய்யகல வேண்டும்	139
பொய்வித்தை போதகலப்	888
பொருவில் வானவர்	260
பொல்லாத வினை	789
பொய்களவு	504
பொருளுஞ் சுவையும்	237
பொல்லாத பெண்பாவம்	905
பொல்லாரின் கொடுமை	893
பொற்புறுதேர்	956
போ	
போருக் கெழுந்த	603
போற்றி அருளுகநின்	448
போற்றி கல்விக்கலை	378
போற்றி கயமுகனின்	215
ம	
மக்களை	738
மகா வல்லப கணபதியே	973
மகாகணபதிதாள்	960
மங்குதொழிற்	834
மட்டிலாத் தவ	707
மண்ணவர் எங்கணும்	347
மண்ணினைக் கண்ணினிற்	336
மண்மீது	666
மத்தமதம் கரையப்	137
மதிசூடிநதியாடி	269
மதியிலாத இம்	266
மதியின் மதி	626
மதியென்ன	913
மதில் மாடமனை	411
மந்திமனம் ஐந்து கட்சி	197
மந்திரத்தில் எழுந்தருள	894
மந்திரத்தில் வந்தவன்	300
மந்திரத்தில் வந்து	156
மந்திரத்தில் வந்து	255
மந்திரத்துள் மறைந்து	281
மந்திரத்துள் மறைந்து	501
மந்திரத்துள்ளி	741
மந்திரத்துள்ளே	574
மந்திரத்தைச் சிவன்சக்தி	915
மந்திரம் கிள்ளைகள்	333
மந்திரர்க்கு மந்திரன்	305
மந்தைகள் மேய்வதைப்	352
மருத மரத்தடி	331
மருவுமுயர்	810
மருளான	828
மறந்தீரோவடியீர்	367
மறைகள் நான்கில்	482
மறையாது வெளிக்காட்டும்	270
மனத்தாலும் தீயவைகள்	129
மனத்தினை	735
மனநலமார்	86
மனம்விரும்பிக்	71
மன்னர் மன்னவா	268
மன்னன் இராவணன்	589
மன்னாதி மன்னவராம்	185
மன்னாதி மன்னார்க்கும்	795
மன்னித் துரந்தை	593
மன்னித் தேங்கிய	289
மன்னும் உயிர்மனித	177
மன்னுமோம்	510
மா	
மாங்கனி பலா	35
மாசற மனங்கள்	101
மாசறு	739
மாசில் மணிநகை	578
மாசில் மணிமுடியை	370

பாடல்	பாடல் எண்
மாசு நீங்கவும்	473
மாண்டகை நெஞ்சில்	287
மாணிக்கர்	509
மாணிழந்த வானவர்தம்	171
மாதொரு	680
மாயவருக்குற்ற மறு	162
மார்க்கண்டையர்	24
மாலான	840
மாளாத வருத்தங்கள்	817
மாறுபடு	752
மானிப்பாயில்	479
மி	
மின்னார் சடைகொள்	571
மின்னே போன்ற	229
மீ	
மீறிவருந்துயர்	754
மு	
முகத்தினால் தனித்து	256
முடிமீது மதிகங்கை	887
முடிவுவரை	80
முத்தமிழ்க் கனியே	241
முத்து விநாயகரை	213
முத்து விநாயகரை	961
முத்துவளம் கொழிக்	908
முதல் முதல் வந்த	424
முதல்முடி	673
முதலரிச்சுவடி	225
முதலாகி முடிவாகி	825
முதலுடைமை	152
முதலெழு	671
முதியதற்கும் முதியவன்	306
முதுபொருள் முடிவே	243
முதுவடிவம் என்பார்	205
முந்தியே	841
முந்தியே யுள்ள முதல்	131
முப்புரங்கள்	507
முயற்சிக்கு	511
முல்லைமகன்	804
முற்புறப் புற்ற	490
முற்றாத மனக்கனியை	863
முற்றுணரும்	54
முற்றுமுழு முனைப்புடனே	944
முன்பசுரன்	822
முன்பெனையாண்டு	100
முன்பொரு போதுமில்லாத	325
முனர்தாதை	463
முன்னர் நம்பியாண்டார்	376
முன்னர் நின்று முயற்சி	288
முன்னரு	678
முன்னவராய்ப்	813
முன்னாலே	544
முன்னாளில் தேவர்	883
முன்னான முன்னானார்	850
முன்னுளார்	820
முன்னை வினையாலே	182
முனிவர்களும்	461
முனிவர்பிரான்	467
முனையும் முயற்சி	629
முனையுமிருள்	460
மூ	
மூசிகம் ஏறிடுவீர்	373
மூத்த பிள்ளையார்	971
மூத்ததமிழ் முன்னோர்முன்	916
மூதுரை அவ்வை	528
மூதுரைத் தமிழ்	457
மூநகரம் முற்ருக	876
மூலநாயகன் மூவர்க்கும்	282
மூலமந்திர	723
மூலமந்திரப்பிள்ளை	390
மூலாதி முழுப்பொருளின்	885
மூலாதி மூலமந்திரம்	933
மூவர் செய்த	402
மூவாப் பிள்ளை	588
மூன்றுகண்	613
மெ	
மெய்பொரு ளாய	246
மெய்ம்மயிர் குத்திட்டு	323
மெய்ம்மை வண்ணனே	267
மெய்யான தமிழைத்	697
மெய்வீர இலங்கை	699
மென்னோலைச்	776
மே	
மேலதுகீழதுவாகி	848
மொ	
மொய்வீர முருகன்	694
மொழிப்பிள்ளை	780
மோ	
மோதகம்	321
மோதி ஆணவம்	453
மோனவான்ற	303
யா	
யாத்திரி கருக்கன்று	356
யாருங் காணற்கரியவன்	318
யாரும் மெய்யடியவராவர்	324
யானைமுகமழகு	204

பாடல்	பாடல் எண்
வ	
வஞ்சம் நீக்கித்	426
வஞ்சமில்லாத	734
வந்த வினையை	313
வயதெல்லை யாத்தி	343
வரசித்தி விநாயகர்	953
வரிசையிலே பத்தர்	447
வருமிடர்கள்	658
வல்ல சூரன்	254
வல்ல புரம் மூன்றால்	554
வல்ல வினைபோக்கி	550
வல்ல வீரர்	568
வல்லமைகள் வேண்	140
வல்லவீரன்	486
வல்லாளர்	644
வல்லான் பெரு நல்	385
வல்வினை	492
வல்வினைகள்	793
வலிமை கொள்	518
வலிமைகள் தமிழர்	422
வழிகாணா தெங்	899
வழியைக் காட்டும்	234
வழிவழி எங்கள்	476
வள்ளல் தனித்	348
வள்ளியினை வேலவ	159
வள்ளியினைத்	543
வன்பகைகள்	829
வா	
வாசமலர் தண்ணறுகு	214
வாடாத தேவருறை	791
வாணி செல்வி	33
வாருங்கள் வணங்க	969
வாருங்கள் வாருங்கள்	339
வாழ்த்தாத நாளில்லை	954
வானகத்தில் கயமுகனை	878
வானகத்துக் கப்பாலும்	433
வானத்தின்	502
வானவர்கள் வாழ்வி	919
வானவரும்	52
வானவரும்	503
வானளாவ	31
வானில் நீர்மண்ணில்	377
வானிலே மண்ணிலே	415
வானும் மண்ணும்	522
வானும் விண்ணும்	722
வி	
விட்டேன் அழுக்காறு	181
விண்ணகத்துச்	864
விண்ணில் மண்ணிற்	232
விண்ணுலகை வாழ	208
விண்ணை மேலும்	309
விண்மண் வளி	622
வித்துவத்தின் வித்த	170
விந்தைமிகு	685
விநாயகர் காட்சி தந்	959
விநாயகர் சித்தி விநா	972
விநாயகர் தாள்	968
விநாயகர் பெயரைச்	219
விநாயகரே வணக்	952
விநாயகனே வீரம்	117
வியக்கும்	616
வியப்பேநின் தோற்	133
விரிசெவிகள்	651
விரிவான	805
விரிவான வெளி	932
விரும்புதொழில்	84
விழவு வேள்வி	575
வீ	
வீட்டை விட்டு	3
வீடணனார்	505
வீடென்னா	547
வீணரைப் போற்றும்	496
வீணிலே திரி	474
வீரர்கோன்	921
வெ	
வெய்யானைக் கய	692
வெல்ல உலகத்தை	555
வெல்லாத	684
வெல்வினைகள்	939
வெள்ளைநீறணிந்துள்ள	924
வெற்றிமயில் ஏறியே	158
வெறிவாதக்	792
வே	
வேண்டுவதை	775
வேத நாயகர்	449
வேதக் கண்ணுதல்	454
வேதங்கள்	609
வேதநாதன்	839
வேதநாதா	771
வேதமூல வித்தகன்	302
வேதமொழியாவுள்ளும்	918
வேருக்கு வேரே	245
வேலவனார்	16
வேள்விகளோ	852
வை	
வையகமும்	811
வையந்தான் பெற்றோ	693

கவிநாயகர்
கந்தவனம்

தமிழ்ழம்,
சாவகச்சேரி, நூணாவிலில்
28.10.1933இல் பிறந்தவர்;
வேலுப்பிள்ளை மகன் விநாயகர் தந்தையார்,
தம்பியையா மகள் சின்னம்மா தாயார்.
நூணாவில் மேற்குக் கணேச வித்தியாசாலையில்
தொடக்கக் கல்வி, சாவகச்சேரி இந்துக்
கல்லூரியில் மேல்நிலைக் கல்வி, பின்னர்,
சென்னைப் பல்கலைக்கழகத்தில் புவியியற் பட்டம் பெற்றவர்.

இலங்கைக் கல்வி அமைச்சின் ஆசிரியர் ஆலோசகர் சான்றிதழ், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியாளர் தகைமைச் சான்றிதழ், இலங்கைப் பல்கலைக் கழக நாடகக் கல்வித் தகைமைச் சான்றிதழ் பெற்றவர்.

மாத்தளை புனித தோமையர் கல்லூரியிலும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும் ஆசிரியர்; யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் முதல்வர். ஈழநாடு, கூட்டுறவு இதழ்கள் நடத்திய கவிதைப் போட்டிகளில் முதன்மைப் பரிசுகள் பெற்றவர்; கவியரங்கங்கள் மூலம் தமிழ்ப் பாச்சுவையை மக்களிடையே வளர்த்தவர். கவியரங்கிற்கோர் கந்தவனம் என இரசிகமணி கனக செந்திநாதனிடம் பட்டம் பெற்றவர்.

மாத்தளை இலக்கிய வட்டம், யாழ் இலக்கிய வட்டம் ஆகியனவற்றின் நிறுவனர், எட்டு ஆண்டுகளாக யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவர். 1988 முதலாகக் கனடாவில் வாழும் இவர், அங்கு, எழுத்தாளர் இணையத்தின் தலைவர், ஆத்ம ஜோதி தியான நிலையத் தலைவர், சமூக, சமய, இலக்கிய அமைப்புகள் பலவற்றின் காப்பாளர்.

இலக்கியம், கவிதை, புவியியல், பாடப் பயிற்சி என முப்பதுக்கும் அதிகமான எண்ணிக்கையில் நூல்களை ஆக்கியவர்; சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலையிற் தொடங்கி, கனடா, ஜெர்மனி, பிரித்தானியா நாடுகளிலும் சென்னை காந்தளகத்திலும் இவரின் நூல்கள் பதிப்பாகியுள்ளன. இவரது 12 Short Stories, Lasting Light ஆகிய ஆங்கில நூல்களைக் கனடிய பாடப் புத்தக சபை, மேல்நிலை வகுப்புப் பாடநூல்களாக்கியுள்ளது. ஆத்மஜோதி காலாண்டிதழின் ஆசிரியர்.

நாடகங்களில் நடித்தவர், சிறுவர் நாடகங்களை எழுதியவர்: புத்திமான் பலவான் என்ற இவரது நாடகம், அகில இலங்கைப் பாடசாலை நாடகப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றது.

காந்தளகம்

ISBN 81897082